
1906

தாயுமானவ சுவாமிகள் பாடல்

உ

S. Thiruvengadam Chettyar
Book
Chockalingam Pudur



உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

தாயுமான சுவாமிகள் பாடல்.

இஃது

மதுரைத்தமிழ்ச்சங்கத்துவித்துவான்

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி - நாகலிங்க முதலியார்

அரும்பதவுரையோடு,

சென்னை:

சல்லா - சென்னகேசவுலு நாயடுவினால்

தமது

ஸ்ரீனிகேதன அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பெங்களூர் - இரத்தின நாயகரால்

வெளியிடப்பட்டது.

1906.

இதன் விலை ரூ. 1.

12

1 - 4.6.13 29 -

62 - 54 - 55 - 60 - 63 - 64

67 75 77 - 78

79 80 81 - 83


85 94 98 - 102

104 107 - 115

12

557 - 582 -

558



தாயுமான சுவாமி.

உ

கணபதி துணை.

பிரகடன பத்திரம்.

இந்த யோக்கியதாபத்திரிகை திருக்கைலாச பரம்பரை மெய்கண்ட சிவாசாரியார் சந்தானம் ஸ்ரீநகரம் காஞ்சிபுரம் ஞானபீடம் ஸ்ரீஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள் ஆதீன குருமூர்த்திகளால் கொடுக்கப்பெற்றது.

ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய **திருப்பாடற்றிரட்டு** இதற்கு முன் பல பண்டிதர்களாலே பதிப்பிக்கப்பட்டிருப்பினும் அவற்றை யுற்றுநோக்கி மிகவும் நன்றாகப்பரிசோதித்து **அரும்பதவுரை**யுடன் திருத்தமானலிபியிலே உயர்ந்தகடிதத்திலேசென்னைமாநகரம் ஜெனரல் முத்தையா முதலி வீதி ௪௬ - வது எண்ணுள்ள கிருகத்தில் வசிக்கும் மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவானும் மெய்கண்ட சாத்திரப்பிரசாரகருமாகிய வண்ணக்களஞ்சியம் **காஞ்சி - நாகலிங்கமுதலியார்** அவர்களாலே அழகுபெற அச்சிடுவித்த புத்தகம் நோக்குந்தோறும் படிக்கும்படி மனவெழுச்சியைச் செய்தலால் ஒவ்வொரு சிவநேசரும் ஆசையோடும் வாங்கி ஓசையோடும் ஓதிச் சிவபெருமான் திருவருளைப் பெறக்கடவரென்று நம்புகின்றோம்.

இங்ஙனம்.

விஸ்வாவசு ஹு மாசிமீ ௨௯௨ } கா. ஸ்ரீஞானப்ரகாசதேசிகஸ்வாமியார்,
காஞ்சீபுரம்.

உ

சிவமயம்.

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் வரலாறு.

அணியாகு மென்னெஞ்சே யன்பர் தலைக்குத்
தணியா சலக்கடவு டாள்.

எந்நாட்டினும் நன்னாடெனப் பன்னூலாய்ந்த பாவலர்களாற்புகழப்படாநின்ற சோழமண்டலத்திலே, திருமறைக்காடு என்னும் தென்மொழிப்பெயரையுடைய வேதாரணியம் என்ற தெய்வத் திருப்பதியிலே, வேளாளமரபிலே சற்றேறக்குறைய இருநூற்று முப்பது வருஷங்களுக்கு முன்னே அவதரித்த கேடிலியப்பிள்ளை என்பவர் ஒருவரிருந்தனர். இவர் கல்வி கேள்விகளில் முதிர்ந்து சிவபக்தி அடியார்பக்தி முதலியவைகளிற் சிறந்து, வடமொழி வேதங்களால் பூசிக்கப்பெற்றுத் திருக்காப்புக் கொண்டருளியதும், தென்மொழி வேதங்களால் பூசிக்கப்பெற்று அத்திருக்காப்பு நீக்கப்பெற்றதுமாய நன்னூர்ச் சிவபெருமான் திருக்கோயிற்றருமவிசாரணைத்தொழிலில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அக்காலத்திலே, சோழநாட்டிலே திரிசிரபுரத்தை இராஜதானியாகக் கொண்டு அரசாண்ட * விஜயரகுநாத சொக்கலிங்க நாயகர் என்பவர் கேடிலியப்பிள்ளையவர்களின் யோக்

* இவர் மதுரை மாநகரையாண்ட திருமலை நாயகர்க்குப் பவுத்திரர் என்றும், இவர்பெயர் விஜயரங்க சொக்கநாத நாயகர் என்றும் இவர் சாலிவாகன சகம் 1627-வருஷமுதல் 1654-வருஷம் வரையில் அரசாண்டனர் என்றும் கூறுவாருமுளர்.

யதை கணக்கு வல்லமை முதலியவற்றைப்பற்றிச் சில முதியோர்கள் சொல்லக்கேட்டு அவரை வரவழைத்துத்தன்னிடத்தில் ஒரு பெரியசேவையில் அமர்த்திக்கொண்டனர், பிள்ளையவர்களும் தன்னரசன் சந்தோஷிக்குமாறு மிகவும் திறமையாகவே இராஜாங்க காரியத்தை நடத்திக்கொண்டுவந்தனர்.

அப்போது, வேதாரணியத்திலே இருந்த *தனது தமையனார் புத்திரப்பேறில்லாமல் வருந்துவதைக் கண்டுமனம் பொறுதவராய்த் தன்னுடைய அருமைப்புதல்வராகிய சிவசிதம்பரப் பிள்ளையை அவருக்கு ஸ்வீகாரபுத்ரனுய்க் கொடுத்து விட்டுத்தனது மோக்ஷநிலைக்கோர் சற்புத்திரன் வேண்டுமென்னும் விருப்பமுடையவராய்த் திரிசிராமலையின் கண் வீற்றிருந்தருளும் தாயுமானேசுரரைத் தினந்தோறுந் தேவிசகிதம் போற்றி வருவாராயினர்.

அந்நாளிலே, சிவபெருமானது பெருங்கருணைத் திருவருளால் பிள்ளையவர்கள் † மனைவியார் திருவயிற்றிலே கருப்பமுண்டாகிப் பத்துத்திங்களும் நிரம்பப்பெற்றுத் தனதூராகிய வேதாரணியத்திலே மிக்க சுபவேளையில் பெறுதற்கரிய ஓர் ஆண்மகவைப் பெற்றனர். தந்தையார் தனக்கு மகன் பிறந்த இடம் திருமறைக்காடாயினும் அம்மகவுவிஷயமாக ஈட்டரும் பெருந்தவம் பல செய்துவந்த இடம் திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் தாயுமானேசுரர் திருவடியே ஆதலால், அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்னும் திருப்பெயரையே பெயராகவைத்துச் சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல நாளொரு மேனியாக வளர்த்துக்கொண்டு வந்தார்.

பிறகு இக்குழந்தை தக்கவயதிலே வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்று, நெடுங்கணக்கு முதலியவற்றைச் செவ்

* இவர் பெயர் வேதாரணியப்பிள்ளை என்பார்பலர்.

† இவ்வம்மையார் கெஜவல்லியம்மாள் எனப்படுவராம்.

னை ஆராய்ந்துகொண்டு, நிகண்டுகற்று இலக்கியம் இலக்கணம் தருக்கம் முதலிய கருவி நூல்களையும், வடமொழியின் ண்ணதாகிய இலக்கிய இலக்கணங்களையும் வேதாகம ஸ்மிருதி புராண இதிகாச முதலியவற்றை நன்குகற்று மிகவும் ல்லவராயினர். அப்பால் * தேவாரம் திருவாசகம் திருக்காவையார் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருமந்திரம் ரபந்தமாலை பெரியபுராணம் என்னும் சைவத்திருமுறைகளையும்; திருவுந்தியார் திருக்களிறுப்படியார் சிவஞான பாதம் சிவஞானசித்தியார் இருபாவிருபது உண்மைவிளக்கம் சிவப்பிரகாசம் திருவருட்பயன் வினவெண்பா போற்றிப் ஃறொடை கொடிக்கவி நெஞ்சுவிடுதூது உண்மை நெறி விளக்கம் சங்கற்பநிராகரணம் என்னும் * சைவசித்தாந்த சாத்திரங்களையும்; திருப்புகழ் திருவகுப்பு கந்தரலங்காரம் கந்தனுபூதி என்னும் கௌமாரத் திருமுறைகளையும் பாராயணஞ்செய்து வருவாராயினர்.

இங்ஙனம், தாயுமானவர் பல்லாற்றானும் சிறப்புற்றிருக்கும் காலத்திலே தந்தையாராகிய கேடிலியப்பிள்ளை என்பவர் சிவசாயுஜ்ய மெய்தினர். அப்பால் அவருக்கு நடைபெற வேண்டிய கருமங்கள் முற்றிலும் சைவபத்தியின்படி ஆசாரியரால் செவ்வனே நடத்தி முடித்துக்கொண்டு, உடனே திரிசிராபுரத்து அரசனாகிய விஜயரகுநாத சொக்கலிங்க நாயகரின் வலாத்காரத்தின் மேல் தகப்பனாருடைய உத்தியோகத்தை கித்து மன்னன்பெரிதும் வியக்குமாறு இராசகாரியங்களை மிகவும் ஒழுங்காக நடத்திக்கொண்டு வந்தனர்.

இவ்வாறு லௌகிகத் தொழிலையேற்று நடத்திவந்த போதிலும் அவரது மனமோ ஆன்மஞானம் பெற்று உயிர்க்கு ஈறுதிதேடும் வழியையே நாடிநின்றமையால், இருவினை

* இந்நூலில் அடியார்வணக்கமும், குருமரபின் வணக்கமும் வணிக்க.

† இச்சாத்திரம் பதினான்கும் மெய்கண்டசாத்திரம் எனப்படும்

பொப்பு வாய்ந்து மலபரிபாகம் பெற்றுச் சத்திநிபாதமுடை
யராய், வேதாந்தத்திலே கூறப்படும் ஜசஜீவபரங்களாகிய ப
பசுபாசமென்னும் திரிபதார்த்தங்களின் அநுபவ இலக்கண
ங்களை ஐயந்திரிபற எடுத்துக்காட்டும் ஞானாசாரியன் எங்
ளன், எப்போது கண்ணுக்குப்புலப்படுவன் என்கிற எண்ண
டையவராய் அக்காலத்தை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தன

அங்ஙனமிருக்கு நாளிலே, ஆன்மகோடிகளுய்யுமா
வேதாகமப்பொருளினைத் திருமந்திரமாலையாற்காட்டியருளி
திருமூலநாயனார் மரபிலே அருளுபதேசம் பெற்றுத் திருக்
யிலாய பரம்பரைச் சந்தானகுரவருள் ஒருவராகிய அருணந்
சிவாசாரியர் என்னும் சகலாகம பண்டிதர் ஜனனபூமியாகி
திருத்துறையூரிலே சிலபகல் தங்கியிருந்து, அப்பெரியா
கட்டளையின் கீழ் நிஷ்டைகொண்டு சிதம்பரத்திலே * மௌ
னகுருசுவாமிகள் என்னும் திருப்பெயருடன் எழுந்தருளி
சற்குருமூர்த்திகள் தலயாத்திரை செய்வான் புகுந்து, சி
ல் தலங்களைத் தரிசித்துக்கொண்டு திரிசிரபுரம்சென்று, அ
ங்கே திருமலையில் கோயில்கொண்டருளிய தாயுமானேசுரரை
தரிசிக்குமாறு மாலைப்போதினில் அனுட்டானபராய், மலை
யின்மீது சென்று தக்ஷிணாமூர்த்தி சந்நிதானத்தில் நிஷ்டை
கொண்டு வீற்றிருந்தனர்.

அந்நாளிரவிலே, தாயுமானவர் வழக்கப்படி அர்த்தயா
மதரிசனம் செய்ய நித்திய கடன்களை முடித்துக்கொண்
மலைக்கோயிலுக்குச் சென்று விதிவழியே சிவதரிசனம் செ
விக்கப்பெற்றுத் தக்ஷிணாமூர்த்தியின் மஹாசந்நிதானத்திலே
வந்து அங்கே ஞானநிஷ்டைகொண்டு வீற்றிருந்தருளு
மௌனகுருநாதனைக் கண்டு, அப்பெரியார் சக்ஷு தீக்ஷையா
தன்வயமிழந்து, அக்குருமூர்த்தியின் வாய்ப்பட்டு, அடியற்ற
மரம்போல் அவர் பாதத்திலே வீழ்ந்து, அவரை அஷ்டாங்

* இங்கே ஒரு திருமடம் இப்பெயரால் வழங்கப்படுகின்றது

ஷ்டாங்கமாகப் பலமுறை நமஸ்கரித்து வாய்பொத்திக் கை ட்டி நின்றுகொண்டிருந்தனர் குருமூர்த்திகளாகிய மௌன மிகள் ஞானநிஷ்டையினின்றும் கலைந்தகோலமுடைய ராய் அத்தனியில் ஒரு ஏகாந்த ஸ்தானத்தைச் சென்றடை ந்தனர். தாயுமானவரும் விடாது பின்பற்றிப் போந்து ஐய! ம்பெருமானே! தமது அருமைத் திருக்கரத்திலுள்ள புத் தகம்யாது? அதனைத் திருவுளம் பற்றவேண்டுமென்றிரந்தார்.

குருமூர்த்திகள் தாயுமானவரைப்பார்த்து இங்கே நமது ருளைக் கிடைக்கப்பெற்றனை, செம்மைத்தனை வேதிகைப்பட்டுப் பொன்னுருக்குவதுபோல நோக்கினாலும் வாக்கினாலும் பரிசத் தாலும் பாவனையாலும் ஆகமத்தாலும் ஔத்திரியாலும் அஷ்ட மாசித்திகளையும் உனக்குணர்த்திப் பதிவிளக்கஞ் செய்விக் ன்றும் எனக்கூறித் திருவடி தீக்ஷை செய்தருளி எல்லாமா ல்லதுமாயிருந்தபடி விதிவென்னளிருந்து காட்டிப் பின் வருங் கூறலாயினர். குழந்தாய்! வானிலே பறக்கவும் மண் ணிலே நுழையவும் வானவர் வணங்கவும் மற்றொருவர் உட லிலே புகுதவும் அவரவருளக் கருத்தினைக் கதைச யுரைக்கவும் பானதோருருவை எழுப்பவும் எண்சித்தியெல்லாம் கைவ ரும் இவையனைத்தும் ஞானசாதகனது பாததூளிக்குமிணை யாகா. ஆதலின், சிவாநுபவ ஞானபோத நிலையைப் பெற்றுக் கொள்வாயாக. அதனையே விளங்க வெடுத்துரைப்பது நமது கையிலுள்ள புத்தகம். இதனை உலகம் * சிவஞானசித்தியார் என்று கூறும்.

இந்நூல், பரபக்ஷம் சுபக்ஷம் என இரண்டு பிரிவினை யுடையது. முந்திய பரபக்ஷத்தில் லோகாயதர் முதல் பாஞ்ச ராத்திரி ஈறாகிய பரசமயிகளுடைய கோட்பாடுகளையெடுத்துக் காட்டிச் சித்தாந்தப் பார்வையால் மறுப்புச் செய்யப்படும்.

---

* இந்நூலில் மௌனகுருவணக்கம் 2-செய்யுள் கவனிக்கற்பாலது.

பிந்திய சுபக்ஷத்திலே தம்மையொழித்தொழிந்த எத்திறத்துச் சமயவாதிகளாலும் விடுக்கப்படும் ஆட்சேபங்களுக்கெல்லாம் பரபக்ஷப்பார்வையால் சமாதானஞ்செய்து சுவமதம் நாட்டுதல் செய்யப்படும். இச்சுபக்ஷத்திலே அமைந்த பன்னிரண்டு சூத்திரத்துள் முதல் இரண்டு மூன்று என்னும் மூன்றையும் பிரமாணவியலெனவைத்து முதற்சூத்திரத்தால் உலகிற்கு நிமித்தகாரணனாகிய பதியுண்மைக்குப் பிரமாணமும் இரண்டாஞ் சூத்திரத்தாற் பாசவுண்மைக்குப் பிரமாணமும்; மூன்றாஞ்சூத்திரத்தாற் பசுவுண்மைக்கு பிரமாணமும்; நான்கு ஐந்து ஆறு என்னும் மூன்றையும் இலக்கணவியலெனவைத்து நான்காஞ்சூத்திரத்தாற் பசுலக்ஷணமும், ஐந்தாஞ்சூத்திரத்தாற் பாசலக்ஷணமும், ஆறாஞ்சூத்திரத்தாற் பதிலக்ஷணமும்; ஏழு எட்டு ஒன்பது என்னும் மூன்றையும் சாதனவியலென வைத்து ஏழாஞ்சூத்திரத்தாற் சாதித்துப் பெறுதற்குரிய அதிகாரமுடையது இதுவென்பதும், எட்டாஞ்சூத்திரத்தாற் சிறந்த கருவியெனப்படும் சாதனம் இதுவென்பதும், ஒன்பதாஞ் சூத்திரத்தாற்சாதனஞ் செய்யுமாறு இதுவென்பதும்; பத்துப் பதினொன்று பன்னிரண்டு என்னும் மூன்றையும் பயனியலெனவைத்துப் பத்தாஞ்சூத்திரத்தாற்பெத்த நீக்கப்பயனும், பதினொன்றாஞ் சூத்திரத்தால் முத்திப்பயனும், பன்னிரண்டாஞ் சூத்திரத்தாற் பெத்தநீக்கமும், முத்தியும் பெற்றவர்க்குச் சீவன் முத்தி நிலைக்கணிகழுமியல்பும் வகுத்துக்கூறப்படும்.

குறித்த பதிபசுபாசங்கள் மூன்றும் அஜன்ய பதார்த்தங்களும் ஒன்றிலொன்றுவிஜாதிகங்களுமாம். இவற்றுள் பதிசத்தாயுள்ளது. பாசம் அசத்தாயுள்ளது. பசுசத்தோடு சேர்ந்தவழிச் சத்தாயும் அசத்தோடு சேர்ந்தவழி அசத்தாயும்உண்மையில் சத்துமாகாமல் அசத்துமாகாமல் சதசத்தாயுள்ளது. இனிப் பதியாகிய முதல்வன் ஞானக்கிரியா ஸ்வரூபனைப்

* இவ்விஷயங்களெல்லாம் திராவிடமாபாடியத்தில் விளக்கமாம்.

பசுவை ஞானக்கிரியைகளாலும் பாசத்தைக்கேவலங் கிரியையாலும் இயங்கப்பண்ணுவன். அங்ஙனம் பண்ணுங்கால் சுவப்பிரயோசனங் கருதாது, பரப்பிரயோசனத்தையே திருவுள்ள மிசைந்தியற்றும். நம்பெருமான் ஆணவ கேவலத்திற் கிடந்த பசுக்க ளென்னும் எண்ணிறந்த வுயிர்களையும் அவரவர் வினைக்கேற்ப மாயையைத் துணையாகச் சேர்த்து வெளிப்படுத்துவன். இதனுல் பதி ஏகமும் பசு பலவும் பாசம் மூன்றுமென வெளிப்படும். பாசத்தையும் பசுவையும் சேர்க்கவும் பிரிக்கவும் வல்லபதி தான் இயங்கும்போது தனது சத்தியால் அநந்தமூர்த்திகளாவன், பாசம் அநந்த ரூபமாய்ப் பதியாற் காரியப்பாட்டைப் பெறும். பசு பலயோனிகளிற் புக்குழலாநிற்கும். பதியினுடைய அநந்த வடிவங்கள் விபூதியென்று வேதங்களும், பசுவினுடைய அநந்த ஜநநங்களை வினைப்போகமென்று சுருதிகளும் பேசும். பாசத்தினுடைய காரியப்பாடுகளைச் சிருஷ்டியென்று முதனூல் செப்பும். சிவம் நிர்மலமுடையதாகலின் அதனிடத்தில் சமலரூபியாகிய உயிர்க்குற்பத்தி கூடாது. பாசம் கேவலம் மலமேயாகையால் நிர்மலமாகிய சிவத்திற் காரியப்படாது. சிவனும்சீவனும் சித்தாயிருப்பினும் அவை அறிவிக்குஞ் சித்தும் அறியும் சித்துமாயிருக்கு முண்மையால், அறிவிக்கும் சித்தாகிய சிவத்தில் அறியும் சித்தாகிய உயிர்க்குற்பத்தி யுரைத்தல் கூடாது. பாசம் கேவலம் சடமாகையால் மேல் உபய சித்துக்களில் இதற்கிடமில்லை. அசித்தாகிய பாசத்தின் காரியமெல்லாம் சித்தேயாம். இடையே நின்ற உயிர் பாசத்தோடு சேர்ந்தவழிப் பந்தத்தையும் பாசத்தினின்று நீங்கிச் சிவத்தோடு சேர்ந்தவழி முத்தியையும் பெறும்.

சிவானந்தச்செல்வ! இம்முத்திநிலை *தசகாரிய அனுட்டிப்பால் சித்தியாகும், அவையாவன:-முப்பத்தாறு தத்துவ

* இவ்விஷயம் என்னுல் பதிப்பிக்கப்பட்டுவரும் புண்டாரசாத்திரம் (மூலமும் உரையும்.) பதினுன்கனுள் விரிவாகக் காணலாம்.

ங்களுடைய தொழிலைத் தனக்கு வேறாயறிதலாகிய தத்துவ ரூபமும், தத்துவங்களைச் சடமென்றறிதலாகிய தத்துவ தரிசனமும், அவைகளைச் சிவஞானத்தாலே தனக்கன்னியமென்றறிதலாகிய தத்துவ சுத்தியும், மலங்கள் நீங்கி ஆத்தும ஞானமென வறிவே வடிவென அறிதலாகிய ஆத்துமரூபமும், தனக்கெனவொரு செய்தியு மில்லையென்றறிதலாகிய ஆத்துமதரிசனமும், பெத்தத்தினும் முத்தியினும் சிவன் உபகரிக்கின்றான் என்னும் தன்னுடைய ஆணியை அறிந்து சிவஞானத்தாலே அழுந்துதலாகிய ஆத்தும சுத்தியும், ஆணவமலத்திலே கிடக்கிற ஆன்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்து மலங்களை நீக்கி மோக்ஷத்திலே விடுவனென்று திடமாயறிதலாகிய சிவரூபமும், சிவன் செய்யும் பஞ்சகிருத்தியங்களை ஆன்மா செய்யானென்றறிந்து ஆன்மாவைத் தரிசிப்பித்து நின்ற ஞானமாகிய சிவதரிசனமும், சிவசத்தி செய்யும் கிருத்திய மெல்லாம் சிவனுக்குச் சற்றுமில்லை என்றறிந்து சிவசத்தியை யன்றித் தனக்கும் பிறருக்கும் சற்றும் செய்தியில்லை என்று தெரிந்து திருவருளோடு அழுந்துதலாகிய சிவயோகமும், சிவத்தோடிரண்டற நின்று அத்துவித சாயுச்சிய ஆனந்தத்தைப் புசித்து வாழ்தலாகிய சிவபோகமுமாம். இதுவே சுத்தாத்துவிதமாம் இவ்வத்துவித மொன்றனையே * தஜ்யாத்வைதவிதிஃ । ஸைவாஸாவாஸ வனதத்வவாஜதத்வ॥" என்று சுருதிகொண்டாடி மகிழும். மாணவக! இந்நிலையானது பூர்வ ஜென்மாந்திர புண்ணிய முற்றவர்க்கே கைவல்லியமாகும். இத்தகைய சிவானுபூதியை நீயடைதற்கேற்ற இலக்கணங்களை வாய்ந்துள்ளாய். ஆகலின் ஆண்டவனருளால் அடைக என ஆசீர்வதித்து, மெய்கண்ட சந்தான சாத்திரங்களின் உண்மைகளையும் சம்பிரதாய

---

* இ-ள் அம்மனத்தின் இலயத்தினால் சுத்தாத்வைதம் சித்தி பது. பேதமற்றிருந்தால் ஈதே உயர்தத்துவமாம் என்க.

களையும் ஆழ்ந்தகன்ற சித்தாந்த நயங்களையும், பொருணுட்பங்களையும் சாங்கோபாங்கமாக உபதேசித்தருளினர். இதன் வழியானே தாயுமானவரும் வைதிக சைவ சுத்தாத்துவித சித்தாந்தமே உண்மைநிலையென்பதும், அதிற் கூறப்படும் சிவபெருமானே பரமபதியென்பதும், அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவித முத்தியென்பதும் நன்குணர்ந்தனர்.

இப்பால், மௌனகுருசுவாமிகள் தாயுமானவரைநோக்கி ஏ மாணவ! இங்கு இன்னும் சிறிது காலம் இலௌகிகத் தொழிலை நடாத்திக்கொண்டிருந்து இல்லறத்தொழுகிப்புத்திரனைப் பெறுதி பின்னர் யாம்வந்து நிஷ்டைகூடும் வழியைத் தெரிவிப்போம் என்று கட்டளையிட்டெழுந்தார். எழுந்தகுருமூர்த்திகளின் பிரிவையாற்ருது மிகவும்வருந்திநின்ற தாயுமானவரை அக்குருநாதன் மீண்டும் பார்த்து நீ சிறிதும் கவலைகொள்ளவேண்டாம். நம்உபதேசவழியே அநுட்டானபரனுய் ஒழுகிக்கொண்டு*சும்மா இரு நாம் சிலபகலில் உன்னை நிச்சயமாய்ச் சந்திப்போம் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போயினர். போயினும் தாயுமானவர் மனதில் மௌனகுருசுவாமிகள் திருவுருவமும் அவர் திருவாய்மலர்ந்தருளிய "சும்மா இரு" என்ற சொல்லும் அச்சொல்லின் பொருளும்வேருன்றி நிலைத்துவிட்டன. நிலைத்துவிடுதலும் தாயுமானவர் ஆசிரியரிடத்திற் பெற்றுக்கொண்ட உபதேசப்பொருளைச் சிந்தித்து அந்தவழியே நடந்து வருவாராயினர். இவ்வாறுசிந்தித்து வரலால் அவருக்கு இராஜாங்கத் தொழிலிலும் மற்ற இலௌகிகத் தொழிலிலும் விரக்திதோன்றி அறவே அத்தொழில்களை மறந்தொழித்தனர்.

அப்பால், விஜயரகுநாத சொக்கலிங்கநாயகர் என்னும் மன்னவன் தாயுமானவருடைய திவ்விய குணங்களை நன்குக

* இது மஹாவாக்கியமென்பது "சும்மா இரு" என்று கட்டளையிட்டருளிய கந்தரனுபூதி யானும் உணர்க.

2

அறிந்திருப்பவனுதலாலும், நாளுக்குநாள் அப்பெரியார் ஆன்மஞானம் நிரம்பப் பெற்று முதிர்ச்சியடைந்து வருகின்றார் எனப் பலரால் கேள்விப்பட்டு மிருக்கின்றபடியாலும், அவரிடத்தில் அன்பும் அச்சமும் அதிகரிக்க அவரிடத்தேசென்று சுவாமி! தேவரீரது மகிமையை அறியமாட்டாது சாஸ்வதமில்லாத இவ்வராசாங்கத் தொழிலில் தங்களை நியமிக்கலானேன். இவ்விஷயமாக அடியேனை மிகவும் மன்னித்து இனிமேல் தேவரீருக் கவஸ்யமான பணி யாவையும் யானே செய்யும்படி கட்டளையிட்டருள வேண்டும் என்று முறையிட்டு நின்று. அந்நாள் முதல் தனது வாழ்நாள் முற்றிலும் அவர் மனம் பெரிதும் சந்துஷ்டியடையும்படி நடந்துவந்தான். சின்னுளிலே அரசனும் ஆன்மஞானம் பெறும் எண்ணமுடையவனுய் அதிதீவர பக்குவத்தை அடைந்து தாயுமானவரிடத்தே வைத்தபத்தியின் முதிர்ச்சியால் உலக காரியத்திலே வெறுப்படைந்து சிந்தாந்த ஞானநிஷ்டனுய்ப் பன்னுளிருந்து சிவசாயுஜ்யமெய்தினுன்.

பிறகு, அரசனுக்காக வேண்டிய கர்மாதிகள் முற்றிலும் புத்திரசந்தானமில்லாமையால் அரசனது மனைவியாராகிய * மீனுக்ஷியம்மையார் செய்து முடித்து இராஜாங்கக்காரியத்தில் பிரவேசிக்கலாயினள். அப்போது மீனுக்ஷி யம்மை தாயுமானவரைப் பலமுறையும் பார்த்துளா ளாகலின் கண்ணைத்தானே கவரும் அழகினர் இவரை ஒத்தவர் மற்றெவரையும் காணுது அவர்மீது மோகமுற்று அவரைமரியாதையுடன் வரவழைத்துத் தக்க ஆசனத்திலெழுந்தருளச்செய்துதன்னுடைய தகாத செய்கைக்கு இணங்கும்படி விண்ணப்பித்து என்னிராஜ்ஜியத்திற்குத் தேவரீரைத தலைவராகக் கொண்

* இவ்வம்மை சாலிவாகனசகம் 1654 - வருஷமுதல் 1659 - வருஷம் வரையில் அரசாண்டனள் என்பர் டெயிலர்துரை.

டேன் என்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றினையும் தந்துவிட்டேன் என்று சொல்லிக்கொண்டு நின்றாள். மீனாக்ஷியம்மை எண்ண மின்னதென நன்றாக அறிந்துகொண்ட தாயுமானவர் அவளுக்கு எந்தப்படி புத்திவருவிக்க வேண்டுமோ அந்தப்படி இனிமையாக உபதேசம் செய்துவிட்டு, அந்த இடத்திலிருந்தும் வெளியேவந்து இனி இத்திரிசிரபுரத்திலிருந்தால், தன் பெருமைக்குச் சிறுமை வருமென்றெண்ணி அப்போதே அந்நகரைவிட்டுப் புறப்பட்டுத் * தேவையம்பதியைச் சென்றடைந்து வசித்து வரலாயினர்.

இங்கே நடந்த விஷயங்களனைத்தையும் கேட்டுணர்ந்த தாயுமானவரின் தமையனாராகிய சிவசிதம்பரப்பிள்ளையவர்களும், அவர் சிறியதாயார் குமாரராகிய அருளையப்பிள்ளையவர்களும் தமதூராகிய வேதாரணியத்தினின்றும் புறப்பட்டுத் தேவையம்பதியைச்சென்று தாயுமானவர் வசிக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு, அங்கே போய் அவரை அணுகிச் சந்ததி விளங்கும்படி திருக்கலியாணம் செய்தருளவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டனர்கள். தாயுமானவருக்குச் சம்சாரபந்தத்திற் கட்டுப்பட்டுக்கிடக்க இஷ்டமில்லாமற் போனபோதினும், மௌனகுரு சுவாமிகளின் கட்டளையையும் தமையனாது வேண்டுகோளையும் மறுத்தற்கஞ்சினவராய் ஒருவாறிசைந்து நின்றனர். உடனே சிவசிதம்பரப்பிள்ளையவர்களும் அருளையப் பிள்ளையவர்களும் தாயுமானவரை அங்கேயிருந்தும்கூட்டிக்கொண்டு வேதாரணியம் போய்ச்சேர்ந்தார்கள்.

அப்பால், சிவசிதம்பரப்பிள்ளை யவர்கள் தாயுமானவருக்குத் திருமணஞ்செய்யும் தொழிலிலே கருத்துடையராய்த் தன் மாபுக்கொத்த மரபு ஒழுக்கம் செல்வம் முதலிய வற்றால் குறைவற்ற குடியிற்பிறந்து நற்குணம் நற்செய்கை அறிவு

* தேவை என்பது இராமேச்சுரம்.

ஆசாரம் அடக்கம் அழகு கற்புடைமைமுதலிய அமைந்த சன்னி எங்குள்ளாள் என்று தேடிக்கொண்டிருந்தார். அப்படியிருக்கும்போது அவ்வேதாரணியத்திலேனே உத்தம குலத்திற்றோன்றி மட்டுவார் குழலம்மை என்னும் பெயருடன் அழகால் இலக்குமியையும் கற்பால் அருந்ததியையும் புறங்கண்டு வளர்ந்துகொண்டு வந்த பெண்மணியாரைச் சிவசிதம்பரப்பிள்ளை அவர்கள் தாயுமானவருக்கு மணம்பேசி மணவினைக்குரிய நாளுமோரையும்நிச்சயித்துச்சுற்றத்தார்க்கும் நட்பாளர்க்கும் மணவோலைபோக்கித் திருக்கலியாண மண்டபம் சிறப்பாகச் செய்து குறித்தநாளிலே அந்தணர்களும் உறவினர்களும் சினேகிதர்களும்குதூகலங்கொண்டு ஆசிகூறத்திருக்கலியாண மஹோற்சவத்தை வேதாகம விதிப்படி நடத்தி முடித்தனர்.

பின்பு, தாயுமானவர் தனது மணாட்டியான நங்கையாரோடு அளவளாவி இல்லறத்திருந்து*"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங் - கைம்புலத்தா றோம்பறலை" என விதித்திட்ட வண்ணம் இருவர் கருத்து மொத்து ஐம்பெரும் வேள்விகளையும் வழுவாது நடத்திக் குடிமுறை பிறழாது பாதுகாத்து வருகின்ற நாளில், அவர்தம் மனைவியார் திருவயற்றில் கருப்பமுண்டாகிப் பத்துத்திங்களும் நிரம்பப் பெற்று ஓர் ஆண்மகவை ஈன்றுவைத்துச் சிவபத மடைந்தார் தாயுமானவர் பத்தினியாருக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செவ்வனே செய்வித்து முடித்துக்கொண்டு தன் தநயருக்குக் கனகசபாபதி என்று திருநாமம் வைத்து மிகவும் அருமையாகவே வளர்த்துக்கொண்டு வந்து வித்தியாரம்பமும் செய்வித்துப் பலதுறைகளிலும் வல்லவராகும்படிமுயர்ச்சி பல செய்து வந்தனர்.

அக்கால், முன் தாயுமானவரை விட்டுப்பிரிந்த மௌனகுருசுவாமிகள் திருமறைக்காட்டை அடைந்து அங்கே

---

* திருக்குறள், இல்வாழ்க்கை. 3-வது செய்யுள்.

வதிந்துவரும் தாயுமானவரின் அதிதீவிரபக்குவத்தையறிந்து அவரை அருகே வரவழைத்துச் சைவசம்ஸ்காரம் பலவுஞ் செய்து துறவுகொள்ளும்படி ஆஞ்ஞாபித்துச்*சிவபூஜைஎழுந்தருளப் பண்ணிக்கொடுத்து ஏமாணவ! நீ திருமஞ்சனம் திருச்சாந்து மங்களாக்ஷதை பத்திரபுஷ்பம் தூபதீபங்கள் சுகந்தவர்க்கம் முதலிய பூஜைத் திரவியங்களை யெல்லாம் குறைவறச் சம்பாதித்துக்கொண்டு நின்மல சித்தத்தோடு கோமயத்தினால் திருமெழுக்கிட்டுத் தூப தீப தோரண முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டுள்ள பூஜாக் கிரகத்துள் வேதிகைக்கு எதிரே சுகாதனத்திருந்து குரு நமஸ்காரஞ்செய்து சங்கற்பித்து விக்கினேசுவரபூஜை கலசபூஜை திக்குபந்தனம் தாளத்திரயம் முத்திரைக்காட்டல் சுத்தாசமனம் தொடுமிடந்தொடுதல் காதியாசம் அங்கநியாசம் திருநீறணிதல்அஞ்செழுத்தோதல் ஆதவற்பணிதல் தருப்பைமுதலிய ஞானாங்கங்களோடு கூடிய சிவபூஜையைச் சிவாகமவிதிப்படி கிரமமாகச் செவ்வனே செய்து முடித்து அச்சிவபூஜைக் கரணங்களின் ஞானார்த்த உண்மையை உள்ளத்திலே உறுதியாக அமைத்து வெளிப்புலன்களிலே சிந்தைநாடாவண்ணம் சரீரத்தைச் சிரசு கழுத்து இடைமுதலிய அவயவங்கள் நேராகத் தம்பத்தைப்போல அசையாது நிறுத்தி. இடைபிங்கலைகளின் வழித்

---

* சிவபூஜையின் சிறப்பை ருக்வேதம் “தவஶ்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தே ஜநிம சாருசித்ரம்” “பதம் யத்விஷ்ணோ ருபமம் நிதாயி” எனக்கூறிற்று. இதன்பொருளை “சாருசித்ரம் லிங்கம் மஹாவிஷ்ணு ஸம்பூஜ்ய ஸம்ஸ்தாப்யாஶயம்” “சாருசித்ரம் ஸஹஸ்ராப்தம் ப்ராப்தவான் பரமம் பதம்” எனவரும் பராசரபுராணத்தானறிக. அது உருத்திர சம்பந்தமானதும் சுத்தமும் மனதை வியப்பிப்பதும் ஆச்சரியகரமானதும் சிலாமயமுமான இலிங்கத்தை மஹாவிஷ்ணுவானவர் நன்கு பூசித்துச்சிறந்த பதத்தைப் பெற்றார் என்பதாம்.

தாக இயங்காநின்ற பிராணவாயுவை அம்சகாயத்திரியாகிய அஜபாமந்திரத்தினாலே தடுத்துச் சுழுமுனை நாடியின்வழியாகச்செலுத்தி இருகண்களும்புருவமத்தியே நாடினவண்ணமாகச்சிதாகாயமாகிய ஆன்ம நிலய அந்தர்முக நாட்டத்தில்மனதைநிறுத்தித் தமதே தியானமாகச் சமாதியிலிருந்து சதாநிஷ்டைபுரிந்து வருதி. இதுவே மெய்ஞ்ஞான நிட்டையாகியசிவயோகமாம். அங்ஙனம் சதாநிட்டையிலிருந்து இடையறாது அநுசந்தானம்பண்ணி வருங்கால் அந்தர் முகத்திலே மணி கடல் மேகம் மத்தளம் பேரிகை வீணை முதலிய நாதவொலிகளும், சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் மின்னல் முதலியவிந்து ஒலிகளும் தோன்றிடும். அவற்றுள் அழுந்தாது ஆன்மாவின் கண் அழுந்தி உறைந்து நிற்றல்வேண்டும். அப்போது அகண்டபரிபூரணாகார சிற்சுகோதய சின்மயானந்த வஸ்துவாகிய சிவோதயப் பிரகாசமுண்டாகி உன்னை விழுங்கி நிற்குமாதலால், ஆண்டு நின்செயலொழிந்து நீ அஃதாவை. யாண்டும் சிவமொன்றையே காண்பாய். இதுவே சாமவேத சாந்தோக்கியோப நிடத * மஹாவாக்கிய உண்மைப் பொருளாம். இந்நிலையிலே சிறிதும் சலியாது நிலைபெறுக என்று கட்டளையிட்டுப்போயினர்.

ஆசிரியர் சென்றதும், தாயுமானவர் அன்றுமுதல்துறவுக்குரிய குணங்களோடு கௌபீனதாரியாய் வெளிப்பட்டு மௌனகுருயோகிகள் திருவாக்கின்படி சதாநிட்டைகொண்ட கோலத்தோடு சிவபூஜாதுரந்தரராய்க் காசி காஞ்சி அருணை சிதம்பரம் திருவாரூர் மதுரை திருப்பரங்குன்றம் முதலிய திவ்விய ஸ்தலங்களைத்தரிசித்துக்கொண்டு திருவிராமேச்சுரம் போய் அங்கே மழையில்லாமல்மிகவும்பசியுடன்வருந்திநின்ற அவ்வூர்ச்சனங்களின் வேண்டுகோட்கிசைந்து மிகுதியும்

---

* தத்வமஸி. தத் - அது. த்வம் - நீ, அஸி - ஆகின்றாய்.

மழைபெய்யும்படி பரசிவனை மனதில் நினைத்து "சைவ சம யஞ் சமயமெனி லச்சமயத் - தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனி - லைவரைவென் - றானந்த வின்பி லழுந்துவது முத்தியெனில் - வானங்காண் பெய்ம்மின் மழை" என்னும் திருவெண்பாவைப்பாடி வேண்டிய அளவில் மழைபெய்து உலகம் க்ஷேமத்தை நிலைக்களமாகக்கொள்ளும்படி செய்தார். இச்செய்கையை உற்றுணர்ந்த அவ்விராமேசுரத்துச் சனங்களும் மற்றையோர்களும் தாயுமானவரிடத்தில் அச்சம் பெரிதுடையராய் அன்பு கொண்டு அவர் திருத்தொண்டிலேயே காலத்தைப் பெரிதும் போக்கிவந்தார்கள்.

அந்நாளில், ஸ்ரீ தாயுமானசுவாமிகள் ஓர்ஏகாந்த ஸ்தானத்தில் சதாநிஷ்டைகொண்டு வசித்துவரும் எண்ணமுடையவராய், சேதுமுதலிய புண்ணிய தீர்த்தங்களிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து இராமநாதனையும் *பர்வதவர்த்தனியையும் பணிந்து விடைபெற்றுக்கொண்டு, இராமநாதபுரம் போய்ச் சேர்ந்து அந்நகரைச் சேர்ந்த இலக்ஷுமிபுரம் என்னும் அரிய பகுதியிலே ஒரு நந்தவனமத்தியில் பரமானந்த நிட்டையில் வீற்றிருந்தருளி தம்மை விட்டுப்பிரியாத அருளையர் கோடிக்கரை ஞானியார் முதலிய உத்தம மாணாக்கருக்கு உபதேசஞ் செய்து சிவத்திலே இரண்டறக்கலந்தனர். அக்காலத்தில் அவரடியவர்கள் தோத்திரித்த செய்யுட்களிற்சில.

அருளையசுவாமிகள்.

உலகினுக் கணியா மிராமநா தபுரத்
துயர்நரை வாவியின் குணபால்
மலர்நிறை வனத்திற் சிவத்துறு நிட்டை
மருவிமெய் யொருவிவே தாந்தக்

* இந்நூலிலே வரும் மலைவளர்காதலி என்னும் தோத்திரம், இவ்வம்மையாரைக் குறித்ததேயாம்.

திலகிய பொருளாய் வானமாய் நிறையு
மெந்தையே யெனதுபந் தமும்போய்
நிலையுற நினது திருவரு ளளிப்பாய்
நின்மலா னந்தமே போற்றி.

கோடிக்கரை ஞானிகள்.

துகளறு சாலி வருடமா யிரத்தைஞ்
ஞூற்றொடெண் பத்தொன்று தொடரு
மிருசுப கிருதாம் வருடந்தை மாதம்
வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூரணத் திதியினி லருத்த
மண்டல சமையத்திற் கங்கை
திகழ்கரை யதனிற் றாயுமா னவனார்
சிவத்தினிற் கலந்தநற் றினமே.

சுவாமிகள் தம் அநுபவங்களையெல்லாம்திரட்டி அப்போ தைக்கப்போது அதியற்புதமயமான திருப்பாடல்களாகக் கட்டளையிட்டருளினார். அவ்வருட் பாடல்களை யெல்லாம் அவருடன் நிழல்போன்று பின்றொடர்ந்திருந்த அருளையர் முதலாய மாணவர்கள் எழுதித்தொகுத்துவைத்திட்டார்கள். இத்திருப்பாடற்றிரட்டு பிற்காலத்திலே அருளையரிடத்தே தத்வோபதேசம் பெற்றுக் கொண்ட தாயுமானவருடைய புத்திரராகிய கனகசபாபதிப்பிள்ளை அவர்களால் பலர்க்கும் பிரயோசனப்படலாயிற்றென்பர்.

இப்பெரியார், சமயாசாரியசுவாமிகளிடத்தும், சந்தான குருமூர்த்திகளிடத்தும், மெய்கண்ட சந்தான முதியோர்களி டத்தும்,*கௌமார பரமாசாரிய சுவாமிகளாகிய அருணகிரி

* இச்சமயப் பிரமாணம் திருப்புகழ்விஜயம் என்னு நூலிலே பெறக்கிடக்கின்றதாம்.

நாதரிடத்தும் அழுத்தமான பக்தி பூண்டு வந்தவர்களென்பது. அவர்கள் தமது திருப்பாடற்றிரட்டினுள்ளே, * "வெம்பந்தத் தீர்த்துலகாள் வேந்தன் றிருஞான—சம்பந் தனையருளாற் சாருநா ளெந்நாளோ." என்றதனால் ஆளுடைய பிள்ளையாரையும், "ஏரின் சிவபோக மிங்கிவர்க்கே யென்னவுழ—வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ." என்றதனால் ஆளுடைய வரசுகளையும், "பித்தரிறை யென்றறிந்து பேதைபாற் றூதனுப்பு—வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்ப்புகழ்வ தெந்நாளோ." என்றதனால் ஆளுடைய நம்பிகளையும், "போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற—வாதவூரைய னன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ." என்றதனால் ஆளுடைய வடிகளையும், "துய்யகரமலராற் சொல்லாமற் சொன்னவுண்மை—யையனைக்கல் லாலரசை யாமணுவ தெந்நாளோ." என்றதனால் தக்ஷிணாமூர்த்திகளையும், "சிந்தையினுக் கெட்டாத சிற்சுகத்தைக் காட்டவல்ல—நந்தியடிக் கீழ்க்குடியாய் நாமணுவ தெந்நாளோ." என்றதனால் திருநந்தி தேவரையும், எந்தை சனற்குமரனாதி யெமை யாட்கொள்வான்—வந்த தவத்தினரை வாழ்த்துநா ளெந்நாளோ." என்றதனால் ஜனகாதி நால்வரையும், "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித—மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ." என்றதனால் மெய்கண்ட தேவரையும், † "பாதி விருத்தத்தா லிப்பார் விருத்த மாகவுண்மை—சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ." என்றதனால் அருணந்தி தேவரையும், "சிற்றம் பலமன்னுஞ் சின்மயரான் தில்லைநகர்க்—கொற்றங் குடிமுதலைக் கூறுநா ளெந்நாளோ"

* இதுமுதல் எடுத்துக் காட்டும் கண்ணிகளை இந்நூல் - 216, 217 - வது பக்கங்களிற் காணலாம்.

† சிவபோகசார நூலுடையார் "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே - ஓர்விருத்தப் பாதிபோதும்." என்றார்.

3

என்றதனால் மறைஞான சம்பந்த தேவரையும், "துறைவி
லருண் ஞானமுதல் கொற்றங் குடியடிக—ளறைமலர்த்
தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ." என்றதனால்
உமாபதி தேவரையும், சக்கர வர்த்தி தவராஜ யோகி
யெனு - மிக்கதிரு மூலனருண் மேவுநா ளெந்நாளோ." என்
றதனால் திருமூலநாயனாரையும், "ஓட்டுடன் பற்றின்றி யுல
கைத் துறந்தசெல்வப்—பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ
தெந்நாளோ." என்றதனால் திருவெண்காடரோடு பத்ரகிரி
யாரையும், "கண்டதுபொய் யென்றகண்டா காரசிவ மெய்
யெனவே—விண்டசிவ வாக்கியர்தாள் மேவுநா ளெந்நா
ளோ." என்றதனால் சிவவாக்கியரையும், "கந்தரனு பூதிபெ
ற்று கந்தரனு பூதிசொன்ன—வெந்தை யருணாடி யிருக்
குநா ளெந்நாளோ." என்றதனால் அருணகிரி நாதரையும்,
துதித்திட்டமையால் இனிது விளங்கும்.

இனி யிப்பெரியோர்களுடைய திருப்பாடல்களும், அப்
பாடலின் பொருள்களும், தாயுமானசுவாமிகள் மனதை விட்
டகலாமல் இருந்தனவென்பது. அவர்கள் பாடிய தோத்தி
ரத் திரட்டினுள்ளே,* "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யிய
மானனா யெறியுங் காற்றுமாகி—யருநிலைய திங்களாய் ஞாயி
றாகி யாகாச மாயட்ட மூர்த்தியாகிப்—பெருநலமுங் குற்ற
மும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி-
நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிக ளின்
றவாறே." என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவுள்ளக் கரு
த்தை, "இருநிலனாய்த் தீயாகி யென்றதிருப் பாட்டின்—
பெருநிலையைக் கண்டிணைந்து பேச்சறுவ தெந்நாளோ."
என்றமைத்தும்; † "தானெனை முன்படைத்தான தறிந்து

* தேவாரம்,-ஆறாந்திருமுறை. நின்ற திருத்தாண்டகம்.
† திருப்பாட்டு,-ஏழாந்திருமுறை. திருநொடித்தான் மலை.

தன் பொன்னடிக்கே—நானென பாடவந்தோ நாயினேனைப் பொருட்படுத்து—வானென வந்தெதிர்கொள்ள மத்த யானை யருள்புரிந்து—ஊனுயிர் வேறுசெய்தா னொடித்தான் மலை யுத்தமனே." என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுள்ளக் கருத்தை, "தானென்னை முன்படைத்தா னென்றத் தகவுரையை—நானென்னு வுண்மைபெற்று நாமுணர்வ தெந்நாளோ." என்றமைத்தும்; *"இன்றெனக் கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று—நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே னியலாற் பிறிதுமற் றின்மை—சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுந் திருப்பெருந் துறையுறை சிவனே—யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை யாருன்னை யறியகிற் பாரே." என்ற மாணிக்கவாசக சுவாமிகள் திருவுள்ளக் கருத்தை, "நினைப்பறவே தானினைந்தே னென்ற நிலைநாடி—யனைத்துமா மப்பொருளி லாழுநா ளெந்நாளோ." என்று தொடங்கி "சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றுகி—நின்றுவிடு மென்றநெறி நிற்குநா ளெந்நாளோ." என்றமைத்தும்;

† "குமர குருபர குணதர நிசிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபகி ரதிசுத சுரபதி குலமானும்
குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரணென வுருகுதல் சிறிதுமில்
கொடிய வினையனை யவலனை யசடனை யதிமோக
கமரில் விழவிடு மழகுடை யரிவையர்
களவி னொடுபொரு ளளவள வருளிய
கலவி யளறிடை துவளுறும் வெளிறனை யினிதாள

* திருவாசகம்,-கோயிற்றிருப்பதிகம்.

† திருப்புகழ்,-திருவண்ணமலை.

அருவமு மடியவரோ டருவியி னொருவிலைச
கருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே

கமர மிகுதிரை பெறுவன கடல்குடல்
மறலி மயிடட விடநதி யமிழ்வன
சமுக முககலை பலபல பதிகெடு படமாக

சகல வுலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர் [ன்
கவை விவியரோ மருவிலை பொருகனி கடையானி

நமர் பதிபெட வுதவிய க்ருபையுறுகி
அகில புவனமு மனவிடு குரியவ
னைவு கெடிபவ னெனவிட வரியவன் மருகோனே

அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிக
ழிறையவர்மெவுகுபொருளெனவருளிய பெருமாளே."

என்ற அருணகிரிநாத சுவாமிகள் திருவுள்ளக் கருத்தை, *"அரிவை மரிவதுவே யாதும் பொருளென்—றுறுதிசொ ன்ன வுண்மையிலே பொருந்த னென்றோ." என்றதைத்தும் கூறுமாற்றால் நன்கு துணியப்படும்.

இங்கே எடுத்துக்காட்டிய உண்மையிலே ஒரு சிறிதும் உணராதவர் சிலர், சுவாமிகளை ஏகான்மவாதி எனவும் சா ரசி எனவும் கூறுகின்றனர். அவர்கள் சுவாமிகளின் திருப்பாடற்றிரட்டை முற்றிலும் சம்பிரதாயமாகப் படிக்காதவர்களாவார்கள். சுவாமிகள் சைவசித்தாந்த சமயாசாரியர்களையும், மெய்கண்ட சந்தான குருமூர்த்திகளையும், இச்சம்பந்தம்பெற்ற பிற்காலத்து ஆன்றோர்களையும், அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய தேவார திருவாசக முதலிய திராவிட கரு

* "இருவிலனாய்" என்ற கண்ணிமுதல் இருவரையும் இந் நூல் பக்கம்-229, 230.

களையும் பெரிதும் தூக்கிவிட்டதைப்போல், வேறு மதாசாரி
யையாவது அம் மதசம்பந்த கிரந்தங்களையாவது கொள்
ளாமையே போதிய சான்றாம். இவர்கள் இனிமேலாவது நடு
நிலைமை கொண்ட மனதுடன் பின்வரும் பாடல்களையாவது
ஒரு முறை தரிசிப்பாராக.

* "சைவ சமயமே சமயஞ்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் சகத்தீரே."

"இயல்பென்றுந் திரியாம லியம மாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சோபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
யயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங் கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ."

"அந்தோவீ ததிசயமிச் சமயம் போலின்
றின்றுசொல்ல நடுவுளோர் வசனியமா வாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மௌனம்
வைத்திருக்க மாதவர்க்கு மற்று மற்று
மிந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கு
மிதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை

இதுமுதல் நான்கு செய்யுட்களும் இந்நூல் பக்கம் - 162, 77.

சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்."
"சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுடன் ஞானந்தங் காண்ட லாகும்."

"சைவசமயமே சமயம்" என்ற செய்யுளினால் சுத்தா
த்துவித சித்தாந்த வைதிக சைவ சமயமே சத்தியமான
சமயமெனவும், இச்சமய வுண்மையினைத் தில்லைச் சிற்றம்
லத்தே அறியலாமெனவும், மற்றைய முக்கூற்று புறச்சமய
மனைத்தும் கற்பனை சமயங்களெனவும், ஆகலின், * "தான்
பெற்றபே றிவ்வுலகம் பெறுக" என்றதற்கேற்ப இச்சைவ
மார்க்கத்தினையே அடையவருமின் என உலகத்தவரை நோ
க்கி அழைத்தனர்.

"இயல்பென்றுந் திரியாமல்" என்ற செய்யுளினால் வே
தாகமேதிகாச புராணங்களால் கொண்டாடப்பட்டு, அங்
யோகங்களையும் கரதலாமலகமெனத் தந்து, சமயங்களுட்
டெல்லைபெற்று விளங்குவது வைதிக சைவ சமயமே என
வுங் கூறினர்.

"அந்தோ வீதிதிசயம்" என்ற செய்யுளினால் அஷ்ட
மாதி சித்தி யடைந்த அறிஞர்கட்கும், மௌனநிலையடைந்த
மஹா மாதவர்கட்கும், இந்திரலோகாதி பத்தியம் பெற்

* திருமூலநாயனார் - திருமந்திரமாலை.

தேவர்கட்கும், இன்றியமையாத துணையாகவிருந்து அவரவர்கள் வேண்டுவனவற்றை யெல்லா மளித்துவரும் சுத்த சன்மார்க்கம் சைவ சமயமே எனவும் விளக்கினர்.

"சன்மார்க்க ஞானமதின்" என்ற செய்யுளினால் உலகின்கண் ணுள்ளே எல்லாச் சமயங்களையும் தனக்குள்ளே அடக்கிக்கொண்டு அவைகளாற் பிரதிபாதிக்கப்படாத உண்மை முடிவினைத் தான் விளக்கிச் சமரச சன்மார்க்கமாக விருந்து இவ்வபேதத்தினைப் பொதுவாகிய சிதாகாய வெளியினாற்காட்டி யாவரும் போற்றி அநுசரிக்கத்தகுந்த நிலையினை யுடையது சைவசமயமே எனவும் முடிவு கட்டினர்.

இஃதிங்ஙனமாக, இனி சுவாமிகள் காலநிர்ணய விஷயமாகச் சிறிதெடுத்து விளக்குவாம். விஜயநகர சம்ஸ்தானத்தின் பிரதிநிதியாய் மதுரையில் அரசாக்ஷி செய்த *திருமலை நாயகருக்குப் பௌத்திரராய்த் திரிசிரபுரத்திற்றங்கிப் பாண்டிநாட்டையும் சோழநாட்டையும் ஒருங்கே ஆண்டுவந்த விஜயரகுநாத சொக்கலிங்க நாயகர் பரிபூரணமுற்ற காலம் சாலிவாகனசகம் 1654 என்பது தென்னாட்டுச் சரித்திரம் வரைந்து வைத்த டெயிலர் துரை அவர்கள் கொண்டபடியாம். இக்காலத்திலே ஸ்ரீ, தாயுமான சுவாமிகள் அத்திரிசிரபுர சம்ஸ்தானத்தில் காரியாதிபதியாய் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பிறகு அரசாக்ஷி கொண்டு வீற்றிருந்த மீனாட்சியம்மையார் காலத்திலேதான் சுவாமிகள் இலௌகிகத் தொழிலினின்று விலகிக்கொண்டது. டெயிலர் துரை அவர்கள் கூறியபடி விஜயரகுநாத சொக்கலிங்க நாயகர் காலம் இன்றைக்கு 175 வருஷங்களாகிறது. ஸ்ரீ தாயுமான வடிகள் சமாதிகொண்டருளிய அமயத்திலே உடனிருந்த அருளை

---

* நாயகர் என்பதும் நாய்க்கர் என்பதும் ஒரேபொருளைக் கொண்டனவாம். இப்பட்டம் வடுக ஜாதிக்கே உரித்தென்பார்.

யசுவாமிகள் பாடிய "துகளறு சாலி வருட மாயிரத்தைஞ் ஞூற்றெ ரெண்பத் தொன்று என்னும் செய்யுளால் சுவாமிகள் சாலிவாகன சகம் 1581-ம் வருஷ இறுதியில் பரிபூரணசமாதி கொண்டருளினர். எனக் காணக்கிடக்கின்றமையால் அவர்கள் காலம் இற்றைக்கு 248 வருஷங்களாம் என்பது மறுக்கக்கூடாத உண்மையாம். ஆகவே, விஜய ரகுநாத சொக்கலிங்க நாயகர் காலத்திற்குப் பிறகு ஸ்ரீ தாயுமான சுவாமிகள் 73-வருஷம் ஜீவந்தராய் நிலைபெற்றிருந்தார்களெனத் தெரியவருகிறது. இதனால், ஞானயோக சமாதியிலே முதிர்ந்த பெரியோர்கள் நீண்ட நாள் உயிர்பெற்றிருப்பார்களென்பது பெறக்கிடக்கின்றது. இவர்கள் வேண்டும்போது மூவிதமாஞ் சித்திதனில் ஏதேனும் ஓர் சித்தியில் தேகத்தை மறைத்துக்கொள்வரென்க. சுபம்! சுபம்!

இப்பதிப்பு விஷயமாக அப்போதைக்கப்போது வேண்டிய சகாயம் செய்துவந்த, என் தந்தை பிரதாபம் ஸ்ரீமத்-சரவணப்பெருமாள் முதலியார் அவர்கள்பால் கல்வி பயின்றவரும், நைட்டிக விரதத்திலே மேம்பட்டவரும், தபோமய வாசியாருமாகிய, வாலியூர் - ஸ்ரீ சிவனணைந்த பெருமாள் முதலியார் அவர்களுக்கும், எளியேன் செந்தமிழ்ப் போதகாசாரியரும் மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வானும் சித்தாந்த சரபமும் ஆகிய, அஷ்டாவதானம் - பூவை. ஸ்ரீமத் - கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் மனப்பூர்வகமாக வந்தனஞ் செய்கின்றேன்.

சென்னை, பார்பவஹூ ஆனிமீ.	இங்ஙனம், காஞ்சி-நாகலிங்கன்.

உ

சிவமயம்.

அரும்பதவிளக்கவுரை.

எல்லாஞ் செயற்கு மிடமாகு மென்னெஞ்சே
கல்லார வெற்பன் கழல்.

அ

அகண்டிதாகாரம் - வியாபகவடிவம். பாட்டு - 29, வரி - 11.
அகம் - மனம். 69,6,
அகிலம் - எல்லாம் 1,4,
அகிதம் - இதமின்மை. 89,11.
அகோசரம் விஷயாதீதம். 47,9.
அங்கணன் - அழகிய கிருபைக் கண்ணன். 262,3.
அங்கம் . உடம்பு. 26, 1
அசங்கம் தனிமை - 47,3.
அசனி — இடி 405,2.
அசரசரபேதம் - தாபர சங்கம வேறுபாடு. 29,2.
அசபாநலம்-அஜபா × அநலம் அஜபாமந்திர உச்சாரணத்தினல் விளங்கும் அக்கினி. 116,1
அஞ்சலி - கைகூப்பிச்செய்யும் நமஸ்காரம். 1,16.
அஞ்சனம் - குற்றம். 71,9
அஞ்சுருவாணி - அச்சாணி 45,7.
அடவி - காடு. 4,13.
அடிக்குடி-அடிமைக்குடி. 358,7,
அடுசோறு-சமைத்தசோறு. 50,7
அடைக்காய் - பாக்கு. 110,11.
அடையார் - பகைவர். 455,1.
அணிமா - அஷ்டமாசித்திகளிலொன்று. 142,2.
அணுபக்ஷம்-ஆன்மவர்க்கம். 41,10.
அண்டம் - துருவனுக்குட்பட்ட உலகம். 7,1.
அண்டப்பரப்பு - உலக விஸ்தீரணம். 39,13.
அத்துவா - வழி; அவை-மந்திரம், பதம், அக்கரம், புவனம், தத்துவம், கலை என்பன. 1245,1.
அத்துவிதம் - இரண்டன்மை. ந + துவிதம் + அத்துவிதம். பாணிணீயம் ௬ - வது அத்தியாயம், ௩ - வது பாதம், எ௩-வது "நலோபோநஞ:" என்னுஞ் சூத்திர விதியால் நகாரம் அகரமாயிற்று.3,1.
அநந்தம் - முடிவற்றது. 2,1.
அநாதி - ஆதியின்மை. 3,4.
அநுசூதம் - சித்தி, தொடர்ச்சி. 47,12.
அநுசாரி - அநுசரிப்பவன். 4,5
அந்தகன் - யமன், 104,6.
அந்தரம் - ஆகாயம். 39,3.
அந்தம் - முடிவு, 24,1.
அந்தணர் நால்வர் - ஜநகாதிகள். 174,1.
அரோகதிடகாத்திரம் - நோயில்லாத உறுதியாகிய சரீரம். 459,1.
அருள்தையல் - அருட்சத்தி. 252,3.
அருள்வெளி - கருணைவடிவாகிய ஆகாயம். 1,3,

அலகை - பேய் 122,1
அலரி - சூரியன் 86,2
அல் - இருள் 119,9
அவம் - வீண்கா[illegible] 104,8
அவசம் - பரவசம் 33,12
அவசரம் - சமயம் 39,4
அவலம் - வீண் 104,8
அவித்தை - அஞ்ஞானம். 152,5
அவிகாரம்-விகாரமற்றது 35,2
அவிழ்தல் - விரிதல் 110,1
அவ்வியம் - பொறாமை 28,1
அழுக்காறு - பொறாமை 317,3
அளம் - நெய்தனிலம். 274,3
அளவை - பிரமாணம் 133,2
அளகேசன் - அளகாபுரிக்கரசன் குபேரன், 13,3
அளவளாவல் - கலத்தல் 46,8
அளி - வண்டு 58,1
அனுமானம்-ஓர் அளவை 106,4
அறிதுயில்-ஞானநித்திரை 6,11
அறிவாம்வெளி-ஞானகாசம்23,2
அறிவார்கள்-சிவஞானிகள் 38,3
அறிவு - ஞானம் 40,7

ஆ

ஆகாரம் - ரூபம் 132,1
ஆக்கை - உடம்பு 27,1
ஆதரவு - இச்சை 35,5
ஆதாரம் - இடம் 104,9
ஆதி - முதல் 3,4
ஆதேயம் - இடத்தினிகழ் பொருள் 109,9
ஆநந்தம் - சுகம் 1,2
ஆப்தர்-உண்மைகூறுவோர் 89,2
ஆமலகக்கனி - நெல்லிக்கனி 233,3
ஆராமை - பேரன்பு 64,7
ஆர்த்தல் - ஆரவாரித்தல், சந்தோஷித்தல். 55,8
ஆலம்பம் - ஆதாரம் 3,7
ஆலம் - விஷம் 12,2
ஆவி - உயிர் 76,3
ஆழாழி-ஆழமுள்ளகடல் 12,1
ஆறாமை - கெடாமை 179,5

இ

இகபரம் - இம்மை மறுமைகள் 17,1
இச்சாசுதந்தரம் - அவாவுரிமை 35,11
இதசத்ரு-அனுகூலவிரோதி 8,8
இதயவெளி - இருதயாகாசம். 45, 11
இந்திரசாலம் - அற்புதவித்தை 19,1
இயமம் - அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், தயை, ஆர்ஜவம், க்ஷமை, திருதி, மிதாகாரம், சௌசம் என்பன. 127,1
இரவி - சூரியன் 53,12
இரக்ஷை - காப்பாற்றுதல் 110,14
இரசவாதவித்தை - செப்புமுதலிய வுலோகங்களைப் பொன்னாக்கும் வித்தை. 13,5
இராவணாகாரம் - பயங்கரம், அந்தகாரவடிவம் 45,10
இருப்பன - மரமுதலியன 5,2
இலக்கு - லக்ஷியம் 46, 14
இம்பர்-இவ்வுலகத்தார் 204,3
இழுக்கு - தீச்சொல் 56,3
இற்றைவரை-இன்றளவும் 87,4

ஈ

ஈடு - தகுதி 35,10

ஈதல் - கொடுத்தல், கொடை. 40,7
ஈறு - முடிவு. 158,5.

உ

உகிர் - நகம். 65,1
உபாதி - ஒழிவு, வெறுப்பு. 96,5
உபசாந்தம் - அமைதிக்கை, சித்த சமாதானம். 5,7.
உபலம் - படிகம். 123,10
உம்பர் - மேலுலகத்தார், 378,2
உயிர்க்குயிராய் - ஆன்மாவுக்குள் அந்தரியாமியாய். 1,5.
உரகன் - ஆதிசேடன். 53,11.
உலப்பு - கெடுதல். 275,2.
உலகன்னை - லோகமாதா. 31,13
உலையவிடுதல் - அலையவிடுதல். 82,13.
உலோகாயதன் - ஒருசமயி, நாஸ்திகன், 40,10
உவகை - மகிழ்ச்சி. 23,6.
உவட்டுதல் தெவிட்டுதல். 27,11
உழை - இடம். 361,7.
உறுக்கல் - சண்டித்தல். 31,10.
உன்மத்தம் - பயித்தியம். 46,9.
உன்மனி - ஓர்சத்தி. 231,1

ஊ

ஊகமநுபவவசனம் - சுருதி யுக்தி அநுபவம் 91,7
ஊகம் - யுக்தி 11,5
ஊண் - உணவு 102,6,
ஊர்வன - எறும்பு முதலியன 5,1
ஊற்றம் - கெடுதி 1371,2.

எ

எண் - தருக்கம் 52,13
எழுத்து - இலக்கணம் 52,13.
எழுநா - அக்கினி 36,4

ஏ

ஏகதத்துவ சொரூபம் - ஒன்றேயாகிய உண்மைவடிவம். 3,4
ஏதம் - குற்றம் 35,9.
ஏழை - அறிவிலி 76,2
ஏழையர்கள் - மாதர்கள் 97,13

ஐ

ஐம்பூதம் - பஞ்சபூதங்கள், அவை - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன 16,1
ஐயன் - யாவராலும் பூஜிக்கப்படுவோன், அழகன் 238,1

ஒ

ஒக்கல் - உறவினர் 387,3
ஒருங்குதல் - அடங்குதல் 99,5

ஓ

ஓலக்கம் - சபை 1186,2
ஓதிமம் - அன்னம் 159,5
ஓர்தல் - ஆராய்தல் 223,3

ஔ

ஔவியம் - பொறாமை 28,1

க

ககனம் - ஆகாயம் 56,14
கங்குல் - இராத்திரி, வரம்பு 1,13
கச்சு - இரவிக்கை 1133,1
கடுவெளி - வெட்டவெளி 1208,2
கணம் - க்ஷணம், இமைப்பொழுது 7,11
கட்செவி - பாம்பு 118,4
கண்ணி - வலை 1128,2
கண் - இடம் 60,5
கண்டு - கற்கண்டு 64,2
கதி - மோக்ஷம் 52,14
கந்தமூலம் - கிழங்கு 104,10
கந்துகம் - கட்டுத்தறி 118,1
கரணங்கள் - அந்தக்கரணங்கள்; அவை - மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்பன 7,10

கரமுகிழ்த்தல் - கைகுவித்தல், 23,7.
கருணாகரம் - கருணைக்குப்பிறப்பிடம். 43,9
கருப்பு - கரும்பு. 1281, 1,
கருவறை - கருப்பவீடு. 31,1
கருந்தாது - இரும்பு, 342,1
கர்த்தவியம் - செய்கை, 89,9.
கலிப்பேய் - வறுமைப்பிசாசம். 557,1.
கலையாதி - காலம், நியதி, கலை, வித்தை இராகம், புருடன், மாயை என்பன, 48,3.
கலையுரி - மான்தோல். 65,9.
கவ்வுமலம் - உயிர்களைப்பற்றுகிற மும்மலங்கள். 28,9.
கவ்வை - பொறாமை, 129,5.
களை - அழகு. 1452,53
கறங்கு - காற்றாடி. 63,3.
கற்பங்கள்-ஊழிகாலங்கள். 36,11.
கன்னல் - கரும்பு. 64,1,

கா

காதலித்திடுதல் - ஆசைப்படுதல், 43,5.
காதிகதை - ஞானவாசிட்டத்திலுள்ள ஓர்கதை. 130,11,
காயம் - உடம்பு. 32,1.
காமதேனு - தெய்வலோகப்பசு. 43,5.
காயகற்பம் - தேகசித்தியின்பொருட்டுண்ணும் அவுஷதம். 13,7.
கார் - மேகம். 2,9.
கார் - கருமை. 31,1.
காலூன்றல் - வேரூன்றல், 60,7.
கால் - காற்று. 84,11.
கானகம் - காடு, 43,1,
கானலினீர் - கானலிலே உண்டுபோல் - தோன்றுகிற ஜலம். 19,1.

கி

கிருமி - புழு, 46,2.
கின்னாக்கு - அதிகாரம். 62,4.

கீ

கீண்டெழுதல் - கிழித்தெழுதல் 362,6.

கு

குடக்கு - மேற்கு. 101,1.
குடிலம் - வஞ்சகம், கொடுமை. 301,5.
குணக்கு - கிழக்கு 101,2.
குண்டலி - குடிலாசத்தி. 60,11,
குத்திரம் - பொய். 1231,1.
கும்பி - நரகம், 122,7,
குருமணி - ஒளியுள்ள இரத்தினம். 44,9.
குலாலன் - குயவன். 122,10,
குருமௌனி-மௌனகுரு, 19,7.
குழைதல் - வாடுதல், 55,1.
குளிகை - மாத்திரை. 32,5.

கூ

கூற்று - யமன், 255,1.
கூரிருள் - மிக்கவிருள். 310,5,

கெ

கெசம் - யானை, 62, 1.

கே

கேவலம் - மறப்பு. 336,1.
கேவலநீதி - முத்திமார்க்கம். 108,11.

கை

கைப்பரிசு - சிறுதெப்பம். 112,9.
கைம்மாறு-பிரதியுபகாரம், 370,1.
கைதவம் - பொய்யொழுக்கம், 61,5,

கைவல்லியம் - மோக்ஷம். 47,2.

கோ

கொட்டம் - அகந்தை, கொடுமை, 125, 1.
கொந்து - கொத்து. 110,1.

கோ

கோசரம் - விஷயம், 17,4,
கோடுதல் - பிசகுதல், 114,6.
கோது - குற்றம், 15,5,
கோத்தல் - கலத்தல், 16,5.
கோள் - குற்றம், 142,7,
கோஷ்டி - கூட்டம் 67,9,

கௌ

கௌவை - பழிமொழி, 129,5

ச

சகலம் - நினைப்பு 236,1
சகளம் - ரூபம், 71,10
சகோரபக்ஷி - நிலாமுகிப்புள் 44,2
சக்ரதரன் - சக்கரத்தைத்தரித்தவன் 26,5
சங்கநிதி - சங்கின் வடிவான பொக்கிஷம் 58,3
சங்கரன்,- சுகத்தைச்செய்பவன். 26,5
சங்கற்பம், விருப்பம், நினைப்பு 25,5
சங்கித்தல் - ஆக்ஷேபித்தல் 85,10
சங்கேதம் - கட்டுப்பாடு 91,8
சங்கை - ஆக்ஷேபம் 85,10
சஞ்சலரகிதன் - அசைவில்லாதவன் 47,3
சஞ்சீவி - உயிர்ப்பிக்குமூலிகை 23,11
சடக்கை - தேகம் 101,13
சடிலம் - சடை 286,1
சடர் - மூடர் 816.1
சதசத்து - ஆன்மா 132,4
சதிர் - வல்லமை 578,5
சந்ததம் - சதாகாலம் 8,1
சந்தவாடை - சந்தனமணமுள்ள காற்று 110,4
சப்தபூமி - ஏழாகிய அஞ்ஞான பூமி; அவை - சாக்கிரம், மேற்சாக்கிரம், மஹா சாக்கிரம், சாக்கிரசொப்பனம், சொப்பனம், சொப்பன சாக்கிரம், சுழுத்தி என்பன 92,5
சப்தமேகங்கள் - எழுமேகங்கள்; அவை-சம்வர்த்தம், ஆவர்த்தம், புஷ்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்பன, 12,7
சப்தாதி-சப்தம், ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம் என்பன 48,3
சமயகோடி - பலவேறுமதங்கள் 1,7,
சமரசம் - நடுவாந்தன்மை 8,4
சம்பிரதாயம் - உபாயம், வழக்கம் 34,4
சம்பு - பரமானந்தரூபி, சுகத்தையுண்டாக்குபவர் 26,5
சம்புபக்ஷம் - சிவவர்க்கம் 41,10
சர்வேசன் - எல்லாவற்றிற்குந் தலைவன் 47,7
சவி - காந்தி 661,1
சவபானம் - சோபானம், படி 125,7
சற்சாரம் - யானைப்பந்தி 37,13
சனகன்முதல் முனிவோர்கள் - சனகன், சனந்தனன், சனற்குமாரன், சனற்சுசாதன் என்பவர் 26,9
சன்மார்க்கம் - நல்லவழி 26,7

சா

சாகரம் - கடல் 146,4
சாசுவதம் - அழிவின்மை 3,7
சாட்டை - கயறு 324,1
சாந்தபதம் - ஒடுக்கநிலை 3,8
சார்வாகன் - நாஸ்திகன் 173,2
சாலம் கூட்டம் 395,2
சாலம்பம் - பற்றுக்கோடு 3,6
சாலேகம் - பலகணிவாயல் 101,3

சி

சித்தமவுனி - மௌனகுரு 426,1
சித்தாந்தம்-முடிந்தமுடிவு 8,3
சித்திகள் - அஷ்டமாசித்திகள்; அவை - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்வம், வசித்வம் என்பன 12,11
சித்து - ஞானம். 1,11.
சிந்தாகுலம் - மனக்கிலேசம். 56,11.
சிம்புள் - சரபப்பக்ஷி. 56,10.
சிரகிரி - திரிசிராமலை. 26,15.
சில் - ஒடு. 474,1.
சிலை - கல். 12,9.
சிவம் . மங்களகரம். 47,7.
சிற்சத்தி . ஞானசத்தி, 2,8.
சிற்சபை - ஞானசபை. 47,15.
சிற்பரவெளி - மேலாகிய ஞானாகாயம் 3,15
சிற்பரம் - ஞானரூபமாகிய பரம்பொருள் 19,3
சின்முத்திராக்குசம் - ஞானமுத்திரையாகிய தோட்டி 47,9

சீ

சீகாழித்துறை- திருஞானசம்பந்த மூர்த்திகள் 161,6

சு

சுகம் - கிளி 1026,2
சுகவாரி - இன்பசமுத்திரம் 27,11
சுக்கிலம் - விந்து 1116,1
சுகாரம்பம் - இன்பமயம், சுகோதயம் 14,7
சுத்தாதி - சுத்தவித்தை, ஈசன், சதாசிவம், சத்தி, சிவம் என்பன 48,4
சுயம்பு . தானேயுண்டானவன்: 26,5
சுருங்கில் - சிறுவீடு 101,3
சுருதி - வேதம் 436,1
சுரோத்ராதி - சுரோத்திரம், தொக்கு, சக்ஷு, சிகுவை, ஆக்கிராணம் என்பன் 48,2
சுவா - நாய் 348,1
சுளித்தல் - கோபித்தல், 37,5

சூ

சூது - இரகஸ்யம் 72,13
சூறை - கொள்ளை 534,4 [5,7
சூன்யம்-பாழ்,ஒன்றுமில்லாதது

செ

செந்நீர் - உதிரம் 101,7
செல்வத்தேவு . திருநாவுக்கரசுநாயனுர் 161,8

சே

சேடம் - மிகுந்து நிற்பது5,6
சேண் - ஆகாயம் 198,2
சேதா - தாய்ப்பசு 137,7.
சேதித்தல்-கிழித்தெறிதல் 56,10

சை

சையோகம் - கலவி. 97,13

சொ

சொச்சம் - நின்மலம் களங்கமற்றது. 24,4

சொரூபாநுபூதி - யோகாநுபவ நிலை 26,12
சொற்பிரகாசம் - மந்திரரூபமாய வெளி 3,1

சோ

சோங்கு - மரக்கலம். 199,3
சோபானம் - படிமுறை 357,2
சோமவட்டம்-சந்திரமண்டலம், 36,10
சோற்றுத்துருத்தி - அன்னத்தாலாகிய உடம்பு. 10,7

சௌ

சௌபானம் - சோபானம், படி 141,4

ஞா

ஞாதுரு - ஆன்மா 33,8
ஞானம் - அறிவு 33,8
ஞானவனல் - ஞானக்கினி 32,3

ஞே

ஞேயம் - சிவம் 153,5

த

தசநாடி - பத்துநாடிகள்; அவை சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி என்பன 36,8
தடத்தம் - சகளவடிவும் 3,11
தட்டுதல் - புலப்படுதல் 1,7
தண் - குளிர்ச்சி 22,7
தத்துதல் - தாவுதல் 122 7
தந்தி - யானை 65,7
தரணி - பூமி 40,10
தமர் - உறவினர் 109,14
தரளம் - முத்து 129,9
தவளம் - வெண்மை 44,3
தற்பரன் - அது என்னும் சுட்டுக்கு அப்பாற்பட்டவன், அதி என்னும் மேலான பொருள். 3,15
தனஞ்சயன் ஓர்வாயு; இது தேகத்தினின்று உயிர் நீங்கினும் தான் நீங்காதிருந்து உடம்பை வீங்குவித்து தலைகிழித்துச்செல்வதாம் 420,4
தனு - வில் 12,6

தா

தாது - மகரந்தம் 407,1
தாயகம் - தாய்வீடு 142,6
தாரகம் - ஆதாரம் 14,5
தாரணை - யோகவுறுப்பினுளொன்று 59,12
தாழ்தல் - கவிழ்தல் 12,5

தி

திகந்தம் - திக்கின் முடிவு 57,1
திமிரம் - இருள் 56,11
திராவிடம் - தமிழ் 66,9
திரோதம் - மறைவு 1165,2
திவ்யம் - தெய்வீகம் 3,14

தீ

தீபகுண்டமவுனி - தீக்ஷாகுரு 426,1
தீம்புனல் - மதுரமாகிய நீர் 110,2
தீனன் - எளியன் 56,12

து

துகள் - குற்றம் 25,5
துதைதல் - நெருங்குதல் 58,1
துப்பு - பவளம் 112,5
துரகம் - குதிரை 62,1
துரியம் - நான்காவது பொருள், பரமாத்மஸ்வரூபம் 2,12
துவிதம் - இரண்டு 46,4

துறவு-பற்றுக்களைவிடுதல். 40,7.
துஷ்டதேவதை - க்ஷுத்ரதேவதை, பலிபெறுந்தெய்வம்,54,2

தூ

தூர்தல் - உருவற்றொழிதல் 322,4.
தூவெளி - சிதாகாசம் 18,5.

தெ

தெசவிதநாதங்கள் - சிணிநாதம், சிணிசிணீநாதம், கண்டாநாதம், சங்கநாதம், வீணாநாதம், தாளாநாதம், வேணுநாதம், பேரிநாதம், மிருதங்கநாதம், மேகநாதம் என்பன. 62, 5.
தெட்டு - வஞ்சகம் 579,1.
தெருள் - தெளிவு 20,3.
தெற்றல் - அலைத்தல் 70 8
தென்புலத்தார் பிதிரர் 550,4.

தே

தேக்கல் - நிறைதல் 2,10.
தேசோமயம் - சோதியின் சொரூபம் 3,14
தேவதரு - கற்பகவிருக்ஷம் 4,14

தொ

தொடுத்தல் - உண்டாக்கல் 92,4
தொடுவழக்கு - தீராவழக்கு 8,10
தொழும்பன்-தொண்டன் 54,4
தொந்தம் - தொடக்கு 71,2
தொண்டியர் - தாசிகள் 1140,2

தோ

தோதகம் - வஞ்சனை 233,1
தோயம் - நீர் 70,5

ந

நடப்பன - விலங்கு முதலியன 5,1
நட்டணை - நடுவு நிலைமை 50,9
நவகண்டம்- ஒன்பதுகண்டங்கள் அவை - கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகணடம் என பன 36,1
நவநாதசித்தர்கள் - சத்தியநாதர், சதோகநாதர், அதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திர நாதர், கடேந்திர நாதர், கோர்க்கநாதர், என்போர். 43,10
நவம் - புதுமை 388, 4.
நவவடிவம் - பிரமன், விஷ்ணு, உருத்திரன் மகேசுவரன், சதாசிவன், சத்தி, சிவம், நாதம் விந்து என்பன. 176,8
நவிலுதல் - சொல்லுதல் 66,8

நா

நாகபாசம் - பாம்புபோன்ற கயறு 28,9
நாதம் - தொனி, இரண்டு கட்டைவிரலினாலே இரண்டு காதை மூடிக்கொண்டால் உள்ளே கேட்கும் ஒலி 9,5
நாவலன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள். 161,7
நாலுதல் - தொங்குதல் 98, 4

நி

நிகளம் - விலங்கு 37,1
நிசான் - அடையாளம் 867,1
நிட்களம் - அரூபம் 14,1
நித்தியம் - சாசுவதம் 14,1
நியமம் - தபசு, சந்தோஷம், ஆஸ்திக்கியம், தானம், ஈசுவர

பூஜை, சித்தாந்த சிரவணம், லஜ்ஜை, மதி, ஜபம், விரதம் என்பன. 127,1.
நிரஞ்சனம் - தோஷமின்மை. 3,12.
நிராமயம் - நோயின்மை. 3,12.
நிராலம்பம் - பற்றுக்கோடின்மை. 3,7.
நிர்விகாரம் - விகாரமின்மை 3,11
நிர்க்குணம் - குணாதீதம். 100,7.
நிர்மலம் - மாசில்லாதது. 3,9.
நிர்வசனம் - வசனாதீதம். 47,3.
நிர்விஷயம்-விஷயாதீதம். 3,10.
நிர்த்தொந்தம் - தொடர்பின்மை கட்டுப்பாடின்மை. 33,1.
நிழற்றல்-நிழலைச்செய்தல். 61,9.
நிஷ்பிரபஞ்சம் - உலகப்பற்றில்லாமை. 3,9.

நீ

நீதம் - நீதி. 79,9.
நீராளம் - நீரின் குணம். 11,9.
நீலன்-பாசாங்குக்காரன். 180,4.

நு

நுந்தை - உன்தந்தை, விஷ்ணு. 166,1.
நுழைவு - குகை. 36,7.

நூ

நூழை - அகர்ச்சி. 105.10.

நெ

நெகிடி - நெருப்புக்குவை. 43,3.
நெட்டுயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல். 6,7.

நே

நேர்மை - செம்மை. 85,5.

ப

பகடு - எருமை. 131,6.
பகவன்-அறுகுணமுடையோன்; அறுகுணங்களாவன - ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன. 47,6.
பசுபதி - ஆன்மாக்களுக்குத் தலைவன். 25,7.
பசுத்துவம்-சீவத்தன்மை. 234,3
படிறர் - வஞ்சகர். 131,4.
பணி - பாம்பு. 225,3.
பண்டை - முற்காலம். 167,3.
பண்ணவி - தேவி. 60,12.
பத்மநிதி - தாமரைமலரின்வடிவானபொக்கிஷம். 58,3.
பகிரண்டம் - துருவனுக்கு மேற்பட்ட வுலகம். 7,1.
பரதேவதை - மேலானதெய்வம். 3,15.
பரமகுரு - பரமாசாரியன். 85,4.
பரமார்த்தம் - உண்மைப்பொருள் 10,14.
பரவை - சமுத்திரம். 36,3.
பரிபாகம் - பக்குவம். 5,14.
பறை - பராசத்தி. 443,4.
பரிவு - அன்பு. 5,13.
பவுரி - ஓர்கூத்து. 60,11.
பவ்வம் - கடல். 129,9.
பறப்பன - கருடன்முதலியன. 5,1
பக்ஷணிகள் - புசிப்பவர்கள் 44,1.

பா

பாசாடவி - ஆசையாகிய காடு. 284,5.
பாதரசம் - சூதம், இரசம். 9,13.
பாராது பார்த்தல் - அகக்கண்ணால் பார்த்தல் 34,9.

பார் பூமி. 58,2.
பான்மை - நன்மை. 25,4.
பானு - சூரியன். 56,11.

பி

பிரகாசம் - பேரொளி. 1,1.
பிலுற்றுதல் - சிந்துதல். 165,1.

பு

புகலிடம் - அடைக்கலஸ்தானம். 35,4.
புட்கலம் - பூரணம் 3,7.
புண்டரீகபுரம்-சிதம்பரம். 333,7.
புண்ணீர் - நிணநீர். 101,8.
புந்தி - மனம். 30,5
புருஷார்த்தம் - புருஷனால் வேண்டப்படுவது; அறம், பொருள், இன்பம், வீடு என்பன. 42,8,
புலன் - ஐம்புலன்கள்; பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என்பன. 68,6.
புலால் - மாமிசம். 80,9
புவனம் - உலகம். 89,9.
புன்மை - இழிவு. 305, 6

பூ

பூராயம்-ஆச்சரியம்.புதுமை.6,9.
பூரை - போதும். 233,2.

பெ

பெண்ணீர்மை - பெண்மைக்குணம். 82,11.
பெத்தம்-ஒடுக்கம், பந்தம் 71,5.
பெரியபொருள்- பிரமப்பொருள். 2,16.
பொலாமணி - தொளைக்காத மணி. 206,3.

பே

பேசாமை - மௌனநிலை. 5,12.
பேய்த்தேர் - கானலினீர்.551,3.
பேரொளி - பரஞ்சுடர். 15,8.

பை

பைந்தொடி - பசிய வளையல். 328,5.

பொ

பொங்கேதம் - மிகுந்தகுற்றம். 1237,1
பொட்டல்-வெற்றிடம். 1242,1.
பொது- பொன்னம்பலம்.274,7,
பொறை - பொறுமை. 89,12.
பொறி - ஐம்பொறிகள்; மெய் வாய், கண், மூக்கு. செவிஎன்பன. 9,2.
பொற்பொதுநாதன் - கநகசபாபதி. 261,2.

போ

போனகம் - சோறு. 41,1.
போதம் - ஞானம். 11, 7.
போந்தநெறி - சைவந்தமார்க்கம் 30, 6.
போற்றல் - காப்பாற்றுதல் 40,5.

பௌ

பௌதிகம் - பூதசம்பந்தம். 5,3
பௌவம் - ஆழம். 1151,1.

ம

மகம் - யாகம். 385,3.
மகாம் - முதலை, 112,2,
மடவார் - மாதர், 110,4.
மணிக்குன்றம் - மாணிக்கமாலை. 259,4.
மத்தம் - ஊமத்தமலர். 264,1.
மருட்டிவிடுதல் - மயக்கிவிடுதல். 66, 13.
மருளர்-மயக்கமுடையவர். 50,1.
மர்க்கடம் - குரங்கு. 449,1.
மலநீர் - மூத்திரம். 101,8.
மலைவு - விரோதம். 87,3.

மணி - குளிகை 12,11
மண்ணீர்மை - பிரபஞ்சமாசு 968,1
மதி - சந்திரன் 53,12
மத்தகஜம் - மதயானை 37,14
மனோரதம்-மனவிருப்பம் 242,3
மந்த்ரமாலிகை - ஓர்யோகநூல், திருமந்திரமாலை 111,3
மரபு - பாரம்பரியம் 11,4
மலைவு - மயக்கம் 35,12
மறம் - பாவம் 308,1
மறை - வேதம் 21,1
மனவெளி-இதயாகாசம் 23,1
மனமாதி-மனமுதலியன 16,3
மன்றம் - உலகம் 213,4
மனோவாயு - பிராணவாயு 4,2
மனு - விண்ணப்பம் 96,12

மா

மாயை - மா - உற்பத்தி - யா - லயம், - மாதியாதீதி மாயா எதிலே தோன்றி எதிலே ஒடுங்குகிறதோ அது மாயை 9,1
மால் - விருப்பம் 69,4

மி

மிடி - தரித்திரம் 20,3
மின்னார்கள் - மாதர்கள் 40,3

மு

முகபடாம் - நெற்றிப்பட்டம் 37,7
முக்தம்-பாவவிமோசனம் 47,14
முகில் - மேகம் 2,11
மும்மண்டலம் - சோமசூரியாக்கினி மண்டலங்கள் 62,3
முழை - குகை 70,3
முரசறைதல்-கோஷித்தல் 3,2
முளரி - தாமரை 165,4
முறி - எழுதுமோலை 122,5

மூ

மூதுரை - வேதம் 244,4
மூரல் - பல் 98,1
மூலக்கனல் - மூலாக்கினி 63,7
மூவர்செய்பனுவல் - தேவாரம் 102,3

மே

மேக்கி - மேய்ப்பவன் 131,6
மேதினி - பூமி 224,3

மை

மைக்காலிருட்டு - மழைக்காலத்திருள் 76,9
மை - கருமை 51,9
மையல் - காமமயக்கம் 40,2

மோ

மோனம் - மௌனம் 251,2
மோன உருவெளி - உருவெளித்தோற்றம் 1,15

ய

யமபடர் - காலதூதர் 578,3

யா

யாதனை - துன்பம் 161,2

வ

வங்கம் - மரக்கலம். 112,9
வசனநிர்வாகர் - வார்த்தையிலே மிகுந்த சமர்த்தர் 6,7
வச்ரதரன் - இந்திரன் 12,7
வடபால்மவுனி - தக்ஷிணாமூர்த்தி 426, 1
வடநிழல் - ஆலமரம் 47,13
வடமொழி - சமஸ்கிருதம், 66,8
வடவனல் - வடவாமுகாக்கினி 12,3
வட்டு - சூதாடுகருவி 186,4

வயங்குதல் - விளங்குதல் 24,6
வனவன் - வேடன் 160,1
வரை - மலை 61,10
வட்டம் - மண்டலம் 56,14
வளி காற்று 168,2
வறிஞன் - தரித்திரன் 49,13

வா

வாசாமகோசரம் - வாக்கினால் அறியப்படாதது
வாசாகயிங்கரியம் - வாக்கினாலே செய்யுந் தொண்டு 4,1
வாசி-வாயுதாரணை 116,2
வாச்சியம் - சொற்பொருள்
வாஞ்சை - ஆசை, விருப்பம் 67,12
வாய்மை - சத்தியம் 267,2
வாய்பாடு - வழக்கம் 107,7
வாரம் - அன்பு 214,1
வாரணம் - கோழி 390,2
வாலாயம் - வழக்கம் 4,3
வாழாதுவாழ்தல் - பூதவுடம்பொழிந்தும் புகழுடம்போடு வாழ்தல் 12,9
வாழ்வு - செல்வம் 393,1
வான் - ஆகாயம் 227,3

வி

விகசித்தல் - மலர்தல் 64,14
விகற்பம் - வேறுபாடு 59,6
விகாதம் - விரோதம் 98,13
விடக்கு - மாமிசம் 101,9
விடைமூர்த்தி - பரமசிவன் விடை ரிஷபம் 59,9
விதண்டை - மாறுபாடு, தருக்க வகையுளொன்று 95,10
விஞ்சுதல் - மேலாதல் 789,2
விண் - ஆகாயம். 22,1
விண்ணிறைந்தவெளி - பரமாகாசம். 23,1
விந்து - ஸ்வரம் வர்ணம் நிவர்த்தி கலை முதலிய கலைகள் தோற்றியொடுக்குமிடம் 9,5
விபுலம் — விசாலம்
வியாபி-எங்குநிறைந்தவன் 49,3
வியோமம் - ஆகாயம் 3,8
விரகசந்தாபம் - மோகாவேசம் 98,3
விலாழி - யானைக்கையுமிழ்நீர் 37,4
விஸ்வாதீதம் - பிரபஞ்சத்தைக் கடந்தது 47,5

வீ

வீடு - முத்தி, மோனம் 11,8
வீறு - பெருமை. 134,3

வெ

வெட்டு - அதரம் 579,1
வெண்ணீர் - கோழை 101,7
வெய்யன் - கொடியன் 74,5
வெதும்பல்-கொதித்தல் 55,2
வெவ்வியகுணம் - தீக்குணம் 28,5
வெளி - சிதாகாசம் 72,13
வெற்பு - மலை 57,11

வே

வேசறல் - மனங்கோதல் 83,8
வேதா - பிரமன் 109,1
வேதிசெய்தல் - பேதப்படுதல் 32,6
வேலை - சமுத்திரம் 99,6
வேதாந்தம் - மறைமுடிவு 5,8

வை

வைகுதல் - தங்குதல் 97,11
வைதிகம் - வேதசம்பந்தம் 141,8
வையம் - உலகம் 350,2

நூலினுட்பிரிவு.

யதை கணக்கு வல்லமை முதலியவற்றைப்பற்றிச் சில முதியோர்கள் சொல்லக்கேட்டு அவரை வரவழைத்துத்தன்னிடத்தில் ஒரு பெரியசேவையில் அமர்த்திக்கொண்டனர், பிள்ளையவர்களும் தன்னரசன் சந்தோஷிக்குமாறு மிகவும் திறமையாகவே இராஜாங்க காரியத்தை நடத்திக்கொண்டுவந்தனர்.

அப்போது, வேதாரணியத்திலே இருந்த *தனது தமையனார் புத்திரப்பேறில்லாமல் வருந்துவதைக் கண்டுமனம் பொறுதவராய்த் தன்னுடைய அருமைப்புதல்வராகிய சிவசிதம்பரப் பிள்ளையை அவருக்கு ஸ்வீகாரபுத்ரனுப்க் கொடுத்துவிட்டுத்தனது மோக்ஷநிலைக்கோர் சற்புத்திரன் வேண்டுமென்னும் விருப்பமுடையவராய்த் திரிசிராமலையின் கண்ணீற்றிருந்தருளும் தாயுமானேசுரரைத் தினந்தோறுந் தேவிசகிதம் போற்றி வருவாராயினர்.

அந்நாளிலே, சிவபெருமானது பெருங்கருணைத் திருவருளால் பிள்ளையவர்கள் † மனைவியார் திருவயிற்றிலே கருப்பமுண்டாகிப் பத்துத்திங்களும் நிரம்பப்பெற்றுத் தனதூராகிய வேதாரணியத்திலே மிக்க சுபவேளையில் பெறுதற்கரிய ஓர் ஆண்மகவைப் பெற்றனர். தந்தையார் தனக்கு மகன் பிறந்த இடம் திருமறைக்காடாயினும் அம்மகவுவிஷயமாக ஈட்டரும் பெருந்தவம் பல செய்துவந்த இடம் திரிசிரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் தாயுமானேசுரர் திருவடியே ஆதலால், அக்குழந்தைக்குத் தாயுமானவர் என்னும் திருப்பெயரையே பெயராகவைத்துச் சுக்கில பக்ஷத்துச் சந்திரன்போல நாளொரு மேனியாக வளர்த்துக்கொண்டு வந்தார்.

பிறகு இக்குழந்தை தக்கவயதிலே வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்று, நெடுங்கணக்கு முதலியவற்றைச் செவ்

---

* இவர் பெயர் வேதாரணியப்பிள்ளை என்பார்பலர்.

† இவ்வம்மையார் கெஜவல்லியம்மாள் எனப்படுவராம்.

ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள்

அருளிச்செய்த

திருப்பாடற்றிரட்டு.

காஞ்சி - நாகலிங்கமுதலியார் பதிப்பு.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத்தாயுமானசுவாமிகள்

அருளிச்செய்த

திருப்பாடற்றிரட்டு.

திருவருள்விலாசப்பரசிவவணக்கம்.

பதினான்குசீர்விருத்தம்.

1. அங்கிங்கெனாதபடியெங்கும்ப்ரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்கா
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே

கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம். (க)

2. ஊரனந்தம்பெற்றபேரனந்தஞ்சுற்று
முறவனந்தம்வினையினு
லுடலனந்தஞ்செயும்வினையனந்தங்கருத்
தோவனந்தம்பெற்றபேர்
சீரனந்தஞ்சொர்க்கநரகமுமனந்தநற்
றெய்வமுமனந்தபேதந்
திகழ்கின்றசமயமுமனந்தமதனுன்ஞான
சிற்சத்தியாலுணர்ந்து
காரனந்தங்கோடிவருஷித்ததெனவன்பர்
கண்ணும்விண்ணுந்தேக்கவே
கருதரியவானந்தமழைபொழியுமுகிலைநங்
கடவுளைத்துரியவடிவைப்
பேரனந்தம்பேசிமறையனந்தஞ்சொலும்
பெரியமௌனத்தின்வைப்பைப்
பேசருமனந்தபதஞானவானந்தமாம்
பெரியபொருளைப்பணிகுவாம். (உ)

3. அத்துவிதவத்துவைச்சொற்ப்ரகாசத்தனியை
யருமறைகண்முரசறையவே
யறிவினுக்கறிவாகியானந்தமயமான
வாதியையநாதியேக
தத்துவசொ[illegible]தமதசம்மதப்பெருச்
சாலம்[illegible]மான
சாசுவதபுட்கல[illegible]ம்பவாலம்ப
சாந்தப[illegible]வ்பாமநிலையை
நித்தநிர்மலசகிதந[illegible]ப்ரபஞ்சப்பொருளை
நிர்விஷயசுத்தமான

நிர்விகாரத்தைத்தடத்தமாய்நின்றொளிர்
நிரஞ்சனநிராமயத்தைச்
சித்தமறியாதபடிசித்தத்திளின்றிலகு
திவ்யதேசோமயத்தைச்
சிற்பரவெளிக்குள்வளர்தற்பரமதானபர
தேவதையையஞ்சலிசெய்வாம். (௩)

பரிபூரணானந்தம்.

பதினான்குசீர்விருத்தம்.

4. வாசாகயிங்கரியமன்றியொருசாதன
மனோவாயுநிற்கும்வண்ணம்
வாலாயமாகவும்பழகியறியேனன்றுறவு
மார்க்கத்தினிச்சைபோல
நேசாநுசாரியாய்விவகரிப்பேனந்த
நினைவையுமறந்தபோது
நித்திரைகொள்வேன்றேகநீங்குமெனவெண்ணிலோ
நெஞ்சந்துடித்தயருவேன்
பேசாதவானந்தநிட்டைக்குமறிவிலாப்
பேதைக்கும்வெகுதூரமே
பேய்க்குணமறிந்திந்தநாய்க்குமொருவழிபெரிய
பேரின்பநிட்டையருள்வாய்
பாசாடவிக்குளேசெல்லாதவர்க்கருள்
பழுத்தொழுகுதேவதருவே
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (க)

5. தெரிவாகவூர்வனநடப்பனபறப்பன
செயற்கொண்டிருப்பனமுதற்

தேகங்களத்தனையுமோகங்கொள்பௌதிகஞ்
சென்மித்தவாங்கிறக்கும்
விரிவாயபூதங்களொன்றோடொன்றுபழிய
மேற்கொண்டசேடமதுவே
வெறுவெளிநிராலம்பநிறைவின்பமுபசாந்த
வேதவேதாந்தஞானம்
பிரியாதபேரொளிபிறக்கின்றவருளருட்
பெற்றோர்கள்பெற்றபெருமை
பிறவாமையென்றைக்குமிறவாமையாய்வந்து
பேசாமையாகுமெனவே
பரிவாயெனக்குநீயறிவிக்கவந்ததே
பரிபாககாலமலவோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௨)

6. ஆராயும்வேளையிற்பிரமாகியானெனு
மையவொருசெயலுமில்லை
யமைதிபொருபேசாதபெருமைபெறுதுவாசந்த்ர
ராமெனவிருந்தபேரு
நோகவொருகோபமொருவேளைவாவந்த
நிறைவொன்றுமில்லாமலே
நெட்டுயிர்க்குத்தட்டழிந்துளறுவார்வசன
நிர்வாகமொன்றபேரும்
பூராயமாயொன்றுபேசுமிடமொன்றைப்
புலம்புவார்சிவராத்திரிப்
போதுதுயிலாமென்றவிரதியருமறித்தாயிற்
போலேயிருந்துதுயில்வார்
பாராதிதனிலுள்ளசெயலெல்லாமுடிவிலே

பார்க்கினின்செயலல்லவோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௬)

7. அண்டபகிரண்டமும்மாயாவிகாரமே
யம்மாயையில்லாமையே
யாமெனவுமறிவுமுண்டப்பாலுமறிகின்ற
வறிவினையறிந்துபார்க்கி
னெண்டிசைவிளக்குமொருதெய்வவருளல்லாம
லில்லையெனுநினைவுமுண்டிங்
கியானெனதறத்துரியநிறைவாகிநிற்பதே
யின்பமெனுமன்புமுண்டு
கண்டனவெலாமல்லவென்றுகண்டனைசெய்து
கருவிகரணங்களோயக்
கண்மூடியொருகணமிருக்கவென்றற்பாழ்க்க
கர்மங்கள்போராடுதே
பண்டையுளகர்மமேகர்த்தாவெனும்பெயர்ப்
பக்ஷநானிச்சிப்பனோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௭)

8. சந்ததமுமெனதுசெயனினதுசெயலீயானெனுந்
தன்மைநினையன்றியில்லாத்
தன்மையால்வேறலேன்வேதாந்தசித்தாந்த
சமரசசுபாவமிதுவே
யிந்தநிலைதெளியநானெக்குருகிவாடிய
வியற்கைதிருவுளமறியுமே
யிந்நிலையிலேசற்றிருக்கவென்றன்மடமை
யிதசத்ருவாகவந்து
சிந்தைகுடிகொள்ளுதேமலமாயைகன்மந்
திரும்புமோதொடுவழக்காய்ச்

செனமம்வருமோவெனவும்போசிக்குதேமனது
சிரத்தையெனும்வாளுமுதவிப்
பந்தமறமெய்ஞ்ஞானதீரமுந்தந்தெனைப்
பாதுகாத்தருள்செய்குவாய்
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௫)

9. பூதலயமாகின்றமாயைமுதலென்பர்சிலர்
பொறிபுலனடங்குமிடமே
பொருளென்பர்சிலர்கரணமுடிவென்பர்சிலர்குணம்
போனவிடமென்பர்சிலபேர்
நாதவடிவென்பர்சிலர்விந்துமயமென்பர்சிலர்
நட்டநடுவேயிருந்த
நாமென்பர்சிலருருவமாமென்பர்சிலர்கருதி
னுடலருவென்பர்சிலபேர்
பேதமறவுயிர்கெட்டநிலயமென்றிடுவர்சிலர்
பேசினருளென்பர்சிலபேர்
பின்னுமுன்னுங்கெட்டசூனியமதென்பர்சிலர்
பிறவுமேமொழிவரிவையாற்
பாதரசமாய்மனதுசஞ்சலப்படுமலாற்
பரமசுகநிஷ்டைபெறுமோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௬)

10. அந்தகாரத்தையோரகமாக்கிமின்போலென்
னறிவைச்சுருக்கினவரா
ரவ்வறிவுதானுமேபற்றினதுபற்று
யழுந்தவுந்தலைமீதிலே
சொந்தமாயெழுதப்படித்ததார்மெய்ஞ்ஞான
சுகநிஷ்டைசேராமலே

சோற்றுத்துருத்தியைச்சதமெனவுமுண்டுண்டு
தூங்கவைத்தவரார்கொலோ
தந்தைதாய்முதலானவகிலட்ரபஞ்சந்
தனைத்தந்ததெனதாசையோ
தன்னையேநோவனேபிறரையேநோவனே
தற்காலமதைநோவனே
பந்தமானதுதந்தவினையையேநோவனே
பரமார்த்தமேதுமறியேன்
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (எ)

11\. வாராதெலாமொழியவருவனவெலாமெய்த
மனதுசாக்ஷியதாகவே
மருவநிலைதந்ததும்வேதாந்தசித்தாந்த
மரபுசமரசமாகவே
பூராயமாயுணரவூகமதுதந்ததும்
பொய்யுடலைநிலையன்றெனப்
போதநெறிதந்ததுஞ்சாசுவதவானந்த
போகமேவீடென்னவே
நீராளமாயுருகவுள்ளன்புதந்தது
நின்னதருளின்னுமின்னு
நின்னையேதுணையென்றவென்னையேகாக்கவொரு
நினைவுசற்றுண்டாகிலோ
பாராதியறிபாதமோனமேயிடைவிடாப்
பற்றுகநிற்கவருள்வாய்
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (அ)

12\. ஆழாழிகரையின்றிநிற்கவிலையோகொடிய
வாலமமுதாகவிலையோ

வக்கடலின்மீதுவடவனனிற்கவில்லையோ
வந்தரத்தகிலகோடி
தாழாமணிலைநிற்கவில்லையோமேருவுந்
தநுவாகவளையவிலையோ
சப்தமேகங்களும்வச்ரதாரணையிற்
சஞ்சரித்திடவில்லையோ
வாழாதுவாழவேயிராமனடியாற்சிலையு
மடமங்கையாகவிலையோ
மணிமந்த்ரமாதியால்வேண்டுசித்திகளுலக
மார்க்கத்தில்வைக்கவிலையோ
பாழானவென்மனங்குவியவொருதந்திரம்
பண்ணுவதுனக்கருமையோ
பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (கூ)

13. ஆசைக்கோரளவில்லையகிலமெல்லாங்கட்டி
யாளினுங்கடன்மீதிலே
யாணைசெலவேநினைவரளகேசனிகராக
வம்பொன்மிகவைத்தபேரு
நேசித்துரசவாதவித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரு
நிலையாகவேயினுங்காயகற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும்வேளையிற்பசிதீரவுண்பது
முறங்குவதுமாகமுடியு
முள்ளதேபோதுநானெனக்குளறியே
யொன்றைவிட்டொன்றுபற்றிப்
பாசக்கடற்குளேவீழாமன்மனதற்ற
பரிசுத்தநிலையையருள்வாய்

பார்க்குமிடமெங்குமொருநீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமே. (௧0)

பொருள்வணக்கம்.

அறுசீர்விருத்தம்.

14. நித்தியமாய்நிர்மலமாய்நிட்களமாய்
நிராமயமாய்நிறைவாய்நீங்காச்
சுத்தமுமாய்த்தூரமுமாய்ச்சமீபமுமாய்த்
துரியநிறைசுடராயெல்லாம்
வைத்திருந்ததாரகமாயானந்த
மயமாகிமனவாக்கெட்டாச்
சித்துருவாய்நின்றவொன்றைச்சுகாரம்பப்
பெருவெளியைச்சிந்தைசெய்வாம். (௧)

15. யாதுமனநினையுமந்தநினைவுக்கு
நினைவாகியாதின்பாலும்
பேதமறநின்றுயிருக்குயிராகி
யன்பருக்கேபேரானந்தக்
கோதிலமுதூற்றரும்பிக்குணங்குறியொன்
றறத்தன்னைக்கொடுத்துக்காட்டுந்
தீதில்பராபரமானசித்தாந்தப்
பேரொளியைச்சிந்தைசெய்வாம். (௨)

16. பெருவெளியாயைம்பூதம்பிறப்பிடமாய்ப்
பேசாதபெரியமோனம்
வருமிடமாய்மனமாதிக்கெட்டாத
பேரின்பமயமாய்ஞானக்
குருவருளாற்காட்டிடவுமன்பரைக்கோத்
தறவிழுங்கிக்கொண்டப்பாலும்

தெரிவரிதாய்க்கலந்தவெந்தப்பொருளந்தப்
பொருளினையாஞ்சிந்தைசெய்வாம். (௩)

17. இகபரமுமுயிர்க்குயிரையானெனத்
றவருறவையெந்நாளுஞ்
சுகபரிபூரணமானநிராலம்ப
கோசரத்தைத்துரியவாழ்வை
யகமகிழவருந்தேனை முக்கனியைக்
கற்கண்டையமிர்தைநாடி
மொகுமொகெனவிருவிழிநீர்முத்திறைப்பக்
கரமலர்கண்முகிழ்த்துநிற்பாம். (௪)

18. சாதிகுலம்பிறப்பிறப்புப்பந்தமுத்தி
யருவுருவத்தன்மைநாம
மேதுமின்றியெப்பொருட்குமெவ்விடத்தும்
பிரிவறநின்றியக்கஞ்செய்யுஞ்
சோதியைமாத்தூவெளியைமனதவிழ
நிறைவானதுரியவாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத்திருவருளை
நினைவாகச்சிந்தைசெய்வாம். (௫)

19. இந்திரசாலங்கனவுகானலினீ
ரெனவுலகமெமக்குத்தோன்றச்
சந்ததமுஞ்சிற்பரத்தாலழியாத
தற்பரத்தைச்சார்ந்துவாழ்க
புந்திமகிழுறநாளுந்தடையறவா
னந்தவெள்ளம்பொலிகவென்றே
வந்தருளுங்குருமௌனிமலர்த்தாளை
யனுதினமும்வழுத்தல்செய்வாம். (௬)

20. பொருளாகக்கண்டபொருளெவைக்குமுதற்
பொருளாகிப்போதமாகித்

தெருளாகிக்கருதுமன்பர்மிடிதீரப்
பருகவந்தசெழுந்தேனுகி
யருளானோர்க்ககம்புறமென்றுன்னுத
பூரணவானந்தமாகி
யிருடீரவிளங்குபொருளியாதந்தப்
பொருளினையாமிறைஞ்சிநிற்பாம். (எ)

21. அருமறையின்சிரப்பொருளாய்விண்ணவர்மா
முனிவர்சித்தாதியானோர்
தெரிவரியபூரணமாய்க்காரணங்கற்
பனைகடந்தசெல்வமாகிக்
கருதரியமலரின்மணமெள்ளிலெண்ணெ
யுடலுயிர்போற்கலந்தெங்நாளுந்
துரியநடுவூடிருந்தபெரியபொரு
ளியாததனைத்தொழுதல்செய்வாம். (அ)

22. விண்ணாதிபூதமெல்லாந்தன்னகத்தி
லடக்கிவெறுவெளியாய்ஞானக்
கண்ணாரக்கண்டவன்பர்கண்ணாடே
யானந்தக்கடலாய்வேறொன்
றெண்ணுதபடிக்கிரங்கித்தானுகச்
செய்தருளுமிறையேயுன்றன்
றண்ணருஞ்சாந்தவருடனைநினைந்து
கரமலர்கடலைமேற்கொள்வாம். (கூ)

23. விண்ணிறைந்தவெளியாயென்மனவெளியிற்
கலந்தறிவாம்வெளியினூடுந்
தண்ணிறைந்தபேரமுதாய்ச்சதானந்த
மானபெருந்தகையேநின்பா
லுண்ணிறைந்தபேரன்பாலுள்ளுருகி
மொழிகுளறியுவகையாகிக்

கண்ணிறைந்தபுனலுகுப்பக்கரமுகிழ்ப்ப
நின்னருளைக்கருத்தில்வைப்பாம். (௭)

எண்சீர் விருத்தம்.

24. ஆதியந்தங்காட்டாதமுதலாயெம்மை
யடிமைக்காவளர்த்தெடுத்தவன்னைபோல
நீதிபெறுங்குருவாகிமனவாக்கெட்டா
நிச்சயமாய்ச்சொச்சமதாய்நிமலமாகி
வாதமிடுஞ்சமயநெறிக்கரியதாகி
மௌனத்தோர்பால்வெளியாய்வயங்காநின்ற
சோதியையென்னுயிர்த்துணையைநாடிக்கண்ணீர்
சொரியவிருகரங்குவித்துத்தொழுதல்செய்வாம்.

25. அகரவுயிரெழுத்தனைத்துமாகிவேறு
யமர்ந்ததெனவகிலாண்டமனைத்துமாகிப்
பகர்வனவெல்லாமாகியல்லவாகிப்
பரமாகிச்சொல்லரியபான்மையாகித்
துகளறுசங்கற்பவிகற்பங்களெல்லாந்
தோயாதவறிவாகிச்சுத்தமாகி
நிகரில்பசுபதியானபொருளைநாடி
நெட்டுயிர்த்துப்பேரன்பானினைதல்செய்வாம். ()

சின்மயானந்தகுரு.

பதினான்குசீர் விருத்தம்.

26 அங்கைகொடுமலர்தூவியங்கமதுபுளகிப்ப
வன்பினாலுருகிவிழிநீ
ராறாகவாராதமுத்தியினதாவேச
வாசைக்கடற்குண்மூழ்கிச்

சங்காசுயம்புவேசம்புவேயெனவுமொழி
தழுதழுத்திடவணங்குஞ்
சன்மார்க்கநெறியிலாத்துன்மார்க்கனேனையுந்
தண்ணருள்கொடுத்தாள்வையோ
துங்கமிகுபக்குவச்சனகன்முதன்முனிவோர்க
டொழுதருகில்வீற்றிருப்பச்
சொல்லரியநெறியையொருசொல்லாலுணர்த்தியே
சொரூபாநுபூதிகாட்டிச்
செங்கமலபீடமேற்கல்லாலடிக்குள்வளர்
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (க)

27. ஆக்கையெனுமிடிகரையைமெய்யென்றபாவிநா
னத்துவிதவாஞ்சையாத
லரியகொம்பிற்றேனைமுடவனிச்சித்தபடி
யாகுமறிவவிழவின்பந்
தாக்கும்வகையேதிநாட்சரியைகிரியாயோக
சாதனம்விடுத்ததெல்லாஞ்
சன்மார்க்கமல்லவிவைநிற்கவென்மார்க்கங்கள்
சாராதபோறிவதாய்
வாக்குமனமணுகாதபூரணப்பொருள்வந்து
வாய்க்கும்படிக்குபாயம்
வருவித்துவட்டாதபேரின்பமானசுக
வாரியினைவாய்மடுத்துத்
தேக்கித்திளைக்கநீமுன்னிற்பதென்றுகாண்
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (உ)

28. அவ்வியமிருக்கநானென்கின்றவாணவ
மடைந்திட்டிருக்கலோப
மருளின்மைகூடக்கலந்துள்ளிருக்கமே
லாசாபிசாசமுதலாம்
வெவ்வியகுணம்பலவிருக்குமென்னறிவூடு
மெய்யனீவீற்றிருக்க
விதியில்லையென்னிலோபூரணனெனும்பெயர்
விரிக்கினுரைவேறுமுளதோ
கவ்வுமலமாகின்றநாகபாசத்தினாற்
கட்டுண்டவுயிர்கண்மூர்ச்சை
கடிதகலவலியவருஞானசஞ்சீவியே
கதியானபூமிநடுவுட்
செவ்விதின்வளர்ந்தோங்குதிவ்யகுணமேருவே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (ரு)

29. ஐவகையெனும்பூதமாதியைவகுத்ததனு
ளசரசரபேதமான
யாவையும்வகுத்துநல்லறிவையும்வகுத்துமறை
யாதிநூலையும்வகுத்துச்
சைவமுதலாவளவில்சமயமும்வகுத்துமேற்
சமயங்கடந்தமோன
சமரசம்வகுத்தநீயுன்னைநானணுகவுந்
தண்ணருள்வகுக்கவிலையோ
பொய்வளருநெஞ்சினர்கள்காணாதகாட்சியே
பொய்யிலாமெய்யாறிவிற்
போதபரிபூரணவகண்டிதாகாரமாய்ப்
போக்குவரவற்றபொருளே

தெய்வமறைமுடிவானபிரணவசொரூபியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (4)

30. ஐந்துவகையாகின்றபூதபேதத்தினு
லாகின்றவாக்கைநீர்மே
லமர்கின்றகுமிழியெனநிற்கின்றதென்னநா
னறியாதகாலமெல்லாம்
புந்திமகிழுறவுண்டுடுத்தின்பமாவதே
போந்தநெறியென்றிருந்தேன்
பூராயமாகநினதருள்வந்துணர்த்தவிவை
போனவழிதெரியவில்லை
யெந்தநிலைபேசினுமிணங்கவிலையல்லா
லிறப்பொடுபிறப்பையுள்ளே
யெண்ணினெஞ்சதுபகீரெனுந்துயிலுறு
திருவிழியுமிரவுபகலாய்ச்
செந்தழலின்மெழுகானதங்கமிவையென்கொலோ
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (5)

31. காரிட்டவாணவக்கருவறையிலறிவற்ற
கண்ணிலாக்குழவியைப்போற்
கட்டுண்டிருந்தவெமைவெளியில்விட்டல்லலாங்
காப்பிட்டதற்கிசைந்த
பேரிட்டுமெய்யென்றுபேசுபாழ்ம்பொய்யுடல்
பலக்கவிளையமுதமூட்டிப்
பெரியபுவனத்தினிடைபோக்குவரவுறுகின்ற
பெரியவிளையாட்டமைத்திட்

டேரிட்டதன்சுருதிமொழிதப்பினமனைவிட்
டிடருறவுறுக்கியிடர்தீர்த்
திரவுபகலில்லாதபேரின்பவீட்டினி
லிசைந்துதுயில்கொண்மினென்று
சீரிட்டவுலகன்னைவடிவானவெந்தையே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (6)

32, கருமருவுகுகையனையகாயத்தினடுவுட்
களிம்புதோய்செம்பனையயான்
காண்டகவிருக்கநீஞானவனன்மூட்டியே
கனிவுபெறவுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின்னருளானகுளிகைகொடு
பரிசித்துவேதிசெய்து
பத்துமாற்றுத்தங்கமாக்கியேபணிகொண்ட
பக்ஷத்தையென்சொல்லுவே
னருமைபெறுபுகழ்பெற்றவேதாந்தசித்தாந்த
மாதிபாமந்தமீது
மத்துவிதநிலையாயென்னையாண்டுன்னடிமை
யானவர்களறிவினூடுந்
திருமருவுகல்லாலடிக்கீழும்வளர்கின்ற
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (7)

33. கூடுதலுடன்பிரிதலற்றுநிர்த்தொந்தமாய்க்
குவிதலுடன்விரிதலற்றுக்
குணமற்றுவரவினொடுபோக்கற்றுநிலையான
குறியற்றுமலமுமற்று

நாடுதலுமற்றுமேல்கீழ்நடுப்பக்கமென
நண்ணுதலுமற்றுவிந்து
நாதமற்றைவகைப்பூதபேதமுமற்று
ஞாதுருவின்ஞானமற்று
வாடுதலுமற்றுமேலொன்றற்றிரண்டற்று
வாக்கற்றுமனமுமற்று
மன்னுபரிபூரணச்சுகவாரிதன்னிலே
வாய்மடுத்துண்டவசமாய்த்
தேடுதலுமற்றவிடநிலையென்றமௌனியே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (8)

34. தாராதவருளெலாந்தந்தருளமௌனியாய்த்
தாயனையகருணைகாட்டித்
தாளிணையென்முடிசூட்டியறிவிற்சமாதியே
சாசுவதசம்ப்ரதாய
மோராமன்மந்திரமுமுன்னுமன் முத்திநிலை
யொன்றேயிரண்டெனாமை
லொளியெனவும்வெளியெனவுமுருவெனவுநாதமா
மொலியெனவுமுணர்வுருமற்
பாராதுபார்ப்பதேயேதுசாதனமற்ற
பாமவநுபூதிவாய்க்கும்
பண்பென்றுணர்த்தியதுபாராமலந்நிலை
பதிந்தநின்பழவடியர்தஞ்
சீராயிருக்கநினதருள்வேண்டுமையனே
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (9)

35. போதமாயாதிநடுவந்தமுமிலாததாய்ப்
புனிதமாயவிகாரமாய்ப்
போக்குவரவில்லாதவின்பமாய்நின்றநின்
பூரணம்புகலிடமதா
வாதரவுவையாமலறிவினைமறைப்பதுநி
னருள்பின்னுமறிவின்மைதீர்த்
தறிவித்துநிற்பதுநினருளாகிலெளியனேற்
கறிவாவதேதறிவிலா
வேதம்வருவகையேதுவினையேதுவினைதனக்
கீடானகாயமேதென்
னிச்சாசுதந்தரஞ்சிறிதுமிலையிகபர
மிரண்டினுண்மலைவுதீரத்
தீதிலருள்கொண்டினியுணர்த்தியெனையாள்வையோ
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (10)

36. பத்திநெறிநிலைநின்றுநவகண்டபூமிப்
பரப்பைவலமாகவந்தும்
பரவையிடைமூழ்கியுநதிகளிடைமூழ்கியும்
பசிதாகமின்றியெழுநா
மத்தியிடைநின்றுமுதிர்சருகுபுனல்வாயுவினை
வன்பசிதனக்கடைத்தும்
மவுனத்திருந்துமுயர்மலைநுழைதனிற்புக்கு
மன்னுதசநாடிமுற்றுஞ்
சுத்திசெய்தும்மூலப்ராணனோடங்கியைச்
சோமவட்டத்தடைத்துஞ்
சொல்லரியவமுதுண்டுமறபவுடல்கற்பங்க
டோறுநிலைநிற்கவீறு

சித்திசெய்துஞ்ஞானமலதுகதிகூடுமோ
சித்தாந்தமுத்திமுதலே
சிரகிரிவிளங்கவருதக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்தகுருவே. (11)

மௌனகுரு வணக்கம்.

பதினான்குசீர்விருத்தம்.

37. ஆசைநிகளத்தினைநிர்த்தூளிபடவுதறி
யாங்காரமுளையையெற்றி
யத்துவிதமதமாகிமதமாறுமாறுக
வங்கையின்விலாழியாக்கிப்
பாசவிருடன்னிழலெனச்சுளித்தார்த்துமேற்
பார்த்துப்பாந்தமனதைப்
பாரித்தகவளமாய்ப்பூரிக்கவுண்டுமுக
படாமன்னமாயைநூறித்
தேசுபெறநிலைத்தசின்முத்திராங்குசச்
செங்கைக்குளேயடங்கிச்
சின்மயானந்தசுகவெள்ளம்படிந்துநின்
றிருவருட்பூர்த்தியான
வாசமுறுசற்சாரமீதெனையொருஞான
மத்தகஜமெனவளர்த்தாய்
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (1)

38. ஐந்துவகையாகின்றபூதமுதலாதமு
மடங்கவெளியாகவெளிசெய்
தறியாமையறிவாதிபிரிவாகவறிவார்க
ளறிவாகநின்றநிலையிற்

சிந்தையறநில்லென் றுசும்மாவிருத்திமேற்
சின்மயானந்தவெள்ளந்
தேக்கித்திளைத்துநானதுவாயிருக்கநீ
செப்பித்திரமிகநன்றுகா
ணெந்தவடவாற்பரமகுருவாழ்கவாழவரு
ளியநந்திமரபுவாழ்க
வென்றடியர்மனமகிழவேதாகமத்துணி
பிரண்டில்லையொன்றென்னவே
வந்தகுருவேவீறுசிவஞானசித்திநெறி
மௌனோபதேசகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (2)

39. ஆதிக்கநல்கினவராரிந்தமாயைக்கெ
ணறிவின்றியிடமில்லையோ
வந்தரப்புஷ்பமுங்கானலின்னீருமோ
ரவசாத்துபயோகமோ
போதித்தநிலையையுமயக்குதேப்பயநான்
புக்கவருடோற்றிடாமற்
பொய்யானவுலகத்தைமெய்யாநிறுத்தியென்
புந்திக்குளிந்த்ரஜாலஞ்
சாதிக்குதேயிதனைவெல்லவுமுபாயநீ
தந்தருள்வதென்றுபுகல்வாய்
சண்மதஸ்தாபனமும்வேதாந்தசித்தாந்த
சமரசநிர்வாகநிலையு
மாதிக்கொடண்டப்பரப்பெலாமறியவே
வந்தருளுஞானகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (3)

40. மின்னனையபொய்யுடலைநிலையென் றுமையிலகு
விழிகொண்டுமையல்பூட்டு
மின்னார்களின்பமேமெய்யென்றும்வளர்மாட
மேல்வீடுசொர்க்கமென்றும்
பொன்னையழியாதுவளர்பொருளென்றுபோற்றியிப்
பொய்வேஷமிகுதிகாட்டிப்
பொறையறிவுதுறவீதலாதிநற்குணமெலாம்
போக்கிலேபோகவிட்டுத்
தன்னிகரிலோபாதிபாழ்ம்பேய்பிடித்திடத்
தரணிமிசைலோகாயதன்
சமயநடைசாராமல்வேதாந்தசித்தாந்த
சமரசசிவாநுபூதி
மன்னவொருசொற்கொண்டெனைத்தடுத்தாண்டன்பின்
வாழ்வித்தஞானகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (4)

41. போனகமிருக்கின்றசாலையிடைவேண்டுவ
புசித்தற்கிருக்குமதுபோற்
புருஷர்பெறுதர்மாதிவேதமுடனாகமம்
புகலுமதினாலம்பயன்
ஞானநெறிமுக்யநெறிகாட்சியனுமானமுத
னானவிதங்கடேர்ந்து
நானெனக்குளறுபடையுடைபெயர்த்திடவு
நான்குசாதனமுமோர்ந்திட்
டானநெறியாஞ்சரியையாதிசோபானமுற்
றனுபக்ஷசம்புபக்ஷ
மாமிருவிகற்பமுமாயாதிசேவையு
மறிந்திரண்டொன்றெனுமோர்

மானதவிகற்பமறவென்றுநிற்பதுநமது
மாபென்றபாமகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மாபில்வருமௌனகுருவே. (5)

42. கல்லாதவறிவுமேற்கேளாதகேள்வியுங்
கருணைசிறிதேதுமில்லாக்
காட்சியுங்கொலைகளவுகட்காமமாட்சியாய்க்
காதலித்திடுநெஞ்சமும்
பொல்லாதபொய்ம்மொழியுமல்லாதுநன்மைகள்
பொருந்துகுணமேதுமறியேன்
புருஷர்வடிவானதேயல்லாதுகனவிலும்
புருஷார்த்தமேதுமில்லே
னெல்லாமறிந்தநீயறியாததன்றெனக்
கெவ்வண்ணமுய்வண்ணமோ
விருளையிருளென்றவர்க்கொளிதாரகம்பெறு
மெனக்குநின்னருடாரகம்
வல்லானெனும்பெயருனக்குள்ளதேயிந்த
வஞ்சகனையாளநினையாய்
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மாபில்வருமௌனகுருவே. (6)

43. கானகமிலங்குபுலிபசுவொடுகுலாவுநின்
கண்காணமதயானைநீ
கைகாட்டவுங்கையானெகிடிக்கெனப்பெரிய
கட்டைமிகவேந்திவருமே
போனகமமைந்ததெனவக்காமதேனுநின்
பொன்னடியினின்றுசொலுமே
புவிராஜர்கவிராஜர்தவராஜனென்றுனைப்
போற்றிஜயபோற்றியென்பார்

ஞானகருணாகரமுகங்கண்டபோதிலை
நவநாதசித்தர்களுமுன்
னட்பினைவிரும்புவார்சுகர்வாமதேவர்முதன்
ஞானிகளுமுனைமெச்சுவார்
வானகமுமண்ணகமும்வந்தெதிர்வணங்கிடுமுன்
மகிமையதுசொல்லவெளிதோ
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (7)

44. சருகுசலபக்ஷணிகளொருகோடியல்லாற்
சகோரபக்ஷிகள்போலவே
தவளநிலவொழுகமிர்ததாரையுண்டழியாத
தன்மையரனந்தகோடி
யிருவினைகளற்றிரவுபகலென்பதறியாத
வேகாந்தமோனஞான
வின்பநிஷ்டையர்கோடி மணிமந்த்ரசித்திநிலை
யெய்தினர்கள்கோடிசூழக்
குருமணியிழைத்திட்டசிங்காதனத்தின்மிசை
கொலுவீற்றிருக்குநின்னைக்
கும்பிட்டனந்தமுறைதெண்டனிட்டென்மனக்
குறையெலாந்தீரும்வண்ண
மருமலரெடுத்துனிருகாலையர்ச்சிக்கவெனை
வாவென்றழைப்பதென்னாள்
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (8)

45. ஆங்காரமானகுலவேடவெம்பேப்பாழ்த்த
வாணவத்தினும்வலிதுகா
ணறிவினைமயக்கிடுநடுவறியவொட்டாதி
யாதொன்றுதொடினுமதுவாய்த்

தாங்காதுமொழிபேசுமரிகரப்பிரமாதி
தம்மொடுசமானமென்னுந்
தடையற்றதேரிலஞ்சுருவாணிபோலவே
தன்னிலசையாதுநிற்கு
மீங்காரெனக்குநிகரென்னப்ரதாபித்
திராவணாகாரமாகி
யிதயவெளியெங்கணுந்தன்னரசுநாடுசெய்
திருக்குமிதனைடைநேரமும்
வாங்காவிலாவடிமைபோராடமுடியுமோ
மௌனேபதேசகுருவே
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (9,

46. பற்றுவெகுவிதமாகியொன்றைவிட்டொன்றனைப்
பற்றியுழல்கிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தைபெற்றநான்வெளியாகநின்னருள்
பகர்ந்துமறியேன்றுவிதமோ
சிற்றறிவதன்றியுமெவரேனுமொருமொழி
திடுக்கென்றுரைத்தபோது
சிந்தைசெவியாகவேபறையறையவுதரவெந்
தீநெஞ்சமளவளாவ
வுற்றுணரவுணர்வற்றுன்மத்தவெறியினர்போல
வுளறுவேன்முத்திமார்க்க
முணர்வதெப்படியின்பதுன்பஞ்சமானமா
யுறுவதெப்படியாயினு
மற்றெனக்கையநீசொன்னவொருவார்த்தையினை
மலையிலக்கெனநம்பினேன்
மந்த்ரகுருவேயோகதந்த்ரகுருவேமூலன்
மரபில்வருமௌனகுருவே. (10)

கருணாகரக்கடவுள்.

பதினான்குசீர்விருத்தம்.

47. நிர்க்குணநிராமயநிரஞ்சனநிராலம்ப
நிர்விஷயகைவல்யமா
நிஷ்களவசங்கசஞ்சலரகிதநிர்வசன
நிர்த்தொந்தநித்தமுக்த
தற்பரவிஸ்வாதீதவ்யோமபரிபூரண
சதானந்தஞானபகவ
சம்புசிவசங்கரசர்வேசவென்றுநான்
சர்வகாலமுநினைவனோ
வற்புதவகோசரநிவர்த்திபெறுமன்பருக்
கானந்தபூர்த்தியான
வத்துவிதநிச்சயசொரூபசாக்ஷாத்கார
வநுபூதியநுரூதமுங்
கற்பனையறக்காணமுக்கணுடன்வடநிழற்
கண்ணாடிருந்தகுருவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (1)

48. மண்ணாதியைந்தொடுபுறத்திலுளகருவியும்
வாக்காதிசுரோத்ராதியும்
வளர்கின்றசப்தாதிமனமாதிகலையாதி
மன்னுசுத்தாதியுடனே
தொண்ணூற்றொடாறுமற்றுள்ளனவுமௌனியாய்ச்
சொன்னவொருசொற்கொண்டதே
தூவெளியதாயகண்டானந்தசுகவாரி
தோற்றுமதையென்சொல்லுவேன்
பண்ணாருமிசையினொடுபாடிப்படித்தருட்
பான்மைநெறிநின்றுதவறுப்

பக்குவவிசேஷராய்நெக்குநெக்குருகிப்
பணிந்தெழுந்திருகைகூப்பிக்
கண்ணாறுகரைபுரளநின்றவன்பரையெலாங்
கைவிடாக்காட்சியுறவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (2)

49. எல்லாமுனடிமையேயெல்லாமுனுடைமையே
யெல்லாமுனுடையசெயலே
யெங்கணும்வியாபிநீயென்றுசொலுமியல்பென்
றிருக்காதிவேதமெல்லாஞ்
சொல்லான்முழக்கியதுமிக்கவுபகாரமாச்
சொல்லிறந்தவருவிண்டு
சொன்னவையுமிவைநல்லகுருவானபேருந்
தொகுத்தநெறிதானுமிவையே
யல்லாமலில்லையெனநன்றுவறிந்தே
யறிந்தபடிநின்றுசுகனா
னாகாதவண்ணமேயிவ்வண்ணமாயினே
னதுவுநினதருளென்னவே
கல்லாதவறிஞனுக்குள்ளேயுணர்த்தினை
கதிக்குவகையேதுபுகலாய்
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (3)

50. பட்டப்பகற்பொழுதையிருளென்றமருளர்தம்
பக்ஷமோவெனதுபக்ஷம்
பார்த்தவிடமெங்கணுங்கோத்தநிலைகுலையாது
பரமவெளியாகவொருசொற்
றிட்டமுடன்மௌனியாயருள்செய்திருக்கவுஞ்
சேரமலாராகநான்

சிறுவீடுகட்டியதினடுசோற்றையுண்டுண்டு
தேக்குசிறியார்கள்போல
நட்டணையதாக்கற்றகல்வியும்விவேகமு
நன்னிலயமாகவுன்னி
நானென்றுநீயென்றிரண்டில்லையென்னவே
நடுவேமுளைத்தமனதைக்
கட்டவறியாமலேவாடினேனெப்போது
கருணைக்குரித்தாவனோ
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (4)

51. மெய்விடாநாவுள்ளமெய்யருளிருந்துநீ
மெய்யானமெய்யையெல்லா
மெய்யெனவுணர்த்தியதுமெய்யிதற்கையமிலை
மெய்யேதுமறியாவெறும்
பொய்விடாப்பொய்யினேனுள்ளத்திருந்துதான்
பொய்யானபொய்யையெல்லாம்
பொய்யெனுவண்ணமேபுகலவைத்தாயெனிற்
புன்மையேனென்செய்குவேன்
மைவிடாதெழுநீலகண்டகுருவேவிஷ்ணு
வடிவானஞானகுருவே
மலர்மேவிமறையோதுநான்முகக்குருவே
மதங்கடொறுநின்றகுருவே
கைவிடாதேயென்றவன்பருக்கன்பாய்க்
கருத்தூடுணர்த்துகுருவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (5)

52. பண்ணேனுனக்கானபூசையொருவடிவிலே
பாவித்திறைஞ்சவாங்கே

பார்க்கின் றமலரூடுநீயேயிருத்தியப்
பனிமலரெடுக்கமனமு
நண்ணேனலாமலிருகைதான் குவிக்கவெனி
னாணுமென் னுளநிற்றிநீ
நான்கும்பிடும்போதரைக்கும்பிடாதலா
ஞன்பூசைசெய்யன்முறையோ
விண்ணேவிணுதியாம்பூதமேநாதமே
வேதமேவேதாந்தமே
மேதக்ககேள்வியேகேள்வியாம்பூமிக்குள்
வித்தேயவித்தின்முளையே
கண்ணேகருத்தேயெனெண்ணேயெழுத்தே
கதிக்கானமோனவடிவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (6)

53. சந்ததமும்வேதமொழியாதொன் றுபற்றினது
தான்வந்துமுற்றுமெனலாற்
சகமீதிருந்தாலுமரணமுண்டென்பது
சதாநிஷ்டர்நினைவதில்லை
சிந்தையறியார்க்கிதுபோதிப்பதல்லவே
செப்பினும்வெகுதர்க்கமாந்
திவ்யகுணமார்க்கண்டர்சுகராதிமுனிவோர்கள்
சித்தாந்தநித்தியலவோ
விந்த்ராதிதேவதைகள்பிரமாதிகடவுள
ரிருக்காதிவேதமுனிவ
ரெண்ணரியகணநாதர்நவநாதசித்தர்க
ளிரவிமதியாதியோர்கள்
கந்தருவர்கின்னரர்கண்மற்றையர்களியாவருங்
கைகுவித்திடுதெய்வமே

கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (7)

51. துள்ளுமறியாமனதுபலிகொடுத்தேன்கர்ம
துஷ்டதேவதைகளில்லை
துரியநிறைசாந்ததேவதையாமுனக்கே
தொழும்பனன்பபிஷேகநீ
ருள்ளுறையிலென்னுவிநைவேத்தியம்ப்ராண
னேங்குமதிதூபதீப
மொருகாலமன்றிதுசதாகாலபூசையா
வொப்புவித்தேன்கருணைகூர்
தெள்ளிமறைவடியிட்டவமுதப்பிழம்பே
தெளிந்ததேனேசீனியே
திவ்யரசமியாவுந்திரண்டொழுகுபாகே
தெவிட்டாதவானந்தமே
கள்ளனறிவூடுமேமெள்ளமௌவெளியாய்க்
கலக்கவருநல்லவுறவே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (8)

55. உடல்குழையவென்பெலாநெக்குருகவிழிநீர்க
ளூற்றெனவெதும்பியூற்ற
வாசிகாந்தத்தினைக்கண்டணுகல்போலவே
யோருறவுமுன்னியுன்னிப்
படபடெனநெஞ்சம்பதைத்துண்ணடுக்குறப்
பாடியாடிக்குதித்துப்
பனிமதிமுகத்திலேநிலவனையபுன்னகை
பரப்பியார்த்தார்த்தெழுந்து
மடலவிழுமலரனையகைவிரித்துக்கூப்பி
வானேயவானிலின்ப

மழையேமழைத்தாரைவெள்ளமேநீடூழி
வாழியெனவாழ்த்தியேத்துங்
கடன்மடைதிறந்தனையவன்பரன்புக்கெளியை
கன்னெஞ்சனுக்கெளியையோ
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (9)

56. இங்கற்றபடியங்குமெனவறியுநல்லறிஞ
ரெக்காலமும்முதவுவா
ரின்சொறவறார்பொய்மையாமிழுக்குரையா
ரிரங்குவார்கொலைகள்பயிலார்
சங்கற்பசித்தாவருள்ளக்கருத்திலுறை
சாக்ஷிநீயிகபரத்துஞ்
சந்தானகற்பகத்தேவாயிருந்தே
சமஸ்தவின்பமுமுதவுவாய்
சிங்கத்தையொத்தெனைப்பாயவருவினையினைச்
சேதிக்கவருசிம்புளே
சிந்தாகுலத்திமிரமகலவருபானுவே
தீனனேன்கரையேறவே
சங்கற்றபேராசைவெள்ளத்தின்வளரருட்
ககனவட்டக்கப்பலே
கருதரியசிற்சபையிலானந்தநிர்த்தமிடு
கருணாகரக்கடவுளே. (10)

சித்தர்கணம்.

பதினான்குசீர் விருத்தம்.

57. திக்கொடுதிகந்தமும்மனவேகமென்னவே
சென்றோடியாடிவருவீர்

செம்பொன்மகமேருவொடுகுணமேருவென்னவே
திகழ்துருவனளவளாவி
யுக்ரமிருசக்ரதரனென்னநிற்பீர்கையி
லுழுந்தமிழுமாசமனமா
வோரேழுகடலையும்பருகவல்லீரிந்த்ர
னுலகுமயிராவதமுமே
கைக்கெளியபந்தாவெடுத்துவிளையாடுவீர்
ககனவட்டத்தையெல்லாங்
கடுகிடையிருத்தியேயஷ்டகுலவெற்பையுங்
காட்டுவீர்மேலுமேலு
மிக்கசித்திகளெலாம்வல்லநீரடிமைமுன்
விளங்கவருசித்தியிலையோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (1)

58. பாட்டாளிதுறைதந்துவளர்கற்பகநனிழலைப்
பாரினிடைவரவழைப்பீர்
பத்மநிதிசங்கநிதியிருபாரிசத்திலும்
பணிசெயுந்தொழிலாளர்போற்
கேட்டதுகொடுத்துவரநிற்கவைப்பீர்பிச்சை
கேட்டுப்பிழைப்போரையுங்
கிரீடபதியாக்குவீர்கற்பாந்தவெள்ளமொரு
கேணியிடைகுறுகவைப்பீ
ரோட்டினையெடுத்தாயிரத்தெட்டுமாற்றாக
வொளிவிடும்பொன்னாக்குவீ
ருரகனுமிளைப்பாறவேயாகதண்டத்திலை
யுலகுசுமையாகவருளான்
மீட்டிடவும்வல்லநீரென்மனக்கல்லைபனன்
மெழுகாக்கிவைப்பபதரிதோ

வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (2)

59. பாரொடுநன்னீராதிபொன்றொன்றாகவே
பற்றிலயமாம்போதினிற்
பரவெளியின் மருவுவீர்கற்பாந்தவெள்ளம்
பரந்திடினதற்குமீதே
நீரிலுறைவண்டாய்த்துவண்டுசிவயோகநிலை
நிற்பீர்விகற்பமாகி
நெடியமுகிலெழும்பரந்துவருஷிக்கிலோ
நிலவுமதிமண்டலமதே
யூரெனவிளங்குவீர்பிரமாதிமுடிவில்விடை
யூர்திபருளாலுலவுவீ
ருலகங்கள்கீழ்மேலதாகப்பெருங்காற்
றுலாவிநற்றூரணையினன்
மேருவெனவசையாமனிற்கவல்லீருமது
மேதக்கசித்தியெளிதோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (3)

60. எண்ணரியபிறவிதனின்மானுடப்பிறவிதா
னியாதினும்மரிதரிதுகா
ணிப்பிறவிதப்பினெலப்பிறவிவாய்க்குமோ
வேதுவருமோவறிகிலேன்
கண்ணகனிலத்துநானுள்ளபொழுதேயருட்
ககனவட்டத்தினின்று
காலூன்றிநின்றுபொழியானந்தமுகிலொடு
கலந்துமதியவசமுறவே
பண்ணுவதுநன்மையிந்நிலைபதியுமட்டுமே
பதியாயிருந்ததேகப்

பவுரிகுலையாமலைகௌரிகுண்டலியாயி
பண்ணவிதனருளினாலே
விண்ணிலவுமதியமுதமொழியாதுபொழியவே
வேண்டுவேனுமதடிமைநான்
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (4)

61. பொய்திகழுமுலகநடையென்சொல்கேனென்சொல்கேன்
பொழுதுபோக்கேதென்னிலோ
பொய்யுடனிமித்தம்புசிப்புக்கலைந்திடல்
புசித்தபின்கண்ணுறங்கல்
கைதவமலாயலிதுசெய்தவமதல்லவே
கண்கெட்டபேர்க்கும்வெளியாய்க்
கண்டதிதுவிண்டிதைக்கண்டித்துநிற்றலைக்
சாலமோவதையறிகிலேன்
மைதிகழுமுகிலினங்குடைநிழற்றிடவட்ட
வரையினெடுசெம்பொன்மேரு
மால்வரையின்முதுகூடும்யோகதண்டக்கோல்
வரைந்துசயவிருதுகாட்டி
மெய்திகழுமஷ்டாங்கயோகபூமிக்குள்வளர்
வேந்தரேகுணசாந்தரே
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (5)

62. கெசதுரகமுதலானசதுரங்கமணமாதி
கேள்வியினிசைந்துநிற்பக்
கெடிகொண்டதல்மாறுமும்மண்டலந்திலுங்
கிள்ளாக்குச்செல்லமிக்க
தெசவிதமதாய்நின்றநாதங்களோலிடச்
சிங்காசனதிபர்களாய்த்

திக்குத்திகந்தமும்பூரணமதிக்குடை
திகழ்ந்திடவசந்தகால
மிசையமலர்மீதுறைமணம்போலவானந்த
மிதயமேற்கொள்ளும்வண்ண
மென்றைக்குமழியாதசிவராசயோகமா
யிந்த்ராதிதேவர்களெலாம்
விஜயஜயஜயவென்னவாசிசொலவேகொலு
விருக்குநும்பெருமையெளிதோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (6)

63. ஆணிலேபெண்ணிலேயன்போலவொருபேதை
யகிலத்தின்மிசையுள்ளதோ
வாடியகறங்குபோலோடியுழல்சிந்தையை
யடக்கிபொருகணமேனும்யான்
காணிலேன்றிருவருளையல்லாதுமௌனியாய்க்
கண்மூடிபோடுமூச்சைக்
கட்டிக்கலாமதியைமுட்டவேமூலவெங்
கனலினையெழுப்பநினைவும்
பூணிலேனிற்றைநாட்கற்றதுங்கேட்டதும்
பொக்கிலேபோகவிட்டுப்
பொய்யுலகனுபினேனுபினுங்கடையான
புன்மையேனின்னமின்னம்
வீணிலேபலயாமன்மலையிலக்காகநீர்
வெளிப்படத்தோற்றல்வேண்டும்
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (7)

64. கன்னலமுதெனவுமுக்கனியெனவும்வாயூற
கண்டெனவுமடியெடுத்துக்

கடவுளர்கடந்ததலவழுதழுதுபேய்போற்
கருத்திலெழுகின்றவெல்லா
மென்னதறியாமையறிவென்னுமிருபகுதியா
லீட்டுதமிழென்றமிழினுக்
கின்னல்பகராதுலகமாராமைமேலிட்
டிருத்தலாலித்தமிழையே
சொன்னவணியாவனவன்முத்திசித்திகளெலாந்
தோய்ந்தநெறியேபடித்தீர்
சொல்லுமெனவவர்நீங்கள்சொன்னவவையிற்சிறிது
தோய்ந்தகுணசாந்தனெனவே
மின்னல்பெறவேசொல்லவச்சொல்கேட்டடிமைமனம்
விகசிப்பதெந்தநாளோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (8)

65. பொற்பினொடுகைகாயில்வள்ளுகிர்படைத்தலாற்
போந்திடையொடுக்கமுறலாற்
பொலிவானவெண்ணீறுபூசியேயருள்கொண்டு
பூரித்தவெண்ணீர்மையா
லெற்படவிளங்குககனத்திலிமையாவிழி
யிசைந்துமேனோக்கமுறலா
லிரவுபகலிருளானகனதந்திபடநூறி
யிதயங்களித்திடுதலாற்
பற்பலவிதங்கொண்டபுலிகலையினுரிபது
படைத்துப்ரதாபமுறலாற்
பணிவெயில்கள்புகுதாமனெடியவான்றொடர்நெடிய
பருமாவனங்களாரும்
வெற்பினிடையுறைதலாற்றவராசசிங்கமென
மிக்கோருமைப்புகழ்வர்காண்

வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (9)

66. கல்லாதபேர்களேநல்லவர்கணல்லவர்கள்
கற்றுமறிவில்லாதவென்
கர்மத்தையென்சொல்கேன் மதியையென்சொல்லுகேன்
கைவல்யஞானநீதி
நல்லோருரைக்கிலோகர்மமுக்கியமென்று
நாட்டுவேன்கர்மமொருவ
னூட்டினாலோபழையஞானமுக்கியமென்று
நவிலுவேன்வடமொழியிலே
வல்லானொருத்தன்வரவுந்த்ராவிடத்திலே
வந்ததாவிவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரினங்ஙனேவடமொழியின்
வசனங்கள்சிறிதுபுகல்வேன்
வெல்லாமலெவரையுமருட்டிவிடவகைவந்த
வித்தையென்முத்திதருமோ
வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற
வித்தகச்சித்தர்கணமே. (10)

ஆனந்தமானபரம்.

பதினான்குசீர் விருத்தம்.

67. கொல்லாமையெத்தனைகுணக்கேட்டைநீக்குமக்
குணமொன்றுமொன்றிலேன்பாற்
கோபமெத்தனைபக்ஷபாதமெத்தனைவன்
குணங்களெத்தனைகொடியபாழ்ங்
கல்லாமையெத்தனையகந்தையெத்தனைமனக்
கள்ளமெத்தனையுள்ளசற்

காரியஞ்சொல்லிடினுமறியாமையெத்தனை
கதிக்கென்றமைத்தவருளிற்
சொல்லாமையெத்தனைவிர்தாகோஷ்டியென்னிலோ
செல்வமெத்தனைமுயற்சி
சிந்தையெத்தனைசலனமிந்த்ரஜாலம்போன்ற
தேகத்தில்வாஞ்சைமுதலா
யல்லாமையெத்தனையமைத்தனையுனக்கடிமை
யானினிவைக்குமாளோ
வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (1)

68. தெருளாகிமருளாகியுழலுமனமாய்மனஞ்
சேர்ந்துவளர்சித்தாகியச்
சித்தெலாஞ்சூழ்ந்தசிவசித்தாய்விசித்ரமாய்த்
திரமாகிநானாவிதப்
பொருளாகிப்பொருளையறிபொறியுமாகியைம்
புலனுமாயைம்பூதமாய்ப்
புறமுமாயகமுமாய்த்தூரஞ்சமீபமாய்ப்
போக்கொடுவரத்துமாகி
யிருளாகியொளியாகிநன்மைதீமையுமாகி
யின்றாகிநாளையாகி
யென்றுமாயொன்றுமாய்ப்பலவுமாயாவுமா
யிவையல்லவாயநின்னை
யருளாகிநின்றவர்களறிவதல்லாமலொருவ
ரறிவதற்கெளிதாகுமோ
வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (2)

69. மாறுபடுதர்க்கந்தொடுக்கவறிவார்சாண்
வயிற்றின்பொருட்டதாக

மண்டலமும்விண்டலமுமொன்றாகிமனதூழல
மாலாகிநிற்கவறிவார்
வேறுபடுவேடங்கள்கொள்ளவறிவாரொன்றை
மெண்ணமெண்ணன்றகம்வேறதாம்
வித்தையறிவாரெமைப்போலவேசந்தைபோன்
மெய்ந்நூல்விரிக்கவறிவார்
சீறுபுலிபோற்சீறிமூச்சைப்பிடித்துவிழி
செக்கச்சிவக்கவறிவார்
திரமென்றுதந்தம்மதத்தையேதாமதச்
செய்கைகொடுமுளறவறிவா
ராறுசமயங்கடொறும்வேறுவேறாகிவிளை
யாடுமுனையாவரறிவா
ரண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (3)

70. காயிலையுதிர்ந்தகனிசருகுபுனன்மண்டிய
கடும்பசிதனக்கடைத்துங்
கார்வரையின்முழையிற்கருங்கல்போலசையாது
கண்மூடிநெடிதிருந்துந்
தீயினிடைவைகியுந்தோயமதின்மூழ்கியுந்
தேகங்களென்பெலும்பாய்த்
தெரிபநின்றுஞ்சென்னிமயிர்கள்கூடாக்குருவி
செற்றவெயிலூடிருந்தும்
வாயுவையடக்கியுமனதினையடக்கியு
மௌனத்திலேயிருந்து
மதிமண்டலத்திலேகனல்செல்லவமுதுண்டு
வனமூடிருந்துமறிஞ
ராயுமறைமுடிவானவருணாடடிமை
யகிலத்தைநாடன்முறையோ

வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (4)

71. சுத்தமுமசுத்தமுந்துக்கசுகபேதமுந்
தொந்தமுடனிர்த்தொந்தமும்
ஸ்தூலமொடுசூக்ஷ்மமுமாசையுநிராசையுஞ்
சொல்லுமொருசொல்லின்முடிவும்
பெத்தமொடுமுத்தியும்பாவமொடபாவமும்
பேதமொடபேதநிலையும்
பெருமையொடுசிறுமையுமருமையுடனெளிமையும்
பெண்ணினுடனாணுமற்று
நித்தமுமநித்தமுமஞ்சனநிரஞ்சனமு
நிஷ்களமுநிகழ்சகளமு
நீதியுமநீதியுமாதியொடநாதியு
நிர்விஷயவிஷயவடிவு
மத்தனையுநீயலதௌத்தனையுமில்லையெனின்
யாங்களுனையன்றியுண்டோ
வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (5)

72. காராருமாணவக்காட்டைக்களைந்தறக்
கண்டகங்காரமென்னுங்
கல்லைப்பிளந்துநெஞ்சகமானபூமிவெளி
காணத்திருத்திமேன்மேற்
பாராதிபரிபாதமோனமாம்வித்தைப்
பதித்தன்புநீராகவே
பாய்ச்சியதுபயிராகுமட்டுமாமாயைவன்
பறவைபணுகாதவண்ண
நேராகநின்றுவிளைபோகம்புசித்தய்ந்த
நின்னன்பர்கூட்டமெய்த

நினைவின்படிக்குநீமுன்னின்றுகாப்பதே
நின்னருட்பாரமென்று
மாராருமறியாதசூதானவெளியில்வெளி
யாகின்றதுரியமயமே
யண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (6)

73. வானாதிபூதமாயகிலாண்டகோடியாய்
மலையாகிவளைகடலுமாய்
மதியாகியிரவியாய்மற்றுளவெலாமாகி
வான்கருணைவெள்ளமாகி
நானாகிநின்றவனுநீயாகிநின்றிடவு
நானென்பதற்றிடாதே
நானானெனக்குளறிநானுவிகாரியாய்
நானறிந்தறியாமையாய்ப்
போனாலதிட்டவலிவெல்லவெளிதோபகற்
பொழுதுபுகுமுன்கண்மூடிப் [விளிப்
பொய்த்துயில்கொள்வானைனயெழுப்பவசமோ
போதிப்பதெந்தநெறியை
யானாலுமென்கொடுமைபநியாயமநியாய
மார்பாலெடுத்துமொழிவே
னண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (7)

74. பொய்யினேன்புலையினேன்கொலையினேனின்னருள்
புலப்படவறிந்துநிலையாப்
புன்மையேன்கல்லாதன்மையேனன்மைபோற்
பொருளலாப்பொருளைநாடும்
வெய்யனேன்வெகுளியேன்வெறியனேன்சிறியனேன்
வினையினேனென்றெனைநீ

விட்டுவிடநினைவையெற்றட்டழிவதல்லாது
வேறுகதியேதுபுகலாய்
துய்யனேமெய்யனேயுயிரினுக்குயிரான
துணைவனேயிணையொன்றிலாத்
துரியனேதுரியமுங்காணுவதீதனே
சுருதிமுடிமீதிருந்த
வையனேயப்பனேயெனுமறிஞரறிவைவிட்
டகலாதகருணைவடிவே
யண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (8)

75. எத்தனைவிதங்கடான்கற்கினுங்கேட்கினுமென்
னிதயமுமொடுங்கவில்லை
யானெனுமகந்தைதானெள்ளளவுமாறவிலை
யாதினும்மபிமானமென்
சித்தமிசைகுடிகொண்டதீமையோடிராக்கமென்
சென்மத்துநானறிகிலேன்
சீலமொடுதவவிரதமொருகனவிலாயினுந்
தரிசனஞ்செய்துமறியேன்
பொய்த்தமொழியல்லான்மருந்துக்குமெய்ம்மொழி
புகன்றிடேன்பிறர்கேட்கவே
போதிப்பதல்லாதுசும்மாவிருந்தருள்
பொருந்திடாப்பேதைநானே
யத்தனைகுணக்கேடர்கண்டதாக்கேட்டதா
வவனிமிசையுண்டோசொலா
யண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (9)

76. எக்காலமுந்தனக்கென்னவொருசெயலிலா
வேழைநீயென்றிருந்திட்

டெனதாவியுடல்பொருளுமௌனிபாய்வர்துகை
யேற்றுகமதென்றவன்றே
பொய்க்காலதேசமும்பொய்ப்பொருளில்வாஞ்சையும்
பொய்யுடலைமெய்யென்னலும்
பொய்யுறவுபற்றலும்பொய்யாகுநானென்னல்
பொய்யினும்பொய்யாகையான்
மைக்காலிருட்டனையவிருளில்லையிருவினைகள்
வந்தேறவழியுமில்லை
மனமில்லைபம்மனத்தினமில்லைவேறுமொரு
வரவில்லைபோக்குமில்லை
யக்காலமிக்காலமென்பதிலையெல்லா
மதீதமயமானதன்றோ
வண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே. (10)

சுகவாரி.

பதினன்குசீர் விருத்தம்.

77. இன்னமுதுகனிபாகுகற்கண்டுசீனிதே
னெனருசித்திடவலியவந்
தின்பங்கொடுத்துநினையெந்நேரநின்னன்ப
ரிடையறாதருகிநாடி
யுன்னியகருத்தவிழவுளறுதளறியுடலெங்கு
மோய்ந்தயர்ந்தவசமாகி
யுணர்வரியபேரின்பவநுபூதியுணர்விலே
யுணர்வார்களுள்ளபடிகாண்
கன்னிகையொருத்திசிற்றின்பம்வேம்பென்னினுங்
கைக்கொள்வள்பக்குவத்திற்

கணவனருள்பெறின் முனேசொன்னவாறென்னெனக்
கருதிநகையாவளதுபோற்
சொன்னபடிகேட்குமிப்பேதைக்குநின்கருணை
தோற்றிற்சுகாரம்பமாஞ்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (1)

78. அன்பின்வழியறியாதவென்னைதொடர்ந்தென்னை
யறியாதப்க்குவத்தே
யாசைப்பெருக்கைப்பெருக்கிகொடுத்துநா
னற்றேறனலந்தேனென
வெம்புலமயங்கவேவபித்தேற்றிவிட்டா
யிரங்கியொருவழியாயினு
மின்பவெளமாகவந்துள்ளங்களிக்கவே
யென்னைகலந்ததுண்டோ
தன்பருவமலருக்குமணமுண்டுவண்டுண்டு
தண்முகைதனக்குமுண்டோ
தமியனேற்கிவ்வணந்திருவுளமிரங்காத
தன்மையாற்றனியிருந்து
துன்பமுறினெங்ஙனேயழியாநின்னன்பர்
சுகம்வந்துவாய்க்குமுறையாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (2)

79. கல்லேலனுமையவொருகாலத்திலுருகுமென்
கன்னெஞ்சமுருகவில்லையே
கருணைக்கிணங்காதவன்மையையுநான்முகன்
கற்பிக்கவொருகடவுளோ
வல்லான்வகுத்ததேதவாய்க்காலெனும்பெரு
வழக்குக்கிழுக்குமுண்டோ

வானமாய்நின்றின்பமழைபாயிரங்கியெனை
வாழ்விப்பதுன்பரங்காண்
பொல்லாதசேயெனிற்றாயதள்ளனீதமோ
புகலிடம்பிறிதுமுண்டோ
பொய்வார்த்தைசொல்லிலோதிருவருட்கயலுமாய்ப்
புன்மையேனுவனந்தோ
சொல்லான்முழக்கிலோசுகமில்லைமௌனியாய்ச்
சும்மாவிருக்கவருளாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபராஞ்
சோதியேசுகவாரியே. (3)

80. என்பெலாநெக்குடையரோமஞ்சிலிர்ப்பவுட
லிளகமனதழலின்மெழுகா
யிடையறாதுருகவருமழைபோலிரங்கியே
யிருவிழிகணீரிறைப்ப
வன்பினுன்மூர்ச்சித்தவன்பருக்கங்ஙனே
யமிர்தசஞ்சீவிபோல்வந்
தானந்தமழைபொழிவையுள்ளன்பிலாதவெனை
யார்க்காகவடிமைகொண்டாய்
புன்புலான்மயிர்தோனரம்பென்புமொய்த்திடு
புலைக்குடிலிலருவருப்புப்
பொய்யல்லவேயிதனைமெய்யென்றுநம்பியென்
புந்திசெலுமோபாழிலே
துன்பமாயலையவோவுலகநடையையவொரு
சொப்பனத்திலும்வேண்டிலேன்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபராஞ்
சோதியேசுகவாரியே. (4)

81. வெந்நீர்பொருதெனுடல்காலின்முட்டைக்கவும்
வெடுக்கென்றசைத்தெடுத்தால்

விழியிமைத்தங்ஙனேதண்ணருளைநாடுவேன்
வேறென்றையொருவர்கொல்லி
னந்நேரமையோவென்முகம்வாடிநிற்பதுவு
மையநின்னருளறியுமே
யானுமெத்தப்பயந்தவனியானென்னை
யாண்டநீகைவிடாதே
யிந்நேரமென்றிலையுடற்சுமையதாகவு
மெடுத்தாலிறக்கவென்றே
யெங்கெங்குமொருதீர்வையாயமுண்டாயினு
மிறைஞ்சுசுகராதியான
தொன்னீர்மையாளர்க்குமானிடம்வகுத்தவரு
டுணையென்றுநம்புகின்றேன்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (5)

82. பற்றுவனவற்றிடுநிராசையென்றொருபூமி
பற்றிப்பிடிக்குமியோகப்
பாங்கிற்பிராணலயமென்னுமொருபூமியிவை
பற்றின்மனமறுமென்னவே
கற்றையஞ்சடைமௌனிதானேகனிந்தகனி
கனிவிக்கவந்தகனிபோற்
கண்டதிந்நெறியெனத்திருவுளக்கனிவினெடு
கனிவாய்திறந்துமொன்றைப்
பெற்றவனுமல்லேன்பெருதவனுமல்லேன்
பெருக்கத்தவித்துளறிய
பெண்ணீர்மையென்னவிருகண்ணீரிறைத்துநான்
பேய்போலிருக்கவுலகஞ்
சுற்றிநகைசெய்யவேயுலையவிட்டாயெனிற்
சொல்லவினிவாயுமுண்டோ

சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (6)

83. அரும்பொனேமணியேயெனன்பான
வறிவேயெனறிவிலூறு
மானந்தவெள்ளமேயென்றென்றுபாடினே
னாடினேனாடிநாடி
விரும்பியேகூவினேனுலறினேனலறினேன்
மெய்சிலிர்த்திருகைகூப்பி
விண்மாரியெனவெனிருகண்மாரிபெய்யவே
வேசற்றயர்ந்தேனியா
னிரும்புநேர்நெஞ்சகக்கள்வனானாலுமுனை
யிடைவிட்டுநின்றதுண்டோ
வென்றுநீயன்றுநானுன்னடிமையல்லவோ
யாதேனுமறியாவெறுந்
துரும்பனேனென்னினுங்கைவிடுதனீதியோ
தொண்டரொடுகூட்டுகண்டாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (7)

84. பாராதியண்டங்களத்தனையும்வைக்கின்ற
பரவெளியினுண்மைகாட்டிப்
பற்றுமனவெளிகாட்டிமனவெளியினிற்றோய்ந்த
பாவியேன்பரிசுகாட்டித்
தாராளமாய்நிற்கநிர்ச்சிந்தைகாட்டிச்
சதாகாலநிஷ்டையெனவே
சகசநிலைகாட்டினைசுகாதீதநிலயந்
தனைக்காட்டநாள்செல்லுமோ
காராரவெண்ணருமனந்தகோடிகணின்று
காலூன்றிமழைபொழிதல்போற்

காலவீசிமின்னிப்படர்ந்துபரவெளியெலாங்
கஃமியானந்தவெள்ளஞ்
சோராதுபொழிபவேகருணையின்முழங்கியே
தொண்டரைக்கூவுமுகிலே
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபராஞ்
சோதியேசுகவாரியே. (8)

85. பேதித்தசமயமோவொன்றுசொனபடியொன்று
பேசாதுதுறவாகியே
பேசாதபெரியோர்களிருவிகற்பத்தினுற்
பேசார்கள்பரமதருவாய்ப்
போதிக்குமுக்கணிறைநேர்மையாய்க்கைக்கொண்டு
போதிப்பதாச்சறிவிலே
போக்குவரவறவின்பநீக்கமறவசனமாய்ப்
போதிப்பதெவரையனே
சாதித்தசாதனமுமிபோகியோர்கணமதென்று
சங்கிப்பராதலாலே
தன்னிலேதானுயபர்ந்துவிடுவோமெனத்
தனியிருந்திடினங்ஙனே
சோதிக்கமனமாயைதனையெவினுலடிமை
சுகமாவதெப்படிசொலாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபராஞ்
சோதியேசுகவாரியே. (9)

86. அண்டமுடிதன்னிலோபகிரண்டமதனிலோ
வலரிமண்டலநடுவிலோ
வனனடுவிலோவமிர்தமதிநடுவிலோவன்ப
ரகமுருகிமலர்கடுவித்
தெண்டமிடவருமூர்த்திநிலையிலோதிக்குத்
திகந்தத்திலோவெளியிலோ

திகழ்விந்துநாதநிலைதன்னிலோவேதாந்த
சித்தாந்தநிலைதன்னிலோ
கண்டபலபொருளிலோகாணாதநிலையெனக்
கண்டசூனியமதனிலோ
காலமொருமூன்றிலோபிறவிநிலைதன்னிலோ
கருவிகரணங்களோய்ந்த
தொண்டர்களிடத்திலோநீவீற்றிருப்பது
தொழும்பனேற்குளவுபுகலாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (10)

87. எந்தநாள்கருணைக்குரித்தாகுநாளெனவு
மென்னிதயமெனைவாட்டுதே
யேதென்றுசொல்லுவேன்முன்னொடுபின்மலைவறவு
மிற்றைவரையாதுபெற்றேன்
பந்தமானதிலிட்டமெழுகாகியுள்ளம்
பதைத்துப்பதைத்துருகவோ
பரமசுகமாவதுபொறுப்பரியதுயரமாய்ப்
பலகாலுமூர்ச்சிப்பதோ
சிந்தையானதுமறிவைபென்னறிவிலறிவான
தெய்வநீயன்றியுளதோ
தேகநிலைபல்லவோவுடைகப்பல்கப்பலாய்த்
திரையாழியூடுசெலுமோ
சொந்தமாயாண்டநீயறியார்கள்போலவே
துன்பத்திலாழ்த்தன்முறையோ
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (11)

88. எங்காளுமுடலிலேயுயிராமுனைப்போ
லிருக்கவிலையோமனமெனு

மிபானுமென்னட்பரம்பிராணனுமெனச்சடம
தென்றுணைச்சித்தென்றுமே
யந்நாளிலேலவனேபிரித்தானதைக்கேட்ட
வன்றுமுதலின்றுவரையு
மநியாயமாயெமையடக்கிக்குறுக்கே
யடர்ந்தரசுபண்ணியெங்கண்
முன்னாகநீயென்னகோட்டைகொண்டாயென்று
மூடமனமிகவுமேச
மூண்டெரியுமனலிட்டமெழுகாயுளங்கருகன்
முறைமையோபதினுயிரஞ்
சொன்னாலுநின்னருளிரங்கவிலையேயினிச்
சுகம்வருவதெப்படிசொலாய்
சுத்தநிர்க்குணமானபரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே. (12)

எங்குநிறைகின்றபொருள்.

பதினான்குசீர்விருத்தம்.

89. அவனன்றியோரணுவுமசையாதெனும்பெரிய
வாப்தர்மொழியொன்றுகண்டா
லறிவாவதேதுசிலவறியாமையேதிவை
யறிந்தார்களறியார்களார்
மௌனமொடிருந்ததாமென்போலுடம்பெலாம்
வாயாய்ப்பிதற்றுமவரார்
மனதெனவுமொருமாயையெங்கேயிருந்துவரும்
வன்மையொடிரக்கமெங்கே
புவனம்படைப்பதென்கர்த்தவியமெவ்விடம்
பூதபேதங்களெவ்விடம்

பொய்மொழிதமகிதமேல்வருநன்மைதீமையொடு
பொறைபொறுமையுமெவ்விட
மெவர்சிறியரெவர்பெரியரெவருறவரெவர்பகைஞ
ரியாதுமுனையன்றியுண்டோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (1)

90. அன்னேயனேயெனுஞ்சிலசமயநின்னையே
ஐயாவையாவென்னவே
யலறிடுஞ்சிலசமயமல்லாதுபேய்போல
வலறியேயொன்றுமிலவாய்ப்
பின்னேதுமறியாமலொன்றைவிட்டொன்றைப்
பிதற்றிடுஞ்சிலசமயமேற்
பேசரியவொளியென்றும்வெளியென்றுநாதாதி
பிறவுமேநிலயமென்றுந்
தன்னேரிலாததோரணுவென்றுமூவிதத்
தன்மையாங்காலமென்றுஞ்
சாற்றிடுஞ்சிலசமயமிவையாகிவேறதாய்ச்
சதாஞானவானந்தமா
யென்னேயெனேகருணைவிளையாட்டிருந்தவா
றெம்மனோர்புகலவெளிதோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (2)

91. வேதமுடனாகமபுராணமிதிகாசமுதல்
வேறுமுளகலைகளெல்லா
மிக்காகவத்துவிததுவிதமார்க்கத்தையே
விரிவாயெடுத்துரைக்கு
மோதரியதுவிதமேயத்துவிதஞானத்தை
யுண்டுபண்ணுஞானமாகு

மூகமனுபவம்வசனமூன்றுக்குமொவ்வுமீ
துபயவாதிகள்சம்மத
மாதலினெனக்கினிச்சரியையாதிகள்போது
மியாதொன்றுபாவிக்கநா
னதுவாதலாலுன்னைநானென்றுபாவிக்கி
னத்துவிதமார்க்கமுறலா
மேதுபாவித்திடினுமதுவாகிவந்தருள்செ
யெந்தைநீகுறையுமுண்டோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (3)

92. சொல்லானதிற்சற்றும்வாராதபிள்ளையைத்
தொட்டில்வைத்தாட்டியாட்டித்
தொடையினைக்கிள்ளல்போற்சங்கற்பமொன்றிற்
றொடுக்குந்தொடுத்தழிக்கும்
பொல்லாதவாதனையெனுஞ்சப்தபூமியிடை
போந்துதலைசுற்றியாடும்
புருஷனிலடங்காதபூவைபோற்றானே
புறம்போந்துசஞ்சரிக்கும்
கல்லாடிரும்புக்குமிகவன்மைகாட்டிடுங்
கண்டதேகேட்டவெல்லாங்
கண்டதாக்காட்டியேபண்ணுவாச்சுருக்கிடுங்
கபடநாடகசாலமோ
வெல்லாமும்வலதிந்தமனமாயையேமையா
மென்னலடக்கவசமோ.
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (4)

93 கண்ணாரநீர்மல்கியுள்ளநெக்குருகாத
கள்ளனேனானுமோ

கைகுவித்தாடியும்பாடியும்விடாமலே
கண்பனித்தாரைகாட்டி
யண்ணாபரஞ்சோதியப்பாவுனக்கடிமை
யானெனவுமேலெழுந்த
வஞ்சபாவனைநாடகநடித்ததோகுறைவில்லை
யகிலமுஞ்சிறிதறியுமேற்
றண்ணாருநின்னதருளறியாததல்லவே
சற்றேனுமினிதிரங்கிச்
சாசுவதமுந்திநிலையீதென்றுணர்த்தியே
சகசநிலைதந்துவேறென்
றெண்ணாமலுள்ளபடிசுகமாயிருக்கவே
யேழையேற்கருள்செய்கண்டா
யிகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (5)

94. காகமானவைகோடிகூடினாலுமொரு
கல்லின்முன்னெதிர்நிற்குமோ
கர்மமானவைகோடிமுன்னேசெய்தாலுநின்
கருணைப்ரவாகவருளைத்
தாகமாய்நாடினரைவாதிக்கவல்லவோ
தமியனேற்கருட்டாகமோ
சற்றுமிலையென்பதுவும்வெளியாச்சுவினையெலாஞ்
சங்கேதமாய்க்கூடியே
தேகமானதைமிகவும்வாட்டுதேதுன்பங்கள்
சோரமலியோகமார்க்க
சித்தியோவரவில்லைசகசநிஷ்டைக்குமென்
சிந்தைக்கும்வெகுதூரநா
னேகமாய்நின்னொடிருக்குநாளெந்தநா
ளிந்நாளின்முற்றுறாதோ

விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (6)

95. ஒருமைமனதாகியேயல்லலறநின்னருளி
லொருவனுன்வந்திருக்கி
னுலகம்பொருதேதாமாயாவிசித்ரமென
வோயுமோவிடமில்லையோ
வருளுடையநின்னன்பர்சங்கைசெய்திடுவரோ
வலதுகிர்த்தியகர்த்தா
யகிலம்படைத்தெம்மையாள்கின்றபேர்சில
ரடாதென்பரோவகன்ற
பெருமைபெறுபூரணங்குறையுமோபூதங்கள்
பேய்க்கோலமாய்விதண்டை
பேசுமோவலதுதான்பரிபாககாலம்
பிறக்கவில்லையோதொல்லையா
மிருமைசெறிசடவினையெதிர்த்துவாய்பேசுமோ
வேதுளவுசிறிதுபுகலாய்
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (7)

96. நில்லாததேகமெனுநினைவுண்டுதேகநிலை
நின்றிடவுமௌனியாகி
நேராயுபாயமொன்றருளினையையோவிதனை
நின்றனுட்டிக்கவென்றாற்
கல்லாதமனமோவொடுங்கியுபாதிபெறக்
காணவில்லையாகையாலே
கையேற்றுணும்புசிப்பொவ்வாதெநாளுமுன்
காட்சியிலிருந்துகொண்டு
வல்லாளராயயமநியமாதிமேற்கொண்ட
மாதவர்க்கேவல்செய்து

மனதின்படிக்கெலாஞ்சித்திபெறலாஞானம்
வாய்க்குமொருமனுவெனக்கிங்
கில்லாமையோநினையுமில்லாமையாக்கவே
யிப்போதிரங்குகண்டா
யிகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (9

97. மரவுரியுடுத்துமலைவனமெறற்கொறித்துமுதிர்
வனசருகுவாயில்வந்தால்
வன்பசிதவிர்த்துமனல்வெயிலாதிமழையால்
வருந்தியும்மூலவனலைச்
சிரமளவெழுப்பியுநீரினிடைமூழ்கியுந்
தேகநமதல்லவென்று
சிற்சுகவபேக்ஷையாய்நின்னன்பர்போகந்
செலுத்தினரியாம்பாவியேம்
விரவுமறுசுவைபினோடுவேண்டுவபுசித்தரையில்
வேண்வடுவெலாமுடுத்து
மேடைமாளிகையாதிவீட்டினிடைவைகியே
வேறொருவருத்தமின்றி
யிரவுபகலைமறந்தைபர்கள்சையோகமாயினே
மெப்படிபிழைப்பதுரையா
யிகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (9

98. முத்தனையமூரலும்பவளவாயின்சொலு
முகத்திலகுபசுமஞ்சளு
மூர்ச்சிக்கவிரகசன்னதமேற்றவிருதும்ப
முலையின்மணிமாலைகால
வைத்தெதமைமபக்கிருகண்வலையைவீசியே
மாயாவிலாசமோக

வாரிதியிலாழ்த்திடும்பாழானசிற்றிடை
மடந்தையர்கள்சிற்றின்பமோ
புத்தமிர்தபோகம்புசித்துவிழியிமையாத
பொன்னாட்டும்வந்ததென்றாற்
போராட்டமல்லவோபேரின்பமுத்தியிற்
பூமியிலிருந்துகாண
வெத்தனைவிகாதம்வருமென்றுசுகர்சென்றநெறி
யிவ்வுலகமறியாததோ
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (10)

99. உன்னிலையுமென்னிலையுமொருநிலையெனக்கிடந்
துளறிடுமவத்தையாகி
யுருவுதான்காட்டாதவாணவமுமொளிகண்
டொளிக்கின்றவிருளென்னவே
தன்னிலைமைகாட்டாதொருங்கவிருவினையினாற்
றருவுசுகதுக்கவேலை
தட்டழிபமுற்றுமில்லாமாயையதனாற்
றடித்தகிலபேதமான
முன்னிலையொழிந்திடவகண்டிதாகாரமாய்
மூதறிவுமேலுதிப்ப
முன்பினொடுகீழ்மேனடுப்பக்கமெனுமன்
முற்றுமானந்தநிறைவே
யென்னிலைமைபாய்நிற்கவியல்புகூறருள்வடிவ
மெந்நாளும்வாழிவாழி
விகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே. (11)

சச்சிதானந்தசிவம்.

பதினான்குசீர் விருத்தம்.

100. பாராதிககனப்பரப்புமுண்டோவென்று
படர்வெளியதாகியெழுநாப்
பரிதிமதிகாணாச்சுயஞ்சோதியாயண்ட
பகிரண்டவுயிரெவைக்கு
நேராகவறிவாயகண்டமாயேகமாய்
நித்தமாய்நிர்த்தொந்தமாய்
நிர்க்குணவிலாசமாய்வாய்க்குமனமணுகாத
நிர்மலானந்தமயமாய்ப்
போராதுநிற்றிநீசும்மாவிருந்துதான்
பேரின்பமெய்திடாமற்
பேய்மனதையண்டியேதாயிலாப்பிள்ளைபோற்
பித்தாகவோமனதைநான்
சாராதபடியறிவினிருவிகற்பாங்கமாஞ்
சாசுவதநிஷ்டையருளாய்
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (1)

101. குடக்கொடுகுணக்காதிதிக்கினையுழக்கூடு
கொள்ளல்போலைந்துபூதங்
கூடுஞ்சுருங்கிலேச்சாலேகமொன்பது
குலாவுநடைமனையைநாறும்
வடக்கயிறுவெண்ணரம்பாவென்புதூணசயினான்
மதவேள்விழாநடத்தி
வைக்கின்றகைத்தேதனைவெண்ணீர்செநீர்கணீர்
மலநீர்புணீரிறைக்கும்

விடக்குத்துருத்திபைக்கருமருந்துக்கூட்டை
வெட்ட வெட்டத்தளிர்க்கும்
வேட்கைமரமுறுகின்றசுடுசோட்டைமுடிவிலே
மெய்போலிருந்துபொய்யாஞ்
சடக்கைச்சடக்கெனச்சதமென்றுசின்மபந்
தானாகிநிற்பதென்றோ
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (2)

102. பாகத்தினாற்கவிதைபாடிப்படிக்கவோ
பத்திநெறியில்லைவேத
பாராயணப்பனுவன்மூவர்செப்பனுவலது
பகரவோவிசையுமில்லை
யோகத்திலேசிறிதுமுபலவென்றாற்றேக
மொவ்வாதிவூண்வெறுத்தா
னுயிர்வெறுத்திடலொக்குமல்லாதுகிரியைக
ளுபாயத்தினாற்செய்யவோ
மோகத்திலேசிறிதுமொழியவிலைமெய்ஞ்ஞான
மோனத்தினிற்கவென்றான்
முற்றாதுபரிபாகசக்திகளனேகநின்
மூதறிவிலேயெழுந்த
தாகத்திலேவாய்க்குமமிர்தப்ரவாகமே
தன்னந்தனிப்பெருமையே
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (3)

103. இமையளவுபோதையொருகற்பகாலம்பண்ணு
மிவ்வுலகமெவ்வுலகமோ
வென்றெண்ணம்வெருவிக்குமாதர்சிற்றின்பமோ
வெண்ணின்மகமேருவாக்கிச்

சுமையெடுமினென்றுதான்சும்மாடுமாயெமைச்
சுமையாளுமாக்கினாளுந்
தூர்ப்புத்திபண்ணியுளகற்புத்திபாவையுஞ்
சூறையிட்டிந்த்ராஜால
மமையவொருகூத்துஞ்சமைந்தாடுமனமாயை
யம்மம்மவெல்லவெளிதோ
வருள்பெற்றபேர்க்கெலாமொளிபெற்றுநிற்குமீ
தருளோவலாதுமருளோ
சமையநெறிகாணாதசாக்ஷிநீசூக்ஷ்மமாத்
தமியனேற்குளவுபுகலாய்
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (4)

104. இனியேதெமக்குனருள்வருமோவெனக்கருதி
யேங்குதேநெஞ்சமையோ
வின்றைக்கிருந்தாரைநாளைக்கிருப்பரென்
றெண்ணவோதிடமில்லையே
யனியாயமாயிந்தவுடலைநானென்றுவரு
மந்தகற்காளாகவோ
வாடித்திரிந்துநான்கற்றதுங்கேட்டது
மவலமாய்ப்போதனன்றோ
கனியேனும்வறியசெங்காயேனுமுதிர்சருகு
கந்தமூலங்களேனுங்
கனல்வாதைதவந்தெப்தினள்ளிப்புசித்துநான்
கண்மூடிமௌனியாகித்
தனியேயிருப்பதற்கெண்ணினேனெண்ணமிது
சாமிநீயறியாததோ
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (5)

105. மத்தமதகரிமுகிற்குலமென்னநின் றிலகு
வாயிலுடன்மதியகடுதோய்
மாடகூடச்சிகரமொய்த்தசந்திரகாந்த
மணிமேடையுச்சிமீது
முத்தமிழ்முழக்கமுடன்முத்தநகையார்களொடு
முத்தமுத்தாய்க்குலாவி
மோகத்திருந்துமென் யோகத்தினிலைநின்று
மூச்சைப்பிடித்தடைத்துக்
கைத்தலநகப்படைவிரித்தபுலிசிங்கமொடு
கரடிநுழைநூழைகொண்ட
கானமலையுச்சியிற்குகையூடிருந்துமென்
கரதலாமலகமென்னச்
சத்தமறமோனநிலைபெற்றவர்களுய்வர்காண்
சனகாதிமுனிவரன்றோ
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (6)

106. கைத்தலம்விளங்குமொருநெல்லியங்கனியெனக்
கண்டவேதாகமத்தின்
காட்சிபுருஷார்த்தமதின்மாட்சிபெறுமுக்கியது
கருதினனுமானமாதி
யுத்திபலவாதிருவிகற்பமேயில்லைபா
லொன்றேயிரண்டென்னவே
வுரையுமில்லைநீயுமில்லைநானுமில்லையென்பது
முபாயநீயுண்டுநானுஞ்
சித்தமுளனில்லையெனும்வசனநீயறிவை
தெரியார்கட்டெரியவசமோ
செப்புகேவலநீதியொப்புவமையல்லவே
சின்முத்திராங்கமரபிற்

சத்தமறவெனையாண்டகுருமௌனிகையினாற்
றமியனேற்குதவுபொருளே
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (7)

107. காயாதமாமீதுகல்லைலறுசெல்லுமோ
கடவுணீயாங்களடியேங்
கர்மபந்தத்தினாற்சன்மபந்தம்பெறக்
கற்பித்ததுன்னதருளே
வாயாரவுண்டபேர்வாழ்த்துவதுநொந்தபேர்
வைவதுவுமெங்களுலக
வாய்பாடுநிற்கநின்வைதிகவொழுக்குநினை
வாழ்த்தினாற்பெறுபேறுதா
னேயாதுபெறுவரென முறையிட்டதாற்பின்ன
ருளறுவதுகருமமன்று
முபயநெறியிதென்னினுசிதநெறியெந்தநெறி
யுலகிலேபிழைபொறுக்குந்
தாயானகருணையுமுனக்குண்டெனக்கினிச்
சஞ்சலங்கெடவருள்செய்வாய்
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (8)

108. இன்னம்பிறப்பதற்கிடமென்னினிவ்வுடல
மிறவாதிருப்பமூலத்
தெழுமங்கியமிர்தொழுகுமதிமண்டலத்திலுற
வென்னம்மைகுண்டலினிபாற்
பின்னம்பிறக்காதுசேயெனவளர்த்திடப்
பேயேனைநல்கவேண்டும்
பிறவாதநெறியெனக்குண்டென்னினிம்மைபே
பேசுகர்ப்பூரதீப

மின்னும்படிக்ககண்டாகாரவன்னைபால்
விளையேனையொப்புவித்து
வீட்டுநெறிகூட்டிடுதன்மிகவுநன்றிவையன்றி
விவகாரமுண்டென்னிலோ
தன்னந்தனிச்சிறியனுற்றிலேன்போற்றிவளர்
சன்மார்க்கமுத்திமுதலே
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (9)

109. வேதாவையிவ்வணம்விதித்ததேதென்னினுன்
வினைப்பகுதியென்பனந்த
வினைபேசவறியாதுநிற்கவிவைமனதால்
விளைந்ததான்மனதைநாடிற்
போதமேநிற்குமப்போதத்தைநாடிலோ
போதமுநிறால்விளக்கம்
பொய்யன்றுதெய்வமறைபாவுமேமீயென்று
போக்குவாவறநிகழ்த்து
மாதாவாதேயமுழுதுநீபாதலா
லகிலமீதென்னையாட்டி
யாடல்கண்டவனுநீயாடுகின்றவனுநீ
யருளுநீமெளனஞான
தாதாவுநீபெற்றதாய்தந்தைநாமுநீ
தமருநீயாவுநீகாண்
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (10)

110. கொந்தவிழ்மலர்ச்சோலைநன்னீழல்வைகினுங்
குளிர்தீம்புனற்கையள்ளிக்
கொள்ளுகினுமந்நீரிடைத்திளைத்தாடினுங்
குளிர்சந்தவாடைமடவார்

வந்துலவுகின்றதெனமுன்றிலிடையுலவவே
வசதிபெறுபோதும்வெள்ளை
வட்டமதிபட்டப்பகற்போலநிலவுதா
மகிழ்போதும்வையமுதம்
விந்தைபெறவறுசுவையில்வந்ததெனவமுதுண்ணும்
வேளையிலுமாலைகந்தம்
வெள்ளிலையடைக்காய்விரும்பிவேண்டியவண்ணம்
விளையாடிவிழிதுயிலினுஞ்
சந்ததமுநின்னருளைமறவாவரந்தந்து
தமியேனைரக்ஷைபுரிவாய்
சர்வபரிபூரணவகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமே. (11)

தேசோமயானந்தம்.

பதினான்குசீர்விருத்தம்.

111. மருமலர்ச்சோலைசெறிநன்னீழன்மலையாதி
மன்னுமுனிவர்க்கேவலாப்
மந்த்ரமாலிகைசொல்லுமியமநியமாதியா
மார்க்கத்தினின்றுகொண்டு
கருமருவுகாயத்தைநிர்மலமதாகவே
கமலாசனாதிசேர்த்துக்
காலைப்பிடித்தனலையம்மைகுண்டலியடிக்
கலைமதியினூடுதாக்கி
யுருகிவருமமிர்தத்தையுண்டுண்டுறங்காம
லுணர்வானவிழியைநாடி
யொன்றோடிரண்டெனாச்சமரசசொரூபசுக
முற்றிடவென்மனதின்வண்ணந்

திருவருண்முடிக்கவித்தேகமொடுகொண்பனே
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (1)

112. இப்பிறவியெனுமோரிருட்கடலின்மூழ்கிநா
னென்னுமொருமகரவாய்ப்பட்
டிருவினையெனுந்திரையினெற்றுண்டுபுற்புத
மெனக்கொங்கைவரிசைகாட்டுந்
துப்பிதழ்மடந்தையர்மயற்சண்டமாருதச்
சுழல்வந்துவந்தடிப்பச்
சோர்தவாசையாங்கானுறுவானதி
சுரந்ததெனமேலுமார்ப்பக்
கைப்பரிசுகாரர்போலறிவானவங்கமுங்
கைவிட்டுமதிமயங்கிக்
கள்ளவங்கக்காலர்வருவரென்றஞ்சியே
கண்ணருவிகாட்டுமெளியேன்
செப்பரியமுத்தியாங்கரைசேரவுங்கருணை
செய்வையோசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (2)

113. தந்தைதாய்தமர்தாரமகவென்னுமிவையெல்லாஞ்
சந்தையிற்கூட்டமிதிலே
சந்தேகமில்லைமணிமாடமாளிகைமேடை
சதுரங்கசேனையுடனே
வந்ததோர்வாழ்வுமோரிந்த்ராஜாலக்கோலம்
வஞ்சனைபொருளைமலேபம்
வைத்தமனமாங்கிருமிசேர்ந்தமலபாண்டமோ
வாஞ்சையிலாதகனவே

யெந்தநாளுஞ்சரியெனத்தேர்ந்துதேர்ந்துமே
யுரவுபகலில்லாவிடத்
தேகமாய்நின்றநின்னருள்வெள்ளமீதிலே
யாமெனன்பதறவுமூழ்கிச்
சிந்தைதான்றெளிபாதுசுழலும்வகையென்கொலோ
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (3)

114. ஆடாமலோப்ந்திட்டபம்பரம்போல்விசை
யடங்கிமனம்வீழநேரே
யறியாமையாகின்றவிருளகலவிருளொளியு
மல்லாதிருந்தவெளிபோற்
கோடாதெனைக்கண்டெனக்குணிறைசாந்தவெளி
கூடியின்பாதீதமுங்
கூடினேனேசரியைகிரியையின்முயன்றநெறி
கூடினேனேவல்லனியா
னீடாகவேயாறுவீட்டினிரம்பியே
யிலகிவளர்பிராணனென்னு
மிருநிதியினைக்கட்டியோகபாணுகாம
லேழைக்குடும்பனாகித்
தேடாதழிக்கவொருமதிவந்ததென்கொலோ
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (4)

115. பாடாதுபாடிப்படித்தளவில்சமயமும்
பஞ்சுபடுசொல்லனிவனைப்
பார்மினேபார்மினேவென்றுசபைகூடவும்
பரமார்த்தமிதுவென்னவே

யாடாதுமாடிநெஞ்சுருகுநெக்காடவே
யமலமேயேகமேயெம்
மாதியேசோதியேயெங்குநிறைகடவுளே
யரசேயெனக்கூவினான்
வாடாதுவாடுமென்முகவாட்டமுங்கண்டு
வாடாவெனக்கருணைநீ
வைத்திடாவண்ணமேசங்கேதமாவிந்த
வன்மையைவளர்ப்பித்ததார்
தேடாதுதேடுவோர்தேட்டற்றதேட்டமே
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (5)

116. பிறியாததண்ணருட்சிஞானியாய்வந்து
பேசரியவாசியாலே
பேரின்பவுண்மையையளித்தனையென்மனதறப்
பேரம்பலக்கடவுளா
யறிவாயிருந்திடும்நாதவொலிகாட்டியே
யமிர்தப்ரவாகசித்தி
யருளினையலாதுதிருவம்பலமுமாகியெனை
யாண்டனைபினெய்திநெறியாக்
குறிதானளித்தனைநன்மரவுரிகொளந்தணக்
கோலமாயஜபாநலங்
கூறினபின்மௌனியாய்ச்சும்மாவிருக்கநெறி
கூட்டினையெலாமிருக்கச்
சிறியேன்மயங்கிமிகவறிவின்மையாவனோ
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (6)

117. ஆரெனக்கென்னபோதித்துமென்னவென்
னறிவினைமயக்கவசமோ
வண்டகோடிகளெலாங்கருப்பவறைபோலவு
மடுக்கடுக்காவமைத்துப்
போமனின்றபரவெளியிலேமனவெளி
பிறங்குவதலாதொன்றினும்
பின்னமுறமருவாதுநன்னயக்காலினிப்
பேரின்பமுத்திநிலையுந்
தாராதுதள்ளவும்போகாதுனலது
தள்ளினும்போகேனியான்
றடையேதுமில்லையாண்டவனடிமையென்னுமிரு
தன்மையினுமென்வழக்குத்
தீராதுவிடுவதிலைநடுவானகடவுளே
தேடரியசத்தாகியென்
சித்ததிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (7)

118. கந்துகமதக்கரியைவசமாநடத்தலாங்
கரடிவெம்புலிவாயையுங்
கட்டலாமொருசிங்கமுதுகின்மேற்கொள்ளலாங்
கட்செவியெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம்வைத்தைந்துலோகத்தையும்
வேதித்துவிற்றுண்ணலாம்
வேறொருவர்காணாமலுலகத்துலாவலாம்
விண்ணவரையேவல்கொளலாஞ்
சந்ததமுமிளமையோடிருக்கலா மற்றொரு
சரீரத்தினும்புகுதலாஞ்
சலமேனடக்கலாங்கனன்மேலிருக்கலாந்
தன்னிகரில்சித்திபெறலாஞ்

சிந்தையையடக்கியேசும்மாவிருக்கின்ற
திறமரிதுசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (8)

119. எல்லாமறிந்தவருமேதுமறியாதவரு
மில்லையெனுமிவ்வுலகமீ
தேதுமறியாதவனெனப்பெயர்தரித்துமிக
வேழைக்குளேழையாகிக்
கல்லாதவறிவிற்கடைப்பட்டநானன்று
கையினாலுண்மைஞானங்
கற்பித்தநின்னருளினுக்கென்னகைம்மாறு
காட்டுவேன்குற்றேவனா
னல்லார்ந்தமேனியொடுகுண்டுகட்பிறையெயிற்
றுபாசவடிவமான
வந்தகாநீயொருபகட்டாற்பகட்டுவ
தட்டாதடாகாசுநம்பாற்
சொல்லாதடாவென்றுபேசவாயதுதந்த
செல்வமேசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (9)

120. மின்போலுமிடையொடியுமொடியுமெனமொழிதல்
மென்சிலம்பொலிகளார்ப்ப [போன்
வீங்கிப்புடைத்துவிம்முசுமையன்னகொங்கைமட
மின்னார்கள்பின்னாவலா
லென்போலலைந்தவர்கள்கற்றார்கள்கல்லார்க
ளிருவர்களிலொருவருண்டோ
வென்செய்கேனம்மம்மவென்பாவமென்கொடுமை
யேதென்றெடுத்தமொழிவே

னன்பால்வியந்துருகியடியற்றமரமென்ன
வடியிலேவிழுந்துவிழுந்தெம்
மடிகளேயுமதடிமையாங்களெனுநால்வருக்
கறமாதிபொருளுரைப்பத்
தென்பாலின்முகமாகிவடவாவிருக்கின்ற
செல்வமேசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (10)

121. புத்தமிர்தபோகமுங்கற்பகநீழலிற்
பொலிவுறவிருக்குமியல்பும்
பொன்னுலகிலையிராவதத்தேறுவரிசையும்
பூமண்டலாதிக்கமு
மத்தவெறியினர்வேண்டுமாலென்றுதள்ளவுமே
மாலுமொருசுட்டுமறவே
வைக்கின்றவைப்பாளன்மௌனதேசிகனென்ன
வந்தநின்னருள்வாழிகாண்
சுத்தபரிபூரணவகண்டமேயேகமே
சுருதிமுடிவானபொருளே
சொல்லரியவுயிரினிடையங்கங்குநின்றருள்
சாந்துபொழிகருணைமுகிலே
சித்திநிலைமுத்திநிலைவிளைகின்றபூமியே
தேடரியசத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்டவறிவானதெய்வமே
தேசோமயானந்தமே. (11)

சிற்சுகோதயவிலாசம்.

பதினான்குசீர்விருத்தம்.

122. காகமோடுகழுகலகைநாய்நரிகள்
சுற்றுசோறிடுதுருத்தியைக்

காலிரண்டுநவவாசல்பெற்றுவளர்
காமவேணடனசாலையை
மோகவாசைமுறியிட்டபெட்டியையு
மலமிருக்தொழுகுகேணியை
மொய்த்துவெங்கிருமிதத்துகும்பியை
முடங்கலார்கிடைசரக்கினை
மாகவிந்த்ரதனுமின்னையொத்திலக
வேதமோதியகுலாலனூர்
வனையவெய்யதடிகாரனையமன்
வந்தடிக்குமொருமட்கலத்
தேகமானபொய்யைமெய்யெனக்கருதி
யையவையமிசைவாடவோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (1)

123. குறிகளொடுகுணமேதுமின்றியன
லொழுகநின்றிடுமிரும்பனற்
கூடலின்றியதுவாயிருந்தபடி
கொடியவாணவவறைக்குளே
யறிவதேதுமறவறிவிலாமைமய
மாயிருக்குமெனையருளினு
லளவிலாததனுகரணமாதியை
யளித்தபோதுனையறிந்துநான்
பிறவிலாதவணநின்றிடாதபடி
பலநிறங்கவருமுபலமாய்ப்
பெரியமாயையிலழுந்திநின்னரு
ட்ப்ரசாதநல்லருண்மறந்திடுஞ்
சிறியனேனுமுனைவந்தணைந்துசுக
மாயிருப்பதினியென்றுகாண்

டெரிவதற்கரியபிரமமேமயமல
சிற்சுகோதயவிலாசமே. (2)

124. ஐந்துபூதமொருகானனீரென
வடங்கவந்தபெருவானமே
யாதியந்தநடுவேதுமின்றியரு
ளாய்நிறைந்திலகுசோதியே
தொந்தரூபமுடனரூபமாதிகுறி
குணமிறந்துவளர்வஸ்துவே
துரியமேதுரியவுயிரினுக்குணர்வு
தோன்றநின்றருள்சுபாவமே
யெந்தநாளுநவொகின்றொளிரு
மாதியேகருணைநீதியே
யெந்தையேயெனவிடைந்திடைந்துருகு
மெளியனேன்கவலைதீரவுஞ்
சிந்தைபானதையறிந்துநீயுணருள்
செய்யநாளுமினியுய்வனோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (3)

125. ஐவரென்றபுலவேடர்கெட்டம
தடங்கமர்க்கடவன்முட்டியா
யடவிநின்றுமலைபருகினின்றுசரு
காதிதின்றுபனிவெயிலினுண்
மெய்வருந்துதவமில்லைநற்சரியை
கிரியையோகமெனுமூன்றதாய்
மேவுகின்றசவுபானநன்னெறி
விரும்பவில்லையுலகத்திலே
பொய்முடங்குதொழில்யாதகற்குநல
சாதித்தொழினடத்திடும்

புத்தியூகமறிவற்றமூகமிவை
பொருளெனக்கருதுமருளன் யான்
றெப்வநல்லருள்படைத்தவன்பரொடு
சேரவுங்கருணைகூர்வையோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (4)

126. ஏகமானவுருவானநீயருளி
னலனேகவுருவாகியே
யெந்தநாளகிலகோடிசிர்ஷ்டிசெய
விசையுநாள்வரையநாண்முத
லாகநாளதுவரைக்குமுன்னடிமை
கூடவேசநநமானதோ
வனந்தமுண்டுநலசநநமீதிதனு
ளறியவேண்டுவனவறியலா
மோகமாதிதருபாசமானதை
யறிந்துவிட்டுனையுமெனையுமே
முழுதுணர்ந்துபரமானவின்புவெள
மூழ்கவேண்டுமிதுவின்றியே
தேகமேநழுவிநானுமோநழுவில்
பின்னையும்புவகையுள்ளதோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (5)

127. நியமலக்ஷணமுநியமலக்ஷணமு
மாசனத்திவிதபேதமு
நெடிதுணர்ந்திரயபத்மபீடமிசை
நின்றிலங்குமஜபாநலத்
தியலறிந்துவளர்மூலகுண்டலியை
யினிதிறைஞ்சியவளருளினு

லெல்லைபற்றுவளர்சோதிமூலனலை
லெங்கணேமோநம்நமுறையிலே
வய்யிருந்துவருமமிர்தமுண்டல்
மதிக்குளேமதியைவைத்துநான்
வாய்மடுத்தமிர்தவாரியைப்பருகி
மன்னுமாரமிர்தவடிவமாய்ச்
செயமிருந்துவருசித்தயோகநிலை
பெற்றுஞானநெறியடைவனோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (6)

128. எறிதிரைக்கடனிகர்த்தசெல்வமிக
வல்லலென்றொருவர்பின்செலா
தில்லையென்னுமுரைபேசிடாதலகி
லெவருமாமெனமதிக்கவே
நெறியின்வைகிவளர்செல்வமும்முதலி
நோய்களற்றசுகவாழ்க்கையாய்
நியமமாதிநிலைநின்றுஞானநெறி
நிஷ்டைகூடவுமெந்நாளுமே
யறிவினின்றுகுருவாயுணர்த்தியது
மன்றிமோனகுருவாகியே
யகிலமீதிவரவந்தசீரருளை
யையவைப்பினியென்சொல்கேன்
சிறியனேழைமசடிமையென்றனது
திருவுளத்தினிலிருந்ததோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (7)

129. எவ்வுயிர்த்திரளுமுலகிலென்னுயி
ரெனக்குழைந்துருகிநன்மையா

யிதமுரைப்பவெனதென்றயாவையு
மெடுத்தெறிந்துமதயானைபோற்
கவ்வையற்றநடைபயில்வன்பாடி
கண்டதேவருளின்வடிவமாக்
கண்டயாவையுமகண்டமென்னவிரு
கைகுவித்துமலர்தூவியே
பவ்வவெண்டிசைகொழித்ததண்டாளம்
விழியுதிர்ப்பமொழிகுளறியே
பாடியாடிபுரளுடைந்துடைந்தெழுது
பாவையொத்தசைதலின்றியே
திவ்யவன்புருவமாகியன்பரொடு
மின்பவீட்டினிலிருப்பனோ
தெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (8)

130. மத்தர்பேயரொடுபாலர்தன்மையது
மருவிபேதுரியவடிவமாய்
மன்னுதேசமொடுகாலமாதியை
மறந்துநின்னடியாடியிலே
பத்தியாய்நெடிதுநம்புமென்னையொரு
மையறந்தகிலமாயையைப்
பாருபாரெனநடத்தவந்ததென
பாரதத்திலுமிதுள்ளதோ
சுத்தநித்தவியல்பாகுமோவுனது
விசுவமாயைநடுவாகவே
சொல்லவேண்டும்வகைநல்லகாதிகதை
சொல்லுமாயையினுமில்லையென்
சித்தமிப்படிமயக்குமோவருளை
நம்பினோர்கள்பெறுபேறிதோ

றெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (9)

131. பன்முகச்சமயநெறிபடைத்தவரு
மியாங்களேகடவுளென்றிடும்
பாதகத்தவரும்வாதத்தர்க்கமிடு
படிறருந்தலைவணங்கிடத்
தன்முகத்திலுயிர்வாவழைக்குமெம
தருமனும்பகடேமேக்கியாய்த்
தனியிருப்பவடநீழலூடுவளர்
சனகனாதிமுனிவோர்கடஞ்
சொன்மயக்கமதுதீரவங்கைகொடு
மோனஞானமதுணர்த்தியே
சுத்தநித்தவருளிபல்பதாகவுள
சோமசேகரகிர்பானுவாய்த்
தென்முகத்தின்முகமாயிருந்தகொலு
வெம்முகத்தினுமிணங்குவேன்
றெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே. (10)

ஆகாரபுவனம் சிதம்பரரகசியம்.

எண்சீர்விருத்தம்.

132. ஆகாரபுவனமின்பாகாரமாக
வங்ஙனேயொருமொழியாலகண்டாகார
யோகாநுபூதிபெற்றவன்பாலிக்
குறுதுணையேயென்னளவுமுகந்தநட்பே
வாகாரும்படிக்கிசைகிண்கிணிவாயென்ன
மலர்ந்தமலரிடைவாசம்வயங்குமாபோற்

றேகாதியுலகமெங்குங் கலந்துதானே
திகழனந்தானந்தமயத்தெய்வக்குன்றே. (1)

133, அனந்தபதவுயிர்கடோறுமுயிராயென்று
மானந்தநிலையாகியளவைக்கெட்டாத்
தனந்தனிச்சின்மாத்திரமாய்க்கீழ்மேல்காட்டாச்
சதசத்தாயருட்கோயிற்றழைத்ததேவே
யினம்பிரிந்தமான்போனனிடையாவண்ண
மின்பமுறவன்பர்பக்கலிருத்திவைத்துக்
கனந்தருமாகனமேதண்ணருளிற்றானே
கனிபலித்தவானந்தக்கட்டிப்பேறே. (2)

134. பேறனைத்துமணுவெனவேயுதறித்தள்ளப்
பேரின்பமாகவந்தபெருக்கேபேசா
வீறனைத்துமிந்நெறிக்கேயென்னவென்னை
மேவென்றவெராத்தேபாழ்வெய்யமாயைக்
கூறனைத்துங்கடந்தவெல்லைச்சேடமாகிக்
குறைவறநின்றிடுநிறைவேகுலவாநின்று
வாறனைத்தும்புகுங்கடல்போற்சமயகோடி
யத்தனையுந்தொடர்ந்துபுகுமாதிரட்பே. (3)

135. ஆதியந்தமெனுமெழுவாயீறற்றோங்கி
யருமறையின்னமுங்காணாதாற்றநாண
பேதமதங்களுமலையமலைபோல்வாதப்
பெற்றியரும்வாய்வாதப்பேயாகச்
சாதகமோனத்திலென்னவடவானீழற்
றண்ணருட்சந்திரமௌலிதடக்கைக்கேற்க
வேதகசின்மாத்திரமேயெம்மனோர்க்கும்
வெளியாகவந்தவொன்றேவிமலவாழ்வே. (4)

136. விமலமுதற்குணமாகிநாற்றெட்டாதி
வேதமெடுத்தெடுத்துரைக்கவிருக்கிக்கேற்க

வமையுமிலக்கணவடிவாயதுவும்போதா
தப்பாலுக்கப்பாலாயருட்கண்ணாகிச்
சமயமுடன்கலப்புமவிழ்தலுமியாங்காணத்
தண்ணருடந்தெமைக்காக்குஞ்சாக்ஷிப்பேறே
யிமையளவுமுபகாரமல்லால்வேறொன்
றியக்காநிர்க்குணக்கடலாயிருந்தவொன்றே. (5)

137. ஒன்றாகிப்பலவாகிப்பலவாக்கண்ட
வொளியாகிவெளியாகியுருவுமாகி
நன்றாகித்தீதாகிமற்றுமாகி
நாசமுடனுற்பத்திநண்ணாதாகி
யின்றாகிநாளையுமாய்மேலுமான
வெந்தையேயெம்மானேயென்றென்றேங்கிக்
கன்றாகிக்கதறினர்க்குச்சேதாவாகிக்
கடிதினில்வந்தருள்கூருங்கருணைவிண்ணே. (6)

138. அருள்பழுத்தபழச்சுவையேகரும்பேதேனே
யாரமிர்தேயென்கண்ணேயரியவான
பொருளனைத்துந்தரும்பொருளேகருணைநீங்காப்
பூரணமாய்நின்றவொன்றேபுனிதவாழ்வே
கருதரியகருத்ததனுட்கருத்தாய்மேவிக்
காலமுந்தேசமும்வகுத்துக்கருவியாதி
விரிவினையுங்கூட்டியுயிர்த்திரளையாட்டும் [ளே.
விழுப்பொருளேயான்சொலும்விண்ணப்பங்கே

139. விண்ணவரிந்திரன்முதலோர்நாரதாதி
விளங்குசப்தருஷிகள்கணவீணைவல்லோ
ரெண்ணரியசித்தர்மனுவாதிவேந்த
ரிருக்காதிமறைமுனிவரெல்லாமிந்தக்
கண்ணகன்ஞாலம்மதிக்கத்தானையுள்ளங்
கையினெல்லிக்கனிபோலக்காட்சியாகக்

திண்ணியநல்லசிவாலிச்சமபத்தன்றே
செப்பரியசித்திமுத்திசேர்ந்தாரென்றும். (8)

140. செப்பரியசமயநெறியெல்லாந்தந்
தெய்வமேதெய்வமெனுஞ்செயற்கையான
வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பா
லடுத்தவந்நூல்களும்விரித்தேயநுமானாதி
பொப்பவிரித்துரைப்பரிங்ஙன்பொய்மெய்யென்ன [கு
வொன்றிலையொன்றெனப்பார்ப்பதொவ்வாதார்க்
மிப்பரிசாஞ்சமயமுமாயல்லவாகி
யாதுசமயமும்வணங்குமியல்பதாகி. (9)

141. இயல்பென்றுந்திரிபாமலியமமாதி
யெண்குணமுங்காட்டியன்பாலின்பமாகிப்
பயனருளப்பொருள்கள்பரிவாரமாகிப்
பண்புறவுஞ்சௌபானபக்ஷங்காட்டி
மபலறுமந்திரஞ்சிக்ஷைசோதிடாதி
மற்றங்கநூல்வணங்கமௌனமோலி
யயர்வறச்சென்னியில்வைத்துராசாங்கத்தி
லமர்ந்ததுவைதிகசைவமழகிதந்தோ. (10)

142. அந்தோவீததிசயமிச்சமயம்போலின்
றறிஞரெல்லாநடுவறியவணிமாவாதி
வந்தாடித்திரிபவர்க்கும்பேசாமோனம்
வைத்திருந்தமாதவர்க்குமற்றுமற்று
மிந்த்ராதிபோகநலம்பெற்றபேர்க்கு
மிதுவன்றித்தாயகம்வேறில்லையில்லை
சந்தானகற்பகம்போலருளைக்காட்டத்
தக்கநெறியிந்நெறியேதான்சன்மார்க்கம். (11)

143. சன்மார்க்கஞானமதின்பொருளும்வீறு
சமயசங்கேதப்பொருளுந்தானென்றாகப்

பன்மார்க்கநெறியினிலுங்கண்டதில்லை
பகர்வரியதில்லைமன்றுட்பார்த்தபோதங்
கென்மார்க்கமிருக்குதெல்லாம்வெளியேயென்ன
வெச்சமயத்தவர்களும்வந்திறைஞ்சாநிற்பர்
சன்மார்க்கநெஞ்சமுளவெனக்குந்தானே
கண்டவுடனானந்தங்காண்டலாகும். (12)

144. காண்டல்பெறப்புறத்தினுள்ளபடியேயுள்ளுங்
காட்சிமெய்ந்நூல்சொலும்பதியாங்கடவுளோநீ
நீண்டநெடுமையுமகலக்குறுக்குங்காட்டா
நிறைபரிபூரணவறிவாய்நித்தமாகி
வேண்டுவிருப்பொடுவெறுப்புச்சமீபந்தூரம்
விலகலணுகுதன்முதலாம்விகாரங்கள்
பூண்டவளவைகண்மனவாக்காதியெல்லாம்
பொருந்தாமலகம்புறமும்புணர்க்கையாகி. (13)

145. ஆகியசற்காரியவூகத்துக்கேற்ற
வமலமாய்நடுவாகியனந்தசத்தி
யோகமுறுமானந்தமயமதாகி
யுயிர்க்குயிராயெந்நாளுமோங்காநிற்ப
மோகவிருண்மாயைவினையுயிர்கட்கெல்லா
மொய்த்ததென்கொலுபகாரமுயற்சியாகப்
பாகமிகவருளொருசத்திவந்து
பதிந்ததென்கொலினனுமப்பான்மையென்கொல்.

146. நானென்னுமோகந்தையெவர்க்கும்வந்து
நலிந்தவுடன்சகமாயைநானுவாகித்
தான்வந்துதொடருமித்நால்வளருந்துன்பச்
சாகரத்தின்பெருமையெவர்சாற்றவல்லா
ருளொன்றுமுடலென்றுங்கரணமென்று
முள்ளென்றும்புறமென்றுமொழியாநின்ற

வானென்றுங்காலென்றுந்தீநீரென்று
மண்ணென்றுமலையென்றும்வனமதென்றும். (15)

147. மலைமலையாங்காட்சிகண்காணுமையாதி
மறப்பென்றுநினைப்பென்றுமாயாவாரி
யலையலைபாயடிக்குமின்பதுன்பமென்று
மதைவிளைக்கும்வினைகளென்றுமதனைத்தீர்க்கத்
தலைபலவாஞ்சமயமென்றுந்தெய்வமென்றுஞ்
சாதகரென்றும்மதற்குச்சாட்சியாகக்
கலைபலவாநெறியென்றுந்தர்க்கமென்றுங்
கடலுறுநுண்மணலெண்ணிக்காணும்போதும். ()

148. காணரியவல்லவெல்லாந்தானேகட்டுக்
கட்டாகவிளையுமதைக்கட்டோடேதான்
வீணினிற்கர்ப்பூரமலைபடுதீப்பட்ட
விந்தையெனக்காணவொருவிவேகங்காட்ட
வூணுறக்கமின்பதுன்பம்பேரோதி
யொவ்விடவுமெனைப்போலவுருவங்காட்டிக்
கோணறவோர்மான்காட்டிமானையீர்க்குங்
கொள்கையெனவருண்மௌனகுருவாய்வந்து. ()

149. வந்தெனுடல்பொருளாவிமூன்றுந்தன்கை
வசமெனவேயத்துவாமார்க்கநோக்கி
யைந்துபுலனம்பூதங்கரணமாதி
யடுத்தகுணமத்தனையுமல்லையல்லை
யிந்தவுடலறிவறியாமையுநீயல்லை
யாதொன்றுமற்றினதனியல்பாய்நின்று
பந்தமறும்பளிங்கனையசித்துநீயுன்
பக்குவங்கண்டறிவிக்கும்பான்மையேம்யாம். ()

150. அறிவாகியானந்தமயமாயென்று
மழியாதநிலையாகியாதின்பாலும்

பிறியாமற்றண்ணருளேகோயிலான
பெரியபரம்பதியதனைப்பெறவேவேண்டி
னெறியாகக்கூறுவன்கேளெந்தநாளு
நிர்க்குணநிற்குளம்வாய்த்துநீடுவாழ்க
செறிவானவறியாமையெல்லாநீங்கச்
சிற்சுகம்பெற்றிடுகபந்தந்தீர்கவென்றே. (19)

151. பந்தமறுமெய்ஞ்ஞானமானமோனப்
பண்பொன்றையருளியந்தப்பண்புக்கேதான்
சிந்தையில்லைநானென்னும்பான்மையில்லை
தேசமில்லைகாலமில்லைதிக்குமில்லை
தொந்தமில்லைநீக்கமில்லைபிறிதுமில்லை
சொல்லுமில்லையிராப்பகலாந்தோற்றமில்லை
யந்தமில்லையாதியில்லைநடுவுமில்லை
யகமுமில்லைபுறமுமில்லையனைத்துமில்லை. (20)

152. இல்லையில்லையென்னினொன்றுமில்லாதல்ல
வியல்பாகியென்றுமுள்ளவியற்கையாகிச்
சொல்லரியதன்மையதாயான்றானென்னத்
தோன்றாதெல்லாம்விழுங்குஞ்சொரூபமாகி
யல்லையுண்டபகல்போலவவித்தையெல்லா
மடையவுண்டுதடையறவுன்னறிவைத்தானே
வெல்லவுண்டிங்குன்னையுந்தானாக்கொண்டு
வேதகமாய்ப்பேசாமைவிளங்குந்தானே. (21)

153. தானானதன்மயமேயல்லாலொன்றைத்
தலையெடுக்கவொட்டாதுதலைப்பட்டாங்கே
போனாலுங்கர்ப்பூரதீபம்போலப்
போயொளிப்பதல்லாதுபுலம்வேறின்றாம்
ஞானாகாரத்தினொடுஞேயமற்ற
ஞாதுருவுநழுவாமனழுவிநிற்கு

மானாலுமிதன்பெருமையெவர்க்கார்சொல்வா
ரதுவானாலதுவாவரதுவேசொல்லும். (22)

154. அதுவென்றாலதுவெனவொன்றடுக்குஞ்சங்கை
யாதலினாலதுவெனலுமறவேவிட்டு
மதுவுண்டவண்டெனவுஞ்சனகனாதி
மன்னவர்கள்சுகர்முதலோர்வாழ்ந்தாரென்றும்
பதியிந்தநிலையெனவுமென்னையாண்ட
படிக்குநிருவிகற்பத்தாற்பரமானந்தக்
கதிகண்டுகொள்ளவுநின்னருள்கூரிந்தக்
கதியன்றியுறங்கேன்மேற்கருமம்பாரேன். (23)

155. பாராதிவிண்ணனைத்துநீயாச்சிந்தை
பரியமடலாவெழுதிப்பார்த்துப்பார்த்து
வாராயோவென்பிராணநாதாவென்பேன்
வளைத்துவளைத்தெனைநீயாவைத்துக்கொண்டு
பூராயமாமேலொன்றறியாவண்ணம்
புண்ணாளர்போனெஞ்சம்புலம்பியுள்ளே
நீராளயாயுருகிக்கண்ணீர்சோர
நெட்டுயிர்த்துமெய்ம்மறந்தோர்நிலையாய்நிற்பேன்.

156. ஆயுமறிவாகியுன்னைப்பிரியாவண்ண
மணைந்துசுகம்பெற்றவன்பரையோவென்னத்
தீயகொலைச்சமயத்துஞ்செல்லச்சிந்தை
தெளிந்திடவுஞ்சமாதானஞ்செய்வேன்வாழ்வான்
காயிலைபுன்சருகாதியருந்தக்கானங்
கடன்மலையெங்கேயெனவுங்கவலைய வேன்
வாயில்கும்பம்போற்கிடந்துபுரள்வேன்வானின்
மதிகதிரைமுன்னிலையாவைத்துநேரே. (25)

157. நேரேதானிரவுபகல்கோடாவண்ண
நித்தம்வரவுங்களையிந்நிலைக்கேவைத்தா

ராரேயங்கவர்பெருமையென்னையென்பே
ணடிக்கின்றகாற்றேநீபாராலேதான்
பேராதேசுழல்கின்றாயென்பேன்வந்து
பெய்கின்றமுகில்காளெம்பெருமானும்போற்
றாராளமாக்கருணைபொழியச்செய்யுஞ்
சாதகமென்னைகருதிச்சாற்றுமென்பேன். (26)

158. கருகரியவிண்ணேநீயெங்குமாகிக்
கலந்தனையேயுன்முடிவின்காட்சியாக
வருபொருளெப்படியிருக்குஞ்சொல்லாயென்பேன்
மண்ணேயுன்முடிவிலெதுவடங்குமாங்கே
துரியவறிவுடைச்சேடனீற்றினுண்மை
சொல்லானோசொல்லென்பேன்சுருதியேநீ
யொருவரைப்போலனைவருக்குமுண்மையாமுன்
னுரையன்றோவுன்முடிவையுரைநீயென்பேன். ()

159. உரையிறந்துபெருமைபெற்றுத்திரைக்கைநீட்டி
யொலிக்கின்றகடலேயிவ்வுலகஞ்சூழக்
கரையுமின்றியுன்னைவைத்தாரியாரேயென்பேன்
கானகத்திற்பைங்கிளிகாள்கமலமேவும்
வரிசிறைவண்டினங்காளோதிமங்காடேது
மார்க்கமென்றோநீங்களிதுவரையிலேயும்
பெரியபரிபூரணமாம்பொருளைக்கண்டு
பேசியதுண்டோவொருகாற்பேசுமென்பேன். ()

160. ஒருவனவன்யானைகெடக்குடத்துட்செங்கை
யோட்டுதல்போனுன்பேதையுப்போடப்பை
மருவவிட்டிங்கர்ப்பூரமதனிற்றீபம்
வயங்கவிட்டுமைக்கியமுன்னிவருந்திநிற்பே
னருளுடையபரமென்றோவன்றுதானே
யானுளனென்றும்மெனக்கேயாணவாதி

பெருகுவினைக்கட்டென்றுமென்னூற்கட்டிப்
பேசியதன்றேயருணூல்பேசிற்றன்றே. (29)

161. அன்றுமுதலின்றைவரைச்சனனகோடி
யடைந்தடைந்திங்கியாதனையாலழிந்ததல்லா
லின்றைவரைமுத்தியின்றேயெடுத்ததேக
மெப்போதோதெரியாதேயிப்போதேதான்
றுன்றுமனக்கவலைகெடப்புலைநாயேனைத்
தொழும்புகொளச்சீகாழித்துரையேதூது
சென்றிடவேபொருளைவைத்தநாவலோய்நஞ்
சிவனப்பாவென்றவருட்செல்வத்தேவே. (30)

162. தேவர்தொழும்வாதவூர்த்தேவேயென்பேன்
றிருமூலத்தேவேயிச்சகத்தோர்முத்திக்
காவலுறச்சிவவென்வாக்குடனேவந்த
வாதேசும்மாவிருந்துன்னருளைச்சாரப்
பூவுலகில்வளாருணகிரியேமற்றைப்
புண்ணியர்காளோவென்பேன்புரையொன்றில்லா
வோவியம்போலசைவறவுந்தானேநிற்பே
னோதரியதுயர்கெடவேயுரைக்குமுன்னே. (31)

163. ஓதரியசுகர்போலவேதனென்ன
வொருவரிலையோவெனவுமுரைப்பேன்றனே
பேதமபேதங்கெடவுமொருபேசாமை
பிறவாதோவாலடியிற்பெரியமோன
நாதனொருதாமுலகம்பார்க்கவிச்சை
நண்ணுனேனென்றென்றேநானுவாகிக்
காதன்மிகுமணியிலழயாரெனவாடிற்றேன்
கருத்தறிந்துபுரப்பதுன்மேற்கடன்முக்காலும். ()

164. காலமொடுதேசவர்த்தமானமாதி
கலந்துநின்றநிலைவாழிகருணைவாழி

மாலறவுஞ்சைவமுதன் மதங்களாகி
மதாதீதமானவருண்மரபுவாழி
சாலமிகுமெளியேனிவ்வழக்குப்பேசத்
தயவுவைத்துவளர்த்தவருட்டன்மைவாழி
யாலடியிற்பாமகுருவாழிவாழி
யகண்டிதாகாரவருளடியார்வாழி. (33)

தேன்முகம்.

அறுசீர் விருத்தம்.

165. தேன்முகம்பிலிற்றும்பைந்தாட்செய்யபங்கயத்தின்மே [வுசோ
நான்முகத்தேவேநின்னாட்டியவகிலமாயை
கான்முபற்கொம்பேயென்கோகானலம்புனலேயென்
வான்முகமுளரியென்கோமற்றென்கோவிளம்பில்வேண்டும்.

166. வேண்டுவபடைத்தாய் நுந்தைவிதிப்படிபுரந்தானத்தை [க்
காண்டகவழித்தான்முக்கட்கடவுளானினையவாற்று
லாண்டவனெவனோவென்னவறிகிலாதகிலநீயே
யீண்டியவல்லறிரவெம்மனோர்க்கியம்புகண்டாய். (2)

167. கண்டனவல்லவென்றேகழித்திடுமிறுதிக்கண்ணே
கொண்டதுபாமானந்தக்கோதிலாமுத்தியத்தாற்
பண்டையிற்படைப்புங்காப்பும்பறந்தனமாயையோடே
வெண்டலைவிழிகைகாலில்விளங்கிடநின்றான்யாவன்.

168. விளங்கவெண்ணீறுபூசிவிரிசடைக்கங்கைதாங்கித் [கக்
துளங்குநன்னுதற்கண்டோன்றச்சுழல்வளிநெடுமூச்சா
களங்கமிலுருவந்தானேககனமாய்ப்பொலிபப்பூமி
வளர்ந்ததாளென்னவுள்ளமன்றெனமறையொன்றின்றி.

169. மறைமுழக்கொலிப்பத்தானேவாதமோடபயக்கைகண்
முறைமையினேங்காதமுமோசெனக்கறங்கவெங்குங்

குறைவிலாவணநிறைந்துகோதிலாநடனஞ்செய்வா
னிறையவனெனலாமியார்க்குமிதயசம்மதமீதல்லால். ()

170. அல்லலாந்தொழில்படைத்தேயடிக்கடியுருவெடுத்தே
மல்லன்மாஞாலங்காக்கவருபவர்கடவுளென்னிற்
றொல்லையாம்பிறவிவேலைதொலைந்திடாதிருணீங்காது
நல்லதுமாயைதானுநானெனவந்துநிற்கும். (6)

171. நானெனநிற்குஞானஞேயமன்றந்தஞான
மோனமாயிருக்கவொட்டாமோனமின்றாகவேதான்
றேனெனருசிக்குமன்பாற்சிந்தைநைந்துருகும்வண்ணம்
வானெனநிறைந்தானந்தமாகடல்வளைவதின்றே. (7)

172. இன்றெனவிருப்போமென்னினென்றுஞ்சூனியமாமுத்
நன்றொடுதீதுமன்றிநாமுன்னேபெறுமவித்தை [தி
நின்றதுபெத்தந்தானேநிரந்தாமுத்தியென்னி
னென்றொருவரைநான்கேட்கவுணர்வில்லைகுநவுமில்லை.

173. இல்லையென்றிடினிப்பூமியிருந்தவாறிருப்போமென்னி
னல்லவன்சாருவாகனுஞ்சொலுநெறிக்குவீணிற்
றொல்லையேனுகமாதிதொடுப்பதேன்மயக்கமேதிங்
கொல்லைவந்திருமினென்னவுறவுசெய்திடுவனந்தோ. (9)

174. அந்தணர்நால்வர்காணவருட்குருவாகிவந்த [டைத்த
வெந்தையேயெல்லாந்தானென்றியம்பினனெமைப்ப
தந்தைநீயெம்மைக்காக்குந்தலைவனைநுந்தையன்றோ
பந்தமில்சித்திமுத்திபடைக்கநின்னருள்பாலிப்பாய். ()

பன்மாலை.

எண்சீர் விருத்தம்.

175. பன்மாலைத்திரளிருக்கத்தமையுணர்ந்தோர்
பாமாலைக்கேநீதான்பக்ஷமென்று

நன்மாலையாவெடுத்துச்சொன்னார்நல்லோர்
நலமறிந்துகல்லாதநானுஞ்சொன்னேன்
சொன்மாலைமாலையாக்கண்ணீர்சோரத்
தொண்டனேனெந்நாளுந்துதித்துநிற்பே
னென்மாலைபறிந்திங்கேவாவாவென்றே
யெனைக்கலப்பாய்திருக்கருணையெம்பிரானே. (1)

176. கருணைமொழிசிறிதில்லேனீதியில்லேன்
கண்ணீர்கம்பலையென்றன்கருத்துக்கேற்க
வொருபொழுதும்பெற்றறியேனென்னையாளு
மொருவாவுன்னடிமைநானொருநக்கனுக்கோ
விருவினையுமுக்குணமுங்கரணநான்கு
மிடர்செயுமைம்புலனுங்காமாதியாறும்
வாவரவுமேழைக்கோரெட்டதான
மதத்தொடும்வந்தெதிர்த்தநவவடிவமன்றே. (2)

177. வடிவனைத்துந்தந்தவடிவில்லாச்சுத்த
வான்பொருளேயெளியனேன்மனமாமாயைக்
குடிகெடுக்கத்துசங்கட்டிக்கொண்டமோன
குருவேயென்றெய்வமேகோதிலாத
படியெனக்கானந்தவெள்ளம்வந்துதேக்கும்
படியெனக்குன்றிருக்கருணைபற்றுமாறே
யடியெடுத்தென்முடியிலின்னம்வைக்கவேண்டு
மடிமுடியொன்றில்லாதவகண்டவாழ்வே. (3)

178. வாழ்வனைத்துமயக்கமெனத்தேர்ந்தேன்றேர்ந்த
வாறேநானப்பாலோர்வழிபாராமற்
றாழ்வுபெற்றிங்கிருந்தேனீதென்னமாயந்
தடையுற்றான்மேற்கதியுந்தடையதாமே
யூழ்வலியோவல்லதுன்றன்றிருக்கூத்தோவிங்
கொருதமியேன்மேற்குறையோவுணர்தாயின்னம்

பாழவதிப்படவெனக்குமுடியாதெல்லாம்
படைத்தளித்துத்துடைக்கவல்லபரிசினனே. (4)

79. நானினிங்கெனுமகந்தையெனக்கேன்வைத்தாய்
நல்வினைதீவினையெனவேவடுவேநாட்டி
யூனருமுடற்சுமையென்மீதேன்வைத்தா
யுயிரெனவுமெனையொன்றுவுள்ளேன்வைத்தா
யானமையாயகிலநிகிலபேத
மனைத்தினுள்ளுந்தானாகியறிவானந்தத்
தேனாகிப்பாலாகிக்கனியாய்க்கன்னற்
செழும்பாகாய்க்கற்கண்டாய்த்திகழ்ந்தவொன்றே.

80. ஒன்றிபொன்றிநின்றுநின்றுமென்னையென்னை
யுன்னியுன்னும்பொருளலைநீயுன்பாலன்பா
னின்றதன்மைக்கிரங்கும்வயிராக்கியனல்லே
னிவர்த்தியவைவேண்டுமிந்தநீலனுக்கே
யென்றுமென்றுமிந்நெறியோர்குணமுமில்லை
யிடுக்குவார்கைப்பிள்ளையேதோவேதா
கன்றுமனத்தடனுடுதழைதின்றற்போற்
கல்வியுங்கேள்வியுமாகிக்கலக்குற்றேனே. (6)

81. உற்றதுணைநீயல்லாற்பற்றுவேறென்
றுன்னேன்பன்னூலகத்தோடியாடிக்
கற்றதுங்கேட்டதுமிதனுக்கேதுவாகுங்
கற்பதுங்கேட்பதுமமையுங்காணீத
நற்றுணையேயருட்டாயேயின்பமான
நாதாந்தபரம்பொருளேநாரணதி
சுற்றமுமாய்நல்லன்பர்தமைச்சேயாகத்
தொழும்புகொள்ளுங்கனகமேசோதிக்குன்றே.

82. குன்றுகழவுருவாயருவாய்ஞானக்
கொழுந்தாகியறுசமயக்கூத்துமாடி

நின்றுழேபமாயையெனுந்திரையைநீக்கி
நின்னையாரறியவல்லார்நினைப்போர்நெஞ்ச
மன்றாகவின்பக்கூத்தாடவல்ல
மணியேயென்கண்ணேமாமருந்தேநால்வர்க்
கன்றாலின்கீழிருந்துமோனஞான
மமைத்தசின்முத்திரைக்கடலேயமரரேறே. (8)

183. திரையில்லாக்கடல்போலச்சலனந்தீர்ந்து
தெளிந்துருகும்பொன்போலச்செகத்தையெல்லாங்
கரையவேகனிந்துருக்குமுகத்திலேநீ
கனிந்தபரமானந்தக்கட்டியிந்நாள்
வரையிலேவரக்காணேனென்றுற்கட்டி
வார்த்தைசொன்னாற்சுகம்வருமோவஞ்சனேனை
யிரையிலேயிருத்திருவிகற்பமான
வின்பநிஷ்டைகொடுப்பதையாவெந்தநாளோ (9)

184. எந்நாளுனக்கடிமையாகுநாளோ
வெந்நாளோகதிவருநாளெளியனேன்றன்
சிந்தைநாளதுவரைக்குமயங்கிற்றல்லாற்
றெளிந்ததுண்டோமௌனியாயத்தெளியவோர்
றந்தநாண்முதலின்பக்கால்சற்றல்லாற் [சொற்
றடையறவானந்தவெள்ளந்தானேபொங்கி
வந்தநாளில்லைமெத்தவலைந்தேனுன்னை
மறவாவின்பத்தாலேவாழ்கின்றேனே. (10)

நினைவொன்று.

ஞானிகளிடம்போருளேவல்.

எண்சீர்விருத்தம்.

185. நினைவொன்றுநினையாமனிற்கினகமென்பார்
நிற்குமிடமேயருளாநிஷ்டையருளொட்டுங்

தணையென்றுமறந்திருப்பவருள்வறிவானதுமேற்
றட்டியெழுந்திருக்குமின்பந்தன்மயமேயதுவாம்
பிணையொன்றுமிலையந்தவின்பமெனுநிலயம்
பெற்றாரேபிறவாமைபெற்றார்மற்றுந்தான்
மனையென்றுமகவென்றுஞ்சுற்றமென்றுமசுத்த [டே.
வாதனையாமாசையொழிமன்னொருசொற்கொண்

186. ஒருமொழியேபலமொழிக்குமிடங்கொடுக்குமந்த [த
வொருமொழியேமலமொழிக்குமொழிக்கு மெனமொழிந்
குருமொழியேமலையிலக்குமற்றைமொழியெல்லாங்
கோடின்றிவட்டாடல்கொள்வதொக்குங்கண்டாய்
கருமொழியிங்குனக்கில்லைமொழிக்குமொழிருசிக்கக்
கரும்பனையசொற்கொடுனைக்காட்டவுங்கண்டனைமேற்
றருமொழியுங்குனக்கில்லையுன்னைவிட்டுநீங்காத்
தற்பரமாயனந்தப்பொற்பொதுவாய்நில்லே. (2)

187. நில்லாதவாக்கைநிலைபன்றெனவேகண்டாய்
நேயவருண்மெய்யன்றோநிலையமதாநிற்கக்
கல்லாதேயேன்படித்தாய்கற்றதெல்லாமூடங்
கற்றதெல்லாமூடமென்றேகண்டனையுமன்று
சொல்லாலேபயனில்லைசொன்முடிவைத்தானே [நில்
தொடர்ந்துபிடிமர்க்கடம்போற்றொட்டதுபற்று
லெல்லாருமறிந்திடவேவாய்ப்பறைகொண்டாடிநீ
பிராப்பகலில்லாவிடமேபெமக்கிடமென்றறிந்தே.

188. இடம்பொருளேவலைக்குறித்துமடம்புகாயெனவே
யெங்கேநீயகப்பட்டாயிங்கேநீவாடா
மடம்பெறுபாழ்நெஞ்சாலேயஞ்சாதேநிராசை
மன்னிடமேயிடமந்தமாநிலத்தேபொருளுந்
திடம்பெறவேநிற்கினெல்லாவுலகமும்வந்தேவல்
செய்யுமிந்தநிலைநின்றோர்சநகன்முதன்முனிவர்

கடம்பெறுமாமதயானையென்னவுநீபாசக்
கட்டானநிகபந்தக்கட்டவிழப்பாரே. (4)

189. பாராதியண்டமெலாம்படர்கானற்சலம்போற்
பார்த்தனையேமுடிவினின்றுபாரெதுதானின்ற
தாராலுமறியாதசத்தன்றேவதுவா
யங்கிருநீயெங்கிருந்துமதுவாவைகண்டாய்
பூராயமாகவுநீமற்றொன்றைவிரித்துப்
புலம்பாதேசஞ்சலமாப்புத்தியைநாட்டாதே
யோராதேயொன்றையுநீமுன்னில்லையாதே
யுள்ளபடிமுடியுமெலாமுள்ளபடிகாணே. (5)

190. உள்ளபடியென்னவுநீமற்றொன்றைத்தொடர்ந்திட்
டுளங்கருதவேண்டாநிஷ்களங்கமதியாகிக்
கள்ளமனத்துறவைவிட்டெல்லாந்துறந்ததுறவோர்
கற்பித்தமொழிப்படியேகங்குல்பகலற்ற
வெள்ளவெளிக்கடன்மூழ்கியின்பமயப்பொருளாய்
விரவியெடுத்தெடுத்துவிள்ளவும்வாயின்றிக்
கொள்ளைகொண்டகண்ணீருங்கம்பலையுமாகிக்
கும்பிட்டுச்சகம்பொயெனத்தம்பட்டமடியே. (6)

191. அடிமுடியுநடுவுமற்றபரவெளிமேற்கொண்டா
லத்துவிதமானந்தசித்தமுண்டாநமது
குடிமுழுதும்பிழைக்குமொருகுறைவுமில்லையெடுத்த
கோலமெல்லாநன்றாகுங்குறைவுநிறைவறவே
விடியுமுதயம்போலவருளுதயம்பெற்ற
வித்தகரோடுங் கூடிவிளையாடலாகும்
படிமுழுதும்விண்முழுதுந்தந்தாலுங்களியாய்ப்
பாலருடனுன்மத்தர்பசாசர்குணம்வருமே. (7)

192. வரும்போமென்பனவுமின்றியென்றுமொருபடித்தாய்
வானுதிதத்துவத்தைவளைந்கருந்தவெளிபா

மிரும்பேபாகல்லேலாமாமோவென் னுநெஞ்சைக்கனன்மே
விட்டெமுகாவுருக்குமின்பவெள்ளமாகிக்
கரும்போகண்டோசீனிச்சருக்கரையோதேனே
கனியமிர்தோவெனருசிக்குங்கருத்தவிழிந்தோருணர்வா
ரரும்பேபாநன்மணங்காட்டுங்காமாசங்கன்னி
யறிவாளோவயக்குவர்க்கோவங்கலந்தான்விளங்கும். (8)

193, தானேயுமிவ்வுலகமொருமுதலுமாகாத்
தன்மையினுற்படைத்தளிக்குந்தலைமையதுவான
கோனுகவொருமுதலிங்குண்டெனவும்யூகங்
கூட்டியதுஞ்சகமுடிவிற்குலவுறமெய்ஞ்ஞான
வானுகவம்முதலைநிற்குநிலைநம்மான்
மதிப்பரிதாமெனமோனம்வைத்ததுமுன்மனமே
யானுலுமனஞ்சடமென்றழுங்காதேயுண்மை
யறிவித்தவிடங்குருவாமருளிலதொன்றிலையே. ()

பொன்னைமாதரை.

கலிவிருத்தம்.

194. பொன்னைமாதரைப்பூமியைநாடிடே
னென்னைநாடியவென்னுயிர்நாதனே
யுன்னைநாடுவனுன்னருட்டுவெளி
தன்னைநாடுவன்றன்னந்தனியனே. (1)

195, தன்னதென்றுரைசாற்றுவனவெலா
நின்னதென்றனைநின்னிடத்தேதந்தே
னின்னமென்னையிடருறக்கூட்டினற்
பின்னையுய்கிலன்பேதையனுவியே. (2)

196. ஆவியேயுனையானறிவாய்நின்று
சேவியேன்களச்சிந்தைதிறைகொடேன்

பாவியேனுளபான்மையைக்கண்டுநீ
கூவியாளெனையாட்கொண்டகோலமே. (3)

197. கோலமின்றிக்குணமின்றிநின்னருட்
சீலமின்றிச்சிறியன்பிழைப்பனோ
வாலமுண்டமிர்தருவாய்வந்த
காலமெந்தைகதிநிலைகாண்பதே. (4)

198. காணுங்கண்ணிற்கலந்தகண்ணேயுனைச்
சேணும்பாருந்திரிபவர்காண்பரோ
வாணும்பெண்ணுமதுவெனும்பான்மையும்
பூணுங்கோலம்பொருந்தியுனிற்கவே. (5)

199. நிற்குநன்னிலைநிற்கப்பெற்றாருள்
வர்க்கமன்றிமனிதான்றேயையா
துர்க்குணக்கடற்சோங்கன்னபாவியேற்
கெற்குணங்கண்டென்பெயர்சொல்வதே. (6)

200. சொல்லையுன்னித்துடித்ததலாலரு
ளெல்லையுன்னியெனையங்குவைத்திலேன்
வல்லைநீயென்னைவாவென்றிடாவிடிற்
கல்லையாமிக்கருமிநடக்கையே. (7)

201. கையுமெய்யுங்கருத்துக்கிசையவே
யையதந்ததற்கையமினியுண்டோ
பொய்யனேன்சிந்தைப்பொய்கெடப்பூரண
மெய்யதாமின்பமென்றுவிளைவதே. (8)

202. என்றுமுன்னையிதயவெளிக்குளே
துன்றவைத்தனையருட்சோதிநீ
நின்றதன்மைநிலைக்கென்னைநேர்மைபா
நன்றுநீதறவைத்தநடுவதே. (9)

03. வைத்ததேகம்வருந்தவருந்திடும்
பித்தனானருள்பெற்றுந்திடமிலேன்
சித்தமோனசிவசின்மயானந்தம்
வைத்தவையவருட்செம்பொற்சோதியே. (10)

04. செம்பொன்மேனிச்செழுஞ்சுடரேமுழு
வம்பனேனுனைவாழ்த்துமதியின்றி
யிம்பர்வாழ்வினுக்கிச்சைவைத்தேன்மன
நம்பிவாவெனினென்கொல்செய்வதே. (11)

05. செய்யுஞ்செய்கையுஞ்சிந்திக்குஞ்சிந்தையு
மையநின்னதென்றெண்ணுமறிவின்றி
வெய்யகாமவெகுளிமயக்கமாம்
பொய்யிலேசுழன்றேனென்னபுன்மையே. (12)

206. புன்புலானரம்பென்புடைப்பொய்யுட
லன்பர்யார்க்குமருவருப்பல்லவோ
வென்பொலாமணியேபிறையேயித்தாற்
துன்பமன்றிச்சுகமொன்றுமில்லையே. (13)

07. இல்லையுண்டென்றெவர்பக்கமாயினுஞ்
சொல்லவோவறியாததொழும்பன்யான்
செல்லவேறுநதிக்கறியேனெலாம்
வல்லநீயெனைவாழ்விக்கவேண்டுமே. (14)

08 வேண்டுஞ்சீருண்மெய்யன்பர்க்கேயன்பு
பூண்டநானென்புலமறியாததோ
வாண்டநீயுன்னடியவனென்று
தூண்டுவேனன்றித்தொண்டனென்சொல்வதே (15)

09. எனக்குளேயுயிரென்னவிருந்தநீ
மனக்கிலேசத்தைமாற்றல்வழக்கன்றோ

கனத்தசீருட்காட்சியலாதொன்றை
நினைக்கவோவறியாதென்றனெஞ்சமே. (16)

210. நெஞ்சுகந்துனைநேசித்தமார்க்கண்டர்க்
கஞ்சலென்றவருளறிந்தேயையா
தஞ்சமென்றுன்சரணடைந்தேனெங்குஞ்
செஞ்செவேநின்றசிற்சுகவாரியே. (17)

211. வாரியேழுமலையும்பிறவுந்தான்
சீரிதானநின்சின்மயத்தேயன்று
லாரிலேயுளதாவித்திரளதை
போரிலேனெனையாண்டவொருவனே. (18)

212. ஒருவரொன்னுளத்துள்குக்குறிப்பறிந்
தருள்வரோவெனையாளுடையண்ணலே
மருளனேன்பட்டவாதைவிரிக்கினோ
பெருகுநாளினிப்பேசவிதியின்றே. (19)

213. இன்றுனக்கன்பிழைத்திலனென்றே
யன்றுதொட்டெனையாளரசேயென்று
நின்றாற்றியநீலனைக்கைவிட்டான்
மன்றமெப்படிநின்னருள்வாழ்த்துமே. (20)

214. வாழ்த்துநின்னருள்வாரம்வைத்தாலன்றிப்
பாழ்த்தசிந்தைப்பதகனுமுய்வனோ
சூழ்த்துநின்றதொழும்பரையானந்தத்
தாழ்த்துமுக்கணருட்செம்பொற்சோதியே. (21)

215. சோதியேசுடரேசுகமேதுணை
நீதியேநிசமேநிறைவேநிலை
யாதியேயுனையானடைந்தேனகம்
வாதியாதருள்வாயருள்வானையே. (22)

216. வானைப்போலவளைந்துகொண்டானந்தத்
தேனைத்தந்தெனைச்சேர்ந்துகலந்தமெய்ஞ்
ஞானத்தெய்வத்தைநாவெனுனெனு
மீனப்பாழ்கெடவென்றுமிருப்பனே. (23)

217. இரும்பைக்காந்தமிழுக்கின்றவாறெனைத்
திரும்பிப்பார்க்கவொட்டாமற்றிருவடிக்
கரும்பைத்தந்துகண்ணீர்கம்பலையெலா
மரும்பச்செய்யெனதன்னையொப்பாமனே. (24)

218. அன்னையப்பனென்னுவித்துணையெனுந்
தன்னையொப்பற்றசற்குருவென்பதென்
னென்னைப்பூரணவின்பவெளிக்குளே
துன்னவைத்சுடரெனத்தக்கதே. (25)

219. தக்ககேள்விபிற்சார்ந்தநற்பூமியின்
மிக்கதாகவிளங்குமுதலொன்றே
யெக்கணுந்தொழயாவையும்பூத்துக்காய்த்
தொக்கநின்றுமொன்றாய்நிறைவானதே. (26)

220. ஆனமானசமயங்களாறுக்குந்
தானமாய்நின்றுதன்மயங்காட்டிய
ஞானபூரணநாதனைநாடியே
தீனனேனின்பந்தேக்கித்திளைப்பனே. (27)

221. தேக்கியின்பந்திளைக்கத்திளைக்கவே
யாக்கமாயெனக்கானந்தமாகியே
போக்கினோடுவரவற்றபூரணந்
தாக்கிநின்றவாதன்மயமாமதே. (28)

222. அதுவென்றுன்னுமதுவுமறநின்ற
முதியஞானிகண்மோனப்பொருளது

வேதுவென்றெண்ணியிறைஞ்சுவனேழையேன்
மதியுணின்றின்பவாரிவழங்குமே. (29)

223. வாரிக்கொண்டெனைவாய்மடுத்தின்பமாய்ப்
பாரிற்கண்டவையாவும்பருகினை
யோரிற்கண்டிடுமூமன்கனவென
யாருக்குஞ்சொலவாயிலையையனே. (30)

224. ஐயமற்றவதிவருணர்க்கெலாங்
கையிலாமலகக்கனியாகிய
மெய்யனேயிந்தமேதினிமீதுழல்
பொய்யனேற்குப்புகலிடமெங்ஙனே. (31)

225. எங்ஙனேயுய்யயானெனதென்பதற்
றங்ஙனேயுன்னருண்மயமாகிலேன்
றிங்கள்பாதிதிகழப்பணியணி
கங்கைவார்சடைக்கண்ணுதலெந்தையே. (32)

226. கண்ணிற்காண்பதுன்காட்சிகையாற்றொழில்
பண்ணல்பூசைபகர்வதுமந்திரம்
மண்ணொடைந்தும்வழங்குயிர்யாவுமே
யண்ணலேயுன்னருள்வடிவாகுமே. (33)

227. வடிவெலாநின்வடிவெனவாழ்த்திடாக்
கடியனேனுமுன்காரணங்காண்பனோ
நெடியவானெனவெங்குநிறைந்தொளி
ரடிகளேயாசேயருளத்தனே. (34)

228. அத்தனேயகண்டானந்தனேயருட்
சுத்தனேயெனவுன்னைத்தொடர்ந்திலேன்
மத்தனேன்பெறுமாமலமாயவான்
கத்தனேகல்வியாததுகற்கவே. (35)

229. கற்றுமென்பலன்கற்றிடுநான்முறை
சொற்றசொற்கள்சுகாரம்பமோநெறி
நிற்றல்வேண்டுநிருவிகற்பச்சுகம்
பெற்றபேர்பெற்றபேசாப்பெருமையே. (36)

230. பெருமைக்கேயிறுமாந்துபிதற்றிய
கருமிக்கையகதியுமுண்டாங்கொலோ
வருமைச்சீரன்பர்க்கன்னையொப்பாகவே
வருமப்பேரொளியேயுண்மனுந்தமே. (37)

231. உன்மனிக்குளொளிர்பரஞ்சோதிபாஞ்
சின்மயப்பொருளேபழஞ்செல்வமே
புன்மலத்துப்புழுவன்னபாவியேன்
கன்மனத்தைக்கரைக்கக்கடவதே. (38)

232. கரையிலின்பக்கடலமுதேயிது
வரையினுனைவந்துகலந்திலே
னுரையிலாவின்பமுள்ளவர்போலவித்
தரையிலேநடித்தேனென்னதன்மையே. (39)

233. மையுலாம்விழிமாதர்கடோதகப்
பொய்யிலாழும்புலையினிப்பூரைகாண்
கையிலாமலகக்கனிபோன்றவென்
னையனேயெனையாளுடையண்ணலே. (40)

234. அண்ணலேயுன்னடியவர்போலருட்
கண்ணினாலுனைக்காணவும்வாவெனப்
பண்ணினாலென்பசுத்துவம்போயுயும
வண்ணமாகமனோலயம்வாய்க்குமே. (41)

235. வாய்க்குங்கைக்குமௌனமௌனமென்
றேய்க்குஞ்சொற்கொண்டிராப்பகலற்றிடா

நாய்க்குமின்பமுண் டோநல்லடியரைத்
தோய்க்குமானந்தத்தூவெளிவெள்ளமே. (42)

236. தூயதான துரியவறிவெனுந்
தாயுநீயின்பத்தந்தையுநீயென்றுற்
சேயதாமிந்தச்சீவத்திரளன்றோ
வாயும்பேரொளியானவகண்டமே. (43)

237. அகண்டமென்னவருமறையாகமம்
புகன்றநின்றன்மைபோதத்தடங்குமோ
செகங்களெங்குந்திரிந்துநன் மோனத்தை
யுகந்தபேருணையொன்றுவரையனே. (44)

238. ஐயனையுனையன்றியொருதெய்வம்
கையினாற்றொழவுங்கருதேன்கண்டாய்
பொய்யனாகிலும்பொய்யுரையேன்சுத்த
மெய்யனாமுனக்கேவெளியாகுமே. (45)

239. வெளியினின்றவெளிபாய்விளங்கிய
வொளியினின்றவொளியாமுன்றன்னைநான்
றெளிவுதந்தகல்லாலடித்தேவென்று
களிபொருந்தவன்றோகற்றகல்வியே. (46)

240. கல்லையுற்றகருத்தினர்கார்நிறத்
தல்லையொத்தகுழலினராசையா
லெல்லையற்றமயல்கொளவோவெழிற்
றில்லையிற்றிகழுந்திருப்பாதனே. (47)

241. திருவருட்டெய்வச்செல்வியலைமக
ளுருவிருக்கின்றமேனிபொருபரங்
குருவைமுக்கணெங்கோவைப்பணிநெஞ்சே
கருவிருக்கின்றகன்மமிங்கில்லையே. (48)

42. கன்மமேதுகடுநரகேதுமேற்
சென்மமேதெனைத்தீண்டக்கடவதோ
வென்மனோரதமெய்தும்படிக்கரு
ணன்மைகூர்முக்கணாதனிருக்கவே. (49)

43. நாதகீதனென்னாதன்முக்கட்பிரான்
வேதவேதியன்வெள்விடையூர்திமெய்ப்
போதமாய்நின்றபுண்ணியன்பூந்திருப்
பாதமேகதிமற்றிலைபாழ்நெஞ்சே. (50)

44. மற்றுனக்குமயக்கமென்வன்னெஞ்சே.
கற்றைவார்சடைக்கண்ணுதலோனருள்
பெற்றபேரவரேபெரியோரெலா
முற்றுமோர்ந்தவர்மூதுரையர்த்தமே. (51)

45. உரையிறந்துளத்துள்ளவிகாரமாந்
திரைகடந்தவர்தேடுமுக்கட்பிரான்
பரைநிறைந்தபரப்பெங்ஙனங்ஙனே
கரைகடந்தின்பமாகக்கலப்பனே. (52)

46. கலந்தமுத்திகருதினுங்கேட்பினு
நிலங்களாதியுநின்றெனைப்போலவே
யலந்துபோயினமென்னுமருமறை
மலர்ந்தவாய்முக்கண்மாணிக்கச்சோதியே. (53)

47. சோதியாதெனைத்தொண்டருட்கூட்டியே
போதியாதவெல்லாமெளப்போதிக்க
வாதிகாலத்திலுன்னடிக்கர்ந்தவ
மேதுநான்முயன்றேன்முக்கணெந்தையே. (54)

48. எந்தநாளைக்குமீன்றருடாயெனை
வந்தசீரருள்வாழ்கவென்றுன்னுவேன்

சிந்தைநோக்கந்தெரிந்துகுறிப்பெலாந்
தந்துகாக்குந்தயாமுக்கணாதியே. (55)

249. கண்ணகன்றவிக்காசினியூடெங்கும்
பொண்ணொடாண்முதலாமென்பிறவியே
பெண்ணவோவரிதேழைகதிபெறும்
வண்ணமுக்கண்மணிவந்துகாக்குமே. (56)

250. காக்குநின்னருட்காட்சிபல்லாலொரு
போக்குமில்லையென்புந்திக்கிலேசத்தை
நீக்கியாளுகைநின்பரமன்பின
ராக்கமேமுக்கணானந்தமூர்த்தியே. (57)

251. ஆனந்தங்கதியென்னவென்னானந்த
மோனஞ்சொன்னமுறைபெறமுக்கணெங்
கோனிங்கீந்தகுறிப்பதனால்வெறுந்
தீனன்செய்கைதிருவருட்செய்கையே. (58)

252. கையினாற்றொழுதேத்திக்கசிந்துள
மெய்யினாலுனைக்காணவிரும்பினே
னையனேயாசேயருளேயருட்
டையலோர்புறம்வாழ்சகநாதனே. (59)

253. சகத்தின்வாழ்வைச்சதமெனவெண்ணியே
மிகுந்ததீமைவிளையவிளைகின்றே
னகத்துளாரமுதாமையநின்முத்திச்
சுகத்தினான்வந்துதோல்வதெக்காலமே. (60)

254. காலமூன்றுங்கடந்தொளிராநின்ற
சீலமேநின்றிருவருளாலிந்த
சாலமாமிச்சகமெனவெண்ணிநின்
கோலநாடுதலென்றுகொடியனே. (61)

55. கொடியவெவ்வினைக்கூற்றைத்துரந்திடு
மடிகளாம்பொருளைநினக்கன்பின்றிப்
படியிலேழைமைபற்றுகின்றேன்வெறு
மிடியினேன்கதிமேவும்விதியின்றே. (62)

56. விதியையும்விதித்தென்னைவிதித்திட்ட
மதியையும்விதித்தம்மதிமாயையிற்
பதியவைத்தபசுபதிநின்னருட்
கதியையெப்படிக்கண்டுகளிப்பதே. (63)

57. கண்டகண்ணுக்குக்காட்டுங்கதிரெனப்
பண்டுமின்றுமென்பானின்றுணர்த்திடு
மண்டனேயுனக்கோர்பதினாயிரந்
தெண்டனென்பொய்ம்மைதீர்த்திடல்வேண்டுமே. ()

58. வேண்டும்யாவுமிறந்துவெளியிடைத்
தூண்டுவாரற்றசோதிப்பிரானின்பாற்
பூண்டவன்பர்தம்பொற்பணிவாய்க்குமே
லீண்டுசன்மமெடுப்பனனந்தமே. (65)

59. எடுத்ததேகமிறக்குமுனையெனைக்
கொடுத்துநின்னையுங்கூடவுங்காண்பனோ
வடுத்தபொறிவாயறியாமையைக்
கெடுத்தவின்பக்கிளர்மணிக்குன்றமே. (66)

60. குன்றிடாதகொழுஞ்சுடரேமணி
மன்றுளாடியமாணிக்கமேயுனை
யன்றியார்துணையாருறவார்கதி
யென்றுநீயெனக்கின்னருள்செய்வதே. (67)

61. அருளெலாந்திரண்டோர்வடிவாகிய
பொருளெலாம்வல்லபொற்பொதுநாதவென்

மருளெலாங்கெடுத்தே யுளமன்னலா
விருளெலாமிரிந்தெங்கொளித்திட்டதே. (68)

262. எங்குமென்னையிக லுறவாட்டியே
பங்கஞ்செய்தபழவினைபற்றற்று
லங்கணுவுன்னடியிணையன்றியே
தங்கவேறிடமுண்டோசகத்திலே. (69)

263. உண்டவர்க்கன்றியுட்பசியோயுமோ
கண்டவர்க்கன்றிக்காதலடங்குமோ
தொண்டருக்கெளியானென்றுதோன்றுவான்
வண்டமிழ்க்கிசைவாகமதிக்கவே. (70)

264. மதியுங்கங்கையுங்கொன்றையுமத்தமும்
பொதியுஞ்சென்னிப்புனிதநின்பொன்னடிக்
கதியைவிட்டிந்தக்காமத்திலாழ்ந்தவென்
விதியையெண்ணிவிழிதுயிலாதன்றே. (71)

265. அன்றெனச்சொலவாமெனவற்புத
நன்றெனச்சொலநண்ணியநன்மையை
பொன்றெனச்சொனவொண்பொருளையொளி
யின்றெனக்கருள்வாயிருளேகவே. (72)

266. இருவரேபுகழ்ந்தேத்தற்கினியரா
மொருவரேதுணையென்றுணராய்நெஞ்சே
வருவரேகொடுங்காலர்கள்வந்தெதிர்
பொருவரேயவர்க்கென்கொல்புகல்வதே. (73)

267. புகழுங்கல்வியும்போதமும்பொய்யிலா
வகமும்வாய்மையுமன்புமளித்தவே
சுகவிலாசத்துணைப்பொருடோற்றமாங்
ககனமேனியைக்கண்டனகண்களே. (74)

268. கண்ணுணின்றவொளியைக்கருத்தினை
விண்ணுணின்றுவிளங்கியமெய்யினை
யெண்ணியெண்ணியிரவும்பகலுமே
நண்ணுநின்றவர்நான்றொழுந்தெய்வமே. (75)

269. தெய்வம்வேறுளதென்பவர்சிந்தனை
நைவரென்பதுநற்பாதற்பர
சைவசிற்சிவனேயுனைச்சார்ந்தவ
ருய்வரென்பதும்யானுணர்ந்தேனுற்றே. (76)

270. உற்றவேளைக்குறுதுணையாயிந்தச்
சுற்றமோநமைக்காக்குஞ்சொலாய்நெஞ்சே
கற்றைவார்சடைக்கண்ணுதல்பாதமே
பற்றதாயிற்பரசுகம்பற்றுமே. (77)

271. பற்றலாப்பொருளேபரம்பற்றினா
லுற்றமாதவர்க்குண்மையைநல்குமே
மற்றும்வேறுளமார்க்கமெலாமெடுத்
தெற்றுவாய்மனமேகதியெய்தவே. (78)

ஆரணம்.

எழுசீர்விருத்தம்.

272. ஆரணமார்க்கத்தாகமவாசி
யற்புதமாய்நடந்தருளுங்
காரணமுணர்த்துங்கையுநின்மெய்யுங்
கண்கண்மூன்றுடையவெண்கண்ணே
பூரணவறிவிற்கண்டிலமதனாற்
போற்றியிப்புந்தியோடிருந்து
தாரணியுள்ளமட்டுமேவணங்கத்
தமியனேன்வேண்டிடத்தகுமே. (1)

273. இடமொருமடவாளுலகனைத்தீந்திட்
டெவ்வுலகத்தையுமீன்றுந்
தடமுறுமகிலமடங்குநாளம்மை
தன்னையுமொழித்துவிண்ணெனவே
படருருசோதிக்கருணைபங்கடலே
பாயிருட்படுகரிற்கிடக்கக்
கடனதோநினைப்புமறப்பெனுந்திரையைக்
கவர்ந்தெனைவளர்பதுன் கடனே. (2)

274. வளம்பெறுஞானவாரிவாய்மடுத்து
மண்ணையும்விண்ணையுந்தெரியா
தளம்பெறுந்துரும்பொத்தாவியோடாக்கை
யானந்தமாகவேயலந்தேன்
களம்பெறுவஞ்சநெஞ்சினர்காணக்
காட்சியேசாட்சியேயறிஞ
ருளம்பெறுந்துணையேபொதுவினினடிக்கு
முண்மையேயுள்ளவாறிதுவே. (3)

275. உள்ளேமேநீங்காவென்னைவாவாவென்
றுலப்பிலாவானந்தமான
வெள்ளமேபொழியுங்கருணைவான்முகிலே
வெப்பிலாத்தண்ணருள்விளக்கே
கள்ளமேதூக்குந்துவெளிப்பரப்பே
கருவெனக்கிடந்தபாழ்மாயப்
பள்ளமேவீழாதெனைக்கரையேற்றிப்
பாலிப்பதுன்னருட்பரமே. (4)

276. பரம்பரமாகிப்பக்குவம்பழுத்த
பழவடியார்க்கருள்பழுத்துச்
சுரந்தினிதிரங்குந்தானகற்பகமே
சோதியேதொண்டனேனின்னை

யிரந்துநெஞ்சுடைந்துகண்டுயில்பொறும
விருந்ததுமென்கணிலிருட்டைக்
காந்துநின்கண்ணுற்றுயில்பெறல்வேண்டிக்
கருதினேன்கருத்திதுதானே. (5)

277. கருத்தினுட்கருத்தாயிருந்துநீயுணர்த்துங்
காரணங்கண்டுசும்மாதான்
வருத்தமற்றிருந்துசுகம்பெறுவண்ணம்
வருந்தினேன்மதியின்மைதீர்ப்பா
ரொருத்தராருளப்பாடுணர்பவர்யாவ
ருலகவர்பன்னெறியெனக்குப்
பொருத்தமோசொல்லாய்மௌனசற்குருவே
போற்றிநின்பொன்னடிப்போதே. (6)

278. அடியெனுமதுவுமருளெனுமதுவு
மறிந்திடிநிற்குணநிறைவு
முடிபெனுமதுவும்பொருளெனுமதுவு
மொழிந்திடிற்சுகமனமாயைக்
குடிகெடவேண்டிற்பணிபறநிற்றல்
குணமெனப்புன்னகைகாட்டிப்
படிமிசைமௌனியாகிநீயாளப்
பாக்கியமென்செய்தேன்பரனே. (7)

279. என்செயலின்றியாவுநின்செயலென்
றெண்ணுவேனெவ்வொருகாலம்
புன்செயன்மாயைமயக்கினென்செயலாப்
பொருந்துவேனஃதொருகாலம்
பின்செயல்யாதுநினைவின்றிக்கிடப்பேன்
பித்தனேனன்னிலைபெறநின்
றன்செயலாகமுடிந்திடல்வேண்டுஞ்
சச்சிதானந்தசற்குருவே. (8)

280. குருவுருவாகிமௌனியாய்மௌனக்
கொள்கையைபுணர்த்திணையதனுற்
கருவுருவாவதெனக்கிலையிந்தக்
காயமேபொய்யெனக்கண்ட
திருவுருவாளாநுபவநிலையுஞ்
சேருமோவாவலோமெத்த
வருவுருவாகியல்லவாய்ச்சமய
மளவிடாவானந்தவடிவே. (9)

281. வடிவிலாவடிவாய்மனநினைவணுகா
மார்க்கமாய்நீக்கருஞ்சுகமாய்
முடிவிலாவீட்டின்வாழ்க்கைவேண்டினர்க்குன்
மோனமல்லால்வழியுண்டோ
படியிருளகலச்சின்மயம்பூத்த
பசுங்கொம்பையடக்கியோர்கல்லா
லடியிலையிருந்தவானந்தவரசே
யன்பரைப்பருகுமாரமுதே. (10)

சொல்லற்கரிய.

அறுசீர் விருத்தம்.

282. சொல்லற்கரியபரம்பொருளே
சுகவாரிதியேசுடர்க்கொழுந்தே
வெல்லற்கரியமயலிலெனை
விட்டெங்கொளித்தாயாகெட்டேன்
கல்விற்பசியநாருரித்துக்
கடுகிற்பெரிய கடலடைக்கு
மல்லிற்கரியவந்தகனர்க்
காளாக்கினையோவறிவேனே. (1)

283. அறிவிற்கறிவுதாரகமென்
றறிந்தேயறிவோடறியாமை
நெறியிற்புகுதாதோர்படித்தாய்
நின்றநிலையுந்தெரியாது
குறியற்றகண்டாதீதமயக்
கோதிலமுதேயெனைக்குறுகிப்
பிறிவற்றிருக்கவேண்டாவோ
பேயேற்கினிநீபேசாயே. (2)

284. பேசாவனுபூதியையடியேன்
பெற்றுப்பிழைக்கப்பேரருளாற்
றேசோமயந்தந்தினியொருகாற்
சித்தத்திருளுந்தீர்ப்பாயோ
பாசாடவியைக்கடந்தவன்பர்
பற்றுமகண்டப்பரப்பான
வீசாபொதுவினடமாடு
மிறைவாகுறையாவின்னமுதே. (3)

285. இன்பக்கடலிற்புகுந்திடுவா
னிரவும்பகலுந்தோற்றும
லன்பிற்கரைந்துகரைந்துருகி
யண்ணாவரசேயெனக்கூவிப்
பின்புற்றழுஞ்சேயெனவிழிநீர்
பெருக்கிப்பெருக்கிப்பித்தாகித்
துன்பக்கடல்விட்டகல்வேனோ
சொரூபானந்தச்சுடர்க்கொழுந்தே. (4

286. கொழுந்துதிகழ்வெண்பிறைச்சடிலக்
கோவேமன்றிற்கூத்தாடற்
கெழுந்தசுடரேயிமையவரை
யென்றுப்கண்ணுக்கினியானே

தொழுந்தெய்வமுநீகுருவுநீ
துணைநீதந்தைதாயுநீ
யழுந்தும்பவநீநன்மையுநீ
யாவியாக்கைநீதானே. (5)

287. தானேயகண்டாகாரமயந்
தன்னிலெழுந்துபொதுநடஞ்செய்
வானேமாயப்பிறப்பறுப்பான்
வந்துன்னடிக்கேகரங்கூப்பித்
தேனேயென்னைப்பருகவல்ல
தெள்ளாரமுதேசிவலோகக்
கோனேயெனுஞ்சொன்னினதுசெவி
கொள்ளாதென்னோகூறாயே. (6)

288. கூறுநின்றவிடர்க்கவலைக்
குடும்பக்கூத்துட்டுளைந்துதடு
மாறுநின்றபாவியைநீ
வாவென்றழைத்தாலாகாதோ
நீறார்மேனிமுக்கணுடை
நிமலாவடியார்நினைவினிடை
யாறுப்பெருகும்பெருங்கருணை
யரசேயென்னையாள்வானே. (7)

289. வானேமுதலாம்பெரும்பூதம்
வகுத்துப்புரந்துமாற்றவல்ல
கோனேயென்னைப்புரக்குநெறி
குறித்தாயிலையேகொடியேனைத்
தானேபடைத்திங்கென்னபலன்
றன்னைப்படைத்தாயுன்கருத்தை
நானேதென்றிங்கறிவேனே
நம்பினேன்கண்டருள்வாயே. (8)

290. கண்டார்கண்டகாட்சியுநீ
காணார்காணாக்கள்வனுநீ
பண்டாருயிர்நீயாக்கையுநீ
பலவாஞ்சமயப்பகுதியுநீ
யெண்டோண்முக்கட்செம்மேனி
யெந்தாய்நினக்கேயெவ்வாறு
தொண்டாய்ப்பணிவாரவர்பணிநீ
சூட்டிக்கொள்வதெவ்வாறே. (9)

291. சூட்டியெனதென்றிடுஞ்சுமையைச்
சுமக்கிறெனையுஞ்சுமையாளாக்
கூட்டிப்பிடித்துவினைவழியே
கூத்தாட்டினையேநினதருளால்
வீட்டைக்கருதுமப்போது
வெளியாமுலகவியப்பனைத்து
மேட்டுக்கடங்காச்சொப்பனம்போ
லெந்தாயிருந்ததென்சொல்வேன். (10)

வம்பனேன்.

அறுசீர் விருத்தம்.

292. வம்பனேன்கள்ளங்கண்டு
மன்னருள்வெள்ளராய
வும்பர்பாலேவல்செய்யென்
றுணர்த்தினையேகோவானோர்
தம்பிரானேநீசெய்த
தயவுக்குங்கைம்மாறுண்டோ
வெம்பிரானுய்ந்தேனுய்ந்தே
னினியொன்றுங்குறைவிலேனே. (1)

293. குறைவிலாநிறைவாய்ஞானக்
கோதிலானந்தவெள்ளத்
துறையிலேபடிந்துமூழ்கித்
துளைந்துநான்றேன்றுவாறுள்
ளுறையிலேயுணர்த்திமோன
வொண்சுடர்வைவாடந்த
விறைவனையுனைப்பிரிந்திங்
கிருக்கிலேனிருக்கிலேனே. (2)

294. இருநிலமாதிநாத
மீறதாமிவைகடந்த
பெருநிலமாயதூய
பேரொளிப்பிழம்பாய்நின்றுங்
கருதருமகண்டானந்தக்
கடவுணின்காட்சிகாண
வருகவென்றழைத்தாலன்றி
வாழ்வுண்டோவஞ்சனேற்கே. (3)

295. வஞ்சனையழுக்காறுதி
வைத்திடும்பாண்டமான
நெஞ்சனைவலிதின்மென்மே
னெக்குநெக்குருகப்பண்ணி
யஞ்சலிசெய்யுங்கையு
மருவிநீர்விழியுமாகத்
தஞ்சமன்றிரங்கிக்காக்கத்
தற்பராபரமுனக்கே. (4)

296. உனக்குநானடித்தொண்டாகி
யுன்னடிக்கன்புசெய்ய
வெனக்குநீதோற்றியஞ்சே
லென்னுநாளெந்தநாளோ

மனக்கிலேசங்கடீர்ந்த
மாதவர்க்கிரண்டற்றேங்குந்
தனக்குநேரில்லாவொன்றே
சச்சிதானந்தவாழ்வே. (5)

297. வாழ்வெனவயங்கியென்னை
வசஞ்செய்துமருட்டும்பாழ்த்த
வூவ்வினைப்பகுதிகெட்டிங்
குன்னையுங்கிட்டுவேனோ
தாழ்வெனுஞ்சமயநீங்கித்
தமையுணர்ந்தோர்கட்கெல்லாஞ்
சூழ்வெளிப்பொருளேமுக்கட்
சோதியேபமரனேறே. (6)

298. எறுவாம்பரியாவாடை
யிருங்கலையுரியாவென்று
நாறுநற்சாந்தநீரா
நஞ்சமேயமுதாக்கொண்ட
கூறருங்குணத்தோயுன்றன்
குரைகழல்தருகினல்லா
லாறுமோதாபமோப
மகலுமோவல்லருனே. (7)

299. தானமுந்தவமும்யோகத்
தன்மையுமுணராவென்பான்
ஞானமுந்தெவிட்டாவின்ப
நன்மையுநல்குவாயோ
பானலங்கவர்ந்தீஞ்சொற்
பச்சிளங்கிள்ளைகாண
வானவரிறைஞ்சமன்றுள்
வயங்கியநடத்தினனே. (8)

300. நடத்தியிவ்வுலகையெல்லா
நாதநீநிறைந்ததன்மை
திடத்துடனறிந்தானந்தத்
தெள்ளமுதருந்திடாதே
விடத்திரளனையகாம
வேட்கையிலழுந்திமாயைச்
சடத்தினைமெய்யென்றெண்ணித்
தளரவோதனியனேனே. (9)

301. தனிவளர்பொருளேமாறுத்
தண்ணருங்கருணைபூத்த
வினியகற்பகமேமுக்க
ணெந்தையேநினக்கன்பின்றி
நனிபெருங்குடிலங்காட்டு
நயனவேற்கரியகூந்தல்
வனிதையர்மயக்கிலாழ்ந்து
வருந்தவோவம்பனேனே. (10)

சிவன்செயல்.

அறுசீர் விருத்தம்.

302. சிவன்செயலாலேயாதும்
வருமெனத்தேறேனாகு
மவந்தருநினைவையெல்லா
மகற்றிலேனுசைவெள்ளங்
கவர்ந்துகொண்டிழுப்பவந்தக்
கட்டிலேயகப்பட்டையோ
பவந்தனையீட்டியீட்டிப்
பதைக்கின்றேன் பாவியேனே. (1)

303. பாவியேனினியென்செய்கேன்
பரமனேபணிந்துன்பாதஞ்
சேவியேன்விழிநீர்மல்கச்
சிவசிவவென்றுநேதம்பி
யாவியேநிறையவந்த
வமுதமேயென்னேனனந்தோ
சாவிபோஞ்சமயத்தாழ்ந்து
சகத்திடைதவிக்கின்றேனே. (2)

எழுசீர்விருத்தம்.

304. இடைந்திடைந்தேங்கிமெய்புளகிப்ப
வெழுந்தெழுந்தையநின்சரண
மடைந்தனனினிநீகைவிடேலுனக்கே
யபயமென்றஞ்சலிசெய்துள்
ளுடைந்துடைந்தெழுதுசித்திரப்பாவை
யொத்துநானசைவறநிற்பத்
தொடர்ந்துநீயெனையாட்கொள்ளுநாளென்றோ
சோதியேயாதிநாயகனே. (3)

305. ஆதியாய்நடுவாயந்தமாய்ப்பந்தம்
யாவுமற்றகம்புறநிறைந்த
சோதியாய்ச்சுகமாயிருந்தவெம்பெருமான்
றொண்டனேன்சுகத்திலேயிருக்கப்
போதியாவண்ணங்கைவிடன்முறையோ
புன்மைபேனென்செய்சேன்மனமோ
வாதியாநின்றதன்றியும்புலன்சேர்
வாயிலோதீயினுங்கொடிதே. (4)

306. வாயிலோரைந்திற்புலனெனும்வேடர்
வந்தெனையீர்த்துவெங்காமத்

தீயிலேலவெதுப்பியுயிரொடுந்தின்னச்
சிந்தைநைந்துருகிமெய்ம்மறந்து
தாயிலாச்சேய்போலலேந்தலேப்பட்டேன்
றாயினுங்கருணையாமன்று
ஞாயகமாகியொளிவிடுமணியே
நாதனே ஞானவாரிதியே. (5)

307. ஞானமேவடிவாய்த்தேடுவார்தேடு
நாட்டமேநாட்டத்துணிறைந்த
வானமேயெனக்குவந்துவந்தோங்கு
மார்க்கமேமருளர்தாமறியா
மோனமேமுதலேமுத்திநல்வித்தே
முடிவிலாவின்பமேசெய்யுந்
தானமேதவமேநின்னைநானினைந்தேன்
றமியனேன்றனேமறப்பதற்கே. (6)

308. மறமலியுலகவாழ்க்கையேவேண்டும்
வந்துநின்னன்பர்தம்பணியா
மறமதுகிடைக்கினன்றியானந்த
வற்புதநிட்டையினிமித்தந்
துறவதுவேண்டுமௌனியாயெனக்குத்
தூயநல்லருட்ரினின்னம்
பிறவியும்வேண்டும்யானெனதிறக்கப்
பெற்றவர்பெற்றிடும்பேறே. (7)

309. பெற்றவர்பெற்றபெருந்தவக்குன்றே
பெருகியகருணைவாரிதியே
நற்றவத்துணையேயானந்தக்கடலே
ஞாதுருஞானஞேயங்க
ளற்றவர்க்கறுதநட்புடைக்கலப்பே
யனேகமாய்நின்னடிக்கன்பு

கற்றதுங்கேள்விகேட்ட துநின்னைக்
கண்டிடும்பொருட்டன்றோகாணே. (8)

310. அன்றுநால்வருக்குமொளிநெறிகாட்டு
மன்புடைச்சோதியேசெம்பொன்
மன்றுண்முக்கண்ணுங்காளகண்டமுமாய்
வயங்கியவானமேயென்னுட்
டுன்றுகூரிருளைத்துரந்திடுமதியே
துன்பமுமின்பமுமாகி
நின்றவாதனைக்கடந்தவர்நினைவே
நேசமேநின்பரம்யானே. (9)

311. யானெனல்காணேன்பூரணநிறைவில்
யாதினுமிருந்தபேரொளிநீ
தானெனநிற்குஞ்சமத்துறவென்னைத்
தன்னவனுக்கவுந்தகுங்காண்
வானெனவயங்கியொன்றிரண்டென்னு
மார்க்கமாநெறிதந்துமாறுத்
தேனெனருசித்துளன்பரைக்கலந்த
செல்வமேசிற்பரசிவமே. (10)

தன்னையொருவர்.

அறுசீர்விருத்தம்.

312. தன்னையொருவர்க்கறிவரிதாய்த்
தானேதானாயெங்குநிறைந்
துன்னர்க்கரியபரவெளியா
யுலவாவமுதாயொளிவிளக்கா
யென்னுட்கலந்தாயானறியா
திருந்தாயிறைவாவினியேனு

நின்னைப்பெறுமாறெனக்கருளா
னிலையைக்கொடுக்கநினையாயோ. (1)

313. நினையுநினைவுக்கெட்டாத
நெறிபெற்றுணர்ந்தநெறியாளர்
வினையைக்களைக்கும்பரமவின்ப
வெள்ளப்பெருக்கேநினதருளால்
மனைவிபுதல்வரன்னைபிதா
மாடுவீடென்றிடுமயக்கந்
தனையுமறந்திங்குனைமறவாத்
தன்மைவருமோதமியேற்கே. (2)

314. வரும்போமென்னுமிருநிலைமை
மன்னுமொருதன்மைத்தாகிக்
கரும்போதேனோமுக்கனியோ
வென்னவென்னுட்கலந்துநலந்
தரும்பேரின்பப்பொருளேநின்
றன்னைநினைந்துநெக்குருகே
னிரும்போகல்லோமரமோவென்
னிதயமியாதென்றறியேனே. (3)

315. அறியுந்தரமோநானுன்னை
யறிவுக்கறிவாய்நிற்கையினாற்
பிரியுந்தரமோநீயென்னைப்
பெம்மானேபேரின்பமதாய்ச்
செறியுப்பொருணீநின்னையன்றிச்
செறியாப்பொருணன்பெறும்பேற்றை
நெறிநின்றொழுகவிசாரித்தா
னினக்கோவில்லையெனக்காமே. (4)

316. எனதென்பதும்பொய்யானெனல்பொய்
யெல்லாமிறந்தவிடங்காட்டு

நினதென்பதும்பொய்நீயெனல்பொய்
நிற்குநிலைக்கேநேசித்தேன்
மனதென்பதுமோவென்வசமாய்
வாராதையநின்னருளோ
தனதென்பதுக்குமிடங்காணேன்
றமியேனெவ்வாறுய்வேனே. (5)

317. உய்யும்படிக்குன்றிருக்கருணை
யொன்றைக்கொடுத்தாலுடையாய்பாழ்ம்
பொய்யுமவாவுமழுக்காறும்
புடைபட்டோடுநன்னெறியா
மெய்யுமறிவும்பெறும்பேறும்
விளங்குமெனக்குன்னடியார்பாற்
செய்யும்பணியுங்கைகூடுஞ்
சிந்தைத்துயருந்தீர்ந்திடுமே. (6)

318. சிந்தைத்துயரென்றொருபாவி
சினந்துசினந்துபோர்முயங்க
நிந்தைக்கிடமாய்ச்சகவாழ்வை
நிலையென்றுணர்ந்தேநிற்கின்றே
னெந்தப்படியுன்னருள்வாய்க்கு
மெனக்கெப்படிநீயருள்செய்வாய்
பந்தத்துயரற்றவர்க்கெளிய
பரமானந்தப்பழம்பொருளே. (7)

319. பொருளைப்பூவைப்பூவையரைப்
பொருளென்றெண்ணுமொருபாவி
யிருளைத்துரந்திட்டொளிநெறியை
யென்னுட்பதிப்பதென்றுகொலோ
தெருளத்தெருளவன்பர்நெஞ்சந்
தித்தித்துருகத்தெவிட்டாத

வருளைப்பொழியுங் குணமுகிலே
யறிவானந்தத் தாரமுதே. (8)

320. ஆராவமிர்தம்விரும்பினர்க
ளறியவிடத்தையமிர்தாக்கும்
பேரானந்தசித்தனெனும்
பெரியோயாவிக்குரியோய்கேள்
காரார்கிரகவலையினிடைக்
கட்டுண்டிருந்தகளைகளெல்லா
மோராலொருநாட்கையுணவேற்
றுண்டாலெனக்கிங்கொழிந்திடுமே. (9)

321. எனக்கென்றிருந்தவுடல்பொருளும்
யானுநினவென்றீந்தவண்ண
மனைத்துமிருந்துமிலதாக
வருளாய்நில்லாதழிவழக்காய்
மனத்துட்புகுந்துமயங்கவுமென்
மதிக்குட்களங்கம்வந்ததென்னே
தனக்கொன்றுவமையறநிறைந்த
தனியேதன்னந்தனிமுதலே. (10)

ஆசையெனும்.

அறுசீர்விருத்தம்.

322. ஆசையெனும்பெருங்காற்றூடிலவம்பஞ்
செனவுமனதலையுங்கால
மோசம்வருமிதனாலேகற்றதுங்கேட்ட
துந்தூர்ந்துமுத்திக்கான
நேசமுநல்வாசமும்போய்ப்புலனாயிற்
கொடுமைபற்றிநிற்பாந்தோ

தேசபழுத்தருள்பழுத்தபராபரமே
நிராசையின்றேற்றெய்வமுண்டோ. (1)

323. இப்பாரங்கொருவனவன்வேண்டுவகேட்
டருள்செயெனவேசற்றேதான்
புரப்பான்றனையுறுதுயிருப்பதுபோ
லெங்குநிறைபொருளேகேளாய்
மரப்பான்மைபெறநெஞ்சினன்யான்
வேண்டுவகேட்டிரங்கெனவேமௌனத்தோடந்
தரப்பான்மையருணிறைவிலிருப்பதுவோ
பராபரமேசகசநிட்டை. (2)

கலிவிருத்தம்.

321. சாட்டையிற்பம்பரசாலம்போலெலா
மாட்டுவானிறையெனவறிந்துநெஞ்சமே
கேட்டபொன்றனவருட்செயலின்றியேல்
வீட்டறந்துறவறமிரண்டுமேன்மையே. (3)

அறுசீர்விருத்தம்.

325. தன்னெஞ்சகிலைப்பொழியாதறிவிலிநான்
ஞானமெனுந்தன்மைபேச
வன்னெஞ்சமகிழ்ந்தொருசொல்லுமாந்தனையே
யதனையுன்னியுருகேனையா
வன்னெஞ்சோவிரங்காதமனெஞ்சோ
விருப்புநெஞ்சோவைரமான
கன்னெஞ்சோவலதுமண்ணைக்கட்டுநெஞ்சோ
வெனதுநெஞ்சங்கருதிற்றேனே. (4)

கலிவிருத்தம்.

326. வாழிசோபானம்வாழிநல்லன்பர்கள்
சூழவந்தநடோற்றமுஞ்சோபனம்

மாழிபோலருளையன்மௌனத்தா
லேழையேன்பெற்றவின்பமுஞ்சோபனம். (5)

கலிநிலைத்துறை.

327. கொடுக்கின்றோர்கள்பாற்குறைவையாதியானெனுங்குதர்க்கம்
விடுக்கின்றோர்கள்பாற்பிரிகிலாதுள்ளன்புவிடாதே
படுக்கின்றோர்களுக்கிரங்கிடுந்தண்டமிழலங்க
றொடுக்கின்றோர்களைச்சோதியாததுபராஞ்சோதி. (6)

எண்சீர்விருத்தம்.

328. உலகமாயையிலேயெளியேன்றனை
யுழலவிட்டனையேயுடையாயரு
ளிலகுபேரின்பவீட்டினிலென்னையு
மிருத்திவைப்பதெக்காலஞ்சொலாயெழிற்
றிலகவாணுதற்பைந்தொடிகண்ணிணை
தேக்கநாடகஞ்செய்குடியார்க்கெலா
மலகிலாவினைதீர்க்கத்துசங்கட்டு
மப்பனேயருளானந்தசோதியே. (7)

அறுசீர்விருத்தம்.

329. முன்னிலைச்சுட்டொழிதியெனப்பலகாலு
நெஞ்சேநான்மொழிந்தேனேநின்
றன்னிலைக்காட்டாதேயென்னையொன்றாய்ச்
சூட்டாதேசானுன்போந்த
வந்நிலையேநிலையந்தநிலையிலே
சித்திமுத்தியனைத்துந்தோன்று
நன்னிலையீதன்றிநிலைசுகமென்றே
சுகர்முதலோர்நாடினாரே. (8)

330. அத்துவிதம்பெறும்பேறென்றறியாமலி
யானெனும்பேயகந்தையோடு

மத்தமதியினர்போலமனங்கிடப்ப
வின்னமின்னம்வருந்துவேனோ
சுத்தபரிபூரணமாய்நின்மலமா
யகண்டிதமாய்ச்சொரூபானந்தச்
சத்திகணீங்காதவணந்தன்மயமா
யருள்பழுத்துத்தழைத்தவொன்றே. (9)

331. தந்தைதாயுநீயென்னுயிர்த்துணையுநீசஞ்சலமதுதீர்க்க
வந்ததேசிகவடிவுநீயுனையலான்மற்றொருதுணைகாணே
னந்தமாதியுமளப்பருஞ்சோதியேயாதியேயடியார்தஞ்
சிந்தைமேவியதாயுமானவனெனுஞ்சிரகிரிப்பெருமானே. ()

322. காதிலோலையைவரைந்துமேற்குமிழையுங்
கறுவிவேல்கருநீலப்
போதுபோன்றிடுக்கண்ணியர்மயக்கிலைப்
போதுமேதளராமன்
மாதுகாதலிபங்கனையபங்கனை
மாடமாளிகைசூழுஞ்
சேதுமேவியராமநாயகன்றனைச்
சிந்தைசெய்மடநெஞ்சே. (11)

எண்சீர்விருத்தம்.

333. அண்டமுமாய்ப்பிண்டமுமாயளவிலாத
வாருயிருக்கோருயிராயமர்ந்தாயாறற்
கண்டவரார்கேட்டவராருன்னை
காண்பதல்லாலென்னறிவாற்காணப்போமோ
வண்டுளபமணிமார்பன்புகல்வமனோடு
மனைவியொடுங்குடியிருந்துவணங்கிப்போற்றும்
புண்டரிகபுரத்தினிலேகாந்தமௌன
போதாந்தநடம்புரியும்புனிதவாழ்வே (12)

அறுசீர்விருத்தம்.

334. பொறியிற்செறியைம்புலக்கனியைப்
புந்திக்கவராற்புகுந்திழுத்து
மறுகிச்சுழலுமனக்குரங்கு
மாளவாளாவிருப்பேனோ
வறிவுக்கறிவாய்ப்பூரணமா
யகண்டானந்தமயமாகிப்
பிறிவற்றிருக்கும்பெருங்கருணைப்
பெம்மானையெம்பெருமானை. (13)

335. உரையுணர்விறந்துதம்மையுணர்பவருணர்வினூடே
கரையிலாவின்பவெள்ளங்காட்டிடுமுகிலைமாறாப்
பரையெனுங்கிரணஞ்சூழ்ந்தபானுவைநின்னைப்பற்றித்
திரையிலாநீர்போற்சித்தந்தெளிவனோசிறியனேனே. ()

336. கேவலசகலமின்றிக்கீழொடுமேலாயெங்கு
மேவியவருளின்கண்ணாய்மேவிடமேலாயின்பந்
தாவிடவின்பாதீதத்தனியிடையிருத்திவைத்த
தேவெனுமௌனிசெம்பொற்சேவடிசிந்தைசெய்வாம்.

337. நேற்றுளாரின்றுமாளாநின்றனரதனைக்கண்டும்
போற்றிலேனின்னையந்தோபோக்கினேன்வீணேகால
மாற்றிலேன்கண்டானந்தவண்ணலேயளவின்மாயைச்
சேற்றிலேயின்னம்வீழ்ந்துதிளைக்கவோசிறியனேனே.

கலிநிலைத்துறை.

338. போதமென்பதேவிளக்கொவ்வுமவித்தைபொய்யிருளா
தீதிலாவிளக்கெடுத்திருட்டேடவுஞ்சிக்கா [ங்
தாதலாலறிவாய்நின்றவிடத்தறியாமை
யேதுமில்லையென்றெம்பிரான்சுருதியேயியம்பும். (17)

339. சுருதிபேசிவாகமங்களையுங்களாற்சொல்லு
மொருதனிப்பொருளளவையிதென்னவாயுண்டோ
பொருதிரைக்கடனுண்மணலெண்ணினும்புகலக்
கருதவெட்டிடாநிறைபொருளளவையார்காண்பார். ()

340. மின்னைப்போன்றனவகிலமென்றறிந்துமெய்ப்பொருளா
முன்னைப்போன்றநற்பரம்பொருளில்லையென்றோர்ந்து
பொன்னைப்போன்றநின்போதங்கொண்டுன்பணிபொருந்தா
வென்னைப்போன்றுளவேழையரையவிங்கெவரே. (19)

341. தாயுந்தந்தையுமெனக்குறவாவதுஞ்சாற்றி
னாயுநீயுநின்னருளுநின்னடியருமன்றே
பேயனேன்றிருவடியிணைத்தாமரைபிடித்தே
னாயனையெனையாளுடைமுக்கணாயகனே. (20)

அறுசீர்விருத்தம்.

342. காந்தமதையெதிற்காணிற்கருந்தாது
செல்லுமந்தக்காந்தத்தொன்று
தேய்ந்தவிடமெங்கேதானங்கேதான்
சலிப்பறவுமிருக்குமாபோற்
சாந்தபதப்பரம்பொருளைபற்றுபொரு
ளிருக்குமத்தாற்சலிக்குஞ்சித்தம்
வாய்ந்தபொருளில்லையெனிற்பேசாமை
நின்றநிலைவாய்க்குமன்றே. (21)

கலிநிலைத்துறை.

343. பொற்புறுங்கருத்தேயகமாபதிற்பொருந்தக்
கற்பின்மங்கையரெகுவிழிகதவுபோற்கவினச்
சொற்பனத்தினுஞ்சோர்வின்றியிருந்தநான்சோர்ந்து
நிற்பதற்கிந்தவினைவந்தவாறென்கொனிமலா. (22)

344. வந்தவாறிந்தவினைவழியிதுவெனமதிக்கத்
தந்தவாறுண்டோவுள்ளுணர்விலையன்றித்தமியே
னொந்தவாறுகண்டிரங்கவுமிலைகற்றநூலா
லெந்தவாறினித்தற்பராவுய்குவேனேழை. (23)

எண்சீர்விருத்தம்.

345. சொல்லாலும்பொருளாலுமளவையாலுந்
தொடரவொண்ணாவருணெறியைத்தொடர்ந்துநாடி
நல்லார்களவையகத்தேயிருக்கவைத்தாய்
நன்னர்நெஞ்சந்தன்னலமுநணுகுவேனோ
வில்லாளியாயுலகோடுபிரையின்றிட்
டெண்ணரியயோகினுக்குமிவனேயென்னக்
கல்லாலின்கீழிருந்தசெக்கர்மேனிக்
கற்பகமேபராபரமேகைலைவாழ்வே. (24)

346. சாக்கிரமாநுதலினிலிந்திரியப்பத்துஞ்
சத்தாதிவசனாதிவாயுபத்து
நீக்கமிலந்தக்கரணம்புருடனோடு
நின்றதுமுப்பானைந்துநிலவுங்கண்டத்
தாக்கியசொற்பனமதனில்வாயுபத்து
மடுத்தனசத்தாதிவசனாதியாக
நோக்குகரணம்புருடனுடனேகூட
நுவல்வரிருபத்தைந்தாநுண்ணியோரே. (25)

347. சுழுத்தியிதயந்தனிற்பிராணஞ்சித்தஞ்
சொல்லரியபுருடனுடன்மூன்றதாகு
வழுத்தியநாபியிற்றுரியம்பிராணனோடு
மன்னுபுருடனுங்கூடவயங்காநிற்கு
மழுத்திடுமூலந்தன்னிற்றுரியாதீத
மதனிடையேபுருடனென்றியமருஞானம்

பழுத்திடும்பக்குவமறிவாவத்தையைந்திற்
பாங்குபெறக்கருவிநிற்கும்பரிசுதானே. (26)

கலிநிலைத்துறை.

8. இடத்தைக்காத்திட்டசுவானம்போற்புன்புலாலிறைச்சிச்
சடத்தைக்காத்திட்டநாயினேனுன்னன்பர்தயங்கு
மடத்தைக்காத்திட்டசேடத்தால்வினைசடமாய்வாழ
விடத்தைக்காத்திட்டகண்டத்தோய்நின்னருள்வேண்டும். (27)

9. வாதனைப்பழக்கத்தினுன்மனமந்தமனத்தா
லோதவந்திடுமுரையுரைப்படிதொழிலுளவா
மேதமம்மனமாயையென்றிடிற்கண்டவெல்லா
மாதரஞ்செயாப்பொய்யதற்கையமுண்டாமோ. (28)

0. ஐயவாதனைப்பழக்கமேமனநினைவதுதான்
வையமீதினிற்பரம்பரையாதினுமருவு
மெய்யினின்றொளிர்பெரியவர்சார்வுற்றுவிளங்கிப்
பொய்யதென்பதையொருவிமெய்யுணருதல்போதம். ()

51. குலமிலான்குணங்குறியிலான்குறைவிலான்கொடிதாம்
புலமிலான்றனக்கென்னவோர்பற்றிலான்பொருந்து
மிலமிலான்மைந்தர்மனைவியில்லானெவனவன்சஞ்
சலமிலான்முத்திதரும்பரமசிவனெனத்தகுமே. (30)

52. கடத்தைமண்ணெனவுடைந்தபோசோவிந்தக்கருமச்
சடத்தைப்பொய்யெனவிறந்தபோகோசொலத்தருமம்
விடத்தைநல்லமிர்தாவுண்டுபொற்பொதுவெளிக்கே
நடத்தைக்காட்டியெவ்வுயிரையுநடப்பிக்குநலைத்தாய்.

அறுசீர் விருத்தம்.

353. நானெனவுநீயெனவுமிருதன்மை
நாடாமனடுவேசும்மா

சானமருநிலையிதுவேசத்தியஞ்சத்
தியமெனநீதமியனேற்கு
மோனகுருவாகியுங்கைகாட்டினையே
திரும்பவுநான்முளைத்துத்தோன்றி
மானதமார்க்கம்புரிந்திங்கலைந்தேனே
பாந்தேனேவஞ்சனேனே. (32)

354. தன்மயஞ்சுபாவஞ்சுத்தந்தண்ணருள்வடிவஞ்சாந்த
மின்மயமானவண்டவெளியுருவானபூர்த்தி
யென்மயமெனக்குக்காட்டாதெனைபபகரிக்கவந்த
சின்மயமகண்டாகாரந்தக்ஷிணாதிக்கமூர்த்தம். (33)

கலிநிலைத்துறை.

355. சிற்றருர்பனசிற்றறிவாளனேதெளிந்தான்
மற்றரும்பெனமலமெனப்போறிவாகிக்
கற்றரும்பியகேள்வியான்மதித்திடக்கநிச்சீர்
முற்றரும்பியமௌனியாய்ப்பரத்திடைமுளைப்பான். ()

356. மயக்குகுந்தனைதெளிவெனவிருநெறிவருப்பா
னயக்கநமொன்றன்பாலொன்றிலையென்னலவழக்கே
யியக்கமுற்றிடுமயக்கத்திற்றெளிவுறலினிதாம்
பயக்கவல்லதோர்தெளிவுடையவர்க்கெய்தல்பண்போ.

அறுசீர்விருத்தம்.

357. அருள்வடிவேமுழுமூர்த்த
மவைகள்சோபானமென்றே
சுருதிசொல்லியவாற்றாலே
தொழுந்தெய்வமெல்லாமொன்றே
மருளெனக்கில்லைமுன்பின்
வருநெறிக்கிவ்வழக்குத்

தெருளின்முன்னிலைபாமுன்னைச்
சேர்ந்தியான்றெளிகின்றேனே. 36

358. எத்தனைபிறப்போவெத்தனையிறப்போ
வெளியனேற்கிதுவரையமைத்த
தத்தனையெல்லாமறிந்தநீயறிவை
யறிவிலியறிகிலேனந்தோ
சித்தமும்வாக்குந்தேகமுநினவே
சென்மமுமினியெனுலாற்று
வைத்திடிங்கென்னைநின்னடிக்குடியா
மறைமுடியிருந்தவான்பொருளே. 37

எழுசீர்விருத்தம்.

359. வான்பொருளாகியெங்குநீயிருப்ப
வந்தெனைக்கொடுத்துநீயாகா
தேன்பொருள்போலக்கிடக்கின்றேன்முன்னை
யிருவினைவாதனையன்றோ
தீன்பொருளானவமிர்தமேநின்னைச்
சிந்தையிற்பாவனைசெய்யு
நான்பொருளானேனல்லநல்லாசே
நானிறந்திருப்பதுநாட்டம். 38

360. காட்டமுன்றுடையசெந்நிறமணியே
நடுவுறுநாயகவிளக்கே
கோட்டமில்குணத்தோர்க்கெளியநிர்க்குணமே
கோதிலாவமிர்தமேநின்னை
வாட்டமினெஞ்சங்கின்னமாச்சேர்த்து
வாய்மடுத்தருந்தினனுங்கே
பாட்டளிநறவமுண்டயர்ந்ததுபோற்
பற்றபர்ந்திருப்பதெந்நாளோ. 39

361 என்னுடையுயிரேயென்னுளந்தறிவே
யென்னுடையன்பெனுநெறியாய்
கன்னன்முக்கனிதேன்கண்டமிர்தென்னக்
கலந்தெனைமேவிடக்கருணை
மன்னியவுறவேயுனைநான்பிரியா
வண்ணமென்மனமெனுங்கருவி
தன்னதுவழியற்றென்னுழைக்கிடப்பத்
தண்ணருள்வரமதுவேண்டும். 40

எனக்கெனச்செயல்.

கலிநிலைத்துறை.

362 எனக்கெனச்செயல்வேறிலையாவுமிங்கொருநின்
றனக்கெனத்தகுமுடல்பொருளாவியுந்தந்தேன்
மனத்தகத்துளவழுக்கெலாமாற்றியெம்பிரானீ
நினைத்ததெப்படியப்படியருளுதனீதம். (க)

363 உளவறிந்தெலாநின்செயலாமெனவுணர்ந்தோர்க்
களவிலானந்தபரித்தனையறிவிலாப்புன்மைக்
களவுநாயினேற்கிவ்வணமமைத்தனைகருத்துத்
தளருந்தன்மையிங்காரொடும்புகலுவேனறக்கோய். (2)

364 என்னைத்தானின்னவண்ணமென்றறிகிலாவேழை
தன்னைத்தானறிந்திடவருள்புரிதியேயறக்கோய்
பின்னைத்தானின்னருள்பெற்றமாதவப்பெரியோர்
நின்னைத்தானிகராரெனவாழ்த்துவர்நெறியால். (3)

365 ஏதமின்றித்தன்னடியிணைக்கன்புதானீட்டுங்
காதலன்பர்க்குக்கதிநிலையீதெனக்காட்டும்
போதநித்தியபுண்ணியவெண்ணரும்புவன
நாததற்பரநானெவ்வாறுய்குவேனவிலாய். (4)

366 வேதமெந்தனையந்தனைசிரத்தினும்விளங்கும்
பாதநித்தியபரம்பரநிரந்தரபரம
நாததற்பரசிற்பரவடிவமாய்நடிக்கு
நீதநிர்க்குணநினையன்றியொன்றுநானினையேன். (5)

367 நெறிகடாம்பலபலவுமாயந்தந்தநெறிக்காஞ்
செறியுந்தெய்வமும்பலபலவாகவுஞ்செறிந்தா
லறியுந்தன்மையிங்காருனையறிவினாலறிந்தோர்
பிறியுந்தன்மையில்லாவகைகலக்கின்றபெரியோய். (6)

368 பெரியவண்டங்களெத்தனையமைத்ததிற்பிறங்கு
முரியபல்லுயிரெத்தனையமைத்ததற்குறுதி
வருவதெத்தனையமைந்தனையமைத்தருள்வளர்க்கு
மரியதத்துவவெனக்கிந்தவண்ணமேனமைத்தாய். (7)

369 க்ஷணமதேனுநின்காரணந்தன்னையேகருத்தி
லுணருமாதவர்க்கானந்தமுதவினையொன்றுங்
குணமிலாதபொய்வஞ்சனுக்கெந்தைநிர்க்குணமா
மணமுலாமலர்ப்பதந்தரின்யாருனைமறுப்பார். (8)

370 கன்னன்முக்கனிகண்டுதேன்சருக்கரைகலந்த
தென்னமுத்தியிற்கலந்தவர்க்கின்பமாயிருக்கு
நன்னலத்தநின்னற்பதந்துணையெனநம்பச்
சொன்னவர்க்கெனாலாங்கைம்மாறில்லையென்சொல்வேன்.()

371 தந்தைதாய்தமர்மகவெனுமவையெலாஞ்சகத்திற்
பந்தமாமென்றேயருமறைவாயினாற்பகர்ந்த
வெந்தைநீயெனையின்னமவ்வல்லலிலிருத்திற்
சிந்தைதான்றெளிந்தெவ்வணமுய்வணஞ்செப்பாய். (10)

372 துய்யன்றண்ணருள்வடிவினன்பொறுமையாற்றலங்கு
மெய்யனென்றுனையையனேயடைந்தனன்மெத்த

நொய்யனுண்ணியவறிவிலனொன்றைநூறாக்கும்
பொய்யனென்றெனைப்புறம்விடினென்செய்வேன்புகலாய்.()

373 ஒன்றதாய்ப்பலவாயுயிர்த்திரட்கெலாமுறுதி
யென்றதாயென்றுமுள்ளதாயெவற்றினுமிசைய
நின்றதாய்நிலைநின்றிடுமறிஞவெண்ணெஞ்ச
மன்றதாயின்பவுருக்கொடுநடித்திடின்வாழ்வேன். (12)

374 தனியிருந்தருட்சகசமேபொருந்திடத்தமியேற்
கினியிரங்குதல்கடனிதுசமயமென்னிதயக்
கனிவுமப்படியாயினதாதலாற்கருணைப்
புனிதநீயறியாததொன்றுள்ளதோபுகலாய். (13)

375 திருந்துசீரடித்தாமரைக்கன்புதான்செய்யப்
பொருந்துநாணல்லபுண்ணியஞ்செய்யுநாள்பொருந்தா
திருந்தநாள்வெகுதீவினையிழைத்தநாளென்று
லருந்தவாவினைப்பொருந்துநாளெந்தநாளடிமை, (14)

376 பின்னுமுன்னுமாய்நடுவுமாயாவினும்பெரிய
தென்னுந்தன்மையாயெவ்வுயிர்த்திரளையுமியக்கி
மன்னுந்தண்ணருள்வடிவமேயுனக்கன்புவைத்துந்
துன்னுமின்னலேன்யானெனுமகந்தையேன்சொல்லாய். ()

377 மின்னையன்னபொய்வாழ்க்கையேநிலையெனமெய்யா
முன்னைநான்மறந்தெவ்வணமுய்வணமுரையாய்
முன்னைவல்வினைவேரறமுடித்தென்றுமுடியாத்
தன்னைத்தன்னடியார்க்கருள்புரிந்திடுந்தக்கோய் (16)

378 எம்பராபரவெம்முயிர்த்துணைவவென்றிறைஞ்சு
மும்பரிம்பர்க்குமுளக்கணேநடிக்கின்றாயுன்ற
னம்பொன்மாமலர்ப்பதத்தையேதுணையெனவடிமை
நம்பினேனினிப்புரப்பதெக்காலமோநவிலாய். (17)

379 பாடியாடிநின்றிரங்கிநின்பதமலர்முடிமேற்
சூடிவாழ்ந்தனரமலநின்னடியர்யான்றொழும்ப
னாடியேயிந்தவுலகத்தைமெய்யெனநம்பித்
தேடினேன்வெறுந்தீமையேயென்னினிச்செய்வேன். (18)

380 களவுவஞ்சனைகாமமென்றிவையெலாங்காட்டு
மளவுமாயையிங்காரெனக்கமைத்தனரையா
வுளவிலேயெனக்குள்ளவாறுணர்த்தினுன்னடிமை
வளருமாமதிபோன்மதிதளர்வின்றிவாழ்வேன். (19)

381 வானநாயகவானவர்நாயகவளங்கூர்
ஞானநாயகநான்மறைநாயகநலஞ்சேர்
மோனநாயகநின்னடிக்கன்பின்றிமுற்றுந்
தீனனாயகம்வாடவோவென்செய்வேன்செப்பாய். (20)

382 ஏதமற்றவர்க்கின்பமேபொழிகின்றவிறையே
பாதகக்கருங்கன்மனங்கோயிலாப்பரிந்து
சூதகத்தனாயினுமிச்சைமேற்றோன்றும்
வாதனைக்கிடமாயினேனெவ்வணம்வாழ்வேன். (21)

383 தெளிவோஊகையோவறிகிலானறிவிலான்சிறிது
மளியிலானிவன்றிருவருட்கயலெனவறிந்தோ
வெளியனாக்கினையென்செய்வேனென்செய்வேனெல்லா
வெளியுமாய்நிறைவெளியுமாயாவுமாமுரவோய். (22)

384 கண்ணினுண்மணியென்னவேதொழுமன்பர்கருத்து
ணண்ணுகின்றநின்னருளெனக்கெந்தநாணணுகு
மண்ணுவிண்ணுமற்றுள்ளனபூதமுமாருப்
பெண்ணுமாணுமாயல்லவாய்நிற்கின்றபெரியோய். (23)

385 சகமெலாந்தனிபுரந்தனைதகவுடைத்தக்கோ
ரகமெலாநிறைந்தானந்தமாயினைபளவின்

மகமெலாப்புரிந்தோரைவாழ்வித்தனையாரு
விகமெலாமெனைப்பிறந்திடச்செய்ததேனெந்தாய். (24)

386 ஏய்ந்தநல்லருள்பெற்றவர்க்கேகவலாயெளியேன்
வாய்ந்தபோன்புவளர்க்கவுங்கருணைநீவளர்ப்பா
யாய்ந்தமாமறையெத்தனைபத்தனையறிவாற்
றேய்ந்தபேர்கட்குந்தோன்றிலாத்தோன்றலாதூயோய்

387 தக்கநின்னருட்கேள்வியோசிறிதின்றித்தமியேன்
மிக்கதெய்வமேநின்னின்பவெள்ளத்தில்வீழே
ஞெக்கருய்தந்தைமகவெனும்பாசக்கட்டுடனே
துக்கவெள்ளத்திலாழ்கின்றேனென்செய்வான்றுணிந்தேன்.

388 பவம்புரிந்திடும்பாவியேற்கருணிலைபதியத்
தவஞ்செயும்படித்தயவுசெய்தருள்வதேதருமம
மவம்புரிந்திடார்க்கானந்தவமிர்தத்தையளிக்க
நவங்கொடத்துவத்திரையெறிகடலெனுநலத்தோய் ()

389 உற்றுணர்ந்தெலாநீயலதில்லையென்றுனையே
பற்றுகின்றனரெந்தைநின்னடியர்யான்பாவி
முற்றுமாயமாஞ்சகத்தையேமெய்யெனமுதரு
னற்றிருந்திடத்தொழில்செய்வான்றனைநிகரானேன். ()

மண்டலத்தின்.

அறுசீர்விருத்தம்,

390 மண்டலத்தின்மிசையொருவன்செய்தவித்தை
யகோவெனவும்வாரணுதி
யண்டமவையடுக்கடுக்காயந்தரத்தி
னிறுத்துமவதானம்போல

வெண்டருநல்லகிலாண்டகோடி.யைத்தன்
னருள்வெளியிலிலகவைத்துக்
கொண்டுநின்றவற்புதத்தையெவராலு
நிச்சயிக்கக்கூடாவொன்றை. (1)

391 ஒன்றிரண்டாய்விவகரிக்கும்விவகாரங்
கடந்தேழாம்யோகபூமி
நின்றுதெளிந்தவர்பேசாமௌனநியா
யத்தைநிறைநிறைவைத்தன்னை
யன்றியொருபொருளிலதாவெப்பொருட்குந்
தான்முதலாயசலமாகி
யென்றுமுள்ளவின்பத்தைத்தண்ணென்ற
சாந்தபதவியற்கைதன்னை (2)

392 பதமூன்றுங்கடந்தவர்க்குமேலான
ஞானபதப்பரிசுகாட்டிச்
சதமாகிநிராலம்பசாக்ஷிபதா
யார்ப்பத்தன்மையாகி
விதமியாவுங்கடந்தவித்தையெனுமிருளைக்
கீண்டெழுந்துவிமலமாகி
மதமாறுங்காணாதவானந்த
சாகரத்தைமௌனவாழ்வை. (3)

393 வாழ்வனைத்துந்தந்தவின்பமாகடலை
நல்லமிர்தைமணியைப்பொன்னைந்
தாழ்வறவென்னுளத்திருந்ததத்துவத்தை
யத்துவிதசாரந்தன்னைச்
சூழ்பெரும்பேரொளியையொளிபரந்தபர
வெளியையின்பச்சுகத்தைமாறா
தேழுலகுங்கலந்தின்றாய்நாளையா
யென்றுமாமியற்கைதன்னை. (4)

394. தன்னையறிந்தவர் தம்மைத்தானாகச்
செய்தருளுஞ்சமத்தையேலாக
மின்னைநிகர்த்திடவழியாய்ச்சொரூபானந்
தச்சுடரைவேதமாதி
யென்னையறிவரிதென்னச்சமயகோ
டிகளிடையவிடையரூத
பொன்னைவிரித்திடுமுலகத்தும்பருமிம்
பரும்பரவும்புனிதமெய்யை. (5)

395. பாவரியபரசிவமாயதுவெனலாய்
நானெனலாய்ப்பாசசாலம்
விரவிநின்றவிசித்திரத்தையைக்யபதத்
தினிதிருந்தவிவேகந்தன்னை
யிரவுபகனினைப்புமறப்பெனுந்தொந்த
மறியார்களிதயம்வேதச்
சிரமெனவாழ்பராபரத்தையானந்த
நீங்காதசிதாகாசத்தை. (6)

396. அத்துவிதவனுபவத்தையனந்தமறை
யின்னமின்னமறியேமென்னு
நித்தியத்தைநிராமயத்தைநிர்க்குணத்தைத்
தன்னருளாநினைவுக்குள்ளே
வைத்துவைத்துப்பார்ப்பவரைத்தானாக
வென்னாளும்வளர்த்துக்காக்குஞ்
சித்தினைமாத்தூவெளியைத்தன்மயமா
மானந்தத்தெய்வந்தன்னை. (7)

397. தன்னிலேதானாகநினைந்துகனிந்
தவிழ்ந்துசுகசமாதியாகப்
பொன்னிலேபணிபோலுமாபைதரு
மனமேயுன்புரைகடீர்ந்தா

யென்னிதேயாண்பிழைப்பேனெனக்கினியா
ருன்போல்வாரில்லையில்லை
யுன்னிலே திருவருளுக்கொப்பாவா
யென்னுயிர்க்கோருறவுமாவாய். (8)

98 உறவுடலையெடுத்தவரிற்பிரமாதி
யேனுமுனையொழிந்துதள்ளார்
கறவுமரிதரிதன்றேவிகபாழ
முன்னையன்றியாவதுண்டோ
வறிதினன்னையசத்தென்னைவழக்கன்று
சத்தெனவும்வாழ்த்துவேனென்
சிறுமைகெடப்பெருமையினின்செம்பதே
யத்தினிற்செல்லல்வேண்டும். (9)

99 வேண்டியகாளன்றொடும்பழகியநீ
யென்னைப்பிரிந்தவிசாரத்தாலே
மாண்டுகிடக்கினுமந்தவெல்லையையும்
பூரணமாவணக்கஞ்செய்வே
னுண்டகுருமௌனிதன்னடியானெனதற்
றவனருணுணுவேன்பூவிற்
காண்டகவெஞ்சிந்தியந்தியெனக்குண்டா
முன்னலென்கவலைதீர்வேன். (10)

100 தீராதவென்சனனவழக்கெல்லாந்
தீருமிந்தச்சனனத்தோடே
யாரேனுமறிவரியசிவன்முத்தி
யுண்டாகுமையவையோ
காரேனுங்கற்பகப்பூங்காவேனு
முனக்குவமைகாட்டப்போமோ
பாராதியாகவெழுமண்டலத்தி
னின்மகிமைபகரலாமோ. (11)

பாயப்புலி.

கட்டளைக்கலித்துறை.

401 பாயப்புலிமுனமான்கன்றைக்காட்டும்படியகில
மாயைப்பெரும்படைக்கேயிலக்காவெனைவைத்தனையோ
நீயெப்படிவருத்தாலுநன்றேநின்பெருங்கருணை
தாயொத்தடியர்க்கருள்சச்சிதானந்ததற்பரமே. (1)

402 தற்பரமாஞ்சிற்பரமாகிமன்றந்தனினடித்து
நிற்பரம்போருகன்மால்பணிதேரென்னெஞ்சகமாங்
கற்பரந்தாங்குகரைந்திடவாறொத்தகாட்சிநல்கும்
பொற்பரமாயென்வினைக்கருந்தாதைப்பொடிசெய்ததே.

403 செய்யுந்தவஞ்சற்றுமில்லாதநானுன்றிருவடிக்கே
கொய்யும்புதுமலரிட்டுமெய்யன்பர்குழாத்துடனே
கையுஞ்சிரமிசைக்கூப்பிநின்றாடிக்கசிந்துருகி
யுய்யும்படிக்கருள்செய்வதென்றோபுலியூரத்தனே. (3)

404 அத்தனைச்சிற்றம்பலவனையென்னுயிராகிநின்ற
சுத்தனைச்சுத்தவெளியானவனைச்சுகவடிவா
நித்தனைசித்தநிராதாரமாகியநின்மலனை
யெத்தனைநாள்செல்லுமோமனமேகண்டிறைஞ்சுதற்கே

405 கண்டாளருத்தினிற்காலூன்றிப்பெய்யுங் கருணைமுகி,
லண்டார்புரத்துக்குமன்பர்வினைக்குமசனிதன்னைக்,கொ
ண்டாடினார்முனங்கூத்தாடுமெந்தன்றன்கோலமெல்லாம்,
விண்டாலம்மாவொன்றுங்காணதுவெட்டவெறுவெளியே.()

406 வெளியானநீயென்மனவெளி யூடுவிரவினையா, லொளி
யாருங்கண்ணுமிரவியும்போனின்றுலாவுவன்கா, ணளி
யாருங்கொன்றைச் சடையாடவம்புலி யாடக்கங்கைத்,
துளியாடமன்றுணடமாடுமுக்கட்சுடர்க்கொழுந்தே. ()

407 கொழுந்தாதுறைமலர்க்கோதையர்மோகக்குரைகடலி
லழுந்தாதவண்ணநின்பாதப்புணை தந்தருள்வதென்றோ,
வெழுந்தாதரவுசெ யெம்பெருமானென்றிறைஞ்சி விண்
ணோர், தொழுந்தாதையேவெண்பொடி பூத்தமேனிச்சு
கப்பொருளே. (7)

408 சுகமாகுஞானந்திருமேனியாநல்லதொண்டர்தங்க
ளகமேபொற்கோயிலெனமகிழ்ந்தேதமன்றுளாடியகற்
பகமேயுன்பொன்னடிநீழல்கண்டாலன்றிப்பாவிக்கிந்தச்
செகமாயையானவருங்கோடைநீங்குந்திறமிலையே. (8)

409 நீங்காதுயிருக்குயிராகிநின்றநினையறிந்தே, தூங்காமற்
றூங்கினல்லாதேயெனக்குச்சுகமுமுண்டோ, வோங்கா
ரமாமைந்தெழுத்தாற்புவனத்தையுண்டுபண்ணிப், பாங்
காநடத்தும்பொருளேயகண்டபரசிவமே. (9)

410 சிவமாதிநான்முகக்கோவந்தமாமறைசெப்புகின்ற
நவமாயிலங்கியவொன்றேயிரண்டற்றநன்மைபெறு
தவமேதருமைம்புலப்பொறிக்கேயென்னறிவுபொல்லாப்
பவமேவிளைக்கவென்றேவெளிமானெனப்பாய்ந்ததுவே.

411 ஆறொத்திலங்குசமயங்களாறுக்குமாழ்கடலாய்
வீறிப்பரந்தபரமானவானந்தவெள்ளமொன்று
தேறித்தெளிந்துநிலைபெற்றமாதவர்சித்தத்திலே
யூறிப்பரந்தண்டகோடியெல்லாநின்றுலாவியதே. (11)

412 நடக்கினுமோடினுநிற்கினும்வேறொருநாட்டமின்றிக்
கிடக்கினுஞ்செவ்விதிருக்கினுநல்லநற்கேள்வியிலே
தொடக்குமென்னெஞ்சமனமற்றபூரணத் தொட்டிக்குள்ளே
முடக்குவன்யான்பரமானந்தநித்திரைமூடிடுமே. (12)

413. எண்ணுதெண்ணிய நெஞ்சேதுயரொழியென்னிரண்டு
கண்ணேயுறங்குறங்கென்றுணைமுக்கட்கருணைப்பிரான்

றண்ணார்கருணைமவுனந்திறன்முந்திசாதிங்கலா
நண்ணுதமெதான்றில்லையெல்லாநலமுநமக்குளவே. (13)

414. நாமென்றொருமுதலுண்டென்றநான்றலைநாணவென்
னுட், டாமென்றொருமுதல்பூரணமாகத்தலைப்பட்டொப்
பி, லானந்தந்தென்னறிவையெல்லாமுண்டவசநல்கி,
மோனந்தனைவிளைத்தாலினியாதுமொழிகுவதே. (14)

415. தானந்தவஞ்சற்றுமில்லாதநானுண்மைதானறிந்து [த்
மோனப்பொருளெனக்கண்டிடச்சற்குருமோனனுமாய்
தீனன்றனக்கிங்கிரங்கினையேயினிச்சிந்தைக்கென்று
மானந்தந்தானல்லவோபரமேசச்சிதானந்தமே. (15)

416. எனக்கோர்சுதந்தரமில்லையப்பாவெனக்கெய்ப்பில்வைப்
பாய், மனக்கோதகற்றும்பரம்பொருளேயென்னைவாழ்வி
த்திட, நினக்கேபரநின்னைநீங்காதபூரணநீள்கருணை, கன
க்கேபரமினிச்சும்மாவிருக்கத்தகுமென்றுமே. (16)

417. இடம்பெறுவீடுமின்னார்செய்சகமுமிருநிதியு
முடம்பைவிட்டாருயிர்போம்போதுகூடியுடன்வருமோ
மடம்பெறுமாயைமனமேயினியிங்குவாமவுனி
திடம்பெறவைத்தமவுனஞ்சதாயந்தெரிந்துகொள்ளே.

418. நாற்றச்சடலத்தையொன்பதுவாசனடைமனையைச்
சோற்றுப்பசையினைமும்மலபாடைத்தொடக்கறையை
யாற்றுப்பெருக்கன்னகன்மப்பெருக்கையடர்கிருமிச்
சேற்றைத்துணையென்றநாய்க்குமுண்டோகதிசேர்வதுவே. ()

419. பொய்யாருலகநிலையல்லகானற்புனலெனவே
மெய்யாவறிந்தென்னவென்னலிதனைவிடப்படுமோ
கையான்மவுனந்தெரித்தேதகல்லாநிழற்கண்ணிருந்த
வையாவப்பாவென்னாசேமுக்கண்ணுடையாரமுதே. ()

420 ஆராவமுதெனமோனம்வகித்துக்கல்லாலிழற்கீழ்ப்
போராதுநால்வருடன்வாழ்முக்கண்ணுடைப்போரசே
சீராயுருகவுள்ளன்புதந்தேசுகநிட்டையைநீ
தாராவிடினென்பெருமூச்சுத்தானத்தனஞ்சயனே. ()

421 வாயுண்டுவாழ்த்தமவுனஞ்செய்போதுமவுனவருட்
டாயுண்டுசேயென்னவென்னைப்புரக்கச்சதானந்தமா
நீயுண்டுநின்னைச்சரண்புகநானுண்டென்னெஞ்சமையா
தீயுண்டிருந்தமெழுகலவோகதிசேர்வதற்கே. (21)

422 கல்லாலெறிந்துங்கைவில்லாலடித்துங்கனிமதுரச்
சொல்லாற்றுதித்துநற்பச்சிலைதூவியுந்தொண்டரின
மெல்லாம்பிழைத்தனவன்பற்றநானினியேதுசெய்வேன்
கொல்லாவிரதியர்நேர்நின்றமுக்கட்குருமணியே. (22)

423 முன்னிலைச்சுட்டொழிநெஞ்சே நின்போதமுளைக்கிலை
யோ, பின்னிலைச்சன்மம்பிறக்குங்கண்டாயிந்தப் பேய்த்
தனமேன், றன்னிலையேநில்லுதானே தனிச்சச்சிதானந்
தமா, நின்னிலைவாய்க்குமெண் சித்தியுங்காணு நமத
ல்லவே. (23)

424. சொல்லான்மவுனமவுனமென்றே சொல்லிச்சொல்லிக்
கொண்ட, தல்லான்மனமறப்பூரணநிட்டையிலாழ்ந்தது
ண்டோ, கல்லாதமூடனினியென்செய்வேன்சகற்காரண
மாம், வல்லாளனுனமவுனசதானந்தமாகடலே. (24)

425 ஆரணமாகமமெல்லாமுரைத்தவருண்மவுன
காரணமூலங்கல்லாலடிக்கேயுண்டுகாணப்பெற்றுற்
பாரணங்கோடுசுழனெஞ்சமாகியபாதரச
மாரணமாய்விடுமெண்சித்திமுத்தியும்வாய்த்திடுமே. ()

426 சித்தமவுனிவடபான்மவுனிநந்திபகுண்ட
சுத்தமவுனியெனுமூவருக்குந்தொழும்புசெய்து

சத்தமவுனமுதன்மூன்றுமௌனமுந்தான்படைத்தே
னித்தமவுனமல்லாலறியேன்மற்றைநிட்டைகளே. (26)

427 கண்டேனினதருளவ்வருளாய்நின்றுகாண்பதெல்லா
முண்டேயதுவுநினதாக்கினேனுவட்டாதவின்ப
மொண்டேயருந்தியிளைப்பாறினேனல்லமுத்திபெற்றுக்
கொண்டேன்பராபரமேயெனக்கேதுங்குறைவில்லையே.

428 மேற்கொண்டவாயுவுங்கீழ்ப்படமூலத்துவெந்தழலைச்
சூற்கொண்டமேகமெனவுமைநின்றுசொரிவதையென்
னூற்கண்டதன்றுமவுனோபதேசியளிக்கையினிப்
பாற்கண்டுகொண்டனன்மேலேயமிர்தம்பருகுவனே. ()

429 சொல்லாற்றொடர்பொருளாற் றொடராப் பரஞ்சோதி
நின்னை, வல்லாளர்கண்டவழிகண்டிலேன்சகமார்க்கத்
திலுஞ், செல்லாதென்சிந்தைநடுவேகிடந்து திகைத்து
விம்மி,பல்லானதும்பகலானதும் வாய்விட்டாற்றுவனே.

430 அறியாதவென்னையறிவாயுநீயென்றகம்புறமும்
பிறியாதறிவித்தபேரறிவாஞ்சுத்தபேரொளியோ
குறியாதவானந்தக்கோவாவமுதருள்குண்டலியோ
சிறியேன்படுந்துயர்கண்டுகல்லாணிழற்சேர்ந்ததுவே. ()

431 எல்லாமுதவுமுனையொன்றிற்பாவனையேனுஞ்செய்து
புல்லாயினுமொருபச்சிலையாயினும்போட்டிறைஞ்சி
நில்லேனல்யோகநெறியுஞ்செயேனருணீதியொன்றுங்
கல்லேனெவ்வாறுபரமேபராகதிகாண்பதுவே. 31

432 ஒன்றுந்தெரிந்திடவில்லையென்னுள்ளந்தொருவனெனக்
கென்றுந்தெரிந்தவிவையவைகேளிரவுப்பகலுங்
குன்றுங்குழியும்வனமுமலையுங்குரைகடலு
மன்றுமனையுமனமாதிதத்துவமாயையுமே. (32)

433 பழுதுண்டுபாவையர்மோகவிகாரப்பரவையிடை
விழுகின்றபாவிக்குந்தன்றாட்புணைபவியந்தளித்தான்
றொழுகின்றவன்பருளங்களிகூரத்துலங்குமன்று [னே.
ளெழுகின்றவானந்தக்கூத்தனென் கண்மணியென்னப்ப

434 அழுக்கார்ந்தநெஞ்சுடையேனுக்கையா நின்னருள்வழ
ங்கி, னிழுக்காகுமென்றெண்ணியோவிரங்காதவியல்புக
ண்டாய், முழுக்காதலாகிவிழிநீர்பெருக்கியழுத்தொனு
ங், குழுக்காணநின்றுநடமாடுந்தில்லைக்கொழுஞ்சுடரே.

435 ஆலம்படைத்தவிழிபார்கண்மால்கொண்டவர் செயிந்
தர, சாலம்படைத்துத் தளர்ந்தனையேயென்றுந்தண்ண
ருள்கூர், கோலம்படைத்துக் கல்லாலடிக்கீழ்வைகுங்
கோவுக்கன்பாங், காலம்படைக்கத்தவம்படையாதென்
கொல்கன்னெஞ்சமே. (35)

436 சும்மாவிருக்கச்சுகஞ்சுகமென்றுசுருதியெல்லா
மம்மாநிரந்தரஞ்சொல்லவுங்கேட்டுமறிவின்றியே
பெம்மான்மவுனிமொழியையுந்தப்பியென்பேதைமையால்
வெம்மாயக்காட்டினலைந்தேனந்தோவென்விதிவசமே.()

437 தினமேசெலச்செலவாழ்நாளுநீங்கச்செகத் திருள்சொப்
பனமேயெனவெளிகண்டேயிருக்கவும்பாசபந்த
வினமேதுணையென்றிருந்தோநமன்வரினென்செய்குவோ
மனமேநம்போலவுண்டோசுத்தமூடரிவ்வையகத்தே. ()

438 கடலெத்தனைமலையெத்தனையத்தனைகன்மமதற்
குடலெத்தனையத்தனைகடனுண்மணலொக்குமிந்தச்
சடலத்தைநான்விடுமுன்னேயுனைவந்துசாரவிருட்
படலத்தைமாற்றப்படாதோநிறைந்தபராபரமே. (38)

439 நினைவுநினைவுநிலையன்றிசில்லைநினைத்திடுங்கால், வினை
யென்றொருமுதனின்னையல்லாது விளைவதுண்டோ,

தணையுந்தெளிந்துன்னைச்சார்ந்தோர்களுள்ளச்செந்தாம
ரையா, பணையும்பொன்மன்றமுநின்றாடுஞ்சோதிமணிவி
ளக்கே. (39)

440 உள்ளத்தையுமிங்கெனையு நின்கையினிலொப்புவித்துங்
கள்ளத்தைச்செய்யும்வினையால்வருந்தக்கணக்குமுண்டோ
பள்ளத்தில்வீழும்புனல்போற்படிந்துன்பரமவின்ப
வெள்ளத்தின்மூழ்கினர்க்கேயெளிதாந்தில்லைவித்தகனே

441. கள்ளம்பொருந்துமடநெஞ்சமேகொடுங்காலர்வந்தா
லுள்ளன்பவர்கட்குண்டோவில்லையேயுலகின்றவனை
வள்ளம்பொருந்துமலரடிகாணமன்றாடுமின்ப
வெள்ளச்செப்பாதப்புணையேயல்லாற்கதிவேறில்லையே.

442 தன்மயமானசுபாவத்தின்மெள்ளத்தலைப்படுங்கான்
மின்மயமானசகம்யாதுரைத்தென்வெயிலுய்ந்த
சின்மயமுத்திரைக்கையே மெய்யாகத்தெளிந்தநெஞ்சே
நின்மயமென்மயமெல்லாநிறைந்தநிராமயமே. (42)

443 ஆயுங்கலையுஞ்சுருதியுங்காண்டற்கரியவுனைத்
தோயும்படிக்குக்கருணைசெய்வாய்சுகவான்பொருளே
தாயும்பிதாவுந்தமருங்குருவுந்தனிமுதலு
நீயும்பரையுமென்றேயுணர்ந்தேனிதுநிச்சயமே. (43)

444 அல்லும்பகலுமுனக்கேயபயமபயமென்று [ண்மனக்
சொல்லுஞ்சொ லின்னந்தெரிந்ததன்றோ துதிப்பார்க
கல்லுங்கரைக்குமவுனவுனது கருணையென்பாற்
செல்லும்பொழுதல்லவோசெல்லுவேனந்தச்சிற்சுகத்தே. ()

445. எல்லாஞ்சிவன்செயலென்றிருந்தாலவனின்னருளே
யல்லாற்புகலிடம்வேறுமுண்டோவதுவேநிலையா
நில்லாயுண்ணுற்றமியேற்குக்கதியுண்டிந்நிலத்திற்
பொல்லாமயக்கத்திலாழ்ந்தாவதென்னபுகனெஞ்சமே.

446 ஒளியேயொளியினுணர்வேயுணர்வினுவகைபொங்குங்
களியேகளிக்குங்கருத்தேகருத்தைக்கவளங்கொண்ட
வெளியேவெளியின்விளைசுகமேசுகர்வீறுகண்டுந் [னே.
தெளியேன்றெளிந்தவரைப்போற்றிடேனென்ன செய்குவ

447 மறக்கின்தன்மையிறந்தலொப்பாகுமனமதொன்றிற்
பிறக்கின்றதன்மைபிறந்தலொப்பாகுமிப்பேய்ப்பிறவி
யிறக்கின்றவெல்லைக்களவில்லையேயிந்தச்சன்மவல்ல
றுறக்கின்றநாளெந்தநாள்பரமேநின்றொழும்பனுக்கே. ()

448 காட்டியவந்தக்கரணமுமாயையிக்காயமென்று
கூட்டியகோலமுநானுவியங்கத் துறையிதனு
னூட்டியநான்றனக்கென்றோறிவற்றநாளிவற்றைக்
கூட்டிநின்றாட்டினையேபரமேநல்லகூத்திதுவே. (48)

449 பொல்லாதமாமர்க்கடமனமேயெனைப்போலடுத்த
வெல்லாற்றையும்பற்றிக் கொண்டனையே யென்னைசின்மய
நில்லாயருள்வெளிநீநாணிற்பேனருணிட்டையொரு [மா
சொல்லாற்பதிந்துபரிபூரணானந்தந்தோய்குவனே. (49)

450 வாராய்நெஞ்சேயுன்றன் றுன்மார்க்கம்யாவையும்வைத்
துக்கட்டிங், காராயடிக்கடிசுற்றுகின்றாயுன் னவலமதிக்,
கோராயிரம்புத்திசொன்னாலுமோர்கிலையோகெடுவாய்,
பாராயுனைக்கொல்லுவேன் வெல்லுவேனருட் பாங்கு
கொண்டே. (50)

451 மாதத்திலேயொருதிங்கணீண்டாகிமடிவதைகண்
போதத்திலேசற்றும்வைத்திலையேவெறும்புன்மைநெஞ்சே
வேதத்திலேதர்க்கவாதத்திலேவிளங்காதுவிந்து
நாதத்திலேயடங்காதந்தவான்பொருளைடிக்கொள்ளே. (51)

452 எங்கும்வியாபித்துணர்வாமுனக்கென்னிதயத்துளே
தங்குந்துயரந்தெரியாதவண்ணந்தடைசெய்ததா

ரங்கங்குழைந்துள்ளுருகுமன்பாளர்க்கணைகடந்து
பொங்குங்கருணைக்கடலேசப்பூரணபோதக்கனே (52)

453 வையகமாதர்சுகத்தையும்பொன்னையுமாயைமல
மெய்யையுமெய்யென்றுநின்னடியார்தம்விவேகத்தையு
மையமில்வீட்டையுமெய்ந்நூலையும்பொய்ப்பாக்கிலென்னாம்
பொய்யர்தந்நட்பைவிடுவதென்றோபரிபூரணமே. (53)

454 அளியுங்கனியொத்தருளினையாறெனுந்தயர்வுறுவேன்
றெளியும்படிக்கிப்பரிபாககாலமுஞ்சித்திக்குமோ
வொளியுங்கருணையுமாறாதவின்பமுமோருருவாய்
வெளிவந்தடியர்களிக்கநின்றாடும்விழுப்பொருளே. (54)

455 அடையார்புரஞ்செற்றதேவே நின் பொன்னடிக்கன்பு
சற்றும், படையாதவென்னைப்படைத்திந்தப்பாரிற் படர்
ந்தவினைத், தடையாற்றலைவிட்டு நெஞ்சம்புண்ணாகத்த
ளரவைத்தா, யுடையாயுடையபடியன்றி யான்செய்த
தொன்றிலையே. (55)

456 ஆடுங்கறங்குந்திரிகையும்போலவலைந்தலைந்து
காடுங்கரையுந்திரிவதல்லானின்கருணைவந்து
கூடும்படிக்குத்தவமுயலாதகொடியனமன்
றேடும்பொழுதென்னசெய்வார்பரானந்தசிற்சுடரே. ()

457 கற்றும்பலபலகேள்விகள்கேட்டுங்கறங்கெனவே
சுற்றுந்தொழில்கற்றுச்சிற்றின்பத்தூடுசுழலினென்னாங்
குற்றங்குறைந்துகுணமேலிடுமன்பர்கூட்டத்தையே
முற்றுந்துணையெனநம்புகண்டாய்சுத்தமூடநெஞ்சே. ()

458 நீயெனநானெனவேறில்லையென்னுநினைவருளத்
தாயெனமோனகுருவாகிவந்துதடுத்தடிமைச்
சேயெனக்காத்தனையேபரமேநின்றிருவருளுக்
கேயென்னசெய்யுங்கைம்மாறுளதோசத்தவேழையனே

559 ஆத்திரம்வந்தவர்போலலைபாமலேராகதிட
காத்திரந்தென்னையேயன்னைபோலுங்கருணைவைத்தியம்
மாத்திரமுன்னின்றுணர்த்தினையேமவுனுவினிநான்
சாத்திரஞ்சொன்னபடியியமாதியுஞ்சாதிப்பனே. (59)

உடல்பொய்யுறவு.

நேரிசைவெண்பா.

560 உடல்பொய்யுறவாயினுண்மையுறவாகக்
கடவாரார்தண்ணருளைகண்டாய்—திடமுடனே
யுற்றுப்பார்மோனனொருசொல்லையுண்மைநன்றுப்
பற்றிப்பார்மற்றவெல்லாம்பாழ். (1)

561 பாராதிபூதமெல்லாம்பார்க்குங்காலப்பரத்தின்
சீராகநிற்குந்திறங்கண்டாய்—நேராக
நிற்குந்திருவருளினெஞ்சேயானிற்பதல்லாற்
கற்குநெறியாதினிமேற்காண். (2)

562 மெய்யானதன்மைவிளங்கினால்பார்க்கேனும்
பொய்யானதன்மைபொருந்துமோ—வையாவே
மன்னுநிராசையின்னம்வந்ததல்லவுன்னடிமை
யென்னுநிலையெய்துமாறென். (3)

563 அறியாமைமேலிட்டறிவின்றிநிற்குங்
குறிபேற்கறிவென்றகோலம்—வறிதேயா
நீயுணர்த்தநானுணருநேசத்தாலோவறிவென்
றேயெனக்கோர்நாமமிட்டதே. (4)

564. எதுக்குச்சும்மாவிருமனமேயென்றுனக்குப்
போதித்தவுண்மையெங்கேபோகவிட்டாய்—வாதுக்கு
வந்தெதிர்த்தபல்லரைப்போல்வாதாடினையேயுன்
புத்தியென்னபோதமென்னபோ. (5)

465 சகமனைத்தும்பொய்யெனவேதானுணர்ந்தாற்றுக்க
சுகமனைத்தும்பொய்யன்றோசோரா—இகபரத்தும்
விட்டுப்பிரியாதமேலானவத்துவிதக்
கட்டுக்குளாவதென்றோகாண். (6)

466 கற்கண்டோதேனோகனிரசமோபாலோவென்
சொற்கண்டாமேதெனநான்சொல்லுவேன்—விற்கண்ட
வானமதிகாணமவுனிமவுனத்தளித்த
தானமதிலூறுமமிர்தம். (7)

467 கேட்டலுடன்சிந்தித்தல்கேடிலாமெய்த்தெளிவால்
வாட்டமருவுற்பவநோய்மாறுமோ—நாட்டமுற்று
மெய்யானநிட்டையினைமேவினர்கட்கன்றோதான்
பொய்யாம்பிறப்பிறப்புப்போம். (8)

468 மாயாசகத்தைமதியாதார்மண்முதலா
யேயானதத்துவத்திலெய்துவரோ—நேயானு
பூதிநிலைநிற்கப்பொருந்துவர்களன்னவர்த
நீதியையேயோர்மனமே. (9)

469 இகமுழுதும்பொய்யெனவேயெய்ந்துணர்ந்தாலாங்கே
மிகவளரவந்தவருண்மெய்யே—பகநெகிழப்
பாரீரொருசொற்படியேயனுபவத்தைச்
சேரீரதுவேதிறம். (10)

470 ஆரணங்களாகமங்கள்யாவுமேபானந்த
பூரணமேயுண்மைப்பொருளென்னுங்—காரணத்தை
யோராயோவுள்ளுள்ளேயுற்றுணர்ந்தவ்வுண்மையினைப்
பாராயோநெஞ்சேபகர். (11)

471 நேராயமௌனநிலைநில்லாமல்வாய்பேசி
யாராயலைந்தீர்நீராகெடுவீர்—தேரீர்

திரையுந்திரையுநதிச்சென்னிபனைநாவாற்
கரையுங்கரையுமனக்கல். (12)

472 அற்பமனமேயகிலவாழ்வத்தனையுஞ் [யோன்
சொற்பனங்கண்டாயுண்மைசொன்னேனான்—கற்பனை
றில்லாவிடத்தேயெனைச்சும்மாவைத்திருக்கக்
கல்லாய்நீதானோர்கவி. (13)

473 ஏதுந்திருவருளினிச்சையாமென்றென்றெப்
போதும்பொருந்தும்புனிதர்பாற்—றீதுநெறி
செல்லுமோசெல்லாதேசெல்லுமிடமின்பமலாற்
சொல்லுமோவேதத்தொனி. (14)

474 கல்லேறுஞ்சில்லேறுங்கட்டிபேறும்போலச்
சொல்லேறப்பாழ்த்ததொளைச்செவிகொண்—டல்லேறு
நெஞ்சனைநிற்கவைத்தாய்நீதிபோதற்பரமே
வஞ்சனல்லேனீயேமதி. (15)

475 அப்பொருளுமான்மாவுமாரணநூல்சொன்னபடி
தப்பிலாச்சித்தொன்றுஞ்சாதியினா—லெப்படியுந்
தேரிற்றுவிதஞ்சிவாகமமேசொல்லுநிட்டை
யாருமிடத்தத்துவிதமாம். (16)

476 வேதமுதலாய்விளங்குஞ்சிவவடிவாய்ப்
போதநிலையிற்பொருந்தாம—லேதமிகு
மோகாதியல்லலிலேமூழ்கினையேநெஞ்சேயித்
தேகாதிமெய்யோதெளி. (17)

477 நோக்கற்கரிதானநுண்ணியவான்மோனநிலை
தாக்கற்குபாயஞ்சமைத்தபிரான்—காக்குமுயி
ரத்தனைக்குநானடிமையாகலினால்யானெனதென்
றித்தனைக்கும்பேசவிடமில். (18)

478 ஒன்றுமறநில்லென்றுணர்த்தியநம்மோனகுரு
தன்றுணைத்தாணீடூழிதாம்வாழ்க—வென்றென்றே
திக்கனைத்துங்கைகுவிக்குஞ்சின்மயராந்தன்மையர்க்கே
கைக்குவருமின்பக்கனி. (19)

479 மனத்தாலும்வாக்காலுமன்னவொண்ணுமோன
வினைத்தாரேநல்லவினைத்தார்—கனத்தபுகழ்
கொண்டவருமன்னவரேகூறரியமுத்திநெறி
கண்டவருமன்னவரேகாண். (20)

480 கண்ணொளியேமோனக்கரும்பேகவலையறப் [ணிடவுன்
பண்ணொளிக்குமுள்ளொளியாம்பான்மையினை—நண்
சித்தமிரங்கிலெதென்சித்தந்தெளியாவே
றித்தனைக்குமாதரவுமில். (21)

481 அறியாமைசாரினதுவாயறிவா
நெறியானபோததுவாய்நிற்குங்—குறியாற்
சதசத்தருளுணர்த்தத்தானுணராநின்ற
விதமுற்றறிவெனும்பேர்மெய். (22)

482 குருலிங்கசங்கமமாக்கொண்டதிருமேனி
கருவொன்றுமேவிநம்பாற்காட்டா—தருளென்று
கண்டவர்க்கேயானந்தங்கண்டுகொளலாமலது
கொண்டவர்க்கிங்கென்னகிடைக்கும். (23)

483 புலியினதளுடையான்பூதப்படையான்
பலியிரந்துமெல்லாம்புரிப்பான்—மலிபுனல்சேர்
பொன்முடியான்முக்கட்புனிதன்சரண்புகுந்தோர்க்
கென்முடியாதேதுமுளதே. (24)

484 சொல்லுக்கடங்காச்சுகப்பொருளைநாமெனவே
யல்லும்பகலுமாற்றுவதென்—னல்லசிவ

ஞானமயம்பெற்றோர்களுமில்லையென்பரந்தோ
மோனமயமானமுறை. (25)

485 ஐயாவருணகிரியப்பாவுனைப்போல
மெய்யாகவோர்சொல்விளம்பினர்யார்—வையகத்தோர்
சாற்றரிதென்றேசற்றார்தன்னையாய்முக்கணெந்தை
நாற்றிசைக்குங்கைகாட்டினான். (26)

486 காதற்றுப்போனமுறிகட்டிவைத்தாலாவதுண்டோ
தீதற்றகாயமுமச்செய்கையே—போதமாய்
நிற்பாரல்லாலிச்சகத்தினோரார்களேணிரிடினுந்
தற்பரமாக்கண்டிருப்பார்தாம். (27)

487 வெள்ளங்குலாவுசடைவெள்ளக்கருணையினான்
கள்ளங்குலாவுவஞ்சக்கள்ளனே—னுள்ளத்தி
லில்லனென்றாலன்னவன்றானெங்கும்வியாபகத்தா
னல்லனென்றுஞ்சொல்லவழக்காம். (28)

488 தத்துவப்பேயோடேதலையடித்துக்கொள்ளாமல்
வைத்தவருண்மோனவள்ளலையே—நித்தமன்பு
பூணக்கருதுநெஞ்சேபோற்றக்கரமெழும்புங்
காணத்துடிக்குமிருகண். (29)

489 தொல்லைவினைக்கீடாய்ச்சுழல்கின்றநானொருவ
னெல்லையிலாநின்கருணையெய்துவனோ—வல்லவனா
மோனகுருவேமுழுதினையுந்தானுணர்ந்த
ஞானகுருவேநவில். (30)

490 மூன்றுகண்ணுமுத்தொழிலாமும்முதலாமூவுலகுந்
தோன்றக்கருணைபொழிதோன்றலே—யீன்றவனைத்
தன்னைப்போலன்புதழைத்தோயொருதெய்வ
முன்னைப்போலுண்டோவுரை. (31)

491 நேசிக்குஞ்சிந்தைநினைவுக்குருநன்னைவைத்துப்
பூசிக்குந்தாணிறைந்தபூரணமா—யோசித்து
நின்றதல்லான்மோனநிருவிகற்பநிட்டைநிலை
யென்றுவருமோவறியேனே. (32)

492 அறிவினறியாமையற்றறிவாய்நின்று
பிறிவறவானந்தமயப்பெற்றுக்—குறியவிழ்ந்தா
லென்றைக்குடல்வேண்டேனையாவிவ்வாக்கையையே
யென்றைக்கும்வேண்டுவனேயான். (33)

493 உடலைப்பழித்திக்குணவுங்கொடாமல்
விடவிடவேநாடுவரோமெய்யைப்—படபடென
வேண்டுவேனிந்தவுடன்மெய்புணராப்பொய்யனு
ண்டநீதானேயறி. (34)

494 அறியாயோவென்னையுநீயாண்டநீசுத்த
வெறியாய்மயங்கவுமேன்விட்டாய்—நெறிமயங்கிக்
குன்றுஞ்செடியுங்குறுகுமோவையாவே
கன்றுகெட்டாற்றாயருகேகாண். (35)

495 எதுக்குடற்சுமைகொண்டேனிருந்தேனையனே
யாதிக்கமோனவருட்டாயே—சோதியா
மன்னநிருவிகற்பவானந்தநிட்டையிலே
பின்னமறநில்லாதபின். (36)

496 பின்னுமுடற்சுமையாப்பேசும்வழக்கதனு
லென்னபலனுழுற்றிருந்தோமே—யன்னதனு
லானந்தந்தானேதானகுமெம்மையனே
யேனிந்தத்துன்பமினி (37)

497 துன்பக்கடலிற்றுளைந்ததெல்லாந்தீர்ந்ததே
யின்பக்கடலிலிருவென்ன—வன்பிற்

கரைந்துகரைந்துருகிக்கண்ணருவிகாட்ட
விரைந்துவருமானந்தமே. (38)

498 கரைந்துகரைந்துருகிக்கண்ணீராறாக
விரைந்தேநிருவிகற்பமெய்த—நிரந்தரமு
நின்னையேசிந்திக்கநீகொடுத்தாய்மோனாநா
னென்னைமுழுதுங்கொடுத்தேனே. (39)

499 அல்லும்பகலும்பேரன்புடனேதானிருந்தாற்
கல்லுமுருகாதோகனெஞ்சே—பொல்லாத
தப்புவழியேநினைந்தாய்சந்ததமுநீயிறந்த
வெப்பிலேயானந்தமே. (40)

500 கொடுத்தேனேயென்னைக்கொடுத்தவுடனின்ப
மடுத்தேனேநீடூழிவாழ்ந்தே—யடுத்தேனே
பெற்றேனேபெற்றுப்பிழைத்தேனேசன்மமல்ல
லிற்றேனேயேழையடியேன். (41)

501 பெற்றோரும்பிறவாமைபேசாமையாயிருக்கக்
கற்றோமெனவுரைக்கக்காரியமென்—சற்றேனு
நீக்கற்றவின்பநிலைபொருந்தியேசற்று
வாக்கற்றாற்பேசுமோவாய். (42)

502 காலன்றனையுதைத்தான்காமன்றனையெரித்தான்
பாலன்பசிக்கிரங்கிப்பாற்கடலை—ஞாலமெச்சப்
பின்னேநடக்கவிட்டான்பேரருளைநாடாதார்க்
கென்னேநடக்கையினி. (43)

503 விண்ணருவிமேன்மேல்விளங்குவபோலேயிரண்டு
கண்ணருவிவெள்ளமொடுகைகூப்பித்—தண்ணமிர்த
வெள்ளமேயானந்தவெற்பேயெனத்தொழுவோ
ருள்ளமேஞானவொளி. (44)

504 பிள்ளைமதிச்செஞ்சடையான்பேசாப்பெருமையினான்
கள்ளவிழும்பூங்கொன்றைக்கண்ணியா—னுள்ளபடி
கல்லாலின்கீழிருந்துகற்பித்தானேனோர்வசன
மெல்லாருமீடேறவே. (45)

505 புலனைந்துந்தானேபொரமயங்கிச்சிந்தை
யலமந்துழலுமடிமை—நலமிருக்க
சித்தானமோனசிவனேநின்சேவடிக்கே
பித்தானாலுண்டோபிறப்பு. (46)

506 நிறைகுடந்தானீர்கொளுமோ நிச்சயமாமோன
முறையுணர்ந்தார்யாதைமுயல்வார்—பிறையணிந்த
மிக்ககயிலாயமலைவித்தகனைவேதியனை
செக்கரணிமேனியனைச்செப்பு. (47)

507 துங்கமழுமானுடையாய்சூலப்படையுடையாய் [ரு
திங்களணிசெஞ்சடையாய்சேவுடையாய்—மங்கையொ
பாலுடையாய்செங்கட்பணியாயென்சென்னியின்மேற்
காலுடையாய்நீயேகதி. (48)

508 இனியகருணைமுகிலெம்பிரான்முக்கட்
கனியமிர்தவாரியின்பக்கட்டி—தனிமுதல்வ
னித்தன்பரமனிமலனிறைவாய்நிறைந்த
சுத்தனமக்கென்றுந்துணை. (49)

509 நீதியாய்க்கல்லாலினீழலின்கீழேயிருந்து
போதியாவுண்மையெலாம்போதித்தா—னாதில்
சனகாதியாயதவத்தோர்க்குஞான
தினகரனாமௌனசிவன். (50)

510 தேகச்செயறானுஞ்சிந்தையுடனேதுழையில்
யோகநிலைஞானிகளுக்கொப்புவதோ—மோகநிலை

யல்லலிலேவாழ்வாரோவப்பனேநீயற்ற
வெல்லையிலேசும்மாவிரு. (51)

511 சும்மாவிருக்கச்சுகமுதயமாகுமே
யிம்மாயாயோகமினியேனடா—தம்மறிவின்
சுட்டாலேயாகுமோசொல்லவேண்டாங்கன்ம
நிட்டாசிறுபிள்ளாய்நீ. (52)

512 நீயற்றவந்நிலையேநிட்டையதினீயிலையோ
வாயற்றவனேமயங்காதே—போயற்
றிருந்தாலுநீபோகாயென்றுமுள்ளாய்சும்மா
வருந்தாதேயின்பமுண்டுவா. (53)

513 வாவாவென்றின்பம்வரவழைக்குங்கண்ணீரோ
டாவாவென்றேயழுதவப்பனே—நீவாடா
வெல்லாநமக்கெனவேயிந்தனையேயிந்தபடி
நில்லாயதுவேநிலை. (54)

514 நில்லாப்பொருளைநினையாதேநின்னையுள்ளோர்
சொல்லாப்பொருட்டிரளைச்சொல்லாதே—கல்லாத
சிந்தைகுழைந்துசுகஞ்சேரக்குருவருளால்
வந்தவழிநல்லவழி. (55)

515 வழியிதென்றுமல்லாவழியிதென்றுஞ்சொல்லிற்
பழிபழியாநல்லருளாற்பார்த்தோர்—மொழியுனக்கே
யேற்றிருக்கச்சொன்னவன்றேயெங்கும்பெருவெளியாம்
பார்த்தவிடமெல்லாநீபார். (56)

516 பாரனைத்தும்பொய்யெனவேபட்டினத்துப்பிள்ளைப்
லாருந்துறக்கையரிதரிது—நேரே [போ
மனத்துறவுமப்படியேமாணுமிவற்றி
னுனக்கிசைந்தவாறென்றேயோர். (57)

517 ஓராமலேலொருகாலுன்னாமலுள்ளொளியைப்
பாராமலுள்ளபடிபார்த்திருந்தால்—வாராதோ
பத்துந்திசையும்பரந்தெழுந்தானந்தவெள்ளந்
தத்திக்கரைபுரண்டுதான். (58)

518 தானானதன்மைவந்துதாக்கினாலவ்விடத்தே
வானாதிமாயைவழங்காவோ—ஞானாகே
னுன்னுள்ளேதோன்றுமுறவாகிநின்றறிதனை
யென்னுள்ளேயென்றமிரு. (59)

519 என்னையுன்னையின்னதிதுவென்னாமனிற்குநிலை
தன்னையருளென்றகருணைத்தி—லன்னைபெற்ற
பிள்ளைக்குஞ்சொல்லாதபெற்றிகண்டாயையனை
யுள்ளத்தினுள்ளேயுணர். (60)

520 சொன்னவர்தாநிட்டைதொகுத்தாநிட்டையிலே
மன்னினவர்போகியார்மாமௌனன்—றன்னுள்
விருப்பாகக்கைகாட்டிமிக்கவடநீழ
லிருப்பானிருவிகற்பத்தே. (61)

521 இந்தநிருவிகற்பத்தெந்தையிருக்கநிட்டை
சிந்தைநீதேறாய்செகமனைத்தும்—வந்ததொடர்ப்
பாடுகெடவன்றோவோர்பாத்திரத்துக்காடலல்லா
லாடுவதேனாட்டுமவன். (62)

522 அவனேபரமுமவனேகுருவு
மவனேயகிலமனைத்து—மவனேதா
மானவரேசொன்னாலவரேகுருவெனக்கு
நானவனாய்நிற்பதெந்தநாள். (63)

523 நாளவங்கள்போகாமனாடோறுநந்தமையே
யாளவந்தார்தாளின்கீழாட்புகுந்தாய்—மீளவுன்னைக்

காட்டாமலிற்குங் கருத்தறிந்தாநெஞ்சேயுன்
றட்டானையில்லையால். (64)

524 யான்றெனலறவேபின்பநிட்டையென்றருணைக்
கோன்றனுரைத்தமொழிகொள்ளாயோ—தோன்றி
யிழுக்கடித்தாய்நெஞ்சேயென்கலைகள்சோர
வழுக்கடிக்கும்வண்ணார்போலாய். (65)

525 எங்குஞ்சிவமேயிரண்டற்றுநிற்கிநெஞ்சே
தங்குஞ்சுகநீசலியாதே—பங்கிங்கென்
றெண்ணாதேபாழிலிறந்துபிறந்துழலப்
பண்ணாதேயானுன்பரம். (66)

526 மெய்யைப்பொய்யென்றிடவு மெய்யணையாப் பொய்க்நெ
ஞ்சே, பொய்யைத்தான்மெய்யெனவும்போகுமோ—வை
யமறத், தன்மயத்தைமெய்யெனவேசார்ந்தனையேலான
ந்த, மென்மயமுநின்மயமுமே. (67)

527 பூங்காவனநிழலும்புத்தமுதுஞ்சாந்தபதம்
வாங்காதவானந்தமாமழையு—நீங்காவாஞ்
சொல்லிறந்துமாண்டவர்போற்றாமவுனபூமியினு
னில்லையெனநின்றவிடம். (68)

528 இடங்காணநல்லபொருளின்பமெனக்கேவ
லடங்காக்கருவியனைத்து—முடனுதவ
மந்தாரதாருவெனவந்துமவுனகுரு
தந்தானோர்சொற்கொண்டுதான். (69)

529 தானந்தவஞானஞ்சாற்றரிபசித்திமுத்தி
யானவைவெல்லாந்தாமேயாகுமே—மோனகுரு
சொன்னவொருசொல்லாற்சுகமாயிருமனமே
யின்னமயக்கமுனக்கேன். (70)

530 உன்னையுடலையுறுபொருளைத்தாவெனவே
யென்னையடிமைக்கிருத்தினான் — சொன்னவொரு
சொல்லைமறவாமற்றோய்ந்தானெஞ்சேயுன்று
வில்லைபிறப்பதெனக்கே. (71)

531 எனக்குமுனக்குமுறவில்லையெனத்தேர்ந்து
நினைக்கவரிதானவின்பநிட்டை — தனைக்கொடுத்தே
யாசான்மவுனியளித்தானெஞ்சேயுனையோர்
காசாமதியேனான்காண். (72)

532 ஆனந்தமோனகுருவாமெனவேயென்னறிவின்
மோனந்தனக்கிசையமுற்றியதாந் — தேனுந்து
சொல்லெல்லாமோனந்தொழிலாதியுமோன
மெல்லாநன்மோனவடிவே. (73)

533 எல்லாமேமோனநிறைவெய்துதலாலெவ்விடத்து
நல்லார்கண்மோனநிலைநாடினார் — பொல்லாத
நானெனவிங்கொன்றைநடுவேமுளைக்கவிட்டிங்
கேனலைந்தேன்மோனகுருவே. (74)

534 மோனகுருவளித்தமோனமேயானந்த
ஞானவருளுமதுநானுமது — வானாதி
நின்றநிலையுமதுநெஞ்சப்பிறப்புமது
வென்றறிந்தேனானந்தமே. (75)

535 அறிந்தவறிவெல்லாமறிவன்றியில்லை
மறிந்தமனமற்றமவுனஞ் — செறிந்திடவே
நாட்டினானந்தநாட்டிற்குடிவாழ்க்கை
கூட்டினான்மோனகுரு. (76)

536 குருவாகித்தண்ணருளைக்கூறுமுன்னேமோனு
வுருநீடுயிர்பொருளுமொக்கத் — தருதியென

வாங்கினையேபேவருமுண்மைவைத்திடவுங்கேட்டிடவு
மீங்கொருவருண்டோவினி. (77)

537 இனியகருப்புவட்டையென்னுவிலிட்டா
னனியிரதமாறுதுநானுந்—தனியிருக்கப்
பெற்றிலேன்மோனம்பிறந்தவன்றேமோனமல்லாற்
கற்றிலேனேதுங்கதி. (78)

538 ஏதுக்குஞ்சும்மாவிருநீயெனவுரைத்த
சூதுக்கோதோன்றாத்துணையாகிப்—போதித்து
நின்றதற்கோவென்னையாநீக்கிப்பிரியாமற்
கொன்றதற்கோபேசாக்குறி. (79)

539 குறியுங்குணமுமறக்கூடாதகூட்டத்
தறிவறிவாய்நின்றுவிடவாங்கே—பிறிவறவுஞ்
சும்மாவிருத்திச்சுகங்கொடுத்தமோனநின்பாற்
கைம்மாறுநானொழிதல்காண. (80)

540 நான்றானெனுமயக்லநண்ணுங்காகெண்ணுணை
வான்றானெனநிறையமாட்டாய்நீ—யூன்றுமல்
வைத்தமவுனத்தாலேமாயைமணமிறந்து
துய்த்துவிடுஞானசுகம். (81)

541 ஞானநெறிக்கேகற்றகுருநண்ணரியசித்திமுத்தி
தானந்தருமந்தழைத்தகுரு—மானமொடு
தாயெனவும்வந்தென்னைத்தந்தகுருவென்சிந்தை
கோயிலெனவாழுங்குரு. (82)

542 சித்துஞ்சடமுஞ்சிவத்தைவிடவில்லையென்ற
நித்தன்பரமகுருநேசத்தாற்—சுத்தநிலை
பெற்றோமேநெஞ்சேபெரும்பிறவிசாராமற்
கற்றோமேமோனக்கரு. (83)

ஏசற்றவந்நிலை.

கொச்சகக்கலிப்பா.

543 ஏசற்றவந்நிலையேயெந்தைபரிபூரணமாய்
மாசற்றவானந்தவாரிவழங்கிடுமே
பூசற்சுழல்போனுலகநெறிவாதனையாற்
பாசத்துட்செல்லாதேபல்காலும்பாழ்நெஞ்சே. (1)
544 பாழாகியண்டப்பரப்பையெல்லாம்வாய்மடுத்து
மாழாழியின்பத்தழுந்தப்படியாயோ [ல்
தாழாயோவெந்தையருட்டாட்கீழ்நெஞ்சேயெனைப்போ
வாழாதுவாழ்ந்தழியாவண்ணமிருப்பாயே. (2)
545 இருப்பாயிருந்திடப்பேரின்பவெளிக்கேநமக்குக்
குருப்பார்வையல்லாமற்கூடக்கிடைத்திடுமோ
வருட்பாய்நமக்காகவாளவந்தார்பொன்னடிக்கீழ்
மருட்பேயர்போலிருக்கவாகண்டாய்வஞ்சநெஞ்சே. (3)
546 வஞ்சமோபண்டையுளவாதனையானீயலைந்து
கொஞ்சமுற்றாயுன்னைக்குறைசொல்லவாயுமுண்டோ
வஞ்சலஞ்சலென்றிரங்குமானந்தமாகயற்கீழ்
நெஞ்சமேயென்போலநீயழுந்தவாராயோ (4)
547 வாராவரவாய்வடநிழற்கீழ்வீற்றிருந்த
பூராயநம்மைப்புலப்படுத்தவேண்டியன்றோ
வோராயோநெஞ்சேயுருகாயோவுற்றிருந்து
பாராயோவவ்வுருவைப்பார்க்கநிறைவாய்விடுமே. (5)
548 வாயாதோவின்பவெள்ளம்வந்துள்வழியாகப்
பாயாதோநானும்பயிராய்ப்பிழையேனோ
வோயாமலுன்னியுருகுநெஞ்சேயந்நிலைக்கே
தாயானமோனனருள்சந்திக்கவந்திடுமே. (6)

49 வந்தவாவைமறந்துலகாய்வாழ்ந்துகன்ம
பந்தமுறவுன்னைப்படிப்பிக்கக்கற்றவர்யா
ரிந்தமதியேனுனக்கிங்கென்மதிகேளென்றலே
சந்ததநெஞ்சேபராத்திற்சாரினின்பமுண்டாமே. (7)

50 இன்பமயமாயுலகமெல்லாம்பிழைப்பதற்குன்
னன்புநிலையென்பாரதுவுநினையன்றியுண்டோ
வுன்புலத்தையோரினருட்கொப்பாவாய்நெஞ்சேநீ
தென்புலத்தாரோடிருந்துசெய்பூசைகொண்டருளே. (8)

51 அருளேயோராலயமாவானந்தமாயிருந்த
பொருளோடியானிருக்கப்போயொளித்தநெஞ்சேநீ
மருடீர்முயற்கோடோவான்மலரோபேய்த்தேரோ
விருடீரநீயுரைந்ததெவ்விடமோகாணேனே (9)

52 எவ்விடத்தும்பூரணமாமெந்தைபிரான்றண்ணருளே
யவ்விடத்தேயுன்னைநெஞ்சேயாராயிற்கண்டிலனே
யவ்விடத்துமாயையிலேமாண்டனையோவவ்விடமுஞ்
செவ்விடமேநீயுஞ்செனனமற்றுவாழியவே. (10)

காடுங்கரையும்.

அறுசீர்விருத்தம்.

553 காடுங்கரையுமனக்குரங்கு
கால்விட்டோடவதன்பிறகே
யோடுந்தொழிலாற்பயனுளதோ
வொன்றாய்ப்பலவாவுயிர்க்குயிரா
யாடுங்கருணைப்பரஞ்சோதி
யருளைப்பெறுதற்கன்புநிலை
தேடிப்பருவமிதுகண்டீர்
சேரவாருஞ்செகத்தீரே. (1)

554 சைவசமயமேசமயஞ்
சமயாதீதப்பழம்பொருளைக்
கைவந்திடவேமன்றுள்வெளிகாட்டு
மிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ்சமயநெறி
புகுதவேண்டாமுத்திதருந்
தெய்வசபையைக்காண்பதற்குச்
சேரவாருஞ்செகத்தீரே. (2)

555 காகமுறவுகலந்துண்ணக்
கண்டீரகண்டாகாரசிவ
போகமெனும்பேரின்பவெள்ளம்
பொங்கித்ததும்பிப்பூரணமா
யேகவுருவாய்க்கிடக்குதையோ
வின்புற்றிடநாமினியெடுத்த
தேகம்விழுமுன்புசிப்பதற்குச்
சேரவாருஞ்செகத்தீரே. (3)

எடுத்ததேகம்.

கட்டளைக்கலிப்பா.

556 எடுத்ததேகம்பொருளாவிமூன்றுநீ
யெனக்கொன்றில்லையெனவேமோனநன்னெறி
கொடுத்தபோதுகொடுத்ததன்றேயிறுங்
குளறிநானென்றுகூறுந்தாடமாயையை
விடுத்தவாறுங்கண்ணீரொடுகப்பலை
விலகுமாறுமென்வேட்கைப்ரவாகத்தைத்
தடுத்தவாறும்புகலாய்சிரகிரித்
தாயுமானதயாபரமூர்த்தியே. (1)

7 நோயும்வெங்கலிப்பேயுந்தொடாநின்
றாலிற்சொன்னமுறையியமாதிநான்
றேயும்வண்ணமெனைக்காக்குங்காவலுந்
தொழும்புகொள்ளுஞ்சுவாமியுநீகண்டா
யோயுஞ்சன்மமினியஞ்சலஞ்சலென்
றுலகங்கண்டுதொழவோருருவிலே
தாயுந்தந்தையுமானைப்பிரகிரித்
தாயுமானதயாபரமூர்த்தியே. (2)

முகமெலாம்.

கலிநிலைத்துறை.

8 முகமெலாங்கண்ணீர்முத்தரும்பிடச்செங்கைமுகிழ்ப்ப
வகமெலாங்குழைந்தானந்தமாகநல்லறிஞ
ரிகமெலாந்தவமிழைக்கின்றாரென்செய்கோவேழை
சகமெலாம்பெறநல்லருளுதாமாச்சமைந்தோய். (1)

திடமுறவே,

கொச்சகக்கலிப்பா.

9 திடமுறவேநின்னருளைச்சேர்ந்தென்னைக்காத்தாளக்
கடனுனக்கென்றெண்ணிநின்னைக்கைகுவித்தேனலனே
வடைவுகெட்டபாழ்மாயையாழியிலேபின்னமல்லற்
படமுடியாதென்னுவிப்பற்றேபராபரமே. (1)

10 ஆராமைகண்டிங்கருட்குருவாய்நீயொருகால்
வாராயோவந்தவருத்தமெல்லாந்தீராயோ
பூராயமாகவருட்பூரணத்திலண்டமுதற்
பாராதிவைத்தபதியேபராபரமே. (2)

561 வாழாதுவாழவுனைவந்தடைந்தோரெல்லாரு
மாழாழியென்னவருளாரழுக்காற்றே
டேழாயெனவுலகேபேசுமினிநானொருவன்
பாழாகாவாறுமுகம்பார்நீபராபரமே. (3)

562 உள்ளத்தினுள்ளேயொளித்தென்னையாட்டுகின்ற
கள்ளக்கருணையையான்காணுந்தரமாமோ
வெள்ளத்தைமாற்றிவிடக்குண்பார்நஞ்சூட்டும்
பள்ளத்தின்மீன்போற்பதைத்தேன்பராபரமே. (4)

563 வாவிக்கமலமலர்வண்டாய்த்துவண்டுதுவண்
டாவிக்குணின்றவுனக்கன்புவைத்தார்க்கஞ்சலென்பாய்
பூவிற்கும்வான்கடையிற்புல்விற்போர்போலவொன்றைப்
பாவிக்கமாட்டேன்பதியேபராபரமே. (5)

564 விண்ணாறுவெற்பின்விழுந்தாங்கெனமார்பிற்
கண்ணாறுபாய்ச்சிடுமென்காதல்வெள்ளங்கண்டிலையோ
தண்ணாறுசாந்தபதத்தற்பரமேநால்வேதப்
பண்ணாறுமின்பப்பதியேபராபரமே. (6)

565 கூடியநின்சீரடியார்கூட்டமென்றோவாய்க்குமென
வாடியவென்னெஞ்சுமுகவாட்டமுநீகண்டிலையோ
தேடியநின்சீருளைத்திக்கனைத்துங்கைகுவித்துப்
பாடியநான்கண்டாய்பதியேபராபரமே. (7)

566 நெஞ்சத்தினூடேநினைவாய்நினைவூடு
மஞ்சலெனவாழுமெனதாவித்துணைநீயே
சஞ்சலமாற்றினையினிமேற்றாய்க்குபசாரம்புகன்று
பஞ்சரிக்கநானார்பதியேபராபரமே. (8)

567 புத்திநெறியாகவுனைப்போற்றிப்பலகாலு
முத்திநெறிவேண்டாதமூடனேனோகெடுவேன்

சித்திநெறிக்கென்கடவேன்சீரடியார்க்கேவல்செயும்
பத்திநெறிக்கேனுமுகம்பார்நீபராபரமே. (9)

568 கண்டறியேன்கேட்டறியேன்காட்டுநினையேயிதயங்,
கொண்டறியேன்முத்திகுறிக்குந்தாழுமுண்டோ, தொ
ண்டறியாப்பேதமையேன்சொல்லேனின்றன்மை யெ
ல்லாம், பண்டறிவாய்நீயேபகராய்பராபரமே. (10)

தன்னை.

கொச்சகக்கலிப்பா.

569 தன்னையறியத்தனதருளாற்றானுணர்த்தும்
மன்னைப்பொருளெனவேவாழாமற்பாழ்நெஞ்சே
பொன்னைப்புவியைமடப்பூவையரைமெய்யெனவே
யென்னைக்கவர்ந்திழுத்திட்டென்னபலன்கண்டாயே.

ஆக்குவை.

அறுசீர்விருத்தம்.

570 ஆக்குவைமாயையாவுநொடிதனிலதனைமாள
நீக்குவைநீக்கமில்லாநினைப்பொடுமறப்புமாற்றிப்
போக்கொடுவரவுமின்றிப்புனிதநல்லநுளானந்தந்
தாக்கவுஞ்செய்வாயன்றோசச்சிதானந்தவாழ்வே. (1)

கற்புறுசிந்தை.

571 கற்புறுசிந்தைமாதர்கணவரையன்றிவேறு
சிற்புறக்கவரைநாடார்யாங்களுமின்பவாழ்வுந்
தற்பொறியாகநல்குந்தலைவநின்னலதோர்தெய்வம்
பொற்புறக்கருதோங்கண்டாய்பூரணானந்தவாழ்வே.

572 முருந்திளநகையார்பாரமுலைமுகந்தழுவிச்செவ்வாய்
விருந்தமிர்தெனவருந்திவெறியாட்டுக்காளாய்நாளு
மிருந்தலோகாயதப்பேரினத்தனாயிருந்தவேழை
பொருந்தவுங்கதிமேலுண்டோபூரணானந்தவாழ்வே. ()

573 தீதெலாமொன்றாம்வன்மைசெறிந்திருட்படலம்போர்க்கும்
பாதகச்சிந்தைபெற்றபாதகனான்பாதநீழ
லாதரவடையவுள்ளன்பருள்கிலையாயின்மற்றியார்
போதனைசெய்யவல்லார்பூரணானந்தவாழ்வே. (3)

574 நாதனேநாதாதீதநண்பனேநடுவாய்நின்ற
நீதனைக்கலந்துநிற்கநெஞ்சமேநீவாவென்றால்
வாதனைபெருக்கியென்னைவசஞ்செய்துமனந்துன்மார்க்க
போதனைசெய்தனன்றோபூரணானந்தவாழ்வே. (4)

575 எண்ணியவெண்ணமெல்லாமிறப்பேமற்பிறப்புக்காசை
பண்ணியென்னறிவையெல்லாம்பாழாக்கியென்னைப்பாழாக்குந்
திண்ணியவினையைக்கொன்றுசிறியனையுய்யக்கொண்டாற்
புண்ணியநினக்கேயன்றோபூரணானந்தவாழ்வே. (5)

576 பத்திநீபத்திக்கானபலனுநீபலவாச்சொல்லுஞ்
சித்திநீசித்தர்சித்திதிறமுநீதிறமார்மோன
முத்திநீமுத்திக்கானமுதலுநீமுதன்மையான
புத்திநீயெனக்கொன்றுண்டோபூரணானந்தவாழ்வே. (6)

577 தாயினுமினியநின்னைச்சரணமடைந்தநாயேன்
பேயினுங்கடையனாகிப்பிதற்றுதல்செய்தனன்றோ
தீயிடைமெழுகாய்நொந்தேன்றெளிவிலேன்வீணேகாலம்
போயினதாற்றுகில்லேன்பூரணானந்தவாழ்வே. (7)

மலைவளர்காதலி.

பதினான்குசீர்விருத்தம்.

578 பதியுண்டுநிதியுண்டுபுத்திரர்களுண்மித்திரர்கள்
பக்கமுண்டெக்காலமும்
பவிசுண்டுதவிசுண்டுதிட்டாந்தமாகயம
படரெனுந்திமிரமணுகாக்
கதியுண்டுஞானமாங்கதிருண்டுசதுருண்டு
காயசித்திகளுமுண்டு
கறையுண்டகண்டர்பாலம்மைநின்றனளிற்
கருத்தொன்றுமுண்டாகுமே
னதியுண்டகடலெனச்சமயத்தையுண்டபர
ஞானவானந்தவொளியே
நாதாந்தரூபமேவேதாந்தமோனமே
நானெனுமகந்தைதீர்த்தென்
மதியுண்டமதியானமதிவதனவல்லியே
மதுசூதனன்றங்கையே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (1)

579 தெட்டிலேவலியமடமாதர்வாய்வெட்டிலே
சிற்றிடையிலேநடையிலே
சேலொத்தவிழியிலேபாலொத்தமொழியிலே
சிறுபிறைநுதற்கீற்றிலே
பொட்டிலேயவர்கட்டுபட்டிலேபுனைகந்த
பொடியிலேயடியிலேமேற்
பூரித்தமுலையிலேநிற்கின்றநிலையிலே
புந்திதனைநுழையவிட்டு
நெட்டிலேயலையாமலறிவிலேபொறையிலே
நின்னடியர்கூட்டத்திலே

நிலைபெற்றவன்பிலேயலைவற்றமெய்ஞ்ஞான
ஞேபத்திலேயுனிருதாண்
மட்டிலேமனதுசெலநினகருளுமருள்வைபோ
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே. (2)

580 பூதமுதலாகவேவாதடரியந்தமும்
பொய்யென்றனைக்காட்டியென்
போதத்திநடுவாகியடியீறுமில்லாத
போதபூரணவெளிக்கு
ளேதுமறநில்லென்றுபாயமாவைத்துநினை
வெல்லாஞ்செய்வல்லசித்தா
மின்பவுருவைத்தந்தவன்னையேயுநின்னையே
யெளியேன்மறந்துய்வனோ
வேதமுதலானநல்லாகமத்தன்மையை
விளக்குமுட்கண்ணிலார்க்கு
மிக்கநின்மகிமையைக்கேளாதசெவிடர்க்கும்
வீறுவாதம்புகலும்வாய்
வாதநோயாளர்க்குமெட்டாதமுக்கணுடை
மாமருந்துக்கமிர்தமே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெணுமையே. (3)

581 மிடியிட்டவாழ்க்கையாலுப்பிட்டகலமெனவு
மெய்யெலாமுள்ளுடைந்து
வீறிட்டசெல்வர்தந்தலைவாயில்வாசமாய்
வேதனைகளுறவேதனுந்
துடியிட்டவெவ்வினைபையேவினன்பாவிநான்
றொடரிட்டதொழில்களெல்லாந்

துண்டிட்டசான் தம்பியின்பொருட்டாயதுன்
றொண்டர்பணிசெய்வதென்றோ
வடியிட்டசெந்தமிழினருமையிட்டாரூரி
லரிவைபோர்பரவைவாயி
லம்மட்டுமடியிட்டுநடைநடந்தருளடிக
ளடியீதுமுடியீதென
வடியிட்டமறைபேசுபச்சிளங்கிள்ளையே
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (4)

582 பூரணிபுராதனிசுமங்கலைசுதந்தரி
புராந்தகித்ரியம்பகியெழிற்
புங்கவிவிளங்குசிவசங்கரிசஹஸ்ரதள
புஷ்பமிசைவீற்றிருக்கு
நாரணிமனாதீதநாயகிகுணாதீத
நாதாந்தசத்தியென்றுன்
னாமமேயுச்சரித்திடுமடியர்நாமமே
நானுச்சரிக்கவசமோ
வாரணிசடைக்கடவுளாரணியெனப்புகழ
வகிலாண்டகோடியீன்ற
வன்னையேபின்னையுங்கன்னியெனமறைபேசு
மானந்தரூபமயிலே
வாரணியுமிருகொங்கைமாதர்மகிழ்கங்கைபுகழ்
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (5)

583 பாகமோபெறவுனைப்பாடவறியேன்யல
பரிபாகம்வரவுமனதிற்

பண்புமோபற்றுமிலைநியமமோசெய்திடப்
பாவியேன்பாற்பருப
தேகமோதிடமில்லைஞானமோகனவிலுஞ்
சிந்தியேன்பேரின்பமோ
சேரவென்றாற்கள்ளமனதுமோமெத்தவுஞ்
சிந்திக்குதென்செய்குவேன்
மோகமோமதமோகுரோதமோலோபமோ
முற்றுமாற்சரியமோதான்
முறியிட்டெனைக்கொள்ளுநிதியமோதேடவெனின்
மூசுவரிவண்டுபோல
மாகமோடவும்வல்லனெனையாளவல்லையோ
வளமருவுதேவையரசே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே. (6)

584 தூளேறுதூசுபோல் வினையேறுமெய்யெனுந்
தொக்கினுட்சிக்கினாளுஞ்
சுழலேறுகாற்றினிடையழலேறுபஞ்செனச்
சூறையிட்டறிவையெல்லா
நாளேறநாளேறவார்த்திகமெனுங்கூற்றி
னட்பேறவுள்ளுடைந்து
நயனங்களாற்றதாரைநீராறுபோலவே
நானிலந்தனிலலையவோ
வேளேறுதந்தியைக்கனதந்தியுடன்வென்று
விரைபேறுமாலைசூடி
விண்ணேறுமேகங்கள்வெற்பேறிமறைவுற
வெருட்டியகருங்கூந்தலாய்
வாளேறுகண்ணியேவிடையேறுமெம்பிரான்
மனதுக்கிசைந்தமயிலே

வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெறுமையே. (7)

585 பூதமொடுபழகிவளரிந்திரியமாம்பேய்கள்
புந்திமுதலானபேய்கள்
போராடுகோபாஹங்காரக்ஷசப்பேய்களென்
போதத்தையூடழித்து
வேதனைவளர்த்திடச்சதுர்வேதவஞ்சன்
விதித்தானிவல்லமெல்லாம்
வீழும்படித்துனதுமௌனமந்த்ராதிக்ய
வித்தையையியந்தருள்வையோ
காதவடிவாகியமஹாமந்த்ரரூபியே
நாதாந்தவெட்டவெளியே
நற்சமயமானபயிர்தழைபவருமேகமே
ஞானவானந்தமயிலே
வாதமிடுபரசமயம்யாவுக்குமுணர்வரிய
மகிமைபெறுபெரியபொருளே
வரைராஜனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெறுமையே. (8)

அகிலாண்டநாயகி.

---

586 வட்டமிட்டோளிர்பிராணவாயுவெனு
நிகளமோடுகமனஞ்செயு
மனமெனும்பெரியமதயானையையெ
வசமடக்கிடின்முமண்டலத்
திட்டமுற்றனைராஜயோகமிவன்
யோகமென்றறிஞர்புகழவே

யேழையேனுலகினீடுவாழ்வனினி
யிங்கிதற்குமனுமானமோ
பட்டவர்த்தனர்பராவுசக்ரதர
பாக்யமானசுபயோகமும்
பாரகாவியகவித்வநான்மறை
பாராயணஞ்செய்மதியூகமு
மட்டசித்தியுநலன்பருக்கருள
விருதுகட்டியபொனன்னமே
யண்டகோடிபுகழ்காவைவாழுமகி
லாண்டநாயகியெனம்மையே. (1)

பெரியநாயகி.

---

587 காற்றைப்பிடித்துமட்காகத்தடைத்தபடி
கன்மப்புனற்குளூறுங்
கடைகெட்டநவவாயில்பெற்றபசுமட்கலக்
காயத்துளெனையிருத்திச்
சோற்றைச்சுமத்திநீபந்தித்துவைக்கத்
துருத்திக்குண்மதுவென்னவே
துள்ளித்துடித்தென்னபேறுபெற்றேனருட்
டோயநீபாய்ச்சல்செய்து
காற்றைப்பதித்ததெனஞானமாம்பயிரதனை
நாட்டிப்புலப்பட்டியு
நமனைதீப்பூடுமணுகாமன்மூன்னின்று
நாடுசிவபோகமான
பேற்றைப்பகுத்தருளியெனையாளவல்லையோ
பெரியவகிலாண்டகோடி
பெற்றநாயகிபெரியுகபிலைமாநகர்மருவு
பெரியநாயகியம்மையே. (1)

தந்தைதாய்.

கண்ணி.

583 தந்தைதாய்மகவுமனைவாழ்க்கையாக்கை
சகமனைத்துமௌனியருட்டழைத்தபோதே
யிந்திரசாலங்கனவுகானனீரா
யிருந்ததுவேயிவ்வியற்கையென்னேயென்னே. (1)

589 என்னைநான்கொடுக்கவொருப்பட்டகால
மியாதிருந்தென்னெதுபோயென்னென்னைநீங்கா
வன்னைபோலருள்பொழியுங்கருணைவாரி
யானந்தப்பெருமுகிலேயரசேசொல்லாய். (2)

590 அரசேநின்றிருக்கருணையல்லாதொன்றை
யறியாதசிறியேனுனதனுன்முத்திக்
கரைசேரும்படிக்குனருட்புணைபைக்கூட்டுங்
கைப்பிடியேகடைப்பிடியாக்கருத்துட்கண்டேன். (3)

591 கண்டேனிங்கென்னையுமென்றனையுநீங்காக்
கருணையுநின்றனையுநான்கண்டேன்கண்டேன்
விண்டேனென்றெனைப்புறம்பாத்தள்ளவேண்டா
விண்டதுநின்னருட்களிப்பின்வியப்பாலன்றே. (4)

592 ஓவென்றசுத்தவெளியொன்றேநின்றிங்
குயிரையெல்லாம்வம்மினெனவுவட்டாவின்பத்
தேவென்றநீகலந்துகலந்துமுத்தி
சேர்த்தனையேற்குரைவாமோமாசெகவிலாசம்.

593 செகத்தையெல்லாமணுவளவுஞ்சிதறுவண்ணஞ் (5)
சேர்த்தணுவில்வைப்பையணுத்திரளையெல்லா
மகத்துவமாப்பிரமாண்டமாகச்செய்யும்
வல்லவாநீநினைந்தவாறேயெல்லாம். (6)

594 சொல்லாலேவாய்துடிப்பதல்லானெஞ்சந்
துடித்திருகணீரருவிசொரியத்தேம்பிக்

கல்லாலேயிருந்தநெஞ்சுங் கல்லாமுக்கட்
கனியேநெக்குருகிடவுங்காண்பேன்கொல்லோ. (7)

பெற்றவட்கே.

595 பெற்றவட்கேதெரியுமந்தவருத்தம்பிள்ளை
பெறாப்பேதையறிவாளோபேரானந்த
முற்றவர்க்கேகண்ணீர்கம்பலையுண்டாகு
முறாதவரேகன்னெஞ்சமுடையாரவார். (1)

596 ஆவாவென்றழுதுதொழுங்கையராகி
யப்பனேயானந்தவடிகளேநீ
வாவாவென்றவர்க்கருளுங்கருணையெந்தாய்
வன்னெஞ்சர்க்கிரங்குவதெவ்வாறுநீயே. (2)

597 நீயேயிங்கெளியேற்குந்தாகமோக
நினைவூடேநின்றுணர்த்திநிகழ்த்தலாலே
பேயேற்குந்தனக்கெனவோரன்புமுண்டோ
பெம்மானேயின்னமன்புபெருகப்பாராய். (3)

598 பாராயோவென்றுயரமெல்லாமையா
பகருமுன்னேதெரியாதோபாவியேன்முன்
வாராயோவின்னமொருகாலாளுலு
மலர்க்காலென்சென்னிமிசைவைத்திடாயோ. (4)

599 வைத்திடுங்காலைப்பிடித்துக்கண்ணின்மார்பில்
வைத்தணைத்துக்கொண்டுகையால்வளைத்துக்கட்டிச்
சித்தமிசைப்புகவிருத்திப்பிடித்துக்கொண்டு
தியக்கமறவின்பசுகஞ்சேர்வதென்றோ. (5)

600 சேரமற்சிற்றினத்தைப்பிரிந்தெந்நாளுந்
திருவடிப்பேரினத்துடனேசேரவண்ண

மாராகநானலைந்தேனரசேநீதா
னறிந்திருந்துமாயையிலேனழுந்தவைத்தாய். (6)

601 வைத்தபொருளுடலாவிமூன்றுநின்கை
வசனமெனவேயான்கொடுக்கவாங்கிக்கொண்டு
சித்தமிசைபுகுந்ததுதான்மெய்யோபொய்யோ
சிறியேற்கிங்குளவுரையாய்திகையாவண்ணம். (7)

602 திகையாதேதாவெந்நாளும்பேரானந்தத்
தெள்ளமுதமுதவாமற்றிவலைகாட்டி
வகையாகவலக்கழித்தாயுண்டுடுத்து
வாழ்ந்தேனிரண்டுகான்மாடுபோலே. (8)

603 மாடுமக்கள்சிற்றிடையார்செம்பொனுடை
வைத்தகனதனமேடைமாடகூடம்
வீடுமென்பாற்றொடர்ச்சியோவிடைவிடாமன்
மிக்ககதிவீடன்றோவிளங்கல்வேண்டும். (9)

604 விளங்கவெனக்குள்ளுள்ளேவிளங்காநின்ற
வேதகமேபோதகமேவிமலவாழ்வே
களங்கரகிதப்பொருளேயென்னைநீங்காக்
கண்ணுதலேநாதாந்தக்காட்சிப்பேறே. (10)

605 நாதமேநாதாந்தவெளியேசுத்த
ஞாதுருவேஞாயமேஞேயமேநல்
வேதமேவேதமுடிவானமோன
வித்தையிக்கென்னைப்பிணிவிட்டிடாதே. (11)

கல்லாலின்.

606 கல்லாலினீழறனிலொருநால்வர்க்குங்
கடவுணீயுணர்த்துவதுங்கைகாட்டென்றற்

சொல்லாலேசொலப்படுமோசொல்லுந்தன்மை
துரும்புபற்றிக்கடல்கடக்குந்துணிவேயன்றோ. (1)

607 அன்றோவாமோவெனவுஞ்சமயகோடி
யத்தனையும்வெவ்வேறாயாற்றநேரே
நின்றாயேநினைப்பெறுமாறெவ்வாறாங்கே
நின்னருள்கொண்டறிவதல்லானெறிவேறுண்டோ. (2)

608 நெறிபார்க்கினின்னையன்றியகிலம்வேறோ
நிலநீர்தீக்கால்வானுநீயலாத
குறியாதுமில்லையென்றால்யாங்கள்வேறோ
கோதையொருகூறுடையாய்கூறாய்கூறாய். (3)

609 கூறாயவைம்பூதச்சுமையைத்தாங்கிக்
குணமிலாமனமெனும்பேய்க்குரங்கின்பின்னே
மாறாதகவலையுடன்சுழலவென்னை
வைத்தனையேபரமேநின்மகிமைநன்றே. (4)

610 நன்றெனவுந்தீதெனவுமெனக்கிங்குண்டோ
நானாகிநீயிருந்தநியாயஞ்சற்றே
யின்றெனக்குவெளியானாலெல்லாம்வல்ல
விறைவாநின்னடியருடனிருந்துவாழ்வேன். (5)

611 வாழ்வெனவுந்தாழ்வெனவுமிரண்டாப்பேசும்
வையகத்தார்கற்பனையாமயக்கமான
பாழ்வலையைக்கிழித்துதறிச்செயல்போய்வாழப்
பரமேநின்னானந்தப்பார்வையெங்கே. (6)

612 எங்கேயெங்கேபருளொன்றெமையிரந்தா
னேழைபிலவென்னவுமெண்ணியிச்சைகூறு
மங்கையங்கேயெளிவந்தென்னையாண்ட
வாரமுதேயுனைக்காண்பானலந்துபோனேன். (7)

613 போனநாட்கிரங்குவதேதொழிலாவிங்ஙன் (7)
பொருந்துநாளத்தனையும்போக்கினேனென்
ஞானநாயகனேநின்மோனஞான
நாட்டமுற்றுவாழ்ந்திருக்குநாளெந்நாளோ. (8)

614 நாட்பட்டகமலமென்னவிதயமேவு
நறுந்தேனே துன்மார்க்கநாரிமார்கண்
வாட்பட்டகாயுமிந்தக்காயமென்றே
வன்கூற்றுமுயிர்பிடிக்கவருமந்நீதி. (9)

615 நீதியெங்கேமறையெங்கேமண்விண்ணெங்கே
நித்தியராமவர்களெங்கேநெறிதப்பாத
சாதியெங்கேயொழுக்கமெங்கேயாங்களெங்கே
தற்பரநீபின்னுமொன்றைச்சமைப்பதானால். (10)

616 ஆனாலும்யானெனதிங்கற்றவெல்லை
யதுபோதுமதுகதிதானல்லவென்று
போனாலும்யான்போவனல்லான்மோனப்
புண்ணியனேவேறுமொருபொருளைநாடேன். (11)

617 பொருளேநின்பூரணமேலிட்டகாலம்
போக்குவரவுண்டோதற்போதமுண்டோ
விருடானுண்டோவல்லால்வெளிதானுண்டோ
வின்பமுண்டோதுன்பமுண்டோயாமங்குண்டோ. ()

618 உண்டோநீபடைத்தவுயிர்த்திரளிலென்போ
லொருபாவிதேகாதியுலகம்பொய்யாக்
கண்டேயுமெள்ளளவுத்துறவுமின்றிக்
காசினிக்குளலைந்தவரார்காட்டாய்தேவே. (13)

619 தேவரெல்லாந்தொழச்சிவந்தசெந்தாண்முக்கட்
செங்கரும்பேமொழிக்குமொழிதித்திப்பாக

மூவர்சொலுந்தமிழ்கேட்குந்திருச்செவிக்கே
மூடனென்புலம்பியசொன்முற்றுமோதான். (14)

620 முற்றுமோவெனக்கினியானந்தவாழ்வு
மூதறிவுக்கினியாய்நின்முளரித்தாளிற்
பற்றுமோசற்றுமில்லையையோவையோ
பாவிபடுங்கட்கலக்கம்பார்த்திலாயோ. (15)

621 பார்த்தனவெல்லாமழியுமதனாற்சுட்டிப்
பாராதேபார்த்திருக்கப்பாரேமோன
மூர்த்திவடிவாயுணர்த்துங்கைக்காட்டுண்மை
முற்றியெனதல்லல்வினைமுடிவதென்றோ. (16)

622 என்றுனைநீயன்றுளமியாமென்பதென்னை
யிதுநிற்கவெல்லாந்தாமில்லையென்றே
பொன்றிடச்செய்வல்லவனீயெமைப்படைக்கும்
பொற்புடையானென்னினதுபொருந்திடாதே. (17)

623 பொருந்துசகமனைத்தினையும்பொய்பொய்யென்று
புகன்றபடிமெய்யென்றேபோதரூபத்
திருந்தபடியென்றிருப்பதென்றேயன்றோ
வெம்பெருமான்யான்கவலையெய்தாக்காலம். (18)

624 காலமேகாலமொருமூன்றுங்காட்டுங்
காரணமேகாரணகாரியங்களில்லாக்
கோலமேயெனைவாவாவென்றுகூவிக்
குறைவறநின்னருள்கொடுத்தாற்குறைவோசொல்லாய் ( )

625 சொல்லாயதொகுதியெல்லாங்கடந்துநின்ற
சொரூபானந்தச்சுடரேதொண்டனேனைக்
கல்லாகப்படைத்தாலுமெத்தநன்றே
காணமுடனுறவுகலக்கமாட்டேன். (20)

626 கலங்காதநெஞ்சுடையஞானதீரர்
கடவுளைக்காணவேகாயமாதி
புலங்காணார்நானொருவன்ஞானம்பேசிப்
பொய்க்கூடுகாத்ததென்னபுதுமைகண்டாய். (21)

627 கண்டிலையோயான்படும்பாடெல்லாமூன்று
கண்ணிருந்துந்தெரியாதோகசிந்துள்ளன்பர்
தொண்டரடித்தொண்டனன்றோகருணைநீங்காச்
சுத்தபரிபூரணமாஞ்சோதிநாதா. (22)

628 சோதியாயிருட்பிழம்பைச்சூறையாடுந்
தூவெளியேயெனைத்தொடர்ந்துதொடர்ந்தெந்நாளும்
வாதியாநின்றவினைப்பகையைவென்ற
வாழ்வேயிங்குனைப்பிரிந்துமயங்குகின்றேன். (23)

629 மயக்குறுமென்மனமணுகாப்பாதைகாட்டி
வல்வினையைப்பறித்துனையேவாழ்வேநானென்
செயக்கடவேன்செயலெல்லாநினதேயென்று
செங்கைகுவிப்பேனல்லாற்செயல்வேறில்லை· (24)

630 வேறுபடுஞ்சமயமெல்லாம்புகுந்துபார்க்கின்
விளங்குபரம்பொருளேநின்விளையாட்டல்லான்
மாறுபடுங்கருத்தில்லைமுடிவின்மோன
வாரிதியினதித்திரள்போல்வயங்கிற்றம்மா. (25)

631 அம்மாவீததிசயந்தானன்றேவன்றே
வகண்டநிலையாக்கியென்னையறிவாம்வண்ணஞ்
சும்மாவேயிருக்கவைத்தாயையாவாங்கே
சுகமயமாயிருப்பதல்லாற்சொல்வானென்னே. (26)

632 என்னைநான்பிறந்துழலவந்தவாறிங்
கெனக்கெனவோர்செயலிலையேயேழையென்பான்

முன்னைசெய்வினையெனவும்பின்னைவந்து
மூளும்வினையெனவும்வரமுறையேயெனந்தாய். (27)

633 தாயானதண்ணருளைநிரம்பவைத்துத்
தமியேனைப்புரவாமற்றள்ளித்தள்ளிப்
போயானதென்கொலைபாவேகதேசம்
பூரணத்துக்குண்டோதான் புகலல்வேண்டும். (28)

634 புகலரியநின்வினையாட்டென்னையெந்தாய்
புன்மையறிவுடையவென்னைப்பொருளாப்பண்ணி
யிகல்வினைக்குமலமாயைகன்மத்தோடே
யிடருறவுஞ்செய்தனையேயிரக்கமீதோ. (29)

635 இரக்கமொடுபொறையிதலறிவாசார
மில்லேனைநல்லோர்களீட்டங்கண்டாற்
கரக்குமியல்புடையேன்பாழ்நெஞ்சமெந்தாய்
கருந்தாதோவல்லுருக்கோகரியகல்லோ. (30)

பராபரக்கண்ணி.

636 சீராருந்தெய்வத்திருவருளாம்பூமிமுதற்
பாராதியாண்டபதியேபராபரமே. 1

637 கண்ணாரக்கண்டோர்கருப்பொருள்காணுமலருள்
விண்ணூடிருந்தவின்பவெற்பேபராபரமே. 2

638 சிந்தித்தவெல்லாமென்சிந்தையறிந்தேயுதவ
வந்தகருணைமழையேபராபரமே. 3

639 ஆராவமுதேயரசேயானந்தவெள்ளப்
பேராறேமோனப்பெருக்கேபராபரமே. 4

640 ஆரறிவாரென்னவனந்தமறையோலமிடும்
பேரறிவேயின்பப்பெருக்கேபராபரமே. 5

641 உரையிறந்தவன்பருளத்தோங்கொளியாயோங்கிக்
கரையிறந்தவின்பக்கடலேபராபரமே. 6

642 எத்திக்குந்தானாகியென்னிதயத்தேயூறித்
தித்திக்குமானந்தத்தேனேபராபரமே. 7

643 திக்கொடுகீழ்மேலுந்திருவருளாம்பொற்பறித்தோர்
கைக்குள்வளர்நெல்லிக்கனியேபராபரமே. 8

644 முத்தேபவளமேமொய்த்தபசும்பொற்சுடரே
சித்தேயென்னுள்ளத்தெளிவேபராபரமே. 9

645 கண்ணேகருத்தேயென்கற்பகமேகண்ணிறைந்த
விண்ணேயானந்தவியப்பேபராபரமே. 10

646 வாக்காய்மனதாய்மனவாக்கிறந்தவர்பாற்
ருக்காதேதாக்குந்தனியேபராபரமே. 11

647 பார்த்தவிடமெல்லாம்பரவெளியாய்த்தோன்றவொரு
வார்த்தைசொல்லவந்தமனுவேபராபரமே. 12

648 வானந்தமண்ணினந்தம்வைத்துவைத்துப்பார்க்கவெனக்
கானந்தந்தந்தவரசேபராபரமே. 13

649 அன்பைப்பெருக்கியெனதாருயிரைக்காக்கவந்த
வின்பப்பெருக்கேயிறையேபராபரமே. 14

650 வானமெல்லாங்கொண்டமவுனமணிப்பெட்டகத்துக்
கானபணியானவணியேபராபரமே· 15

651 ஓடுமிருநதியுமொன்றாகக்கண்டவர்க
ணாடும்பொருளானநட்பேபராபரமே. 16

652 சித்தநினைவுஞ்செயுஞ்செயலுநீயெனவா
முத்தமர்கட்காணவுறவேபராபரமே. 17

653 போதாந்தப்புண்ணியர்கள்போற்றிசயபோற்றியெனும்
வேதாந்தவீட்டில்விளக்கேபராபரமே. 18

654 முத்தாந்தவீதிமுளரிதொழுமன்பருக்கே
சித்தாந்தவீதிவருந்தேவேபராபரமே. 19

655 ஏனந்தருமுடலமென்னுயிரென்பதற
வானந்தம்வேண்டியலந்தேன்பராபரமே. 20

656 என்புருகிநெஞ்சமிளகிக்கரைந்துகரைந்
தன்புருவாய்நிற்கவலந்தேன்பராபரமே 21

657 சுத்தவறிவாய்ச்சுகம்பொருந்தினல்லாலென்
சித்தந்தெளியாதென்செய்வேன்பராபரமே. 22

658 மாறாவனுபூதிவாய்க்கினல்லாலென்மயக்கந்
தேறாதென்செய்வேன்சிவமேபராபரமே. 23

659 தாகமறிந்தின்பநிட்டைதாராயேலாகெடுவேன்
றேகம்விழுந்திடினென்செய்வேன்பராபரமே. 24

660 அப்பாவென்னெப்பிழைக்கைப்பொறுக்கிலென்போற்றியெ
ன்று, செப்புவதல்லால்வேறென்செய்வேன்பராபரமே.

661 உற்றறியுமென்னறிவுமுட்கருவிபோற்சவிமாண்
டற்றவின்பந்தந்திலையேயையாபராபரமே. 26

662 சொல்லாலடங்காச்சுகக்கடலில்வாய்மடுக்கி
னல்லாலென்றாகமறுமோபராபரமே. 27

663 பாராயோவென்னைமுகம்பார்த்தொருகாலென்கவலை
தீராயோவாய்திறந்துசெப்பாய்பராபரமே. 28

664 ஓயாதோவென்கவலையுள்ளேயானந்தவெள்ளம்
பாயாதோவையாபகராய்பராபரமே. 29

665 ஓங்காரவுனைப்பிரிந்தாருள்ளங்கனலில்வைத்த
பாகோமெழுகோபகராய்பராபரமே. 30

666 கூர்த்தவறிவத்தனையுங்கொள்ளைகொடுத்துன்னருளைப்
பார்த்தவனுமென்னைமுகம்பாராய்பராபரமே. 31

7 கடலைப்புதேதேனேயென்கண்ணேகலைப்
படமுடியாதென்னைமுகப்பாய்பராபரமே. 32

8 உள்ளமறிவாயுழப்பறிவாய்நானேழை
கள்ளிவிழுன்மெத்தத்தவிப்பேன்பராபரமே. 33

9 கன்றுக்குச்சேதாக்கனிந்திரங்கல்போலவெனக்
கென்றிரங்குவாய்கருணைபெய்தாய்பராபரமே. 34

0 எண்ணமெலாமெண்ணியெண்ணியேழைநெஞ்சம்
புண்ணாகச்செய்ததினிப்போதும்பராபரமே. 35

1 ஆழித்துரும்பெனவேயலைந்துழன்றடிமை
பாழிற்றிரிவதென்னபாவம்பராபரமே. 36

2 கற்றறிவாலுன்னைநான்கண்டவன்போற்கூத்தாடிற்
குற்றமென்றெனெஞ்சேகொதிக்கும்பராபரமே. 37

3 ஐயோவுனைக்காண்பானாசைகொண்டதத்தனையும்
பொய்யோவெளிபாப்புகலாய்பராபரமே. 38

4 துன்பக்கண்ணீரிற்றுளைந்தேற்குன்றனந்த
வின்பக்கண்ணீர்வருவதெந்நாள்பராபரமே. 39

5 வஞ்சனையும்பொய்யுமுள்ளேவைத்தழுக்காறுவளரு
நெஞ்சனுக்குமுண்டோநெறிதான்பராபரமே. 40

6 பாசம்போய்நின்றவர்போற்பாராட்டியானுனு
யோசம்போனேனென்முறையோபராபரமே. 41

7 நன்றறிவேன்றீதறியேனென்றுநின்றவனு
ரென்றறியேனேழையென்னேபராபரமே. 42

8 இன்றபுதிதன்றேயெளியேன்படுந்துயர
மொன்றுமறியாயோவுரையாய்பராபரமே. 43

எத்தனைதான்சன்மமெடுத்தெத்தனைநான்பட்டதுய
ரத்தனையுமேயறிந்ததன்றோபராபரமே. 44

680 இந்தநாட்சற்றுமிரங்கிலையேற்காலன்வரு
மந்தநாட்காக்கவல்லாரார்காண்பராபரமே. 45

681 உற்றுற்றுநாடியுளமருண்டபாவியைநீ
சற்றிரங்கியாளத்தகாதோபராபரமே. 46

682 எள்ளளவுநின்னைவிடவில்லையென்னைமயக்கிற்
றள்ளுதலாலென்னபலன்சாற்றாய்பராபரமே. 47

683 பாடிப்படித்துலகிற்பாராட்டிநிற்பதற்கோ
தேடியெனையடிமைசேர்த்தாய்பராபரமே. 48

684 சொன்னதைச்சொல்வதல்லாற்சொல்லறவென்சொல்லிறு
திக், கென்னதைச்சொல்வேனெளியேன்பராபரமே. ()

685 சொல்லும்பொருளுமற்றுச்சும்மாவிருப்பதற்கே
யல்லும்பகலுமெனக்காசைபராபரமே. 50

686 நேசநிருவிகற்பநிட்டையல்லாலுன்னடிமைக்
காசையுண்டோநீயறியாதன்றேபராபரமே. 51

687 துச்சமெனவேண்டாமித்தொல்லுலகிலல்லல்கண்டா
லச்சமிகவுடையேனையாபராபரமே. 52

688 கண்ணாவாரேனுமுனைக்கைகுவியாராயினந்த
மண்ணாவார்நட்பைமதியேன்பராபரமே. 53

689 கொல்லாவிரதங்குவலயமெல்லாமோங்க
வெல்லார்க்குஞ்சொல்லுவதென்னிச்சைபராபரமே. 54

690 எத்தாற்பிழைப்பேனோவெந்தையேநின்னருட்கே
பித்தானேனென்மெத்தவுநான்பேதைபராபரமே. 55

691 வாயினாற்பேசாமவுனத்தைவைத்திருந்துந்
தாயிலார்போனான்றளர்ந்தேன்பராபரமே. 56

692 அன்னையிலாச்சேய்போலலக்கணுற்றேன்கண்ணா
வென்னகத்திற்றாய்போலிருக்கும்பராபரமே. 57

693 உற்றுனைநோக்கிற்றுயரமுள்ளுள்ளேசெந்தீயாய்ப்
பற்றநோக்கேதென்னைமுகம்பார்நீபராபரமே. (58)

694 பொய்யனிவனென்றுமெள்ளப்போதிப்பார்சொற்கேட்டு
கைவிடவும்வேண்டாமென்கண்ணேபராபரமே. (59)

695 எண்ணமறிந்தேயிளைப்பறிந்தேயேழையுய்யும்
வண்ணந்திருக்கருணைவையாய்பராபரமே. (60)

696 நாட்டாதேயென்னையொன்றினாட்டியிதமகிதங்
காட்டாதேயெல்லாநீகண்டாய்பராபரமே. (61)

697 உன்னைநினைந்துன்னிறைவினுள்ளேயுலாவுமென்னை
யன்னைவயிற்றினடைக்காதேபராபரமே. (62)

698 பரமுனக்கென்றெண்ணும்பழக்கமேமாறு
வரமெனக்குத்தந்தருளென்வாழ்வேபராபரமே. (63)

699 வந்தித்துநின்னைமறவாக்கடனைச்
சிந்திக்கநின்னதருள்செய்யாய்பராமே. (64)

700 எவ்வுயிருமென்னுயிர்போலெண்ணியிரக்கவுநின்
றெய்வருட்கருணைசெய்யாய்பராபரமே. (65)

701 வெட்டவெளிப்பேதையன்பால்வேறுகபடொன்றறியேன்
கிட்டருடன்சேரனந்ததெண்டன்பராபரமே. (66)

702 இரவுபகலற்றவிடத்தேகாந்தயோகம்.
வரவுந்திருக்கருணைவையாய்பராபரமே (67)

703 மால்காட்டிசிந்தைமயங்காமனின்றுசுகக்
கால்காட்டிவாங்காதேகண்டாய்பராபரமே. (68)

704 எப்பொருளுநீயெனவேயெண்ணிநான்றோன்றாக
வைப்பையழியாநிலையாவையாய்பராபரமே. (69)

705 சும்மாவிருப்பதுவேசுட்டற்றபூரணமென்
றெம்மாலறிதற்கெளிதோபராபரமே. (70)

706 முன்னோடுபின்பக்கமுடியடிநாட்பண்ணறநின்
றன்னொடுநானிற்பதென்றோசாற்றாய்பராபரமே. (71)

707 மைவ்வண்ணந்தீர்ந்தமவுனிசொன்னதெவ்வண்ண
மவ்வண்ணநிட்டையருளாய்பராபரமே. (72)

708 வித்தன்றியாதும்விளைவதுண்டோநின்னருளாஞ்
சித்தன்றியாங்களுண்டேசெப்பாய்பராபரமே. (73)

709 ஆங்காரமற்றுன்னறிவானவன்பருக்கே
தூங்காதூக்கமதுதூக்கும்பராபரமே. (74)

710 சிந்தையவிழ்ந்தவிழ்ந்துசின்மயமாநின்னடிக்கே
வந்தவர்க்கேயின்பநிலைவாய்க்கும்பராபரமே. (75)

711 சொல்லாடாவூமரைப்போற்சொல்லிறந்துநீயாகி
னல்லாலெனக்குமுத்தியாமோபராபரமே. (76)

712 பேச்சாகாமோனம்பிறவாமுளைத்ததென்றற்
காய்ச்சாச்சுமேற்பயனுண்டாமோபராபரமே. (77)

713 கெட்டியென்றுன்னன்பர்மலங்கெட்டயர்ந்தோர்பூரணமாந்
தொட்டிலுக்குட்சேயபோற்றுயின்றார்பராபரமே. (78)

714 காட்டவருளிருக்கக்காணாதிருண்மலத்து
நாட்டமெனக்குவரனன்றோபராபரமே. (79)

715 எத்தன்மைக்குற்றமியற்றிடினுந்தாய்பொறுக்கு
மத்தன்மைநின்னருளுமன்றோபராபரமே. (80)

716 எத்தனையோதேர்ந்தாலுமென்னாலேயின்பமுண்டோ
சித்துருவேயின்பச்சிவமேபராபரமே. (81)

717 மண்ணொடுவிண்காட்டிமறைந்துமறையாவருளைக்
கண்ணொடுகண்ணாகவென்றுகாண்பேன்பராபரமே. (82)

718 பஞ்சரித்துநின்னைப்பலகாலிரந்ததெல்லா
மஞ்சலெனும்பொருட்டேயன்றோபராபரமே. (83)

9 எங்கெங்கேபார்த்தாலுமெவ்வுயிர்க்குமவ்வுயிரா
யங்கங்கிருப்பதுநீயன்றோபராபரமே. (84)

20 அனைத்துமாய்நின்றேயான்வேறாநின்னை
நினைக்குமாறெங்கேநிகழ்த்தாய்பராபரமே. (85)

21 நின்போதத்தாலேநினைப்புமறப்புமென்றா
லென்போதமெங்கேயியம்பாய்பராபரமே. (86)

22 ஒன்றைநினைந்தொன்றைமறந்தோடுமனமெல்லாநீ
யென்றறிந்தாலெங்கேயியக்கும்பராபரமே. (87)

3 கொழுந்தில்வயிரமெனக்கோதறவுள்ளன்பி
லழுந்துமவர்க்கேசுகமுண்டாகும்பராபரமே. (88)

4 பற்றுப்பயிர்க்குப்படர்கொழுந்துபோற்பருவம்
பெற்றவர்க்கேநின்னருடான்பேராம்பராபரமே. (89)

5 யோக்கியர்க்கேஞானமொழுங்காம்பேரன்பான
தாகியரும்யோகமுன்னேசார்ந்தோர்பராபரமே. (90)

6 அல்லும்பகலுமறிவாகிநின்றவர்க்கே
சொல்லும்பொருளுஞ்சுவைகாண்பராபரமே. (91)

7 எச்சிலென்றுபூவையிகழ்ந்தோர்க்குனைப்போற்றப்
பச்சிலையுங்கிள்ளப்படுமோபராபரமே. (92)

8 அந்தக்கரணமடங்கத்துறப்பதுவே
யெந்தத்துறவினுநன்றெந்தாய்பராபரமே. (93)

9 தன்னையறிந்தாற்றலைவன்மேற்பற்றலது
பின்னையொருபற்றுமுண்டோபேசாய்பராபரமே. (94)

0 அன்பாற்கரைந்துகண்ணீராறுகண்டபுண்ணியருக்
குன்பால்வரவழிதானுண்டோபராபரமே. (95)

1 தன்னையறிந்தருளேதாரகமாநிற்பதுவே
யுன்னையறிதற்குபாயம்பராபரமே. (96)

732 கற்றகலையாலிலைதான்காணுமோகாண்பதெல்லா
மற்றவிடத்தேவெளியாமன்றோபராபரமே. (97)

733 கண்மூடிக்கண்விழித்துக்காண்பதுண்டோநின்னருளாம்
விண்மூடினெல்லாம்வெளியாம்பராபரமே. (98)

734 நேரேநினதருளென்னெஞ்சைக்கவரினென்றும்
பாரேன்சுகமுப்படைப்பேன்பராபரமே. (99)

735 வான்காணவேண்டின்மலையேறலொக்குமுன்னை
நான்காணப்பாவனைசெய்நாட்டம்பராபரமே. (100)

736 வாதனைவிட்டுன்னருளின்மன்னிலல்லால்வேறுமொரு
சாதனைதானுண்டோநீசாற்றாய்பராபரமே. (101)

737 பாரகமும்விண்ணகமும்பற்றாகநிற்பதருட்
டாரகத்தைப்பற்றியன்றோசாற்றாய்பராபரமே. (102)

738 விளக்குந்தகளியையும்வேறென்றார்நின்னைத்
துளக்கமறச்சிவனென்றுசொல்வார்பராபரமே. (103)

739 பாராதிநீயாப்பகர்ந்தாலகமெனவு
மாராயுஞ்சீவனுநீயாங்காண்பராபரமே. (104)

740 பொய்யைப்பொய்யென்றறியும்போதத்துக்காதரவும்
மெய்யருளேயன்றோவிளம்பாய்பராபரமே. (105)

741 வருவான்வந்தேனெனல்போன்மன்னியழியருஞ்ச[illegible]
தெரிவாகவில்லையென்றதிரம்பராபரமே. (106)

742 மாயாசகமிலையேயென்மற்றெனக்கோர்பற்றுமிலை
நீயேநானென்றுவந்துநிற்பேன்பராபரமே. (107)

743 வானாதிநீயெனவேவைத்தமறையென்னையுநீ
தானாகச்சொல்லாதோசாற்றாய்பராபரமே. (108)

744 வெள்ளக்கருணைமதவேழமடாநின்னருட்செங்
கள்ளக்கருத்தேதகவளப்பராபரமே. (109)

745 வண்டாய்த்துவண்டுமவுனமலரணைமேற்
கொண்டார்க்கோவின்பங்கொடுப்பாய்பராபரமே. (110)

746 மாயைமுதலாம்வினைநீமன்னுயிர்நீமன்னுயிர்சேர்ந்
தாயுமறிவானதுநீயன்றோபராபரமே. (111)

747 என்னறிவும்யானுமெனதென்பதுவுமாமிவைக
ணின்னவையேயன்றோநிகழ்த்தாய்பராபரமே. (112)

748 பாரறியாதண்டப்பரப்பறியாதுன்பெருமை
யாரறிவார்நானோவறிவேன்பராபரமே. (113)

749 அண்டமனைத்திலுமாயப்பாலுக்கப்பாலுங்
கொண்டநின்னையாரறிந்துகொள்வார்பராபரமே. (114)

750 ஒப்புயர்வொன்றின்றியொலிபுகாமோனவட்டக்
கப்பலுக்காம்வான்பொருணீகண்டாய்பராபரமே. (115)

751 என்போலெளியவருமெங்கெங்கும்பார்த்தாலு
முன்போல்வலியவருமுண்டோபராபரமே. (116)

752 பார்க்கினண்டபிண்டப்பரப்பனைத்துநின்செயலே
யார்க்குஞ்செயலிலையேயையாபராபரமே. (117)

753 ஒன்றேபலவேயுருவேயருவேயோ
வென்றேயழைப்பதுன்னையென்றோபராபரமே (118)

754 செப்புவதெல்லாஞ்செபநான்சிந்திப்பதெல்லாநின்
னொப்பிறியானமெனவோர்ந்தேன்பராபரமே. (119)

755 ஆரிருந்தென்னார்போயென்னாமுதாநின்னருளின்
சீரிருந்தாலுய்வேன்சிவமேபராபரமே. (120)

756 வஞ்சகமன்வாதனைக்கும்வன்பிறவிவேதனைக்கு
மஞ்சியுனையடைந்தேனையாபராபரமே. (121)

757 எந்தப்படியுன்னிதயமிருந்ததெமக்
கந்தப்படிவருவதன்றோபராபரமே. (122)

758 எக்கேதந்தானுமெனைப்பிரியாதென் னுயிராய்ச்
சிந்தைகுடிகொண்டவருட்டேவேபராபரமே. (123)

759 அஞ்சலஞ்சலென்றடிமைக்கப்போதைக்கப்போதே
நெஞ்சிலுணர்த்துநிறைவேபராபரமே. (124)

760 என்னையுன்றன்கைக்களித்தார்யாவரென்னையான்கொடுத்துப்
பின்னையுன்றற்பெற்றநலம்பேசேன்பராபரமே. (125)

761 வாய்பேசாவூமையெனவைக்கவென்றோ மவுனத்
தாயாகவந்தருளைத்தந்தாய்பராபரமே. (126)

762 தன்னைத்தந்தென்னைத்தடுத்தாண்டநின் கருணைக்
கென்னைக்கொண்டென்னபலனெந்தாய்பராபரமே. (127)

763 மார்க்கண்டர்க்காகமறலிபட்டபாட்டையுன்னிப்
பார்க்கினன்பர்க்கென்னபயங்காண்பராபரமே. (128)

764 சுட்டியுணராமற்றுரியஙியாய்வெளியில்
விட்டநின்னையானறிவப்பேன்பராபரமே. (129)

765 சூதொன்றுமின்றியென்னைச்சும்மாவிருக்கவைத்தா
யீதொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (130)

766 வாயொன்றும்பேசாமவுனியாய்வந்தாண்ட
தேயொன்றும்போதாதோவின்பம்பராபரமே. (131)

767 என்றுமிருந்தபடிக்கென்னையெனக்களித்த
தொன்றும்போதாதோவுரையாய்பராபரமே. (132)

768 எண்டிசைக்கீழ்மேலானவெல்லாம்பெருவெளியாக்
கண்டவிடத்தென்னையுநான்கண்டேன்பராபரமே. (133)

769 பித்தனையேதும்மறியாப்பேதையனையாண்டவுனக்
கெத்தனைதான்றெண்டனிடுவேன்பராபரமே (134)

770 தாயர்கர்ப்பத்தூடனமுந்தண்ணீருந்தந்தருளு
நேயவுனையாரே நினையார்பராபரமே. (135)

771 விரிந்தமனமொடுங்கும்வெளியினாகப்
பரந்தவருள்வாழிபதியேபராபரமே. (136)

772. சிந்தனைபோய்நானெனல்போய்த்தேக்கவின்பமாமழையை
வந்துபொழிந்தனைநீவாழிபராபரமே. (137)

773 அந்தேதனையோர்வசனந்தந்தபடிக்கின்பமுமாய்
வந்தேதனையென்றனைநீவாழிபராபரமே. (138)

774 மண்ணும்விண்ணும்வந்துவணங்காவோநின்னருளைக்
கண்ணுறவுட்கண்டவரைக்கண்டாற்பராபரமே. (139)

775 என்றுக்கருணைபெற்றவின்பத்தபோதனர்சொல்
சென்றசென்றதிக்கனைத்துஞ்செல்லும்பராபரமே (140)

776 ஆடுவதும்பாடுவதுமானந்தமாகநின்னைத்
தேடுவதுநின்னடியார்செய்கைபராபரமே. (141)

777 பொங்கியநின்றண்ணருளைப்புட்கலமாப்பெற்றவர்கட்
கெங்கெழுந்தென்ஞாயிறியம்பாய்பராபரமே. (142)

778 பாலரொடுபேயர்பித்தர்பான்மையெனநிற்பதுவே
சீலமிகுஞானியர்தஞ்செய்கைபராபரமே. (143)

779 உண்டுடுத்துப்பூண்டிங்குலகத்தார்போற்றிரியுந்
தொண்டர்விளையாட்டேசுகங்கண்பராபரமே. (144)

80 கங்குல்பகலற்றதிருக்காட்சியர்கள்கண்டவழி
யெங்குமொருவழியேயெந்தாய்பராபரமே. (145)

781 காயநிலையல்லவென்றுகாண்பாருறங்குவரோ
தாயவருட்பற்றுத்தொடர்வார்பராபரமே. (146)

782 அப்புமுப்பும்போன்றவயிக்யபரானந்தர்தமக்
கொப்புவமைசெல்லவும்வாயுண்டோபராபரமே. (147)

783 சித்தந்தெளிந்துசிவமானோரெல்லோர்க்குங்
கொத்தடிமையானகுடிநான்பராபரமே. (148)

784 தம்முயிர்போலெவ்வுயிருந் தானென்றுதண்ணருள்கூர்
செம்மையருக்கேவலென்றுசெய்வேன்பராபரமே. (149)

785 விண்ணுக்கும்விண்ணாதிமேவுமுனக்கியான்பூசை
பண்ணிநிற்குமாறுபகராய்பராபரமே. (150)

786 நெஞ்சகமேகோயினினைவேசுகந்தமன்பே
மஞ்சனநீர்பூசைகொள்ளவாராய்பராபரமே. (151)

787 கெட்டவழியாணவப்பேய்கீழாகமேலான
சிட்டருனைப்பூசைசெய்வார்பராபரமே. (152)

788 கால்பிடித்துமூலக்கனலைமதிமண்டலத்தின்
மேலெழுப்பிற்றேகம்விழுமோபராபரமே. (153)

789 பஞ்சசுத்திசெய்துநின்னைப்பாவித்துப்பூசைசெய்தால்
விஞ்சியஞானம்விளங்கும்பராபரமே. (154)

790 அன்பர்பணிசெய்யவெனையாளாக்கிவிட்டுவிட்டா
லின்பநிலைதானேவந்தெய்தும்பராபரமே. (155)

791 மூர்த்திதலந்தீர்த்தமுறையாற்றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச்சற்குருவும்வாய்க்கும்பராபரமே. (156)

792 விரும்புஞ்சரியைமுதன்மெய்ஞ்ஞானநான்கு
மரும்புமலர்காய்கனிபோலன்றோபராபரமே. (157)

793 தானந்தவந்தருமஞ்சந்ததமுஞ்செய்வர்சிவ
ஞானந்தனையணைநல்லோர்பராபரமே. (158)

794 சொன்னத்தைச்சொல்லித்துடிக்கின்றவாணவப்பேய்க்
கின்னல்வருவதெந்நாளெந்தாய்பராபரமே. (159)

795 இன்றுவிருவினைவந்தேறியதுநானென்றோ
வன்றேவிளைந்ததன்றோவாற்றேன்பராபரமே. (160)

796 என்னைமுந்தானின்னைவிடவில்லையென்றால்யான்முனமே
பண்ணவினையேதுபகராய்பராபரமே. (161)

797 என்னையின்னதென்றறியாவேவழைக்குமாகெடுவேன்
முன்னைவினைகூடன்முறையோபராபரமே (162)

798 அறியாநான்செய்வினையையாநீகூட்டுங்
குறியேதெனக்குளவுகூறாய்பராபரமே. (163)

99 என்னைக்கெடுக்கவிசைந்தவிருவினைநோய்
தன்னைக்கெடுக்கத்தகாதோபராபரமே. (164)

00 வல்லமையேகாட்டுகின்றமாமாயைநானொருவ
னில்லையெனினெங்கேயிருக்கும்பராபரமே. (165)

01 முக்குணத்தாலெல்லாமுளைக்கப்பிரகிருதிக்
கிக்குணத்தைநல்கியதாரெந்தாய்பராபரமே. (166)

20 ஆற்றப்படாதுன்பமையவென்றலென்மனது
தேற்றப்படாதினியென்செய்வேன்பராபரமே. (107)

03 பூராயமாய்மனதைப்போக்கவறியாமலையோ
யாராயலைந்தேனரசேபராபரமே. (168)

04 சினமிறக்கக்கற்றாலுஞ்சித்தியெல்லாம்பெற்றாலு
மனமிறக்கக்கல்லார்க்குவாயேன்பராபரமே. (169)

05 வாதுக்குவந்தெதிர்த்தமல்லரைப்போற்பாழ்த்தமன
மேதுக்குக்கூத்தாடுதெந்தாய்பராபரமே. (170)

06 சூதாடுவார்போற்றுவண்டுதுவண்டுமனம்
வாதாடினென்னபலன்வாய்க்கும்பராபரமே. (171)

07 கொள்ளித்தேள்கொட்டிக்குதிக்கின்றபேய்க்குரங்காய்க்
கள்ளமனந்துள்ளுவதென் கண்டோபராபரமே. (172)

8 வந்ததையும்போனதையும்வைத்துவைத்துப்பார்த்திருந்தாற்
சிந்தையிதமகிதஞ்சேரும்பராபரமே. (173)

9 எறுமயிர்ப்பாலமுணர்விந்தவிடயங்கணொருப்
பாறெனவுநன்றாவறிந்தேன்பராபரமே. (174)

810 பொறிவழியேயழைபொறியாயுழல்வதுநின்
னறிவின்விதித்தவிதியாமோபராபரமே. (175)

811 பாசசாலங்களெல்லாம்பற்றுவிடஞானவைவாள்
வீசுநாளெந்நாள்விளம்பாய்பராபரமே. (176)

812 எந்தவுடலேனுமெடுத்தவுடனல்லதென்று
சிந்தைசெயவந்ததிறஞ்செப்பாய்பராபரமே. (177)

813 பொய்யெல்லாமொன்றாய்ப்பொருத்திவைத்தபொய்யுடலை
மெய்யென்றான்மெய்யாய்விடுமோபராபரமே. (178)

814 மின்னனையபொய்யுடலைமெய்யென்றுநம்பினையோ
நின்னைமறக்கைநெறியோபராபரமே. (179)

815 நித்தியமொன்றில்லாதநீர்க்குமிழிபோன்றவுடற்
கித்தனைதான்றுன்பமுண்டோவென்னேபராபரமே. ()

816 தேகமுறுமென்றுசடர்தேய்புவதென்னித்திரையி
னூகமறிந்தாற்பயந்தானுண்டோபராபரமே. (181)

817 ஏதைச்சுமையாவெடுப்பாரெடுத்தவுடற்
சேதமுறின்யாதுபின்னேசெல்லும்பராபரமே. (182)

818 தோற்பாவைநாலாட்சுமையாகுஞ்சீவனென்றிங்
கார்ப்பாலெடுத்ததெவராலேபராபரமே. (183)

819 ஞாலத்தைமெய்யெனவேநம்பிநாளுமென்றன்
காலத்தைப்போக்கியென்னகண்டேன்பராபரமே. ()

820 பொய்யுலகவாழ்க்கைப்புலைச்சேரிவாதனைநின்
மெய்யருளின்மூழ்கின்விடுங்காண்பராபரமே. (185)

821 நூலேணிவிண்ணேறநூற்குப்பருத்திவைப்பார்
போலேகருவிநன்றாற்போதும்பராபரமே. (186)

822 சின்னஞ்சிறியார்கள்செய்தமணற்சோற்றையொக்கு
மன்னுங்கலைஞானமார்க்கம்பராபரமே. (187

823 வாசகஞானத்தால்வருமோசுகம்பாழ்த்த
பூசலென்றுபோமோபுகலாய்பராபரமே. (188)

824 கேட்டதையேசொல்லுங்கிளிபோலநின்னருளி
னூட்டமின்றிவாய்பேசனன்றோபராபரமே. (189)

825 வெளியாயருளில்விரவுமன்பர்தேக
மொளியாய்ப்பிறங்கியதுமுண்டோபராபரமே. (190)

826 காலமொருமூன்றுங்கருத்திலுணர்ந்தாலுமதை
ஞாலந்தனக்குரையார்நல்லோர்பராபரமே. (191)

827 கொல்லாவிரதமொன்றுகொண்டவரேநல்லோர்மற்
றல்லாதார்யாரோவறியேன்பராபரமே. (192)

828 இல்லாதகாரியத்தைபிச்சித்துச்சிந்தைவழி
செல்லாமைநல்லோர்திறங்காண்பராபரமே. (193)

829 ஏதுவந்துமேதொழிந்துமென்னநீயானென்னார்கள்
போதகிலைகண்டபுலத்தோர்பராபரமே. (194)

830 ஆயிரஞ்சொன்னாலுமறியாதவஞ்சநெஞ்சப்
பேயரொடுகூடிற்பிழைகாண்பராபரமே. (195)

831 மாயமயக்கொழிந்தார்மற்றொன்றைநாடுவரோ
நேயவருணிலையினிற்பார்பராபரமே. (196)

832 நித்திரையிற்செத்தபிணநேருமுடற்கிச்சைவையாச்
சுத்தர்களேநல்லதுறவோர்பராபரமே. (197)

833 எந்நெஞ்சமேனுமிரங்குமேநின்னருட்குக்
கன்னெஞ்சருமுளரோகாட்டாய்பராபரமே. (198)

834 மந்தவறிவாகியின்பம்வாயாதிருந்தலைந்தாற்
சிந்தைமயங்காதோவென்செய்வேன்பாராபரமே. (199)

835 தேடினேனென்றிக்கனைத்துந்தெண்டனிட்டேன்சிந்தைநைந்து
வாடினேனென்மயக்கமாற்றுப்பராபரமே. (200)

836 மடிமையெனுமொன்றைமறுத்தன்றோவென்னை
யடிமைகொளல்வேண்டுமரசேபராபரமே. (201)

837 காலர்பயந்தீரவின்பக்காற்கபயமென்றெழுந்த
மாலைவளர்த்தனையேவாழிபராபரமே. (202)

838 நீர்ப்புற்புதமாய்நினைவருட்கேநின்றழியப்
பார்ப்பதல்லால்வேறுமொன்றைப்பாரேன்பராபரமே. ()

839 நீர்க்குமிழிபோலென்னினைவுவெளியாய்க்கரையப்
பார்க்குமிடமெல்லாமென்பார்வைபராபரமே. (204)

840 ஆடியோய்ப்பப்பரம்போலாசையுடனெங்குமுனைத்
தேடியோய்கின்றேனென்செய்வேன்பராபரமே. (205)

841 வேதாந்தஞ்சித்தாந்தம்வேறென்னார்கண்களிக்கு
நாதாந்தமோனநலமேபராபரமே. (206)

842 ஆனந்தமானநின்னையன்றியொன்றையுன்னாத
மோனந்தமியேற்குமுத்திபராபரமே. (207)

843 ஏதுக்குமுன்னைவிடவில்லையென்றுமென்கருத்தைச்
சோதிக்கவேண்டாநான்சொன்னேன்பராபரமே, (208)

844 முத்தியிலுந்தேகமிசைமூவிதமாஞ்சித்திபெற்றோ
ரத்தனைபேரென்றுரைப்பதெந்தாய்பராபரமே, (209)

845 நீயன்றிநானார்நினைவாரென்னெஞ்சகமார்
தாயன்றிச்சூலுண்டோசாற்றாய்பராபரமே. (210)

846 அங்கமேநின்வடிவமானசுகர்கூப்பிடநீ
யெங்குமேனேனென்றதென்னேபராபரமே. (211)

847 கொள்ளைவெள்ளத்தண்ணருண்மேற்கொண்டுசுழித்தார்த்திழு
த்தாற், கள்ளமனக்கப்பலெங்கேகாணும்பராபரமே. (212)

848 எக்கலையுங்கற்றுணர்ந்தோமென்றவர்க்குஞ்சம்மதஞ்சொல்
வக்கணையாலின்பம்வருமோபராபரமே. (213)

849 கல்லெறியப்பாசிகலைந்துநன்னீர்காணுநல்லோர்
சொல்லுணரின்ஞானம்வந்துதோன்றும்பராபரமே ()

850 நின்னையுணர்ந்தோர்கடமைநிந்தித்தபேயறிஞ
ரென்னகதிபெறுவாரெந்தாய்பராபரமே. (215)

851 என்னதியானென்னலற்றோரெங்கிருந்துபார்க்கினுநின்
சந்நிதியாநீபெரியசாமிபராபரமே. (216)

852 சோற்றுத்துருத்திச்சுமைசுமப்பக்கண்பிதுங்கக்
காற்றைப்பிடித்தலைந்தேன்கண்டாய்பராபரமே. (217)

853 உள்ளபடியொன்றையுரைக்கினவர்க்குள்ளூறவாய்க்
கள்ளமின்றியன்பாய்க்களிப்பேன்பராபரமே. (218)

854 அடுத்தவியல்பாகவொன்றையான்பகர்வதல்லாற்
றொடுத்தவொன்றையான்வேண்டிச்சொல்லேன்பராபரமே.

855 உள்ளமறியாதொருவரொன்றையுன்னிப்பேசிலையோ
துள்ளியிளங்கன்றுப்த்துடிப்பேன்பராபரமே. (220)

856 எல்லாருமின்புற்றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன்றறியேன்பராபரமே. (221)

857 முன்னாண்மெய்ஞ்ஞானமுனிவர்தவமீட்டுதல்போ
லிந்நாளிற்காணவெனக்கிச்சைபராபரமே. (222)

858 கன்மமென்பதெல்லாங்கரிசறவேமெய்ஞ்ஞான
தன்மநிலைசார்ந்ததன்பர்தன்மைபராபரமே. (223)

859 கண்டுயிலாதென்னறிவின்கண்ணூடேகாட்சிபெற
மண்டியபேரொளிநீவாழிபராபரமே.. (224)

860 நானானதன்மையென்றுநாடாமனாடவின்ப
வானாகிநின்றனைநீவாழிபராபரமே. (225)

861 அகத்தூடணுவணுவாயண்டமெல்லாந்தானாய்
மகத்தாகிநின்றனைநீவாழிபராபரமே. (226)

862 காரகமாங்கர்ப்பவறைக்கண்ணூடுமென்கண்ணே
வாரம்வைத்துக்காத்தனைநீவாழிபராபரமே. (227)

863 புரந்தோர்தந்தேசமென்பார்பூமியைப்போராடி
யிரந்தோருந்தம்மதென்பாரென்னைபராபரமே. (228)

864 மூர்த்தியெல்லாம்வாழியெங்கண்மோனகுருவாழியருள்
வார்த்தையென்றும்வாழியன்பர்வாழிபராபரமே ()

865 சொல்லும்பொருளுந்தொடாவருணிறைவிற்
செல்லும்படிக்கருணீசெய்தாய்பராபரமே. (230)

866 இற்றைவரைக்குள்ளாகவெண்ணரியசித்திமுத்தி
பெற்றவர்களெத்தனைபேர்பேசாய்பராபரமே. (231)

867 நாடுநகருநிசாணாட்டியபாளயமு
மீடுசெயுமோமுடிவிலெந்தாய்பராபரமே. (232)

868 தேடுந்திரவியமுஞ்சேர்ந்தமணிப்பெட்டகமுங்
கூடவருந்துணையோகூறாய்பராபரமே. (233)

869 தேடாததேட்டினரேசெங்கைத்துலாக்கோல்போல்
வாடாச்சமநிலையில்வாழ்வார்பராபரமே. (234)

870 நீராய்க்கசிந்துருகிநெட்டுயிர்த்துநின்றேனைப்
பாராததென்னோபகராய்பராபரமே (235)

871 உள்ளபொருளாவியுடன்மூன்றுமன்றேதான்
கொள்ளைகொண்டநீயென்குறைதீர்பராபரமே. (236)

872 ஆழ்ந்தாயேயிவ்வுலகிலல்லலெல்லாந்தீர்ந்தருளால்
வாழ்ந்தாயேயென்றனைநீவாழிபராபரமே. (237)

873 தாராவருளையெல்லாந்தந்தெனையுநின்னருளின்
வாராயோவென்றனைநீவாழிபராபரமே. (238)

874 ஆசையுன்மீதல்லாலருளறியவேறுமொன்றிற்
பாசம்வையேனின்கருணைப்பாங்காற்பராபரமே. (239)

875 ஆதியந்தநீகுருவாயாண்டதல்லானின்னையன்றிப்
போதனையுமுண்டோபுகலாய்பராபரமே. (240)

876 தானாகவந்துதடுத்தாண்டெனையின்ப
வானாகச்செய்தவின்பவானேபராபரமே. (241)

877 பற்றற்றிருக்குநெறிபற்றிற்கடன்மலையுஞ்
சுற்றநினைக்குமனஞ்சொன்னேன்பராபரமே. (242)

878 படிப்பற்றுக்கேள்வியற்றுப்பற்றற்றுசிந்தைத்
துடிப்பற்றார்க்கன்றேசுகங்காண்பராபரமே. (243)

879 சத்தாகிநின்றோர்சடங்களிலிங்கமென
வைத்தாறுமுண்டேயென்வாழ்வேபராபரமே. (244)

880 சித்தநிருவிகற்பஞ்சேர்ந்தாருடற்றீபம்
வைத்தகர்ப்பூரம்போல்வயங்கும்பராபரமே. (245)

881 ஆதிகாலத்திலெனையாண்டனையேயிப்பானீ
போதியெனினெங்கேநான்போவேன்பராபரமே. ()

882 நாவழுத்துஞ்சொன்மலரோநாளுநிக்கும்பொன்மலரோ
தேவையுனக்கின்னதென்றுசெப்பாய்பராபரமே. (247)

883 கன்னறும்பாகாய்க்கருப்புவட்டாய்க்கற்கண்டா
யின்னமுதாயென்னுளிருந்தாய்பராபரமே. (248)

884 சிற்பரமேதற்பரமேதெய்வச்சுருதிசொன்ன
வற்புதமேயன்பேயறிவேபராபரமே. (249)

885 அறிவிப்பானீயென்றாலைம்புலன்கடந்த
நெறிநிற்பார்யாரேநிகழ்த்தாய்பராபரமே. (250)

886 அந்தக்கரணமெனுமாகாதபேய்களெனை
வந்துபிடித்தாட்டவழக்கோபராபரமே. (251)

887 ஐவரொடுங்கூடாமலந்தரங்கசேவைதந்த
தெய்வவறிவேசிவமேபராபரமே. (252)

888 அருளாகிநின்றசுகமாகாமலேயா
விருளாகிநிற்கவியல்போபராபரமே. (253)

889 அன்பரெல்லாமின்பமருந்திடவும்யானொருவன்
றுன்புறுதனன்றோநீசொல்லாய்பராபரமே. (254)

890 சந்ததமுநின்கருணைசாற்றுவதல்லால்வேறு
சிந்தையறியேனுன்றன்சித்தப்பராபரமே. (255)

891 நானெனக்குளாறுநாட்டத்தாலென்னைவிட்டுப்
போனாலுமுன்னைவிட்டுப்போகேன்பராபரமே. (256)

892 இக்காயம்பொய்யன்றோவீட்டத்துனக்கபயம்
புக்காதாருண்டோபுகலாய்பராபரமே. (257)

893 தானாதல்பூரணமேசாருமிடமுண்டுயிரும்
வானாதியுமொழுங்காய்மன்னும்பராபரமே. (258)

894 உன்னுமனங்கர்ப்பூரவுண்டைபோலேகரைய
மின்னுமானந்தவிளக்கேபராபரமே. (259)

895 நாட்பட்டலைந்தநடுக்கமெலாந்தீரவுனக்
காட்பட்டுந்துன்பமெனக்காமோபராபரமே. (260)

896 பாவிபடுங்கண்கலக்கம்பார்த்துமிரங்காதிருந்தா
லாவிக்குறுதுணையாரையாபராபரமே. (261)

897 நின்னிறைவேதாரகமாய்நின்றசுகமெய்தாம
லென்னிறைவேபாவித்தேனென்னேபராபரமே. (262)

898 நின்னைச்சரண்புகுந்தாளீகாக்கல்வேண்டுமல்லா
லென்னைப்புறம்விடுதலென்னேபராபரமே. (263)

899 மாறாதுன்பமெல்லாம்வந்துரைத்தானின்செவியி
லேறாதவாறேதியம்பாய்பராபரமே. (264)

900 விஞ்சுபுலப்பாடனைத்தும்வீறுதுன்பஞ்செய்யவந்த
வஞ்சுபுலவேடருக்குமாற்றேன்பராபரமே. (265)

901 கன்னங்கரியநிறக்காமராக்ஷசப்பேய்க்
கென்னையிலக்காகவைத்ததென்னேபராபரமே. (266)

902 சித்திநெறிகேட்டலசெகமயக்கஞ்சென்மமற
முத்திநெறிகேட்டன்முறைகாண்பராபரமே. (267)

903 சிந்தைசிதையச்சிதையாதவானந்த
மெந்தவகையாலேவந்தெய்தும்பராபரமே. (268)

904 கூர்த்தவறிவாலறியக்கூடாதெனக்குரவன்
றேர்த்தபடிதானே திரிந்தேன்பராபரமே. (269)

905 பத்தாருந்துப்பரமசுகம்யானருந்த
வெத்தனைநாள்செல்லுமியம்பாய்பராபரமே. (270)

906 தீரத்திறற்றுறவுசேராமலிவ்வுலகிற்
பாரத்தனம்பேசல்பண்போபராபரமே. (271)

907 இந்தவெளியினையுண்டேப்பமிடப்போறிவாத்
தந்தவெளிக்கேவெளியாய்ச்சார்ந்தேன்பராபரமே. ()

908 உணர்த்துமுனைநாடாதுணர்ந்தவைபோநாடி
யிணக்குறுமென்னேனமைதானென்னேபராபரமே. ()

909 உண்டுபோலின்றுமுலகைத்திரமெனவுட்
கொண்டுநான்பெற்றபலன்கூறுப்பராபரமே. (274)

910 உள்ளபடியாதுமெனவுற்றுணர்ந்தேனக்கணமே
கள்ளமனம்போனவழிகாணேன்பராபரமே. (275)

911 சித்தமவுனஞ்செயல்வாக்கெலாமவுனஞ்
சுத்தமவுனமென்பாற்றோன்றிற்பராபரமே. (276)

912 எண்ணில்பலகோடியுயிரெத்தனையாவத்தனைக்குங்
கண்ணிற்கலந்தவருட்கண்ணேபராபரமே. (277)

913 எனக்கினியாருன்போலுமில்லையென்றால்யானு
முனக்கினியனாகாவுளவேன்பராபரமே. (278)

914 அண்டபிண்டங்காணேகழும்புறமுமொன்றாக்
கண்டவென்னைநீகலந்தகாலம்பராபரமே. (279)

915 எத்தனையோகோடியெடுத்தெடுத்துச்சொன்னாலுஞ்
சித்தமிரங்கிலையென்செய்வேன்பராபரமே. (280)

916 அன்றந்தநால்வருக்குமற்புதமாநீயுரைத்த
தொன்றந்தவார்த்தையெனக்குண்டோபராபரமே. ()

917 அப்பனென்றுமன்னையென்றுமாரியனென்றும்புனையே
செப்புவதுமுன்னிலையின்சீர்காண்பராபரமே (282)

918 கட்டுங்கனமுமடந்தக்காலர்வரும்போதெதிர்த்து
வெட்டுந்தளமோவிளப்பாய்பராபரமே. (283)

919 பேசாதமோனநிலைபெற்றன்றோநின்னருளாம்
வாசாமகோசரந்தான்வாய்க்கும்பராபரமே. (284)

920 கற்றாலுங்கேட்டாலுங்காயமழியாதசித்தி
பெற்றாலுமின்பமுண்டோபேசாய்பராபரமே. (285)

921 கண்டவடிவெல்லாங்கரைக்கின்றவஞ்சனம்போ
லண்டமெல்லாநின்னருளேயன்றோபராபரமே. (286)

922 தன்செயலாலொன்றுமிலைதானென்றுனன்பாவி
நின்செயலாய்நில்லாநினைவேன்பராபரமே. (287)

923 கொலைகளவுகட்காமங்கோபம்விட்டாலன்றோ
மலையிலக்காநின்னருடான்வாய்க்கும்பராபரமே. (288)

924 தன்னையறியாதுசகந்தானுயிருந்துவிட்டா
லுன்னையறியவருளுண்டோபராபரமே. (289)

925 ஒன்றிரண்டென்றுன்னுவுணர்வுகொடுத்துள்ளபடி
யென்றுமென்னைவையாயிறைபேபராபரமே. (290)

926 கருதுமடியார்களுளங்காணவெளியாகுந்
துரியநிறைவானசுகமேபராபரமே. (291)

927 பொய்குவித்தநெஞ்சனருட்பொற்பறிந்து நிக்கனைத்துங்
கைகுவித்துநிற்பதெந்தக்காலம்பராபரமே. (292)

928 அத்துவிதமானவயிக்யவனுபவமே
சுத்தநிலையந்நிலையார்சொல்வார்பராபரமே. (293)

929 வைத்தசுவாலம்பின் மண்போமோமாயையினோர்க்
கெத்தனைபோதித்துமென்னுமெந்தாய்பராபரமே. ()

930 பூட்டற்றுத்தேகமற்றுப்போகுமுன்னேநின்னருளைக்
காட்டத்தகாதோவென்கண்ணேபராபரமே. (295)

931 சொல்லிற்பதர்களைந்துசொன்முடிவுகாணுதார்
நெல்லிற்பதர்போலநிற்பார்பராபரமே. (296)

932 அழுக்காற்றுநெஞ்சமழுங்கியபுன்மாக்க
ளிழுக்காற்றுலின்பநலமெய்தார்பராபரமே. (297)

933 தேகாதிபொய்யெனவேதேர்ந்தவுபசாந்தருக்கு
மோகாதியுண்டோமொழியாய்பராபரமே. (298)

934 சாதனையெல்லாமவிழ்த்தற்போதங்காட்டாதோர்
போதனைநீஙல்குவதெப்போதோபராபரமே. (299)

935 ஒன்றுமறியாமிருளாமுள்ளம்படைத்தவெனக்
கென்றுகதிவருவதெந்தாய்பராபரமே. (300)

936 சிந்திக்குந்தோறுமென்னுட்சிற்சுகமாயூற்றூறிப்
புந்திக்குணின்றவருட்பொற்பேபராபரமே. (301)

937 என்றுமடைந்தோர்கட்கிரங்கார்குறிப்பனைத்துங்
கன்றையுதைகாலிகதைகாண்பராபரமே. (302)

938 குற்றங்குறையக்குணமேலிடவருளை
யுற்றவரேயாவிக்குறவாம்பராபரமே. (303)

939 ஒருரையால்வாய்க்குமுண்மைக்கோ ரனந்தநூல்கோடிப்
பேருரையார்பேசிலென்னபேறும்பராபரமே. (304)

940 சொல்லுஞ்சமயநெறிச்சுற்றுக்குளேசுழலு
மல்லலொழிவதென்றைக்கைபராபரமே. (305)

941 பிடித்ததையேதாபிக்கும்பேராணவத்தை
யடித்துத்துரத்தவல்லாரார்காண்பராபரமே. (306)

942 நேசத்தானின்னைநினைக்குநினைவுடையா
ராசைக்கடலிலழுந்தார்பராபரமே. (307)

943 கள்ளாதுகட்டுணவுங்காரியமோநாமொருசொல்
கொள்ளாததோஷமன்றோகூறுப்பராபரமே. (308)

944 சென்றவிடமெல்லாந்திருவருளேதாரகமா
நின்றவர்க்கேயானந்தநிட்டைபராபரமே. (309)

945 நீட்சிகுறுகலிலாநித்யசுகாரம்பசக
சாட்சியாமுன்னைவந்துசார்ந்தேன்பராபரமே. (310)

946 வாணுதிதந்துவமாய்மன்னிநின்றகாரணநீ
காணுகிநிற்பதெந்தநாளோபராபரமே. (311)

947 காட்டத்திலங்கிகடையவந்தாலென்னவுன்னு
நாட்டத்தினூடுவந்தநட்பேபராபரமே. (312)

948 நித்திரையாய்த்தானேநினைவயர்ந்தானித்தநித்தஞ்
செத்தபிழைப்பானதெங்கள்செய்கைபராபரமே. ( )

949 இன்பநிட்டையெய்தாமல்யாதெனினுஞ்சென்றுமனந்
துன்புறுதல்வன்பிறவித்துக்கம்பராபரமே. (314)

950 பொய்யகலமெய்யானபோதநிலைகண்டோர்க்கோ
ரையமில்லையையமில்லையையாபராபரமே. (315)

951 மந்திரத்தையுன்னிமயங்காதெனக்கினியோர்
தந்திரத்தைவைக்கத்தகாதோபராபரமே. (316)

952 விண்கருணைபூத்ததென்னமேவியுயிர்க்குயிராய்த்
தன்கருணைதோன்றவருடாய்நீபராபரமே. (317)

953 தன்மயமாய்நின்றநிலைதானேகாணுகின்று
ணின்மயமாயெல்லாநிகழும்பராபரமே. (318)

954 ஏங்கியிடையுநெஞ்சவேழையைநீவாவென்றே
பாங்குபெறச்செய்வதுன்மேற்பாரம்பராபரமே. (319)

955 ஆண்டநின்னைநீங்காவடிமைகள்யாமாணவத்தைப்
பூண்டதென்னகன்மம்புகலாய்பராபரமே. (320)

956 எங்கணுநீயென்றாலிருக்கபடியெய்தாம
லங்குமிங்குமென்றலைபலாமோபராபரமே. (321)

957 கற்குமதுவுண்டுகளிக்கக்கல்லானின்னருளி
னிற்குமதுதந்ததுண்டோநீதான்பராபரமே. (322)

958 அண்டபகிரண்டமறியாதநின்வடிவைக்
கண்டவரைக்கண்டாற்கதியாம்பராபரமே. (323)

959 கலக்கமுறநெஞ்சைக்கலக்கித்திரும்பத்
துலக்குபவனீயலையோசொல்லாய்பராபரமே. (324)

960 சிந்தையுமென்போலச்செயலற்றடங்கிவிட்டால்
வந்ததெலாநின்செயலாவாழ்வேன்பராபரமே. (325)

961 பந்தமெலாந்தீரப்பரஞ்சோதிநீகுருவாய்
வந்தவடிவைமறவேன்பராபரமே. (326)

962 தானந்தமானசகசநிருவிகற்ப
வானந்தநிட்டையருளாய்பராபரமே. (327)

963 அல்லலெல்லாந்தீரவெனக்கானந்தமாகவொரு
சொல்லையென்பால்வைத்ததையென்சொல்வேன்பராபரமே.

964 சிந்தைமயக்கமறச்சின்மயமாய்நின்றவுன்னைத்
தந்தவுனக்கென்னையுநான்றந்தேன்பராபரமே. (329)

965 மைகாட்டுமாயைமயக்கமறநீகுருவாய்க்
கைகாட்டவுங்கனவுகண்டேன்பராபரமே. (330)

966 மால்வைத்தசிந்தைமயக்கறவென்சென்னிமிசைக்
கால்வைக்கவுங்கனவுகண்டேன்பராபரமே. (331)

967 மண்ணானமாயையெல்லாமாண்டுவெளியாகவிரு
கண்ணாரவுங்கனவுகண்டேன்பராபரமே. (332)

968 மண்ணீர்மையாலேமயங்காதுன்கையாலென்
கண்ணீர்துடைக்கவுநான்கண்டேன்பராபரமே. (333)

969 உள்ளதுணராவுணர்விலிமாபாவியென்றோ
மெள்ளமெள்ளக்கைநெகிழவிட்டாய்பராபரமே. (334)

970 எல்லாநினதுசெயலென்றெண்ணுமெண்ணமுநீ
யல்லாலெனக்குளதோவையாபராபரமே. (335)

971 பந்தமயக்கிருக்கப்பற்றொழிந்தேனென்றுளது
மிந்தமயக்கமெனக்கேன்பராபரமே. (336)

972 காட்சியெல்லாங்கண்ணைவிடக்கண்டதுண்டோயாதினுக்கு
மாட்சியுனதருளேயன்றோபராபரமே. (337)

973 எட்டுத்திசையுமொன்றாயின்பமாய்நின்றவுன்னை
விட்டுப்பிரியவிடம்வேறோபராபரமே. (338)

974 பிறியாதுயிர்க்குயிராய்ப்பின்னமறவோங்குஞ்
செறிவேயறிவேசிவமேபராபரமே. (339)

975 ஏதேதுசொன்னாலுமெள்ளளவுநீயிரங்காச்
சூதேதெனக்குளவுசொல்லாய்பராபரமே. (340)

976 கற்பனையாய்ப்பாடுகின்றேன்கண்ணீருங்கம்பலையுஞ்
சொற்பனத்துங்காணேனென்சொல்வேன்பராபரமே. (341)

977 வன்பொன்றுநீங்காமனதிறப்பமாறாப்பே
ரன்பொன்றும்போதுமெனக்கையாபராபரமே. (342)

978 ஏதுந்தெரியாவெளியேனைவாவெனநின்
போதநிலைகாட்டிற்பொறாதோபராபரமே. (343)

979 ஓராமலெல்லாமொழிந்தேற்குன்றெய்வவரு
ளாராதிருக்கத்தகுமோபராபரமே. (344)

980 மோனந்தருஞானமூட்டியெனக்குவட்டா
வானந்தவாழ்க்கையருளாய்ப்பராபரமே. (345)

981 வாடுமுகங்கண்டென்னைவாடாமலேகாத்த
நீடுங்கருணைநிறைவேபராபரமே. (346)

982 புந்தியினானின்னடியைப்போற்றுகின்றமெய்யடியார்
சிந்தையிறப்போநின்றியானம்பராபரமே. (347)

983 உனக்குவமையாக்கருணையுள்ளவரும்வன்மைக்
கெனக்குவமையானவருமில்லைபராபரமே. (348)

984 தாயிருந்தும்பிள்ளைதளர்ந்தாற்போலெவ்விடத்து
நீயிருந்துநான்றளர்ந்துநின்றேன்பராபரமே. (349)

985 வாயாற்கிணறுகெட்டவாறேபோல்வாய்பேசிப்
பேயானார்க்கின்பமுண்டோபேசாய்பராபரமே. (350)

986 பாவமென்றாலேதும்பயமின்றிச்செய்யவிந்தச்
சீவனுக்கார்போதந்தெரித்தார்பராபரமே. (351)

987 இன்பநிருவிகற்பமின்றேதாவன்றெனிலோ
துன்பம்பொறுப்பரிதுசொன்னேன்பராபரமே. (352)

988 கற்குநிலைகற்றார்க்கருவியவிழாதருளாய்ப்
நிற்குநிலைகற்பதுவேநீதம்பராபரமே. (353)

989 காச்சச்சுடர்விடும்பொற்கட்டிபோனின்மலமாய்ப்
பேச்சற்றவரேபிறவார்பராபரமே. (354)

990 பற்றொழிந்துசிந்தைப்பதைப்பொழிந்துதானேதா
னற்றிருப்பதென்றைக்கமைப்பாய்பராபரமே. (355)

991 உருவெளிதான்வாதவூரர்க்கல்லாலினமுங்
குருவழிநின்றார்க்குமுண்டோகூறாய்பராபரமே. (356)

992 தேகமியாந்தனுமொருசித்திபெறச்சீவன்முத்தி
யாகுநெறிநல்லநெறியையா பராபரமே. (357)

993 உலகநெறிபோற்சடலமோயவுயிர்முத்தி
யிலகுமெனல்பந்தவியல்போபராபரமே. (358)

994 பரமாப்பரவெளியாப்பார்ப்பதல்லான்மற்றெவர்க்குத்
திரமேதுமில்லைநன்றாத்தேர்ந்தேன்பராபரமே. (359)

995 தேடுவேனின்னருளைத்தேடுமுன்னேயெய்தினட
டாடுவேனானந்தமாவேன்பராபரமே. (360)

996 உள்ளங்குழையவுடல்குழையவுள்ளிருந்த
கள்ளங்குழையவென்றுகாண்பேன்பராபரமே. (361)

997 பட்டப்பகல்போலப்பாழ்த்தசிந்தைமாளினெல்லாம்
வெட்டவெளியாகவிளங்கும்பராபரமே. (362)

998 பார்க்கினனுப்போற்கிடக்கப்பாழ்ஞ்சிந்தையாளினென்னை
யார்க்குச்சரியிடலாமைபராபரமே. (363)

999 பாட்டுக்கோவன்பினுக்கோபத்திக்கோவன்பர்தங்க
ணீட்டுக்கெல்லாங்குறுகிநின்றாய்பராபரமே. (364)

1000 முந்தாந்தளித்தேதமூளைக்குநிலமாயெழுந்த
சித்தாந்தமார்க்கச்சிறப்பேபராபரமே. (365)

1001 உன்னாவெளியாயுறங்காதபேருணர்வா
யென்னாவிக்குள்ளேயிருந்தாய்பராபரமே. (366)

1002 தத்துவமெல்லாமகன்றதன்மையர்க்குச்சின்மயமா
நித்தமுத்தசுத்தநிறைவேபராபரமே. (367)

1002 உள்ளக்கொதிப்பலவுள்ளுள்ளேயானந்த
வெள்ளமலர்க்கருணைவேண்டுபராபரமே. (368)

1004 என்னைப்புரப்பதருளின்கடனாமென்கடனா
நின்னிற்பணியறவேதிற்கைபராபரமே. (369)

1005 தானேயாநன்னிலையைத்தந்தவருளானந்த
வானேமனுதீதவாழ்வேபராபரமே. (370)

1006 மண்ணாதிபூதமெல்லாம்வைத்திருந்தநின்னிறைவைக்
கண்ணாரக்கண்டுகளித்தேன்பராபரமே. (371)

1007 அறியாமையிதென்றறிவித்தவன்றேதான்
பிறியாவருணிலையுப்பெற்றேன்பராபரமே. (372)

1008 தீதெனவுநன்றெனவுந்தேர்ந்துநான்றேர்ந்தபடி
யேதுநடக்கவொட்டாதென்னேபராபரமே. (373)

1009 கண்டவறிவகண்டாகாரமெனமெய்யறிவிற்
கொண்டவர்க்கேமுத்திகொடுப்பாய்பராபரமே. (374)

1010 ஈறுகவல்வினைநாளென்னுமலின்பசுகம்
பேறும்படிக்கடிமைபெற்றேன்பராபரமே. (375)

1011 பெற்றானுபூதிபேசாதமோனநிலை
கற்றாருனைப்பிரியார்கண்டாய்பராபரமே. (376)

012 நீயேநானென்றுநினைப்புமறப்புமறத்
தாயேயனையவருடந்தாய்பராபரமே. (377)

013 சஞ்சலமற்றெல்லாநீதானென்றுணர்ந்தேனென்
னஞ்சலியுங்கொள்ளாயரசேபராபரமே. (378)

014 பூதமுதனாதவனைபொய்யென்றமெய்யரெல்லாங்
காதலித்தவின்பக்கடலேபராபரமே. (379)

015 வாக்குமனமொன்றுபட்டவார்த்தையல்லால்வெவ்வேறாய்ப்
போக்குடையவார்த்தைபொருந்தேன்பராபரமே. ()

016 வன்மையின்றியெல்லாமதித்துணர்வாய்க்காகெடுவேன்
றன்மையொன்றுந்தோயாத்தடையோபராபரமே. ()

017 பத்தர்சித்தர்வாழிபரிபக்குவர்கள்வாழிசெங்கோல்
வைத்தவர்கள்வாழிகுருவாழிபராபரமே. (382)

1018 கல்லாதேனானாலுங்கற்றுணர்ந்தமெய்யடியார்
சொல்லாலேநின்னைத்தொடர்ந்தேன்பராபரமே. (383)

1019 சொல்லிறப்பச்சற்குருவாய்த்தோன்றிச்சுகங்கொடுத்த
நல்லுரைக்கேகோத்தடிமைநான்காண்பராபரமே. ( )

1020 முத்திக்குவித்தானமோனக்கரும்புவழி
தித்தித்திடவிளைந்ததேனேபராபரமே. (385)

1021 நித்திரையும்பாழ்த்தநினைவுமற்றுநிற்பதுவோ
சுத்தவருணிலைநீசொல்லாய்பராபரமே. (386)

1022 மண்ணுமறிகடலுமற்றளவுமெல்லாமுன்
கண்ணிலிருக்கவுநான்கண்டேன்பராபரமே (387)

1023 பூட்டிவைத்துவஞ்சப்பொறிவழியேயென்றனைநீ
யாட்டுகின்றதேதோவறியேன்பராபரமே. (388)

1024 பொய்யுணர்வாயிந்தப்புழுக்கூட்டைக்காத்திருந்தே
னுய்யும்வகையுமுளதோபராபரமே. (389)

பைங்கிளிக்கண்ணி.

1025 அந்தமுடனாதியளவாமலென்னறிவிற்
சுந்தரவான்சோதிதுலங்குமோபைங்கிளியே. (1)

1026 அகமேவுமண்ணலுக்கென்னல்லலெல்லாஞ்சொல்லிச்
சுகமானநீபோய்ச்சுகங்கொடுவாபைங்கிளியே. (2)

1027 ஆவிக்குளாவியெனுமற்புதனார்சிற்சுகந்தான்
பாவிக்குங்கிட்டுமோசொல்லாய்நீபைங்கிளியே (3)

1028 ஆருமறியாமலென்னையந்தரங்கமாகவந்து
சேரும்படியிறைக்குச்செப்புவாபைங்கிளியே. (4)

1029 ஆறானகண்ணீர்க்கென்னங்கபங்கமானதையுங்
கூறுதென்றேகுதலைமொழிப்பைங்கிளியே. (5)

1030 இன்பருளவாடையழுக்கேறுமெமக்கண்ணல்சுத்த
வம்பரமாமாடையளிப்பானோபைங்கிளியே. (6)

1031 உன்னுமலொன்றிரண்டென்றோராமல்வீட்டுநெறி
சொன்னான்வரவும்வகைசொல்லாய்நீபைங்கிளியே (7)

1032 ஊருமிலார்பேருமிலாருற்றார்பெற்றாருடனே
யாருமிலாரென்னையறிவாரோபைங்கிளியே. (8)

1033 ஊரைப்பாராமலெனக்குள்ளகத்துநாயகனார்
சீரைப்பார்த்தாற்கருணைசெய்வாரோபைங்கிளியே. ()

1034 என்றுவிடியுமிறைவாவோவென்றென்று
நின்றநிலையெல்லாநிகழ்த்தாய்நீபைங்கிளியே. (10)

1035 எந்தமடலூடுமெழுதாவிறைவடிவைச்
சிந்தைமடலாவெழுதிச்சேர்ப்பேனோபைங்கிளியே. ()

1036 கண்ணுண்மணிபோலின்பங்காட்டியெனைப்பிரிந்த
திண்ணியருமின்னம்வந்துசேர்வாரோபைங்கிளியே. (12)

1037 ஏடார்மலர்சூடேனெம்பெருமான்பொன்னடியாம்
வாடாமலர்முடிக்குவாய்க்குமோபைங்கிளியே. (13)

1038 கல்லேன்மனநேரேன்கனிந்தவன்பேபூசையென்ற
நல்லோராபொல்லவெனையுநாடுவரோபைங்கிளியே. ()

1039 கண்டதனைக்கண்டுகலக்கந்தவிரெனவே
விண்டபெருமானையுநான்மேவுவனோபைங்கிளியே. ()

1040 காணாதகாட்சிகருத்துவந்துகாணாமல்
வீணாள்கழித்துமெலிவேனோபைங்கிளியே. (16)

1041 காந்தமிரும்பைக்கவர்ந்திழுத்தாலென்னவருள்
வேந்தனெனையிழுத்துமேவுவனோபைங்கிளியே. (17)

1042 காதலால்வாடினதுங்கண்டனையேயெம்மிறைவர்
போதரவாயின்பம்புசிப்பேனோபைங்கிளியே. (18)

1043 கிட்டிக்கொண்டன்பருண்மைகேளாய்பலவடிகொள்
பட்டிக்குமின்பமுண்டோசொல்லாய்நீபைங்கிளியே. ()

1044 கிட்டேராய்நெஞ்சிற்கிளர்வார்தழுவவென்று
னெட்டேராவரவர்நேசமென்னோபைங்கிளியே. (20)

1045 கூறுங்குணமுமில்லாக்கொள்கையினாரென்கவலை
யாறும்படிக்குமணைவாரோபைங்கிளியே. (21)

1046 சின்னஞ்சிறியேன்றன்சிந்தைகவர்ந்தாரிறைவர்
தன்னந்தனியேதவிப்பேனோபைங்கிளியே. (22)

1047 சிந்தைமருவித்தெளிவித்தெனையாள
வந்தகுருநாதனருள்வாய்க்குமோபைங்கிளியே. (23)

1048 சொல்லிறந்துநின்றசுகரூபப்பெம்மானை
யல்லும்பகலுமணைவேனோபைங்கிளியே. (24)

1049 தற்போதத்தாலேதலைகீழதாகவைய
னற்போதவின்புவரநாட்செலுமோபைங்கிளியே (25)

1050 தன்னையறியுந்தருணந்தனிற்றலைவ
னென்னையணையாதவண்ணமெங்கொளித்தார்பைங்கிளியே.

1051 தாங்கரியமையலெல்லாந்தந்தெனைவிட்டின்னருளாம்
பாங்கியைச்சேர்ந்தாரிறைக்குப்பண்போசொல்பைங்கிளியே

1052 தாவியதோர்யார்க்கடமாந்தன்மைவிட்டேயண்ணலிடத்
தோவியம்போலிற்கினெனையுள்குவரோபைங்கிளியே.(28)

1053 தீராக்கருவழக்கைத்தீர்வையிட்டங்கென்னையினிப்
பாரேறுதாண்டானைப்பற்றுவனோபைங்கிளியே. (29)

1054 தூங்கிவிழித்தென்னபலன்றூங்காமற்றூங்கிநிற்கும்
பாங்குகண்டாலன்றோபலன்காண்பேன்பைங்கிளியே.

1055 தொல்லைக்கவலைதொலைத்துத்தொலையாத
வெல்லையிலாவின்பமயமெய்துவனோபைங்கிளியே. ()

1056 என்னெஞ்சத்தன்பரெல்லாநாதரைச்சேர்ந்தன்பணைந்தார்
வன்னெஞ்சத்தாலேகான்வாழ்விழந்தேன்பைங்கிளியே

1057 நானேகருதின்வரநாடார்சும்மாவிருந்தாற்
றானேயணைவாரவர்தன்மையென்னேபைங்கிளியே. ()

1058 நீர்க்குமிழிபோன்றவுடனிற்கையிலேசாசுவதஞ்
சேர்க்கவறியாமற்றிகைப்பேனேபைங்கிளியே. (34)

1059 நெஞ்சகத்தில்வாழ்வார்நினைக்கின்வேறென்றணையார்
வஞ்சகத்தாரல்லரவர்மார்க்கமென்னேபைங்கிளியே.

1060 பன்முத்திரைச்சமயம்பாழ்படக்கல்லாலடிவாழ்
சின்முத்திரையரசைச்சேர்வேனோபைங்கிளியே. (36)

1061 பச்சைகண்டநாட்டிற்பறக்குமுனைப்போற்பறந்தே
னிச்சையெல்லாமண்ணற்கியம்பிவாபைங்கிளியே. ()

1062 பாசபந்தஞ்செய்ததுன்பம்பாராமலெம்மிறைவ
ராசைதந்ததுன்பமதற்காற்றேனென்பைங்கிளியே. (38)

1063 பாராசையற்றிறையைப்பற்றறநான்பற்றிநின்ற
பூராயமெல்லாம்புகன்றுவாபைங்கிளியே. (39)

1064 பேதைப்பருவத்தேபின்றொடர்ந்தென்பக்குவமுஞ்
சோதித்தவண்ணல்வந்துதோய்வாரோபைங்கிளியே ()

1065 பைம்பயிரைநாடுமுன்போற்பார்பூத்தபைங்கொடிசேர்
செம்பயிரைநாடித்திகைத்தேனென்பைங்கிளியே. (41)

1066 பொய்க்கூடுகொண்டுபுலம்புவனோவெம்மிறைவர்
மெய்க்கூடுசென்றுவிளம்பிவாபைங்கிளியே. (42)

1067 பொய்ப்பணிவேண்டேனைப் பொருட்படுத்தியண்ணலென்
பான்.மெய்ப்பணியுந்தந்தொருகான்மேவுவனோபைங்கிளியே

1068 மண்ணுறங்கும்விண்ணுறங்குமற்றுளவெலாமுறங்குங்
கண்ணுறங்கேனெம்மிறைவர்காதலாற்பைங்கிளியே. ()

1069 மட்டுப்படாதமயக்கமெல்லாந்தீரவென்னை
வெட்டவெளிவீட்டிலண்ணன்மேவுவனோபைங்கிளியே. ()

1070 மாலைவளர்த்தென்னைவளர்த்திறைவர்பன்னெறியாம்
பாலைவனத்தில்விட்டபாவமென்னோபைங்கிளியே ()

1071 மெய்யினோய்மாற்றவுழ்தமெத்தவுண்டெம்மண்ணறந்த
மையநோய்தீர்க்கமருந்துமுண்டோபைங்கிளியே. (47)

1072 மேவுபஞ்சவண்ணமுற்றாய்வீண்சிறைபாலல்லலுற்றாய்
பாவிபஞ்சவண்ணம்பகர்ந்துவாபைங்கிளியே. (48)

1073 வாய்திறவாவண்ணமென்னைவைத்தாண்டார்க்கென்றுயரை
நீதிறவாச்சொல்லினிசமாங்காண்பைங்கிளியே: (49)

1074 வாட்டப்படாதமவுனவின்பங்கையாலே
காட்டிக்கொடுத்தானைக்காண்பேனோபைங்கிளியே. ()

1075 வாராவரவாகவந்தருளுமோனருக்கென்
பேராசையெல்லாம்போய்ப்பேசிவாபைங்கிளியே.

1076 விண்ணவர்தம்பாலமுதம்வேப்பங்காயாகவென்பாற்
பண்ணியதெம்மண்ணன்மயல்பாராத்தாயோபைங்கிளியே. ()

1077 விண்ணுள்வளியடங்கிவேறற்றதென்னவருட்
கண்ணுளடங்கிடவுங்காண்பேனோபைங்கிளியே. (53)

1078 விண்ணோர்நிலவுதவழ்மேடையிலெல்லாருமுற
மண்ணனைவீட்டிலென்னைவைத்ததென்னோபைங்கிளியே.

1079 உள்ளத்தினுள்ளேயொளித்திருந்தென்கள்ளமெல்லாம்
வள்ளலறிந்தாலெனக்குவாயுமுண்டோபைங்கிளியே.

1080 ஆகத்தைநீங்குமுன்னேயாவித்துணைவரைநான்
றாகத்தின்வண்ணந்தழுவுவனோபைங்கிளியே. (56)

1081 தானேசுபாவந்தலைப்படநின்றான்ஞான
வானவரும்வருவாரோபைங்கிளியே. (57)

1082 கள்ளத்தலைவரவர்கைகாட்டிப்பேசாம
லுள்ளத்தில்வந்தவுபாயமென்னேபைங்கிளியே. (58)

எந்நாட்கண்ணி.

தெய்வவணக்கம்

1083 நீர்பூத்தவேணிநிலவெறிப்பமன்றாடுங்
கார்பூத்தகண்டனையான்காணுநாளெந்நாளோ. ()
1084 பொன்னூருமன்றுண்மணிப்பூவைவிழிவண்டுசுற்று
மென்றாமுதினலமிச்சிப்பதெந்நாளோ. (2)
1085 நீக்கிமலக்கட்டறுத்துநேரேவெளியிலெம்மைத்
தூக்கிவைக்குந்தாளைத்தொழுதிடுநாளெந்நாளோ. (3)
1086 கருமுகங்காட்டாமலென்றுங்கர்ப்பூரம்வீசுந்
திருமுகமேநோக்கித்திருக்கறுப்பதெந்நாளோ. (4)
1087 வெஞ்சேலெனும்விழியார்வேட்கைநஞ்சுக்கஞ்சினரை
யஞ்சேலெனுங்கைக்கபயமென்பதெந்நாளோ. (5)
1088 ஆறுசமயத்துமதுவதுவாய்நின்றிலங்கும்
வீறுபரைதிருதாண்மேவுநாளெந்நாளோ. (6)
1089 பச்சைநிறமாய்ச்சிவந்தபாகங்கலந்துலகை
யிச்சையுடனீன்றுளையாங்காண்பதெந்நாளோ. (7)
1090 ஆதியந்தங்காட்டாதகண்டிதமாய்நின்றுணர்த்தும்
போதவடிவானடியைப்போற்றுநாளெந்நாளோ. (8)
1091 கங்கைநிலவுசடைக்காட்டானைத்தந்தையெனும்
புங்கவெண்கோட்டானைபதம்புந்திவைப்பதெந்நாளோ. ()
1092 அஞ்சுமுகங்காட்டாமலாறுமுகங்காட்டவந்து
செஞ்சரணச்சேவடியைச்சிந்தைவைப்பதெந்நாளோ.

1093 தந்தையிருதாடுணித்துத்தம்பிரான்றாள்சேர்ந்த
வெந்தையிருதாளிணைக்கேயின்புறுவதெந்நாளோ.

குருமரபின்வணக்கம்.

1094 துய்யகரமலராற்சொல்லாமற்சொன்னவுண்மை
யையனைக்கல்லாலரசையாமணைவதெந்நாளோ. (1)

1095 சிந்தையினுக்கெட்டாதசிற்சுகத்தைக்காட்டவல்ல
நந்தியடிக்கீழ்க்குடியாய்நாமணைவதெந்நாளோ. (2)

1096 எந்தைசனற்குமாரனாதியெமையாட்கொள்வான்
வந்ததவத்தினரைவாழ்த்துநாளெந்நாளோ. (3)

1097 பொய்கண்டார்காணாப்புனிதமெனுமத்துவித
மெய்கண்டநாதனருண்மேவுநாளெந்நாளோ. (4)

1098 பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாகவுண்மை
சாதித்தார்பொன்னடியைத்தான்பணிவதெந்நாளோ ()

1099 சிற்றம்பலமன்னுஞ்சின்மயமாந்தில்லைநகர்க்
கொற்றங்குடிமுத க் கூறுநாளெந்நாளோ. (6)

1100 குறைவிலருண்ஞானமுதல்கொற்றங்குடியடிக
ளறைமலர்த்தாட்கன்புபெற்றுநாமிருப்பதெந்நாளோ.

1101 நாளவங்கள்போகாமனன்னெறியைக்காட்டியெமை
யாளவந்தகோலங்கட்கன்புவைப்பதெந்நாளோ (8)

1102 என்னறிவையுள்ளடக்கியென்போல்வருமவுனி
தன்னறிவுக்குள்ளேநான்சாருநாளெந்நாளோ. (9)

1103 ஆறொன்றைநாடினதற்காறுமுண்டாமென்றெமக்குக்
கூறுமவுனியருள்கூடுநாளெந்நாளோ. (10)

1104 நில்லாமனின்றருளைநேரேபாரென்றவொரு
சொல்லாண்மவுனியருடோற்றுநாளெந்நாளோ. (11)

1105 வைதிகமாஞ்சைவமவுனிமவுனத்தளித்த
மெய்திகழ்ந்தென்னல்லல்விடியுநாளெந்நாளோ. (12)

1106 வாக்குமனமற்றமவுனிமவுனத்தருளே
தாக்கவுமென்னல்லலெல்லாந்தட்டழிவதெந்நாளோ.

அடியார்வணக்கம்.

1107 வெம்பந்தந்தீர்த்துலகாள்வேந்தன்றிருஞான
சம்பந்தனையருளாற்சாருநாளெந்நாளோ. (1)

1108 ஏரின்சிவபோகமிங்கிவற்கேயென்னவுழ
வாரங்கொள்செங்கையர்தாள்வாரம்வைப்பதெந்நாளோ. ()

1109 பித்தரிறையென்றறிந்துபேதைபாற்றூதனுப்பு
வித்தமிழ்ச்சமர்த்தர்மெய்ப்புகழ்வதெந்நாளோ. (3)

1110 போதவூர்நாடறியப்புத்தர்தமைவாதில்வென்ற
வாதவூரையனன்பைவாஞ்சிப்பதெந்நாளோ. (4)

1111 ஓட்டுடன்பற்றின்றியுலகைத்துறந்தசெல்வப்
பட்டினத்தார்பத்ரகிரியண்புணர்வதெந்நாளோ. (5)

1112 கண்டதுபொய்யென்றகண்டாகாரசிவமெய்யெனவே
விண்டசிவவாக்கியர்தாண்மேவுநாளெந்நாளோ. (6)

1113 சக்கரவர்த்திதவராஜயோகியெனு
மிக்கதிருமூலனருண்மேவுநாளெந்நாளோ. (7)

1114 கந்தானுபூதிபெற்றுக்கந்தரனுபூதிசொன்ன
வெந்தையருணைடியிருக்குநாளெந்நாளோ. (8)

1115 எண்ணரியசித்தரிமையோர்முதலான
பண்ணவர்கள்பத்தருள்பாலிப்பதெந்நாளோ. (9)

யாக்கையைப்பழித்தல்.

1116 சுக்கிலமுநீருஞ்சொரிமலமுநாறுமுடற்
புக்குழலும்வாஞ்சையினிப்போதுமென்பதெந்நாளோ. (1)

1117 நீர்க்குமிழிபூணமைத்துநின்றானுநில்லாமெய்
பார்க்குமிடத்திதன்மேற்பற்றறுவதெந்நாளோ. (2)

1118 காக்கைநரிசெந்நாய்கழுகொருநாள்கூடியுண்டு
தேக்குவிருந்தாமுடலைச்சீயென்பதெந்நாளோ. (3)

1119 செங்கிருமியாதிசெனித்தசென்மபூமியினை
யிங்கெனுடலென்னுமிழுக்கொழிவதெந்நாளோ. (4)

1120 தத்துவர்தொண்ணூற்றறுவர்தாமாய்வாழிந்நாட்டைப்
பித்தனானென்னும்பிதற்றொழிவதெந்நாளோ. (5)

1121 ஊனொன்றிநாதனுணர்த்துமதைவிட்டறிவே
னானென்றபாவிதலைநாணுநாளெந்நாளோ. (6)

1122 வேலையிலாவேதன்விதித்தவிந்த்ரசாலவுடன்
மாலைவியாபாரமயக்கொழிவதெந்நாளோ. (7)

1123 ஆழ்ந்துநினைக்கினரோசிகமாமிவ்வுடலில்
வாழ்ந்துபெரும்பேற்றைமதிக்குநாளெந்நாளோ. (8)

1124 மும்மலச்சேறானமுழுக்கும்பிபாகமெனு
மிம்மலகாயத்துளிகழ்ச்சிவைப்பதெந்நாளோ. (9)

1125 நாற்றமிகக்காட்டுநவவாயில்பெற்றபசுஞ்
சோற்றுத்துருத்திசுவையென்பதெந்நாளோ. (10)

1126 உருவிருப்பவுள்ளேதானூறுமலக்கேணி
யருவருப்புவாழ்க்கையைக்கண்டஞ்சுகநாளெந்நாளோ. (11)

மாதரைப்பழித்தல்.

1127 மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளான்மறைத்துப்
பொய்வீசும்வாயார்புலையொழிவதெந்நாளோ. (1)

1128 திண்ணியநெஞ்சப்பறவைசிக்கக்குழற்காட்டிற்
கண்ணிவைப்போர்மாயங்கடக்குநாளெந்நாளோ. (2)

1129 கண்டுமொழிபேசிமனங்கண்டுகொண்டுகைவிலையாக்
கொண்டுவிடுமானார்பொய்க்கூத்தொழிவதெந்நாளோ.

1130 காமனைவாவென் றிருண்டகண்வலையைவீசுமின்னார்
நாமமறந்தருளைநண்ணுநாளெந்நாளோ. (4)

1131 கண்களில்வெண்பூளைகரப்பக்கருமையிட்ட
பெண்கண்மயறப்பிப்பிழைக்குநாளெந்நாளோ. (5)

1132 வீங்கித்தளர்ந்துவிழுமுலையார்மேல்வீழ்ந்து
தூங்குமதன்சோம்பைத்துடைக்குநாளெந்நாளோ (6)

1133 கச்சிருக்குங்கொங்கைகரும்பிருக்குமின்மாற்றம்
வைச்சிருக்குமாதர்மயக்கொழிவதெந்நாளோ. (7)

1134 பச்சென்றகொங்கைப்பசப்பியர்பாழானமய
லச்சென்றறிந்தருளைநண்ணுநாளெந்நாளோ. (8)

1135 உந்திச்சுழியாலுளத்தைச்சுழித்தகன
தந்தித்தனத்தார்தமைமறப்பதெந்நாளோ. (9)

1136 தட்டுவைத்தசேலைகொய்சகத்திற்சிந்தையெல்லாங்
கட்டிவைக்குமாயமின்னார்கட்டொழிவதெந்நாளோ. ()

1137 ஆழாழியென்னவளவுபடாவஞ்சநெஞ்சப்
பாழானமாதர்மயற்பற்றொழிவதெந்நாளோ. (11)

1138 தூயபனித்திங்கள்சுடுவதெனப்பித்தேற்று
மாயமடவார்மயக்கொழிவதெந்நாளோ. (12)

1139 ஏழைக்குறும்புசெயுமேந்திழையார்மோகமெனும்
பாழைக்கடந்துபயிராவதெந்நாளோ. (13)

1140 விண்டுமொழிகுளறிவேட்கைமதுமொண்டுதருந்
தொண்டியர்கள்கட்கடையிற்சற்றொழிவதெந்நாளோ (14)

1141 மெய்யிற்சிவம்பிறக்கமேவுமின்பம்போன்மாதர்
பொய்யிலின்பின்றென்றுபொருந்துநாளெந்நாளோ. ()

தத்துவமுறைமை.

1142 ஐம்பூதத்தாலேயலக்கழிந்ததோஷமற
வெம்பூதநாதனருளெய்துநாளெந்நாளோ. (1)

1143 சத்தமுதலாம்புலனிற்சஞ்சரித்தகள்வரெனும்
பித்தர்பயந்தீர்ந்துபிழைக்குநாளெந்நாளோ. (2)

1144 நாளும்பொறிவழியைநாடாதவண்ணமெமை
யாளும்பொறியாலருள்வருவதெந்நாளோ. (3)

1145 வாக்காதியானகன்மமாயைதம்பால்வீண்காலம்
போக்காமலுண்மைபொருந்துநாளெந்நாளோ. (4)

1146 மனமானவானரக்கைம்மாலையாகாம
லெனையாளடிகளடியெய்துநாளெந்நாளோ. (5)

1147 வேட்டைப்புலப்புலையர்மேவாதவண்ணமனக்
காட்டைத்திருத்திக்கரைகாண்பதெந்நாளோ. (6)

1148 உந்துபிறப்பிறப்பையுற்றுவிடாதெந்தையருள்
வந்துபிறக்கமனமிறப்பதெந்நாளோ. (7)

1149 புத்தியெனுந்துத்திப்பொறியரவின்வாய்த்தேரை
யொத்துவிடாதெந்தையருளோங்குநாளெந்நாளோ. ()

1150 ஆங்காரமென்னுமதயானைவாயிற்கரும்பா
யேங்காமலெந்தையருளெய்துநாளெந்நாளோ. (9)

1151 சித்தமெனும்பௌவத்திரைகடலில்வாழ்துரும்பாய்
நித்தமலையாதருளினிற்குநாளெந்நாளோ. (10)

1152 வித்தியாதத்துவங்களேழும்வெருண்டோடச்
சுத்தபரபோகத்தைத்துய்க்குநாளெந்நாளோ. (11)

1153 சுத்தவித்தையேமுதலாத்தோன்றுமோரைந்துவகைத்
தத்துவத்தைநீங்கியருள்சாருநாளெந்நாளோ. (12)

1154 பொல்லாதகாமப்புலைத்தொழிலிலென்னறிவு
செல்லாமனன்னெறியிற்சேருநாளெந்நாளோ. (13)

1155 அடிகளடிக்கீழ்க்குடியாயாம்வாழாவண்ணங்
குடிகெடுக்கும்பாழ்மடிமைக்கூறொழிவதெந்நாளோ. ()

1156 ஆனபுறக்கருவியாறுபத்துமற்றுளவும்
போனவழியுங்கூடப்புன்முளைப்பதெந்நாளோ. (15)

1157 அந்தகனுக்கெங்குமிருளானவாறுவறிவில்
வந்தவிருள்வேலைவடியுநாளெந்நாளோ. (16)

1158 புன்மலத்தைச்சேர்ந்துமலபோதம்பொருந்துதல்போய்
நின்மலத்தைச்சேர்ந்துமலநீங்குநாளெந்நாளோ. (17)

1159 கண்டுகண்டுந்தெருக்கலக்கமெல்லாந்தீர்வண்ணம்
பண்டைவினைவேரைப்பறிக்குநாளெந்நாளோ. (18)

1160 பைங்கூழ்வினைதான்படுசாவியாகவெமக்
கெங்கோன்கிரணவெயிலெய்துநாளெந்நாளோ. (19)

1161 குறித்தவிதமாதியாற்கூடும்வினையெல்லாம்
வறுத்தவித்தாம்வண்ணமருள்வந்திடுநாளெந்நாளோ.

1162 சஞ்சிதமேயாதிசாக்கானமுச்சேறும்
வெந்தபொரியாகவருண்மேவுநாளெந்நாளோ. (21)

1163 தேகமுதனன்காத்திரண்டொன்றுப்பின்றிலகு
மோகமிகுமாயைமுடியுநாளெந்நாளோ. (22)

1164 சத்தமுதலாத்தழைத்திங்கெமக்குணர்த்துஞ்
சுத்தமாமாயைதொடக்கறுவதெந்நாளோ. (23)

1165 எம்மைவினையையிறையையெம்பாற்காட்டாத
வம்மைதிரோதையகலுநாளெந்நாளோ. (24)

1166 நித்திரையாய்வந்துநினைவழிக்குங்கேவலமாஞ்
சத்துருவைவெல்லுஞ்சமர்த்தறிவதெந்நாளோ. (25)

1167 சன்னல்பின்னலானசகலமெனுங்குப்பையிடை
முன்னவன்ஞானக்கனலைமூட்டுநாளெந்நாளோ. (26)

1168 மாயாவிகாரமலமொழிசுத்தாவத்தை
தோயாவருளைத்தொடருநாளெந்நாளோ. (27)

தன்னுண்மை.

1169 உடம்பறியுமென்னுமந்தவூழலெல்லாந்தீரத்
திடம்பெறவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (1)

1170 செம்மையறிவாலறிந்துதேகாதிக்குள்ளிசைந்த
வெம்மைப்புலப்படவேயாமறிவதெந்நாளோ. (2)

1171 தத்துவமாம்பாழ்த்தசடவுருவைத்தான்சுமந்த
சித்துருவாமெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (3)

1172 பஞ்சப்பொறியையுயிரென்னுமந்தப்பஞ்சமறச்
செஞ்சவேயெம்மைத்தெரிசிப்பதெந்நாளோ. (4)

1173 அந்தக்கரணமுயிராமென்றவந்தரங்க
சிந்தையழியவெம்மைத்தேர்ந்தறிவதெந்நாளோ. (5)

1174 முக்குணத்தைச்சீவனென்னுமூடத்தைவிட்டருளா
லக்கணமேயெம்மையறிந்துகொள்வதெந்நாளோ. (6)

1175 காலையுயிரென்னுங்கலதிகள்சொற்கேளாமற்
சீலமுடனெம்மைத்தெளிந்துகொள்வதெந்நாளோ. (7)

1176 வான்கெடுத்துத்தேடுமதிகேடர்போலவெமை
நான்கெடுத்துத்தேடாமனன்கறிவதெந்நாளோ. (8)

அருளியல்பு.

1177 ஈனந்தருநாடிதுநமக்குவேண்டாவென்
றூனந்தநாட்டிலவதரிப்பதெந்நாளோ. (1)

1178 பொய்க்காட்சியானபுவனத்தைவிட்டருளா
மெய்க்காட்சியாம்புவனமேவுநாளெந்நாளோ. (2)

1179 ஆதியந்தங்காட்டாமலம்பரம்போலேநிறைந்த
தீதிலருட்கடலைச்சேருநாளெந்நாளோ. (3)

1180 எட்டுத்திசைக்கீழ்மேலெங்கும்பெருகிவரும்
வெட்டவெளிவிண்ணூற்றின்மெய்தோய்வதெந்நாளோ.

1181 ஞானமென்றுசுருதியெல்லாமோலமிடு
மீதானமானவெற்பைமேவுநாளெந்நாளோ. (5)

1132 வெந்துவெடிக்கின்றசிந்தைவெப்பகலத்தண்ணருளாய்
வந்துபொழிகின்றமழைகாண்பதெந்நாளோ. (6)

1183 சூரியர்கள்சந்திரர்கோடான்றுச்சுயஞ்சோதிப்
பூரணதேயத்திற்பொருந்துநாளெந்நாளோ. (7)

1184 கன்றுமனவெப்பக்கலக்கமெலாந்தீரவருட்
டென்றல்வந்துவீசுவெளிசேருநாளெந்நாளோ. (8)

1185 கட்டுநமன்செங்கோல்கடாவடிக்குங்கோலாக
வெட்டவெளிப்பொருளைமேவுநாளெந்நாளோ. (9)

1186 சாலக்கபாடத்தடைதீரவெம்பெருமா
னோலக்கமண்டபத்துளோடுநாளெந்நாளோ. (10)

1187 விண்ணவன்றுளென்னும்விரிநிலாமண்டபத்திற்
றண்ணீரருந்தித்தளர்வொழிவதெந்நாளோ. (11)

1188 வெய்யபுலிபார்த்துவிழித்திருந்தவல்லலறத்
துய்பவருளிற்றுயிலுநாளெந்நாளோ. (12)

189 வெய்யபிறவிவெயில்வெப்பமெலாம்விட்டகல
வையனடிநீழலணையுநாளெந்நாளோ. (13)

190 வாதப்பிறவிவளைகடலைநீந்தவையன்
பாதப்புணையிணையைப்பற்றுநாளெந்நாளோ. (14)

191 ஈனமில்லாமெய்ப்பொருளையிம்மையிலேகாணவெளி
ஞானமெனுமஞ்சனத்தைநான்பெறுவதெந்நாளோ. ()

192 எல்லாமிறந்தவிடத்தெந்தைநிறைவாம்வடிவைப்
புல்லாமற்புல்லிப்புணருநாளெந்நாளோ. (16)

193 சடத்துளுயிர்போலெமக்குத்தானுயிராய்ஞான
நடத்துமுறைகண்டுபணிநாம்விடுவதெந்நாளோ. (17)

1194 எக்கணுமாந்துன்பவிருட்கடலைவிட்டருளாம்
மிக்கரையேறிவெளிப்படுவதெந்நாளோ. (18)

பொருளியல்பு.

1195 கைவிளக்கின்பின்னேபோய்க்காண்பார்போல் மெய்ஞ்ஞா
ன. மெய்விளக்கின்பின்னேபோய்மெய்காண்பதெந்நாளோ

1196 கேடில்பசுபாசமெல்லாங்கீழ்ப்படவுந்தானேமே
லாடுஞ்சுகப்பொருளுக்கன்புறுவதெந்நாளோ. (2)

1197 ஆணவத்தைநீக்கியறிவூடேயவ்வகையாக்
காணவத்தைக்கப்பாலைக்காணுநாளெந்நாளோ. (3)

1198 நீக்கப்பிரியாநினைக்கமறக்கக்கூடாப்
போக்குவரவற்றபொருளணைவதெந்நாளோ. (4)

1199 அண்டருக்குமெய்ப்பில்வைப்பாமாரமுதையென்னகத்திற்
கண்டுகொண்டுநின்றுகளிக்குநாளெந்நாளோ. (5)

1200 காட்டுந்திருவருளைகண்ணுகக்கொண்டுபர
வீட்டின்பமெய்ப்பொருளைமேவுநாளெந்நாளோ. (6)

1201 நாலுனதன்மைநழுவியேயெவ்வுயிர்க்குந்
தாலுனவுண்மைதனைச்சாருநாளென்னுளோ (7)

1202 சிந்தைமறந்துதிருவருளாய்நிற்பவர்பால்
வந்தபொருளெம்மையுந்தான்வாழ்விப்பதெந்நாளோ.

1203 எள்ளுக்குளெண்ணெய்போலெங்கும்வியாபகமா
யுள்ளவொன்றையுள்ளபடியோருநாளெந்நாளோ (9)

1204 அருவுருவமெல்லாமகன்றதுவாயான
பொருளெமக்குவந்துபுலப்படுவதெந்நாளோ. (10)

1205 ஆரணமுங்காணுவகண்டிதாகாரபரி
பூரணம்வந்தெம்மைப்பொருந்துநாளெந்நாளோ. (11)

1206 சத்தொடுசித்தாகித்தயக்கியவானந்தபரி
சுத்தவகண்டசிவந்தோன்றுநாளெந்நாளோ. (12)

1207 எங்கெங்கும்பார்த்தாலுமின்புருவாய்நீக்கமின்றித்
தங்குந்தனிப்பொருளைச்சாருநாளெந்நாளோ. (13)

1208 அடிமுடிகாட்டாதசுத்தவம்பரமாஞ்சோதிக்
கடுவெளிவந்தென்னைக்கலக்குநாளெந்நாளோ. (14)

1209 ஒன்றனையுங்காட்டாவுளத்திருளைச்சூறையிட்டு
நின்றபராஞ்சோதியுடனிற்குநாளெந்நாளோ. (15)

1210 எந்தச்சமயமிசைந்துமறிவூடறிவாய்
வந்தபொருளைப்பொருளாவாஞ்சிப்பதெந்நாளோ. (16)

1211 எவ்வாறிங்குற்றுணர்ந்தார்யாவரவர்தமக்கே
யவ்வாறாய்நின்றபொருட்கன்புவைப்பதெந்நாளோ. ()

1212 பெண்ணாணலியெனவும்பேசாமலென்னறிவின்
கண்ணூடேநின்றவொன்றைக்காணுநாளெந்நாளோ ()

1213 நினைப்புமறப்புமறநின்றபராஞ்சோதி
தனைப்புலமாவென்னறிவிற்சந்திப்பதெந்நாளோ. (19)

ஆனந்தவியல்பு.

1214 பேச்சுமூச்சில்லாதபேரின்பவெள்ளமுற்று
நீச்சுநிலைகாணமனிற்குநாளெந்நாளோ. (1)

1215 சித்தந்தெளிந்தோர்தெளிவிற்றெளிவான
சுத்தசுகக்கடலுட்டோயுநாளெந்நாளோ. (2)

1216 சிற்றின்பமுண்டுழ்சிதையவனந்தங்கடல்போன்
முற்றின்பவெள்ளமெமைமூடுநாளெந்நாளோ. (3)

1217 எல்லையில்பேரின்பமயமெப்படியென்றோர்தமக்குச்
சொல்லறியாவூமர்கள்போற்சொல்லுநாளெந்நாளோ. (4)

1218 அண்டரண்டகோடியனைத்துமுகாந்தவெள்ளங்
கொண்டதெனப்பேரின்பங்கூடுநாளெந்நாளோ. (5)

1219 ஆதியந்தமில்லாதவாதியனாதியெனுஞ்
சோதியின்பத்தூடேதுளையுநாளெந்நாளோ. (6)

1220 சாலோகமாதிசவுக்கியமும்விட்டநம்பான்
மேலானஞானவின்பமேவுநாளெந்நாளோ. (7)

1221 தற்பரத்தினுள்ளேயுஞ்சாலோகமாதியெனும்
பொற்பறிந்தானந்தம்பொருந்துநாளெந்நாளோ. (8)

1222 உள்ளத்தினுள்ளேதானூறுஞ்சிவானந்த
வெள்ளந்துளைந்துவிடாய்தீர்வதெந்நாளோ. (9)

1223 கன்னலுடன்முக்கனியுங்கற்கண்டுஞ்சீனியுமாய்
மன்னுமின்பவாரமுதைவாய்மடுப்பதெந்நாளோ. ()

1224 மண்ணாதிமூன்றமயக்கமெலாந்தீர்ந்திடவும்
விண்ணாடெழுந்தசுகமேவுநாளெந்நாளோ. (11)

1225 கானற்சலம்போன்றகட்டுழலைப்போய்தீர
வானமுதவாவிமருவுநாளெந்நாளோ. (12)

1226 தீங்கரும்பென்றுலினியாதின்றுலினிப்பனபோற்
பாங்குறும்பேரின்பம்படைக்குநாளெந்நாளோ. (13)

1227 புண்ணியபாவங்கள்பொருந்தாமெய்யன்பரெல்லா
நண்ணியபேரின்பசுகநாமணைவதெந்நாளோ. (14)

அன்புநிலைமை

1228 தக்கரவிகண்டசரோருகம்போலென்னிதய
மிக்கவருள்கண்டுவிகசிப்பதெந்நாளோ. (1)

1229 வானமுகில்கண்டமயூரபக்ஷிபோலவையன்
ஞானநடங்கண்டுநடிக்குநாளெந்நாளோ. (2)

1230 சந்திரனைநாடுஞ்சகோரபக்ஷிபோலறிவில்
வந்தபரஞ்சோதியையாம்வாஞ்சிப்பதெந்நாளோ. (3)

1231 குத்திரமெய்ப்புற்றகத்துக்குண்டலிப்பாம்பான்றுட்டுஞ்
சித்தனையென்கண்ணுற்றெரிசிப்பதெந்நாளோ. (4)

1232 அந்தரத்தேநின்றாடுமானந்தக்கூத்தனுக்கென்
சிந்தைதிரைகொடுத்துச்சேவிப்பதெந்நாளோ. (5)

1233 கள்ளனிவனென்றுமெள்ளக்கைவிடுதல்காரியமோ
வள்ளலேயென்றுவருந்துநாளெந்நாளோ. (6)

1234 விண்ணுடர்காணுவிமலாபரஞ்சோதி
யண்ணுவாவாவென்றாற்றுநாளெந்நாளோ. (7)

1235 ஏதேதுசெய்தாலுமென்பணிபோய்நின்பணியா
மாதேவாவென்றுவருந்துநாளெந்நாளோ. (8)

1236 பண்டுங்காணேனென்பழம்பொருளேயின்றுமுனைக்
கண்டுங்காணேனெனவுங்கைதுவிப்பதெந்நாளோ. (9)

1237 பொங்கேதமானபுழுக்கமெல்லாந்தீரவின்ப
மெங்கேயெங்கேயென்றிரங்குநாளெந்நாளோ. (10)

1238 கடலின்மடைகண்டதுபோற்கண்ணீராறாக
வுடல்வெதும்பிமூர்ச்சித்திருக்குநாளெந்நாளோ. (11)

1239 புலர்ந்தேன்முகஞ்சருகாய்ப்போனேனிற்காண
வலந்தேனென்றேங்கியழுங்குநாளெந்நாளோ. (12)

1240 புண்ணீர்மையாளர்புலம்புமாபோற்புலம்பிக்
கண்ணீருங்கம்பலையுங்காட்டுநாளெந்நாளோ. (13)

1241 போற்றேனென்றாலுமென்னைப்புந்திசெய்யும்வேதனைக்கிங்
காற்றேனாற்றேனென்றாற்றுநாளெந்நாளோ. (14)

1242 பொய்முடங்கும்பூமிசிலபொட்டலறப்பூங்கமலன்
கைமுடங்கநான்சனனக்கட்டறுவதெந்நாளோ. (15)

1243 கற்குணத்தைப்போன்றவஞ்சக்காரர்கள்கைகோவா
நற்குணத்தார்கைகோத்துநான்றிரிவதெந்நாளோ. ( )

1244 துட்டனைமாமாயைச்சுழனீக்கியந்தரமே
விட்டனையோவென்றுவியக்குநாளெந்நாளோ. (17)

அன்பர்நெறி.

1245 அத்துவாவெல்லாமடங்கச்சோதித்தபடிச்
சித்துருவாய்நின்றார்தெளிவறிவதெந்நாளோ. (1)

1246 மூச்சற்றுச்சிந்தைமுயற்சியற்றுமூதறிவாய்ப்
பேச்சற்றோர்பெற்றவொன்றைப்பெற்றிடுநாளெந்நாளோ.

1247 கோட்டாலையானகுணமிறந்தநிர்க்குணத்தோர்
தேட்டாலேதேடுபொருள்சேருநாளெந்நாளோ. (3

248 கெடுத்தேபசுத்துவத்தைக்கேடிலாவானந்த
மடுத்தோரடுத்தபொருட்சார்வமைவதெந்நாளோ. (4)

1249 கற்கண்டாலோடுகின்றகாக்கைபோற்பொய்ம்மாயச்
சொற்கண்டாலோடுமன்பர்தொய்வறிவதெந்நாளோ.

1250 மெய்த்தகுலங்கல்விபுனைவேடமெல்லாமோடவிட்ட
சித்தரொன்றுஞ்சோரச்செயலறிவதெந்நாளோ. (6)

1251 குற்றச்சமயக்குறும்படர்ந்துதற்போத
மற்றவர்கட்கற்றபொருட்கள்புனைவப்பதெந்நாளோ. (7)

1252 தர்க்கமிட்டுப்பாழாஞ்சமயத்துதர்க்கம்விட்டு
நிர்க்குமவர்கண்டவழிநேர்பெறுவதெந்நாளோ. (8)

1253 வீறியவேதாந்தமுதன்மிக்ககலாந்தவரை
யாறாறுணர்ந்தோருணர்வுக்கட்புனைவப்பதெந்நாளோ.

1254 கண்டவிடமெல்லாங்கடவுண்மயமென்றறிந்து
கொண்டநெஞ்சரநேயநெஞ்சிற்கொண்டிருப்பதெந்நாளோ

1255 பாக்கியங்களெல்லாம்பழுத்துமனம்பழுத்தோர்
நோக்குந்திருக்கூத்தைநோக்குநாளெந்நாளோ. (11)

1259 எவ்வுயிருந்தம்முயிர்போலெண்ணுந்தபோதனர்கள்
செவ்வறிவைநாடிமிகச்சிந்தைவைப்பதெந்நாளோ ()

அறிஞருரை.

1257 இருநிலனாய்த்தீயாகியென்றதிருப்பாட்டின்
பெருநிலையைக்கண்டணைந்துபேச்சறுவதெந்நாளோ ()

1258 அற்றவர்கட்கற்றசிவனாமென்றவத்துவித
முற்றுமொழிகண்டருளின்மூழ்குநாளெந்நாளோ. (2)

1259 தானென்னைமுன்படைத்தானென்றதகவுரையை
நானென்றவுண்மைபெற்றுநாமுணர்வதெந்நாளோ (3)

1260 என்னுடையதோழனுமாயென்றதிருப்பாட்டி
னன்னெறியைக்கண்டுரிமைநாஞ்செய்வதெந்நாளோ.

1261 ஆருடனேசேருமறிவென்றவவ்வுரையைத்
தேருப்படிக்கருடான்சேருநாளெந்நாளோ. (5)

1262 உன்னிலுன்னுமென்றவுறுமொழியாலென்னிதயந்
தன்னிலுன்னிநன்னெறியைச்சாருநாளெந்நாளோ. (6)

1263 நினைப்பறவேதாநினைந்தேனென்றநிலைநாடி
யனைத்துமாமப்பொருளிலாழுநாளெந்நாளோ. (7)

1264 சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாகி
நின்றுவிடுமென்றநெறிநிற்குநாளெந்நாளோ. (8)

1265 ஆதியந்தமில்லாவரியபரஞ்சோதியென்ற
நீதிமொழிகண்டதுவாய்நிற்குநாளெந்நாளோ. (9)

1266 பிறிதொன்றிலாசையின்றிப்பெற்றிருந்தேனென்ற
நெறியுடையான்சொல்லினிலைநிற்குநாளெந்நாளோ. ()

1267 திரையற்றநீர்போற்றெளியவெனத்தேர்ந்த
வுரைபற்றியுற்றங்கொடுக்குநாளெந்நாளோ. (11)

1268 அறியாவறிவிலவிழ்ந்தேறவென்று
நெறியாமுறையுணர்ந்துநிற்குநாளெந்நாளோ. (12)

1269 எனக்குநீயென்றுமியற்கையாப்பின்னு
முனக்குநானென்றவுறுதிகொள்வதெந்நாளோ. (13)

1270 அறிவையறிவதுவேயாகும்பொருளென்
றுறுதிசொன்னவுண்மையினையோருநாளெந்நாளோ.

நிற்குநிலை.

1271 பண்ணினிசைபோலப்பரமன்பானின்றதிற
லெண்ணியருளாகியிருக்குநாளெந்நாளோ. (1)

1272 அறிவோடறியாமையற்றறிவினூடே
குறியிலறிவுவந்துகூடுநாளெந்நாளோ. (2)

1273 சொல்லான்மனத்தாற்றொடராச்சம்பூரணத்தி
னில்லாநிலையாய்நிலைநிற்பதெந்நாளோ. (3)

1274 செங்கதிரின்முன்மதியந்தேசடங்கிநின்றிடல்போ
லங்கணனார்தாளிலடங்குநாளெந்நாளோ. (4)

1275 வானூடடங்கும்வளிபோலவின்புருவாங்
கோனூடடங்குங்குறிப்பறிவதெந்நாளோ. (5)

1276 செப்பரியதென்கருணைச்சிற்சுகனார்பூரணத்தி
லப்பினிடையுப்பாயணையுநாளெந்நாளோ. (6)

1277 தூயவறிவானசுகரூபசோதிதன்பாற்
றீயினிரும்பென்னத்திகழுநாளெந்நாளோ. (7)

1278 தீதணைபாக்கர்ப்பூரதீபமெனநான்கண்ட
சோதியுடனொன்றித்துரிசறுவதெந்நாளோ. (8)

1279 ஆராருங்காணாதவற்புதனார்பொற்படிக்கீழ்
நேரார்நிழல்போனிலாவுநாளெந்நாளோ. (9)

1280 எட்டத்தொலையாதவெந்தைபிரான்சந்நிதியில்
பட்டப்பகல்விளக்காய்ப்பண்புறுவதெந்நாளோ. (10)

1281 கருப்புவட்டைவாய்மடுத்துக்கண்டார்நாப்போல
விருப்புவட்டாவின்புருவைமேவுநாளெந்நாளோ. (11)

1282 துச்சப்புலனாற்சுழலாமற்றன்னருளா
லுச்சிக்கதிர்ப்படிகமொவ்வுநாளெந்நாளோ. (12)

1283 இம்மாநிலத்திலிருந்தபடியேயிருந்து
சும்மாவருளைத்தொடருநாளெந்நாளோ. (13)

1284 தானவனாந்தன்மையெய்தித்தண்டமெனவண்டமெங்கு
ஞானமதயானைநடத்துநாளெந்நாளோ. (14)

1285 ஒன்றிரண்டுமில்லதுவாயொன்றிரண்டுமுள்ளதுவாய்
நின்றசமத்துநிலைநேர்பெறுவதெந்நாளோ. (15)

1286 பாசமகலாமற்பதியிற்கலவாமன்
மாசில்சமத்துமுத்திவாய்க்குநாளெந்நாளோ. (16)

1287 சிற்றறிவுமெள்ளச்சிதைந்தெம்மான்பேரறிவை
யுற்றறியாவண்ணமறிந்தோங்குநாளெந்நாளோ. (17)

1288 தந்திரத்தைமந்திரத்தைச்சாரினவையாமறிவென்
றெந்தையுணர்வேவடிவாவெய்துநாளெந்நாளோ. (18)

1289 போக்குவரவற்றவெளிபோனிறைந்தபோதநிலை
நீக்கமறக்கூடிநினைப்பறுவதெந்நாளோ. (19)

1290 காண்பானுங்காட்டுவதுங்காட்சியுமாய்நின்றவந்த
வீண்பாவம்போயதுவாய்மேவுநாளெந்நாளோ. (20)

1291 வாடாதேநாளுவாய்மாயாதேயெங்கோவை
நாடாதேநாடிநலம்பெறுவதெந்நாளோ. (21)

1292 ஆடலையேகாட்டியெமதாடலொழித்தாண்டான்பொற்
றாடலைமேற்சூடித்தழைக்குநாளெந்நாளோ. (22)

1293 மேலொடுகீழில்லாதவித்தகனார் தம்முடனே
பாலொடுநீர்போற்கலந்துபண்புறுவதெந்நாளோ. (23)

1294 அறியாதறிக்கெதமையாளண்ணலைநாமாகக்
குறியாதவன்னைக்குறிக்குநாளெந்நாளோ. (24)

1295 ஓராமன்மந்திரமுமுன்றுமனைப்பரனைப்
பாராமற்பார்த்துப்பழகுநாளெந்நாளோ. (25)

1296 ஊன்பற்றுமென்னோடுறவுபற்றும்பூரணன்பால்
வான்பற்றுங்கல்போன்மருவுநாளெந்நாளோ. (26)

1297 ஆண்டான்மவுனியளித்தவறிவாலறிவைத்
தூண்டாமற்றூண்டித்துலங்குநாளெந்நாளோ. (27)

1298 ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ. (28)

நிலைபிரிந்தோர்கூடுதற்குபாயம்.

1299 கன்மநெறிதப்பிற்கதிநாகென்றெந்நாளு
நன்மைதருஞானநெறிநாமணைவதெந்நாளோ. (1)

1300 ஞானநெறிதானேநழுவிஞழுப்பகத்து
ளானமுந்திநல்குமெனவன்புறுவதெந்நாளோ. (2)

1301 பன்மார்க்கமானபலவடிபட்டேனுமொரு
சொன்மார்க்கங்கண்டுதுலங்குநாளெந்நாளோ. (3)

1302 அந்துவிதமென்றவனனியச்சொற்கண்டுணர்ந்து
சுந்தசிவத்தைந்தொடருநாளெந்நாளோ. (4)

1303 கேட்டன்முதனான்காலேகேடிலாநாற்பதமும்
வாட்டமறவெமக்குவாய்க்குநாளெந்நாளோ. (5)

1304 என்னதியானென்பதறவெவ்விடமுமென்றசான்
சன்னிதியாக்கண்டுநிட்டைசாதிப்பதெந்நாளோ. (6)

1305 நாப்பிரமமென்றானடுவேயொன்றுண்டாமாற்
றேம்பியெல்லாமொன்றாய்த்திகழுநாளெந்நாளோ. (7)
1396 முச்சகமேயாதிமுழுதுமகண்டாகார
சச்சிதானந்தசிவந்தானென்பதெந்நாளோ. (8)
1307 எவ்வடிவும்பூரணமாமெந்தையுருவென்றிசைந்த
வவ்வடிவுக்குள்ளேயடங்குநாளெந்நாளோ. (9)
1308 சிந்தித்ததெல்லாஞ்சிவபூரணமாக
வந்தித்துவாழ்த்திவணங்குநாளெந்நாளோ. (10)
1309 தாங்கியபார்விண்ணாதிகானேஞானாக்கினியா
யோங்குமியோகவுணர்வுற்றிடுநாளெந்நாளோ. (11)
1310 ஆசனமூர்த்தங்களறவகண்டாகாரசிவ
பூசைசெயவாசைபொருந்துநாளெந்நாளோ. (12)
1311 அஞ்செழுத்தினுண்மையதுவானவப்பொருளே
நெஞ்சழுத்தியொன்றாகிநிற்குநாளெந்நாளோ. (13)
1312 அவ்வுயிர்போலெவ்வுயிருமானபிரான்றன்னடிமை
யெவ்வுயிருமென்றுபணியாஞ்செய்வதெந்நாளோ. ()
1313 தேசிகர்கோனானதிறன்மவுனிகந்தமக்கு
வாசிகொடுக்கமகிழுநாளெந்நாளோ. (15)
1314 குருலிங்கசங்கமமாக்கொண்டதிருமேனி
யருண்மயமென்றன்புற்றருள்பெறுவதெந்நாளோ. ()

காண்பேனோவென்கண்ணி.

1315 சிந்திக்குந்தோறுந்தெவிட்டாவமுதேயென்
புந்திக்குணீதான்பொருந்திடவுங்காண்பேனோ. (1)
1316 கேவலத்தினுங்கிடந்துகீழ்ப்படாதின்பவருட்
காவலன்பாலொன்றிக்கலந்திடவுங்காண்பேனோ. (2)

1317 துரியங்கடந்தவொன்றே தூவெளியாய்நின்ற
பெரியநிறைவேயுனைநான்பெற்றிடவுங்காண்பேனோ ()

1318 மாசற்றவன்பர்நெஞ்சேமாறாதபெட்டகமாத்
தேசுற்றமாமணிநின்றேசினையுங்காண்பேனோ (4)

1319 மாயாவிகாரமலமகலவெந்தைபிரா
னேயானுபூதிநிலைபெறவுங்காண்பேனோ (5)

1320 பொய்யுலகும்பொய்யுறவும் பொய்யுடலும்பொய்யெனவே
மெய்யநினைமெய்யெனவேமெய்யுடனேகாண்பேனோ.

1321 வாலற்றபட்டமெனமாயாமனப்படலங்
காலற்றுவிழவுமுக்கண்ணுடையாய்காண்பேனோ. (7)

1322 உள்ளும்புறம்புமொருபடித்தாய்நின்றுசுகங்
கொள்ளும்படிக்கிறைநீகூட்டிடவுங்காண்பேனோ. (8)

1323 காட்டுகின்றமுக்கட்கரும்பேகனியேயென்
னாட்டமெல்லாந்தீரவுனதாடலையுங்காண்பேனோ. (9)

1324 தூங்காமற்றூங்கிச்சுகப்பெருமானின்னிறைவி
னீங்காமணிற்குநிலைபெறவுங்காண்பேனோ. (10)

1325 வாதவூராளிதனை வான்கருணைபால்விழுங்கும்
போதவூரேறேநின்பொன்னடியுங்காண்பேனோ. (11)

1326 சாட்டையிலாப்பம்பரம்போலாடுஞ்சடசால
நாட்டமறவெந்தைசுத்தஞானவெளிகாண்பேனோ. ()

1327 மன்றுளும்வாழ்வேமரகதஞ்சேர்மாணிக்கக்
குன்றேநின்றாட்கீழ்க்குடிபெறவுங்காண்பேனோ. (13)

1328 பொய்யென்றறிந்துமெய்மைப்போகவொட்டாதையவிந்த
வையங்கனமயக்கமாற்றிடவுங்காண்பேனோ. (14)

1329 தாயினுநல்லதயாளுவேநின்னையுன்னித்
தீயின்மெழுகொத்துருகுஞ்சிந்தைவரக்காண்பேனோ.

1330 என்செயினுமென்பெறினு மென்னிறைவாவேழையன்
யா, னின்செயலென்றுன்னுநினைவுவரக்காண்பேனோ.

1331 எள்ளத்தனையுமிரக்கமிலாவன்பாவி
யுள்ளத்துமெந்தையுலாவிடவுங்காண்பேனோ. (17)

1332 வஞ்சகத்துக்காலயமாம்வல்வினையேனோகெடுவே
னெஞ்சகத்திலையாநீநேர்பெறவுங்காண்பேனோ. (18)

1333 தொல்லைப்பிறவித்துயர்கெடவுமெந்தைபிரான்
மல்லற்கருணைவழங்கிடவுங்காண்பேனோ. (19)

1334 வாளாருங்கண்ணார்மயற்கடலிலாழ்ந்தேன்சற்
றுளாகவெந்தையருள்செயவுங்காண்பேனோ. (20)

1335 பன்சாய்ப்பறக்குநெஞ்சப்பாவியைநீகூவியையா
வஞ்சாதேயென்றின்னருள்செயவுங்காண்பேனோ. ()

1336 ஆடுகறங்காகியலமந்துழன்றுமனம்
வாடுமெனையையாநீவாவெனவுங்காண்பேனோ. (22)

1337 சிட்டர்க்கெளியசிவனேயோதீவினையேன்
மட்டற்றவாசைமயக்கறவுங்காண்பேனோ. (23)

1338 உண்ணின்றுணர்த்துமுலப்பிலாவொன்றேநின்
றண்ணென்றசாந்தவருள்சார்ந்திடவுங்காண்பேனோ. ()

1339 ஒடுங்கருத்தொடுங்கவுள்ளுணர்வுதோன்றநினைக்
கூடும்படிக்கிறைநீகூட்டிடவுங்காண்பேனோ. (25)

1340 வாக்கான்மனத்தான்மதிப்பரியாய்நின்னருளை
நோக்காமனோக்கிநிற்குநுண்ணறிவுகாண்பேனோ. (26)

1341 இவ்வுடம்புநீங்குமுன்னேயெந்தாய்கேளின்னருளா
லவ்வுடம்புக்குள்ளேயவதரிக்கக்காண்பேனோ. (27)

1342 நித்தமாயொன்றாய்நிரஞ்சனமாய்நிர்க்குணமாஞ்
சுத்தவெளிநீவெளியாய்த்தோன்றிடவுங்காண்பேனோ.

1343 கண்ணிறைந்தமோனக்கருத்தேயென்கண்ணேயென்
னுண்ணிறைந்தமாயையொழிந்திடவுங்காண்பேனோ ()

1344 அத்தாவிமலாவருளாளாவானந்த
சித்தாவெனக்குனருள்செய்திடவுங்காண்பேனோ (30)

1345 விண்ணேபிறந்திறந்துவேசற்றேனாசையறக்
காணேணிறைநின்கருணைபெறக்காண்பேனோ. (31)

1346 சட்டையொத்தவிவ்வுடலைத்தள்ளுமுன்னேநான்சகச
நிட்டையைப்பெற்றையாநிருவிகற்பங்காண்பேனோ ()

1347 எல்லாந்தெரியுமிறைவாவென்னல்லலெல்லாஞ்
சொல்லாமுனீதான்றெருகுத்திரங்கக்காண்பேனோ. ()

1348 அண்டபகிரண்டமனைத்துமொருபடித்தாக்
கண்டவர்கள்கண்டதிருக்காட்சியையுங்காண்பேனோ.

1349 ஊனிருந்தகாயமுடனிருப்பவெந்தைநின்பால்
வானிருந்ததென்னவுநான்வந்திருக்கக்காண்பேனோ. ()

1350 தினையத்தனையுந்தெளிவறியாய்ப்பாவியே
னினைவிற்பரம்பொருணீசேர்பெறவுங்காண்பேனோ. ()

1351 துன்பமெனுந்திட்டனைத்துஞ்சூறைபிடவையாவே
யின்பவெள்ளம்வந்திங்கெதிர்ப்படவுங்காண்பேனோ.()

ஆகாதோவென்கண்ணி.

1352 கல்லாதநெஞ்சங்கரைந்துருகவெத்தொழிற்கும்
வல்லாய்நின்னின்பம்வழங்கினாலாகாதோ. (1)

1353 என்னையறியவெனக்கறிவாய்நின்றருணின்
றன்னையறிந்தின்பநலஞ்சாரவைத்தாலாகாதோ. (2)

1354 பொய்ம்மயமேயானபுரைதீரவெந்தையின்ப
மெய்ம்மயம்வந்தென்னைவிழுங்கவைத்தாலாகாதோ.

1355 மட்டில்லாச்சிற்சுகமாய்வாழ்வேநின்னின்பமயஞ்
சிட்டர்போல்யானருந்தித்தேக்கவைத்தலாகாதோ. ()

1356 அத்தாநின்பொற்றாளடிக்கேயனுதினமும்
பித்தாக்கியின்பம்பெருகவைத்தாலாகாதோ. (5)

1357 மெல்லியலார்மோகவிழற்கிறைப்பேனையாநின்
னெல்லையிலானந்தநலமிச்சித்தாலாகாதோ. (6)

1358 சுட்டழகாவெண்ணுமனஞ்சூறைபிட்டானந்தமயக்
கட்டழகாநின்னைக்கலக்கவைத்தாலாகாதோ. (7)

1359 சோதியேயநந்தாச்சுகவடிவேதூவெளியே
யாதியேநின்னையறியவைத்தாலாகாதோ. (8)

1360 நேசஞ்சிறிதுமிலேனின்மலனேநின்னடிக்கே
வாசஞ்செயவிரங்கிவாவென்றாலாகாதோ. (9)

1361 என்னறிவுக்குள்ளேயிருந்ததுபோலையாவே
நின்னறிவுனின்னுடன்யானிற்கவைத்தாலாகாதோ. ()

1362 ஆதிப்பிரானேயென்னல்லலிருளகச்
சோதிப்பிரகாசமயந்தோன்றுவித்தாலாகாதோ. (11)

1363 ஆசைச்சுழற்கடலிலாழாமலையாநின்
னேசப்புணைத்தாணிறுத்தினாலாகாதோ. (12)

1364 பாசநிகளங்களெல்லாம்பஞ்சாகச்செஞ்செவே
யீசவென்னைவாவென்றிரங்கினாலாகாதோ. (13)

1365 ஓயாவுள்ளன்பாயுருகிவாய்விட்டாற்றிச்
சேயாகியென்னநின்னைச்சேரவைத்தாலாகாதோ. ()

1366 ஆதியாம்வாழ்வாயகண்டிதமாய்நின்றபரஞ்
சோதிநீயென்னைத்தொழும்பனென்றாலாகாதோ. (15)

1367 விண்ணாரக்கண்டவிழிபோற்பரஞ்சோதி
கண்ணாநின்னிறைவைக்காணவைத்தாலாகாதோ. ()

1388 சோரமற்சேர்ந்துநின்றுநின்மயனைநின்மயந்தைப்
பாராமற்பாரெனநீபக்ஷம்வைத்தாலாகாதோ. (17)

1369 கண்ணாடிபோலவெல்லாங்காட்டுந்திருவருளை
புண்ணாடியையாவருகவைத்தாலாகாதோ. (18)

1370 மூலவிருள்காலவாங்கமூதறிவுதோன்றவருட்
கோலம்வெளியாகவெந்தைகூடுவித்தாலாகாதோ. (19)

1371 சாற்றரியவின்பவெள்ளந்தாக்குமதினிமூளைக்கி
ஆற்றமுறுமென்னவதிலுண்மைசொன்னாலாகாதோ.

1372 கையுங்குவித்திரண்டுகண்ணருவிபெய்யவரு
ளையநின்றாட்கேமெய்யடிமைநின்றாலாகாதோ. (21)

இல்லையோவென்கண்ணி.

1373 எதுந்தெரியாதெனைமறைத்தவல்லிருளை
நாதநீக்கவொருஞானவிளக்கில்லையோ. (1)

1373 பணியற்றுநின்றபதைப்பறவென்கண்ணுண்
மணியொத்தசோதியின்பவாரியெனக்கில்லையோ. (2)

1375 எம்மாலறிவதறவெம்பெருமான்யாதுமின்றிச்
சும்மாவிருக்கவொருசூத்திரந்தானில்லையோ. (3)

1376 நாய்க்குங்கடையானேனாதாநின்னின்பமயம்
வாய்க்கும்படியினிபோர்மந்திரந்தானில்லையோ. (4)

1377 ஊனாகிநிற்குமுணர்வைமறந்தையாநீ
தானாகநிற்கவொருதந்திரந்தானில்லையோ. (5)

1378 அல்லும்பகலுமகண்டவடிவேயுனைநான்
புல்லும்படியெனக்கோர்போதனைதானில்லையோ. (6)

வேண்டாவோவென்கண்ணி.

1379 கண்டவடிவெல்லாநின் காட்சியென்றேகைகுவித்துப்
பண்டுமின்றுநின்றவென்னைப்பார்த்திரங்கவேண்டாவோ. ()

1380 வாதனையோடாடுமனப்பாம்புமாயவொரு
போதனை தந்தையாபுலப்படுத்தவேண்டாவோ. (2)

1381 தன்னையறியத்தனியறிவாய்நின்றருளே
நின்னையறிந்தென்னறிவைநீங்கிநிற்கவேண்டாவோ. ()

1382 அள்ளக்குறையாவகண்டிதானந்தமெனும்
வெள்ளமெனக்கையாவெளிப்படுத்தவேண்டாவோ. ()

1383 அண்டனேயண்டரமுதேயென்றாருயிரே
தொண்டனேற்கின்பந்தொகுத்திரங்கவேண்டாவோ ()

1384 பாராதேநின்றுபகையாதேசும்மாதான்
வாராயெனவும்வழிகாட்டவேண்டாவோ. (6)

நல்லறிவேயென்கண்ணி.

1385 எண்ணிறைந்தமேன்மைபடைத்தெவ்வுயிர்க்குமவ்வுயிராய்க்
கண்ணிறைந்தசோதியைநாங்காணவாநல்லறிவே. (1)

1386 சித்தானநாமென்சடத்தைநாமென்னவென்றுஞ்
சத்தானவுண்மைதனைச்சாரவாநல்லறிவே. (2)

1387 அங்குமிங்குமெங்குநிறையற்புதனைப்பொற்பறிந்து
பங்கயத்துள்வண்டாய்ப்பயன்பெறவாநல்லறிவே. (3)

1388 கான்றசோறென்னவிந்தக்காசினிவாழ்வத்தனையுந்
தோன்றவருள்வெளியிற்றோன்றவாநல்லறிவே. (4)

பலவகைக்கண்ணி.

1889 என்னாசைகேட்டிலையோவென்செயலோவேதுமிலை
தன்னரசுநாடாகித்தத்துவங்கூத்தாடியதே. (1)

1390 பண்டொருகானின்பாற்பழக்கமுண்டோவெந்தைநினை
க், கண்டொருகாற்போற்றக்கருத்துங்கருதியதே. (2)

1391 கண்டனவேகாணுடன்றிக்காணுவோகாணுவென்
கொண்டறிவேனெந்தைநினைக்கூடுங்குறிப்பினையே. ()

1392 கல்லாலடியில்வளர்கற்பகமேயென்னளவோ
பொல்லாவினைக்குப்பொருத்தந்தான்சொல்லாயே. (4)

1393 தப்பிதமொன்றின்றியதுதானாகநிற்கவுண்மை
செப்பியதுமல்லாலென்சென்னியதுதொட்டனையே. (5)

1394 மாசானநெஞ்சனிவன்வஞ்சனென்றோவாய்திறந்து
பேசாமவுனம்பெருமான்படைத்ததுவே. (6)

1395 கற்பதெல்லாங்கற்றே முக்கண்ணுடையாய்நின்பணியா
ய், நிற்பதுகற்றன்றோநிருவிகற்பமாவதுவே. (7)

1396 முன்னளவில்கன்மழுபன்றுணிவனென்றோ
வென்னளவிலெந்தாயிரங்காதிருந்ததுவே. (8)

1397 நெஞ்சகம்வேறாகிநினைக்கூடவெண்ணுகின்ற
வஞ்சகனுக்கின்பமெந்தாய்வாய்க்குமாறெவ்வாறே (9)

1398 பள்ளங்கடோறும்பாந்தபுனல்போலுலகி
னுள்ளப்பாந்தானுடையாயென்செய்வேனே. (10)

1399 முன்னினைக்கப்பின்மறைக்குமூடவிருளாகெடுவே
னென்னினைக்கவென்மறக்கவெந்தைபெருமானே. (11)

1400 வல்லாளாமோனநின்வான்கருணையென்னிடத்தே
யில்லாதேபோனாலெவ்வண்ணமுய்வேனே. (12)

1401 வாக்குமனமுமவுனமுறவெந்தைநின்னை
நோக்குமவுனமிந்தநூலறிவிலுண்டாமோ. (13)

1402 ஒன்றாய்ப்பலவாயுலகமெங்குந்தானேயாய்
நின்றாயையாவென்னைநீநீங்கற்கெளிதாமோ. (14)

1403 ஆவித்துணையேயருமருந்தேயென்றனைநீ
கூவியழைத்தின்பங்கொடுத்தாற்குறைவாமோ. (15)

1404. எத்தனையோநின்விளையாட்டெந்தாய்கேளிவ்வளவென்
றத்தனையுமென்னாலறியுந்தரமாமோ. (16)

1405 தேடுவார்தேடுஞ்சிவனேயோநின்றிருத்தாள்
கூடுவான்பட்டதுயர்கூறற்கெளிதாமோ. (17)

1406 பற்றினதைப்பற்றுமெந்தாய்பற்றுவிட்டாற்கேவலத்தி
லுற்றுவிடுநெஞ்சமுனையொன்றிநிற்பதெப்படியோ. ()

1407 ஒப்பிலாவொன்றேநின்னுண்மையொன்றுங்காட்டாமற்
பொய்ப்புவியைமெய்போற்புதுக்கிவைத்ததென்னேயோ.

1408 காலால்வழிநடவுங்காலத்தேகண்முளைத்தாற்
போலேயெனதறிவிற்போந்தறிவாய்நில்லாயோ. (20)

1409 தன்னரசுநாடாஞ்சடசாலபூமிமிசை
யென்னரசேயென்னையிறையாகநாட்டினையோ. (21)

1410 திங்களமுதாநின்றிருவாக்கைவிட்டரசே
பொங்குவிடமனையபொய்ந்நூல்புலம்புவனே. (22)

411 உன்னவுன்னவென்னையெடுத்துள்விழுங்குநின்னிறைவை
யின்னமின்னங்காணாமலெந்தாய்சுழல்வேனே. (23)

412 ஆராவமுதனையவானந்தவாரியென்பாற்
றாராமலையாநீதள்ளிவிடவந்ததென்னே. (24)

நின்ற நிலை.

1413 நின்றநிலையேநிலையாவைத்தானந்த
நிலைதானேநிருவிகற்பநிலையுமாகி
யென்றுமழியாதவின்பவெள்ளந்தேக்கி
யிருக்கவெனைத்தொடர்ந்துதொடர்ந்திழுக்குமந்தோ.

1414 இருக்காதிமறைமுடிவுஞ்சிவாகமாதி
யிதயமுங்கைகாட்டெனவேயிதயத்துள்ளே
யொருக்காலேயுணர்ந்தவர்கட்கெக்காலுந்தா
னொழியாதவின்பவெள்ளமுலவாநிற்கும். (2)

1415 கற்றதுங்கேட்டதுந்தானேயேதுக்காகக்
கடபடமென்றுருட்டுதற்கோகல்லாலெம்மான்
குற்றமறக்கைகாட்டுங்கருத்தைக்கண்டு
குணங்குறியற்றின்பநிட்டைகூடவன்றோ. (3)

பாடுகின்றபனுவல்.

வஞ்சிவிருத்தம்.

1416 பாடுகின்றபனுவலோர்க - டேடுகின்றசெல்வமே
நாடுகின்றஞானமன்றி - லாடுகின்றவழகனே. (1)

1417 அத்தனென்றநின்னையே - பத்திசெய்துபனுவலாற்
பித்தனின்றுபேசவே - வைத்ததென்னவாரமே. (2)

1418 சிந்தையன்புசோரவே - நைந்துநின்னைநாடினேன்
வந்துவந்துளின்பமே - தந்திரங்குதாணுவே. (3)

1419 அண்டரண்டம்யாவுநீ - கொண்டுநின்றகோலமே
தொண்டர்கண்டுசொரிகணீர்·கண்டநெஞ்சுகரையுமே.

1420 அன்னைபோலவருண்மிகுத்து-மன்னுஞானவாதனை
யென்னையேயெனக்களித்த-நின்னையானுநினைவனே. ()

ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்பு - சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

1421 ஆதியனாதியுமாகி - எனக்
கானந்தமாயறிவாய்நின்றிலங்குஞ்
சோதிமவுனியாய்த்தோன்றி - அவன்
சொல்லாதவார்த்தையைச்சொன்னாண்டிதோழி—சங்கர.

1422 சொன்னசொல்லேதென்றுசொல்வேன் - என்னைச்
சூதாய்த்தனிக்கவேசுகமாயிருத்தி
முன்னிலையேதுமில்லாதே - சுக
முற்றச்செய்தேயெனைப்பற்றிக்கொண்டாண்டி—சங்கர.

1423 பற்றியபற்றறவுள்ளே - தன்னைப்
பற்றச்சொன்னான்பற்றிப்பார்த்தவிடத்தே
பெற்றதையேதென்றுசொல்வேன் - சற்றும்
பேசாதகாரியம்பேசினான்றோழி—சங்கர. (3)

1424 பேசாவிடும்பைகள்பேசிச் - சுத்தப்
பேயங்கமாகிப்பிதற்றித்திரிந்தேன்
ஆசாபிசாசைத்துரத்தி - ஐய
னடியிணைக்கீழடக்கிக்கொண்டாடி—சங்கர. (4)

1425 அடக்கிப்புலனைப்பிரித்தே - அவ
னாகியமேனியிலன்பைவளர்த்தேன்
மடக்கிக்கொண்டானென்னைத்தன்னுட் - சற்றும்
வாய்பேசாவண்ணமரபுஞ்செய்தாண்டி—சங்கர.

1426 மரணபக்கெடுத்தனன்கெட்டேன் - இந்தை
வாய்விட்டுச்சொல்லிடின்வாழ்வெனக்கில்லை
காவபுருஷனுமல்லன் - என்னைக்
காக்குந்தலைமைக்கடவுள்காண்மின்னே—சங்கர.

1427 கடலின்மடைவிண்டதென்ன - இரு
கண்களுமானந்தக்கண்ணீர்சொரிய
உடலும்புளகிதமாக - என
துள்ளமுருகவுபாயஞ்செய்தாண்டி—சங்கர. (7)

1428 உள்ளதுமில்லதுமாய் - முன்
உணர்வதுவாயுன்னுளங்கண்டதெல்லாந்
தள்ளெனச்சொல்லியென்னையன் - என்னைத்
தானாக்கிக்கொண்டசமர்த்தைப்பார்தோழி—சங்கர.

1429 பாராதிபூதநீயல்லை - உன்னிப்
பாரிந்திரியங்கரணநீயல்லை
ஆராயுணர்வுநீயென்றான் - ஐய
னன்பாயுரைத்தசொல்லானந்தந்தோழி—சங்கர. ()

1430 அன்பருக்கன்பானமெய்யன் - ஐய
ஞானந்தமோனனருட்குருநாதன்
தன்பாதஞ்சென்னியில்வைத்தான் - என்னைத்
தானறிந்தேன்மனந்தானிறந்தேனே—சங்கர (10)

1431 இறப்பும்பிறப்பும்பொருந்த - எனக்
கெவ்வணம்வந்ததென்றெண்ணியான்பார்க்கில்
மறப்புநினைப்புமாய்நின்ற - வஞ்ச
மாயாமனத்தால்வளர்ந்ததுதோழி—சங்கர. (11)

1432 மனதேகல்லாலெனக்கன்றோ-தெய்வ
மவுனகுருவாகிவந்துகைகாட்டி
எனதாம்பணியறமாற்றி - அவ
னின்னருள்வெள்ளத்திருத்திவைத்தாண்டி—சங்கர

1433 அருளாலெவையும்பாரென்றான் - அத்தை
யறியாதேசுட்டியென்னறிவாலேபார்த்தேன்
இருளானபொருள்கண்டதல்லால் - கண்ட
வென்னையுங்கண்டிலனென்னேடிதோழி—சங்கர.

1434 என்னையுந்தன்னையும்வேறா - உள்ளத்
தெண்ணாதவண்ணமிரண்டறநிற்கச்
சொன்னதுமோவொருசொல்லே - அந்தச்
சொல்லால்விளைந்தசுகத்தையென்சொல்வேன்சங்கர

1435 விளையுஞ்சிவானந்தபூமி - அந்த
வெட்டவெளிநண்ணித்துட்டவிருளாங்
களையைக்களைந்துபின்பார்த்தேன் - ஐயன்
களையன்றிவேறொன்றுங்கண்டிலன்றோழி—சங்கர.

1436 கண்டார்நகைப்புயிர்வாழ்க்கை - இரு
கண்காணநீங்கவுங்கண்டோந்துபிறான்
கொண்டார்போற்போனாலும்போகும் - இதிற்
குணமேதுநலமேதுகூறாய்நீதோழி—சங்கர. (16)

1437 நலமேதுமறியாதவென்னைச் - சுத்த
நாதாந்தமோனமாநாட்டந்தந்தேசஞ்
சலமேதுமில்லாமலெல்லாம் - வல்லான்
றாளாலென்றலைமீதுதாக்கினான்றோழி—சங்கர. ()

1438 தாக்குநல்லானந்தசோதி - அணு
தன்னிற்சிறியவெனைத்தன்னருளாற்
போக்குவரவற்றிருக்குஞ் - சுத்த
பூரணமாக்கினான்புதுமைகாண்மின்னே—சங்கர ()

1439 ஆக்கியழித்துத்துடைக்குந் - தொழி
லத்தனைவைத்துமெள்ளத்தனையேனுந்
தாக்கறநிற்குஞ்சமர்த்தன் - உள்ள
சாக்ஷியைச்சிந்திக்கத்தக்கதுதோழி—சங்கர. (19)

1440 சிந்தைபிறந்ததுமாங்கே - அந்தச்
சிந்தைபிறந்துதெளிந்ததுமாங்கே
எந்தநிலைகளுமாங்கே - கண்ட
யான்றானிரண்டற்றிருந்ததுமாங்கே—சங்கர. (20)
1441 ஆங்கென்றுமீங்கென்றுமுண்டோ - சச்சி
தானந்தசோதியகண்டவடிவாய்
ஓங்கிநிறைந்ததுகண்டாற் - பின்ன
ரொன்றென்றிரண்டென்றுரைக்கிடலாமோ—சங்கர
1442 என்றுமழியுமிக்காயம் - இத்தை
யேதுக்குமெய்யென்றிருந்தீருலகீர்
ஒன்றுமறியாதநீரோ - யம
ஞேலைவர்காற்சொல்லவுத்தரமுண்டோ—சங்கர ()
1443 உண்டோநமைப்போலவஞரர் - மல
மூறித்ததும்புமுடலைமெய்யென்று
கொண்டோபிழைப்பதிங்கையோ - அருட்
கோலத்தைமெய்யென்றுகொள்ளவேண்டாவோ-சங்
1444 வேண்டாவிருப்புவெறுப்பும் - அந்த
வில்லங்கத்தாலேவிளையுஞ்சனனம்
ஆண்டானுரைத்தபடியே - சற்று
மசையாதிருந்துகொள்ளறிவாகிநெஞ்சே—சங்கர.
1445 அறிவாருமில்லையோவையோ - என்னை
யாரென்றறியாதவங்கதேசத்தில்
வறிதேகாமத்தீயிற்சிக்கி - உள்ள
வான்பொருடோற்கவோவந்தனுன்றோழி—சங்கர
1446 வந்தவரவைமறந்து - மிக்க
மாதர்பொன்பூமிமயக்கத்திலாழும்
இந்தமயக்கையறுக்க - எனக்
கெந்தைமெய்ஞ்ஞானவெழில்வாள்கொடுத்தான்-சங்

1447 வாளாருங்கண்ணியர்மோகம் - யம
வாதைக்கனலைவளர்க்குமெய்யென்றே
வேளானவனுமெய்விட்டான் - என்னின்
மிக்கோர்துறக்கைவிதியன்றோதோழி—சங்கர.

1448 விதிக்கும்பிரபஞ்சமெல்லாம் - சுத்த
வெயின்மஞ்சளென்னவேவேதாகமங்கள்
மதிக்குமதனைமதியார் - அவர்
மார்க்கந்துன்மார்க்கஞ்சன்மார்க்கமோமானே—சங்

1449 துன்மார்க்கமாதர்மயக்கம் - மனத்
தூயர்க்குப்பற்றாதுசொன்னேன்சனகன்
தன்மார்க்கநீதிதிட்டாந்தம் - அவன்
றானந்தமானசதானந்தனன்றோ—சங்கர. (29)

1450 அன்றென்றுமாமென்றுமுண்டோ - உனக்
கானந்தம்வேண்டினறிவாகிச்சற்றே
நின்றாற்றெரியுமெனவே - மறை
நீதியெம்மாதிநிகழ்த்தினனன்றோழி - சங்கர சங்கர
சம்பு சிவ-சங்கர சங்கர சம்பு. (30)

அகவல்.

1451 திருவருண்ஞானஞ்சிறந்தருள்கொழிக்குங்
குருவடிவானகுறைவிலாநிறைவே
நின்றவொன்றேநின்மலவடிவே
குன்றாப்பொருளேகுணப்பெருங்கடலே
யாதியுமந்தமுமானந்தமயமாஞ்
சோதியேசத்தேதொலைவிலாமுதலே
சீர்மலிதெய்வத்திருவருளதனாற்
பார்முதலண்டப்பரப்பெலாநிறுவி

யண்டசமுதலாமெண்டருநால்வகை
யேழுபிறவியிற்றுழாதோங்கு
மனந்தயோனியினினம்பெறமல்க
வணுமுதலசலமானவாக்கையுங்
கணமுதலளவிற்கற்பகாலமுங்
கன்பப்பகுதித்தொன்மைக்கீடா
விமைப்பொழுதேனுந்தபக்கெனவறிவிலா
வேழையுயிர்த்திரள்வாழவமைத்தனை
யெவ்வுடலெடுத்தாரவ்வுடல்வாழ்க்கை
யின்பமெனவேதுன்பமிலையெனப்
பிரியாவண்ணமுரிமையின்வளர்க்க
வாதரவாகக்காதலுமமைத்திட்
டேகமின்றியேதேகநானென
வறிவுபோலறியாமையியக்கிக்
காலமுங்கன்மமுங்கட்டுங்காட்டியே
மேலுநரகமுமேதகுசுவர்க்கமு
மாலறவகுத்தனையேனும்வண்ண
மமையாக்காதலிற்சமயகோடி
யறம்பொருளாதிதிறம்படுநிலையிற்
குருவாயுணர்த்தியொருவர்போலனைவருந்
தத்தநிலையேமுத்திமுடிவென
வாததர்க்கமும்போதநூல்களு
நிறைவிற்காட்டியேகுறைவின்றிவயங்க
வங்கங்குநின்றனையெங்குமாகிச்
சமயாதீதத்தன்மையாகி
யிமையோர்முதலியயாவருமுனிவருந்
தம்மைக்கொடுத்திட்டெம்மையாளென
வேசற்றிருக்கமாசற்றஞான
நலமுங்காட்டினைஞானமிலேற்கு
நிலையுங்காட்டுதனின்னருட்கடனே.

1452 அருவென்பனவுமன்றியுருவென்பனவுமன்றி
யகமும்புறமுமன்றிமறைபிறழாது
குறியுங்குணமுமன்றிநிறைவுங்குறைவுமன்றி
மறையொன்றெனவிளம்பவிமலமதாகி
அசலம்பெறவுயர்ந்துவிபுலம்பெறவளர்ந்து
சபலஞ்சபலமென்றுளறிவினர்காண
ஞானவெளியிடைமேவுமுயிராய் (௫)

அனலொன்றிடவெரிந்துபுகைமண்டிடுவதன்று
புனலொன்றிடவமிழ்ந்துமடிவிலதாதை
சருவும்பொழுதுயர்ந்துசலனமபடுவதன்று
சமர்கொண்டழிவதன்றெரியல்பினதாகும்
அவனென்பதுவுமன்றியவளென்பதுவுமன்றி
யதுவென்பதுவுமன்றியெழில்கொடுலாவும்
ஆருநிலைபறியாதபடியே (௬)

இருளென்பதுவுமன்றியொளியென்பதுவுமன்றி
யெவையுந்தனுளடங்கவொருமுதலாகு
முளதென்பதுவுமன்றியிலதென்பதுவுமன்றி
யுலகுந்தொழவிருந்தவயன்முதலோர்கள்
எவருங்கவலைகொண்டுசமயங்களில்விழுந்து
சுழலும்பொழுதிரங்கியருள்செயுமாறு
கூறரியசகமாயையறவே (௬௫)

எனதென்பதையிகழ்ந்தவறிவின்றிரளினின்று
மறிவொன்றெனவிளங்குமபயமதாக
அறியுந்தரமுமன்றுபிறியுந்தரமுமன்று
வசரஞ்சரமிரண்டொருபடியாகி
எதுசந்ததநிறைந்ததெதுசிந்தனையிறந்த
தெதுமங்களசுபங்கொள்சுகவடிவாகும்
யாதுபரமதைநாடியறிமீ (௨)

பருவங்குலவுகின்றமட மங்கையர்தொடங்கு
கபடந்தனில்விழுந்துகெடுநினைவாகி
வலையின்புடைமறிந்தமறியென்றவசமுண்டு
வசனந்திரமுமின்றியவரிதமூறல்
பருகுந்தொழிலிணங்கியிரவும்பகலுமின்சொல்
பருகுப்படிதுணிந்துகுழலழகாக
மாலைவகைபலசூடியுடனே (உரு)

பதுபந்தணையிசைந்தமுலையென்றதையுகந்து
வரிவண்டெனவுழன்றுகலிலெனவாடுஞ்
சிறுகிண்கிணிசிலம்புபுனைதண்டைகண்முழங்கு
மொலிநன்றெனமகிழ்ந்துசெவிகொளநாசி
பசுமஞ்சளின்வியந்தமணமுந்திடமுகந்து
பமிஞ்சிடவிறைஞ்சிவரிசையினோடு
காலின்மிசைமுடிசூடிமயலாய் (தெ)

மருளுந்தெருளும்வந்துகதியென்பதைமறந்து
மதனன்சலதிபொங்கவிரணமதான
வளிபுண்டனைவளைந்துவிரல்கொண்டுறவளைந்து
சுரதஞ்சுகமிதென்றுபரவசமாகி
மருவுந்தொழின்மிகுந்துதினமுந்தினமும்விஞ்சி
வளரும்பிறைகுறைந்தபடிமதிசோர
வானரமதெனமேனிதிரையாய் (தெரு)

வயதும்படவெழுந்துபிணியுந்திமிதிமென்று
வரவுஞ்செயலழிந்துளிருமலுமாகி
அனமுஞ்செலுதலின்றிவிழியுஞ்சுடர்களின்று
முகமுங்களைகளின்றுசரியெனநாடி
மனையின்புறவிருந்தவினமுங்குலைகுலைந்து
கலகஞ்செயவிருண்டயமன்வரும்வேளை
யேதுதுணைபழிகாரமனமே. (க)

தாயுமான சுவாமிகள்பாடல் முற்றியது.

திருச்சிற்றம்பலம்

கோச்சகம்.

—*—

இது பின்னர்க் கிடைத்த பிரதி யொன்றிற்

காணப்படுகின்றது.

தத்துவம்வேறென்னைவேறுக்கியருடந்ததிலே
யுற்றுணர்வும்வேண்டாவென்றோரிரண்டுமொன்றினையும்
நித்தியமென்றேகாட்டிநில்லாமனில்லெணவே
தத்துவத்தோடத்துவிதந்தருந்தாயுமானவனே. (௧)

நந்தமதென்றெண்ணிநலிந்தவுடல்வேறுக்கி
வந்தபொருளுன்னதல்லவென்றெனதுவல்லமையு
முந்தனக்கன்றெல்லாநயதென்றேயுட்புகுந்த
தந்தையுநீமற்றுமருளாந்தாயுமானவனே. (௨)

பந்தாடுமாபோற்பதிந்துகருப்பட்டேற்குச்
சிந்தாமணியாய்ச்செகங்களிலேதீவகம்போல்
வந்தான்மறைசைநகர்மற்றுமோர்மெய்கண்ட
சந்தானத்தானத்தவத்தாயுமானவனே. (௩)

பின்னைத்தானொன்றினையுங்காட்டாதபேரிருளி
னுன்னைத்தான்கண்ணிலர்போலொன்றாகித்தானுழன்ற
வென்னைத்தானிவ்வண்ணமென்றறியாவேழையென்றே
தன்னைத்தான்றந்தாண்டான்றனித்தாயுமானவனே. (௪)

திடக்குப்பையாடாவஞ்செங்கட்கேழற்கோ
டுடுக்குப்பைநீத்தேயுயர்மறைசைவந்தெழுந்து
விடக்குப்பைகோலால்விளங்கியபொய்மெய்யெனவாழ்
சடக்குப்பையென்றுதவிர்த்தான்றாயுமானவனே. (௫)

புகப்பட்டான்வல்லிருளில்பொல்லாதவேழாம்
பகப்பட்டானீங்காப்பரப்பானதீவினையி
னகப்பட்டான்மாயாவிகாரவடவியெனுஞ்
சகப்பட்டானென்றிரங்கினான்றாயுமானவனே. (௬)

கஞ்சனரிகாணாதகாரணமேயன்பருக்காப்
பஞ்சவன்முன்சேரப்பரிமேலெழுந்தபரம்
மஞ்சுலவுஞ்சோலைபயின்மாமறைசைவந்தோங்கித்
தஞ்சமென்றாற்கஞ்சலெனவாடாயுமானவனே. (௭)

மனக்கவலைத்தீர்த்தென்மயக்கவிகற்பங்களெல்லா
முனக்கலவென்றெவ்வொன்றாய்வேறாக்கியொன்றுமற
நினைக்கவரிதானவின்பநிட்டையிலென்றேயுறைத்தான்
றனக்குவமையில்லானெனக்குமருட்டாயவனே. (௮)

தாயுமானவன் தாளிணைவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

அருள்வாக்கியவகவல்.

தாயுமானசுவாமிகள் துதி.

திருவளர்கருணைச்சிவானந்தபூரண
மொருவருமறியாவொருதனிச்சித்து
நவந்தருபேதமாய்நாடகநடித்துற்
பவந்தனைநீக்கிப்பரிந்தருள்பராபரங்
கண்ணுங்கருத்துங்கதிரொளிபோல
நண்ணிடவெனக்குநல்கியநன்மை
யொன்றாய்ப்பலவாயொப்பிலாமோனக்
குன்றாய்நிறைந்தகுணப்பெருங்குன்ற
மண்ணையும்புனலையும்வளியையுங்கனலையும்
விண்ணையும்படைத்தவித்திலாவித்து
பந்தமனைத்தையும்பாழ்படநூறியென்
சிந்தையுட்புகுந்தசெழுஞ்சுடர்ச்சோதி
விள்ளொணாஞானம்விளங்கியமேலோர்
கொள்ளைகொண்டுண்ணக்குறைவிலாநிறைவு
தாட்டாமரைமலர்த்தாணினைப்பவர்க்குக்
காட்டாவின்பங்காட்டியகதிநிலை
வாக்கான்மனத்தான்மதித்திடவரிதென
நோக்காதிருக்கநோக்கியநோக்க
மாதியாயறிமாயகண்டமாயகண்ட
சோதியாய்விரிந்துதுலங்கியதோற்றம்
பரவெளிதன்னிற்பதிந்தவென்னுளத்தின்
விரவிவிரவிமேற்கொளுப்வெள்ளஞ்
சுட்டுக்கடங்காச்சோதியடியார்
மட்டுக்கடங்கும்வான்பெருங்கருணை

யெல்லைக்கடங்காவேகப்பெருவெளி
தில்லைப்பொதுவிற்றிருநடத்தெய்வம்
வாதவூரெந்தையைவரிசையாய்விழுங்கும்
போதவூர்மேவுகர்ப்பூரவிளக்கு
சுகரையகண்டத்துவெளியெல்லாந்
திகழவேகாட்டுஞ்சின்மயசாட்சி
செழுந்தமிழப்பரைச்சிவலிங்கமாகி
விழுங்கியஞானவித்தகவேழ
மெழிறருபட்டினத்திறைவரையென்று
மழிவிலாவிலிங்கமாக்கிவவனுதி
சாந்தபூமிதண்ணருள்வெள்ள
மார்ந்தநீழலசையாக்கமனம்
பரவுவார்நெஞ்சிற்பரவியமாட்சி
யிரவுபகலற்றவேகாந்தக்காட்சி
யாட்சிபோலிருக்குமகிலந்தனக்குச்
சாட்சியாயிருக்குந்தாரகத்தனிமுத
லாணும்பெண்ணுமலியுமல்லாததோர்
தானுவாய்நின்றசத்தாந்தனிச்சுட
ரெள்ளுமெண்ணெயுமெப்படியப்படி
யுள்ளும்புறம்புமுலாவியவொருபொரு
ளளவிலாமதந்தொறுமவரவர்பொருளென
வுளநிறைந்திருக்குமொருபொற்பணதி
துள்ளுமனப்பேய்துடிக்கத்தறிக்கக்
கொள்ளுமோனவாளகொடுத்திடுமரசு
பெரியபேறுபேசாப்பெருமை
யரியவுரிமையளவிலாவளவு
துரியநிறைவுதோன்றுவதீதம்
விரியுநல்லன்புவிளைத்திடும்விளைவு

தீராப்பிணியாஞ்செனனமறுக்க
வாராவரவாய்வந்தசஞ்சீவி
யாலைக்கரும்புபாகமுதக்கட்டிநீள்
சோலைக்கனிபலாச்சுளைகதலிக்கனி
பாங்குறுமாங்கனிபாறேன்சருக்கரை
யோங்குகற்கண்டுசேர்த்தொன்றாய்க்கூட்டி
யருந்தியரசமெனவறிஞர்சமாதியிற்
பொருந்தியவின்பம்பொழிசுற்சுகோதய
மெக்கணுநிறைந்தனியல்பினையெனக்குச்
செங்கையால்விளங்கத்தெரித்தமெய்த்தேசிகன்
றன்னையறிவித்துத்தற்பரமாகி
யென்னுளத்திருந்தருளேகநாயக
னடிமுடியில்லாவரும்பொருடனக்கு
முடியடியிதுவெனமொழிந்திடுமுதல்வன்
மெய்யலான்மற்றவைமெய்யலவெல்லாம்
பொய்யெனவறியெனப்புன்னகைபுரிந்தோ
னருளும்பொருளும்பேதமாயிருந்து
மிருதிறனென்னுமியலுமுண்டென்றோ
னருளுனக்குண்டேலருளும்வெளிப்படும்
பொருண்மயந்தானைபொருந்துமென்றுரைத்தோன்
சத்தசத்திரண்டுந்தன்மையுந்தானே
யொத்தலாற்சதசத்துனக்கெனவுரைத்தோ
னாணவமறுவிடினருளுறுமென்னக்
காணருநேர்மையாற்காணவேயுரைத்தோன்
சென்மமுள்ளளவுந்தீராதிழுக்குங்
கன்மம்விடாதெனக்காட்டியவள்ள
லுளதிலதெனவுமுறுதலான்மாயை
வளமிலதெனவும்வகுத்தினிதுரைத்தோ

னில்லறத்திருந்துமிதயமடக்கிய
வல்லவன்றானேமகாயோகியென்றோன்
றறவறத்திருந்துஞ்சூழ்மனக்குராங்கொன்
றறவகையறியானஞ்ஞானியென்றோ
னிறவாமனந்தானிறக்கவுணர்த்திப்
பிறவாவரந்தரும்பேரறிவாள
னத்தனதருளாலனைத்தையுமியக்குஞ்
சுத்தமாமாயையின்றோற்றமென்றுரைத்தோ
னிருண்மலமகலவிசைந்ததிலழுத்தும்
பொருளருட்டிரோதைப்பொற்பெனப்புகன்றோன்
வீறுசிவமுதல்விளம்பியபடியே
யாறுமறுதியென்றறிஞருக்குப்போன்
கொல்லாவிரதங்குவலயத்தோர்க
ளெல்லாம்பெறுமினென்றியம்பியதயாநிதி
தருமமுந்தானமுந்தவமும்புரிபவர்க்
குரிமையாயவரோடுறவுகலப்பவன்
றன்னுயிர்போலத்தரணியின்மருவிய
மன்னுயிரனைத்தையும்வளர்த்திடும்வேந்தன்
களவுவஞ்சனைகள்செய்கருமிகடமக்குந்
தெளிவுவந்துறவருள்செய்திடுந்திறத்தோன்
றான்பெறும்பேறுசகமெலாம்பெறவே
வான்பெறுங்கருணைவழங்கியமாரி
தஞ்சமென்றடைந்ததாபதர்தம்மை
யஞ்சலென்றாளுமறிஞர்சிகாமணி
சீவகோடிகளுஞ்சித்தர்கோடிகளும்
யாவரும்புகழயாவையுமுணர்ந்தோன்
யானெனதென்னுவிறைவனெம்பெருமான்
றானவனாகியதலைவனெங்கோமா

னருணகிரியார்க்காறுமுகன்சொலும்
பொருணலமல்லதுபொருளெனமதியான்
பூதமுதலாப்பொலிந்திடுநாத
பேதமுங்கடந்தபெருந்தகைமூர்த்தி
மூலாதாரமுதலாயுள்ள
மேலாதாரமும்வெறுவெளிகண்டவன்
மண்டலமூன்றிலுமன்னியவுருவிலுங்
கண்டவையத்திலுங்கடவுளாய்நின்றோன்
பகர்சமயந்தொறும்பரமேயிருந்து
சுகநடம்புரியுந்தொழிலெனச்சொன்னோன்
பேதவபேதபேதாபேத
போதமிதுவெனப்புகன்றிடும்புண்ணிய
னதுநானெனவேயாற்றிடுமனுபவஞ்
சதுர்வேதாந்தத்தன்மையென்றுரைத்தோ
னல்லும்பகலுமறிவானோர்க்குச்
சொல்லும்பொருளுஞ்சுமையெனச்சொன்னோன்
சுதனேகுருவாஞ்சுவாமிநாயகற்கெனி
னதிகமெய்ஞ்ஞானமல்லவோவென்றோ
னேசயோகத்துறுகிருபரெல்லாந்தொழு
மிராஜயோகத்திறையிராஜயோகத்தான்
பொறுமைதெளிவுபுனிதவாசார
மறுவிலாவண்மைவாரமியற்கை
தண்ணடர்சாந்தந்தயங்கியகீர்த்தி
யெண்ணெண்கலைபயிலிணையிலாக்கல்வி
நல்லவிரக்கநடுநிலைசத்திய
மில்லையென்னாமலெவர்க்குந்தருங்கொடை
நற்குணனெல்லாநண்ணியபெருந்தகை
சிற்குணவாரிதிருவருட்செல்வன்
கரமேலெடுத்துக்கருத்துறவணங்கிப்
பரமேயுனக்குப்பரமெனப்பகர்ந்தோ
னாலடிமேவுமாசிணையடுத்தே
சீலமெய்ஞ்ஞானந்தெளிந்தனனெனவுஞ்
சித்தமவுனிதிடசித்தமாக

வைத்தநிலையின்வளர்ந்தனனெனவு
மூலன்மரபின்முளைத்தமவுனிதன்
பாலன்பாலெனவெம்பரிவொடும்பகர்ந்தோன்
வடமொழிப்பெற்றகாயின்மகிமையையுணர்ந்து
திடமுறமுப்பொருட்டிறத்தையுந்தெளிந்து
கண்டமுதென்னக்கனிரசமென்னத்
தண்டமிழ்மாரிதன்னைப்பொழிந்து
சித்தியுமுத்தியுஞ்சிறந்தருள்கொழிக்கு
நித்தியநிரஞ்சனநிராலம்பநிறைவைப்
பாடியுநாடியும்பணிந்தெழுந்தன்பா
லாடியுமரற்றியுமகங்குழைவெய்தியு
முடலங்குழையவுரோமஞ்சிலிர்ப்பப்
படபடென்றுள்ளம்பதைத்துப்பதைத்துப்
பாங்குறுநெட்டுயிர்ப்பாகிப்பரதவித்
தேங்கியேங்கியிரங்கியிரங்கி
யோய்ந்தபம்பரம்போலொடுங்கியேசிறிது
மேய்ந்தவிழிகளிமைப்பதுமின்றிச்
சோர்ந்துசோர்ந்துதுவண்டுதுவண்டுமெய்
யார்ந்தவன்போடவசமுற்றடிக்கடி
யுண்ணடுக்குறவேயுருகியேசற்றுத
தண்ணமர்மொழியுந்தழுதழுத்திடவே
யுள்ளும்புறம்புமொருமித்துருகி
வெள்ளநீர்போல்விழிநீர்பெருக்கிக்
கன்றுபசுவைக்கருதிக்கதறிச்
சென்றுசென்றோடித்திகைப்பதுபோல
வென்புநெக்குடையவிருகரங்குவித்துப்
புன்புலால்யாக்கைபொருந்தாதினியென
வுணர்ந்துணர்ந்தன்பயுவகைமேற்கொண்டினிக்
கணம்பிரியேனெனக்கருதியேகுறித்துத்
திருவுருவெல்லாந்திருநீறிலங்க
விருகரநளினமியன்முடிகுவித்துப்
பூரணசந்திரன்போலொளிகாட்டுங்
காரணவதனங்களின்குறுவெயர்வுற

விளநிலாவெனவேயிலங்கியசிறுநகை
தளதளவென்னத்தயங்கியெழில்பெற
வித்தன்மையெல்லாமிசைந்துமிவனருள்
சித்தெனச்சிவகதிசேர்ந்தவருரைப்பப்
பாத்திரமாடப்பரிவுடனாடிச்
சாத்திரங்காட்டித்தயவுசெய்தருளும்
வல்லவனெனவேமன்னுயிர்க்காக
வெல்லையிலன்பனிவனெனவிளங்கி
யீனவுலகத்தியற்கைபொய்யென்றே
ஞானநூன்மெய்யெனநவின்றினிதிரங்கிக்
கேவலசகலங்கீழ்ப்படமேலாய்
மேவருஞ்சுத்தமெய்யினைநல்க
வருளையுருவுகொண்டவனியில்வந்த
பொருளையிவளெனப்பொலிந்திடும்புனிதன்
சைவஞ்சிவனுடன்சம்பந்தமென்பது
மெய்வளர்ஞானம்விளக்குமென்றிசைத்தோன்
கதிர்விழியொளியுறக்கலத்தல்சித்தாந்த
விதிமுறையாமெனவிளம்பியமேலோன்
முடிவிலாகமமுறைமையினுண்மையை
படியரைக்குறித்துரைத்தருளியவண்ணல்
சிதம்பரநேர்மைதிறமாவுரைத்திறை
பதம்பரவெனப்பகர்பரமமெய்ஞ்ஞானி
முத்திபஞ்சாக்கரமுறைமையிலயிக்கியஞ்
சத்தியமிதுவெனச்சார்ந்தவர்க்குரைத்தோ
னஞ்செழுத்துள்ளேயனைத்தையுங்காட்டியென்
னெஞ்சழுத்தியகுருநீதிமாதவ
னெல்லாநிறைந்தவிறைவன்செயலெனக்
கல்லாவெனக்குங்கருணைசெய்கடவுள்
குருவருளாலேகூடுவதல்லாற்
றிருவருளுறாதெனத்தெரிந்திடவுரைத்தோன்
குருவுருவருளெனக்கொண்டபின்குறையாப்
பொருண்மயமாமெனப்புகன்றிடுபோத
னெந்தமூர்த்திகளையுமெழிற்குருவடிவெனச்

சிந்தையிற்றியக்கறத்தேர்ந்தவர்க்குரைத்தோன்
சதாசிவமென்றபேர்தான்படைத்ததுதா
னொதாவதேபொருளென்றெடுத்தெடுத்துரைத்தோன்
கல்லாணைகன்னல்கவர்ந்திடச்செய்தவ
னெல்லாம்வல்லசித்தெம்மிறையென்றோ
னெவ்வுயிர்தோறுமிறைமேவியதிறஞ்
செவ்வியபிரம்படிசெப்பிடுமென்றோ
னெவ்வணமெவரெவரிசைத்தனரவாவர்க்
கவ்வணமாவனெம்மானெனவறைந்தோ
னொருபாணனுக்கேயொருசிவனுட்படின்
வருமடியார்திறம்வழுத்தொணாதென்றோன்
சிவனடியாரைச்சிவனெனக்காண்பவ
னெவனவன்சிவனேயென்றெடுத்துரைத்தோன்
விருப்புவெறுப்பிலைவேறறப்பறித்துக்
கருப்புகாதென்னைக்காத்தருள்செய்தோ
னிருசொல்லுரையாதியானின்பமெய்த
வொருசொல்லுரைத்தவுயர்குணபூதா
னத்துவாமார்க்கமாறையுமகற்றித்
தத்துவாதீதத்தன்மையைத்தந்தோன்
றிருமகண்மருவியதிகழ்வளமறைசையில்
வருமுணர்வாளன்மருளிலாமனத்தா
னெண்ணியவெண்ணமெல்லாந்தெரிந்தெனக்குத்
தண்ணருள்செய்தவன்றாயுமானவ
னொருமொழிபகர்ந்தவுதவியாலவன்ற
ணிருபதமுப்போதிறைஞ்சிவாழ்த்துவனே.

இது

ஆசிரியர் மாணக்கர்

அருளையரால் செய்யப்பட்டது.

திருப்பாடலகராதி.

ஆசாரம் அடக்கம் அழகு கற்புடைமை முதலிய அமைந்த கன்னி எங்குள்ளாள் என்று தேடிக்கொண்டிருந்தார். அப்படியிருக்கும்போது அவ்வேதாரணியத்திலேயே உத்தம குலத்திற்றோன்றி மட்டுவார் குழலம்மை என்னும் பெயருடன் அழகால் இலக்குமியையும் கற்பால் அருந்ததியையும் புறங்கண்டு வளர்ந்துகொண்டு வந்த பெண்மணியாரைச் சிவசிதம்பரம்பிள்ளை அவர்கள் தாயுமானவருக்கு மணம்பேசி மணவினைக்குரிய நாளும்வோரையும்நிச்சயித்துச்சுற்றத்தார்க்கும் நட்பாளர்க்கும் மணவோலைபோக்கித் திருக்கலியாண மண்டபம் சிறப்பாகச் செய்து குறித்தநாளிலே அந்தணர்களும் உறவினர்களும் சினேகிதர்களும்குதூகலங்கொண்டு ஆசிகூறத்திருக்கலியாண மஹோற்சவத்தை வேதாகம விதிப்படி நடத்தி முடித்தனர்.

பின்பு, தாயுமானவர் தனது மணாட்டியான நங்கையாரோடு அளவளாவி இல்லறத்திருந்து *"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றொனென்றாங் - கைம்புலத்தா றோம்பறலை" என விதித்திட்ட வண்ணம் இருவர் கருத்துமொத்து ஐம்பெரும் வேள்விகளையும் வழுவாது நடத்திக் குடிமுறை பிறழாது பாதுகாத்து வருகின்ற நாளில், அவர்தம் மனைவியார் திருவயற்றில் கருப்பமுண்டாகிப் பத்துத்திங்களும் நிரம்பப் பெற்று ஓர் ஆண்மகவை ஈன்றுவைத்துச் சிவபதமடைந்தார் தாயுமானவர் பத்தினியாருக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செவ்வனே செய்வித்து முடித்துக்கொண்டு தன் தநயருக்குக் கனகசபாபதி என்று திருநாமம் வைத்து மிகவும் அருமையாகவே வளர்த்துக்கொண்டு வந்து வித்தியாரம்பமும் செய்வித்துப் பலதுறைகளிலும் வல்லவராகும்படி முயர்ச்சி பல செய்து வந்தனர்.

அக்கால், முன் தாயுமானவரை விட்டுப்பிரிந்த மௌன குருசுவாமிகள் திருமறைக்காட்டை அடைந்து அங்கே

* திருக்குறள், இல்வாழ்க்கை. 3-வது செய்யுள்.

தாக இயங்காநின்ற பிராணவாயுவை அம்சகாயத்திரியாகிய அஜபாமந்திரத்தினாலே தடுத்துச் சுழுமுனை நாடியின்வழியாகச்செலுத்தி இருகண்களும்புருவமத்தியே நாடினவண்ணமாகச்சிதாகாயமாகிய ஆன்ம நிலய அந்தர்முக நாட்டத்தில்மனத்தைநிறுத்தித் தமதே தியானமாகச் சமாதியிலிருந்து சதாநிஷ்டைபுரிந்து வருதி. இதுவே மெய்ஞ்ஞான நிட்டையாகியசிவயோகமாம். அங்ஙனம் சதாநிட்டையிலிருந்து இடையறாது அநுசந்தானம்பண்ணி வருங்கால் அந்தர் முகத்திலே மணி கடல் மேகம் மத்தளம் பேரிகை வீணை முதலிய நாதவொலிகளும், சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் மின்னல் முதலியவிந்து ஒலிகளும் தோன்றிடும். அவற்றுள் அழுந்தாது ஆன்மாவின்கண் அழுந்தி உறைத்து நிற்றல்வேண்டும். அப்போது அகண்டபரிபூரணாகார சிற்சுகோதய சின்மயானந்த வஸ்துவாகிய சிவோதயப் பிரகாசமுண்டாகி உன்னை விழுங்கி நிற்குமாதலால், ஆண்டு நின்செயலொழிந்து நீ அஃதாவை. யாண்டும் சிவமொன்றையே காண்பாய். இதுவே சாமவேத சாந்தோக்கியோப நிடத * மஹாவாக்கிய உண்மைப்பொருளாம். இந்நிலையிலே சிறிதும் சலியாது நிலைபெறுக என்று கட்டளையிட்டுப்போயினர்.

ஆசிரியர் சென்றதும், தாயுமானவர் அன்றுமுதல்துறவுக்குரிய குணங்களோடு கௌபீனதாரியாய் வெளிப்பட்டு மௌனகுருயோகிகள் திருவாக்கின்படி சதாநிட்டைகொண்ட கோலத்தோடு சிவபூஜா துரந்தரராய்க் காசி காஞ்சி அருணை சிதம்பரம் திருவாரூர் மதுரை திருப்பரங்குன்றம் முதலிய திவ்விய ஸ்தலங்களைத்தரிசித்துக்கொண்டு திருவிராமேச்சுரம் போய் அங்கே மழையில்லாமல்மிகவும்பசியுடன்வருந்திநின்ற அவ்வூர்ச்சனங்களின் வேண்டுகோட் கிசைந்து மிகுதியும்

* தத்வமஸி. தத் - அது, த்வம் - நீ, அஸி - ஆகின்றாய்.

திராவிட வித்யாதரங்கணி புஸ்தகசாலை.

பார்க்டவுன் மதறாஸ்.

நைடதம் மூலமும் உரையும்	2	0	0
கதாமஞ்சரி	0	8	0
பஞ்சதந்திரம் வசனம்	0	4	0
பாரதவசனம்—விராடபர்வம்	0	12	0
உத்தரராமாயணவசனம்	0	8	0
விநோதரசமஞ்சரி	1	2	0
ஔவையார் சரித்திரம்	0	1	0
அவிவேகபூரணகுருகதை	0	1	6
விவேகசிந்தாமணி (புதியபதிப்பு) இதில் தர்மார்த்த காமமோக்ஷங்களைக் குறித்த நீதிகளைக்காட்டும் 410-பாடல்கள் அடங்கியிருக்கின்றன. அதிகாரமும் ஒருவகையா லமைக்கப்பட்டிருக்கிறது	0	2	6
ஆத்திசூடி பதவுரை	0	0	6
கொன்றைவேந்தன் பதவுரை	0	0	9
வெற்றிவேற்கை ஷை	0	1	0
வாக்குண்டாம் பதவுரை	0	1	3
நல்வழி ஷை	0	1	6
நன்னெறி ஷை	0	1	6
நீதிநெறிவிளக்கம் மூலமும் உரையும், இலக்கணக்குறிப்பு, ஆங்கிலேய மொழி பெயர்ப்புகளுடன்	0	5	0
திரிகடுகம் மூலமும் உரையும் ஆங்கிலேய மொழிபெயர்ப்புடன்	0	5	0
தேவிகாலோத்தரம்உரை. மோக்ஷசாதன மின்னதெனச் சிவபெருமான் பார்வதியார்க்குத் திருவாய் மலர்ந்தருளிய சிறுநூல்	0	2	6
திருப்போரூர் சிதம்பரசுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளிய திருப்போரூர் சந்நிதி முறை 7 படங்களுடன் திக்கு கடிதம்	0	8	0
ஷை கிலேஸ் காலிகோ பைண்டு	0	12	0

இலகிய பொருளாய் வானமாய் நிறையு
மெந்தையே யெனதுபந் தமும்போய்
நிலையுற நினது திருவரு ளளிப்பாய்
நின்மலா னந்தமே போற்றி.

கோடிக்கரை ஞானிகள்.

துகளறு சாலி வருடமா யிரத்தைஞ்
ஞூற்றெண் பத்தொன்று தொடரு
மிகுசுப கிருதாம் வருடந்தை மாதம்
வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூரணத் திதியினி லருத்த
மண்டல சமையத்திற் கங்கை
திகழ்கணா யதனிற் றாயுமா னவனார்
சிவத்தினிற் கலந்தநற் றினமே.

சுவாமிகள் தம் அநுபவங்களையெல்லாந்திரட்டி அப்போதைக்கப்போது அதியற்புதமயமான திருப்பாடல்களாகக் கட்டளையிட்டருளினார். அவ்வருட் பாடல்களை யெல்லாம் அவருடன் நிழல்போன்று பின்றொடர்ந்திருந்த அருளையர் முதலாய மாணவர்கள் எழுதித்தொகுத்துவைத்திட்டார்கள். இத்திருப்பாடற்றிரட்டு பிற்காலத்திலே அருளையரிடத்தே தத்வோபதேசம் பெற்றுக் கொண்ட தாயுமானவருடைய புத்திரராகிய கனகசபாபதிப்பிள்ளை அவர்களால் பலர்க்கும் பிரயோசனப்படலாயிற்றென்பர்.

இப்பெரியார், சமயாசாரியசுவாமிகளிடத்தும், சந்தான குருமூர்த்திகளிடத்தும், மெய்கண்ட சந்தான முதியோர்களிடத்தும், *கௌமார பரமாசாரிய சுவாமிகளாகிய அருணகிரி

* இச்சமயப் பிரபாவம் திருப்புகழார் விஜயம் என்னு நூலிலே பெறக்கிடக்கின்றதாம்.

திராவிட விதயாதரங்கணி புஸ்தகசாலை.

சுத்தப்பதிப்புகள்.

தாயுமானவர் பாடல் அரும்பத விளக்கத்துடன்	1	0	0
ஷை விருத்தியுரையுடன்	3	8	0
பட்டினத்துபிள்ளையார்பாடல், புலம்பல், பத்திரிகிரியார் புலம்பலும், பொழிப்புரையுடன் படங்கள் அமைத்தது	1	4	0
ஷை விருத்தியுரை யுரையுடன்	3	0	0
திருவாசகம்	0	12	0
ஷை உரையுடன்	2	0	0
குறள் மூலம்	0	6	0
ஷை பரிமேலழகர் உரையை அனுசரித்த பொழிப்புரை	2	0	0
நாலடியார் உரையுடன்	1	4	0
நைடதம் மூலம் படத்துடன்	1	0	0
ஷை உரையுடன்	2	0	0
பெயரகராதி யென்னும் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் செய்தது	4	0	0
ஷை காரநேஷன் தமிழ் அகராதி அநேக நூதன கோட்பாட்டுகளுடன் தோல்பயிண்டு	6	0	0
பெரியபுராண வசனம் படத்துடன்	1	8	0
ஷை உயர்ந்தபதிப்பு	2	8	0
திருவிளையாடற்புராணம் வசனம் படத்துடன்	1	8	0
ஷை உயர்ந்தபதிப்பு	2	0	0
ஷை பாடல்	2	0	0
நால்வர் அருளிச்செய்த அடங்கன் முறை என்னும் தேவாரம் சுத்தபதிப்பு	4	0	0
பாகவதம்பாட்டு வரதராஜய்யங்கார் செய்தது 2 வால்யம் உயர்ந்தபதிப்பு	4	8	0
ஆரியபுலவர் பாகவதம் பாட்டு	3	8	0
வில்லிபுத்தூராழ்வார் பாரதம் உயர்ந்தபதிப்பு	3	0	0
பிரமோத்தரகாண்டம்	1	8	0
கம்பராமாயணம் வசனம் 2 வால்யம்	3	8	0

1

10890

அறிவிப்பு.

இதனால் ஸகலாஸ்திக ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:—இந்த புஸ்தகமும் இன்னும் கிரந்தம் தமிழ், தெலுங்கு, புஸ்தகங்களும் வர்த்தகர்களுக்கும், சில்லரைக்கும் விற்பனைக்குத் தயாராயிருக்கிறபடியால் வேண்டியவர்கள் அடியில் கண்டிருக்கும் விலாஸத்திற்கு எழுதி வீ பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

ப்ரொப்ரைட்டர்ஸ்—

பி. இரத்தின நாயகர் & சன்ஸ்,

திராவிட வித்தியாதரங்கணி புஸ்தகசாலை,

7/34, நைனியப்ப நாய்க்கன் தெருவு,

ஜி. டி. மதராஸ்.

Forms 1 to 16 printed at The Sivarahasyam Press, Madras.